உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கணேசாயநம:

விநாயக பராக்கிரமம்.

இது

சிவநேசச்செல்வர்களின் வேண்டுகோட்படி

ஸ்ரீமான் - சிவஞான சுவாமிகளது பாதசேகரராகிய

தத்புருஷ சிவன் என்று தீக்ஷாநாமம் பெற்ற

ஸர்வதேவோத்க்ருஷ்டமாகிய சிவபராக்கிரம மியற்றிய

முத்தமிழ் ரத்நாகரம் சைவஶ்ரீ

ம. தி. பாநுகவியவர்களால்

இயற்றப்பட்டு,

புலிப் பாக்கெட் பஞ்சாங்க கிரந்த கர்த்தாவாகிய

பூ. மு. இராஜு முதலியாரவர்களால்

தமது சென்னை, புரசை,

ரூபி, அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1908.

[All Rights Reserved]

முகவுரை.

கடல் புடையுடுத்த நெடுநில வரைப்பிற்
றமிழுலகத்தின் றகவினை யுணர்ந்து
பற்பல தேவரைப் பழிச்சிவாழு
மற்புதமார்ந்த ரனைவரு மென்மொழி
விரும்பிக் கேண்மின் விளம்புவன் யானே
தேவர் முதல்வனாய்த் திரிமூர்த்தி பரனாய்
எங்குங் கோயில் கொண்டிருக்குமப்பனாய்
ஒப்பில் விநாயகனான வொருவனை
அல்லது வேறேயில்லை தெய்வ மென்பதை
அவன்புக ழறிந்தா ரறிவராதலின்
தமிழிடையுலவாச் சரிதம் பலவுள்
இன்னவன் வீரத் தியல்பினை விளக்கும்
ஆரியசரித மனேக மவற்றுள்
யானறி யளவையி னிவண்சில தொகுத்துப்
பராக்கிரமமெனப் பகர்பெய ரமைத்திட்
டெல்லார் தமக்கு மினிது விளங்கத்
தெள்ளிய தமிழிலொள்ளிய மொழியினும்
பாட்டினு மியற்றி யுள்ளே னிதனுள்
அன்புகாட்டி யமைதி யொடாய்ந்தால்
இன்ப விநாயக னிணையில் தேவனென்
றறிந்து வழிபட்டவ னருளெய்தி
யொப்பி லன்னவன் வீரமோர்ந்து
தாவாவின் பந்தனி யுறலாகும்
இன்னவை யனைத்தும் முன்னவர் மொழிவழி

வந்தன போதலி னெந்தனக் கொன்றும்
இல்லை தொல்லை யென்னினும்
முதுமொழிப் புலவர் மொழிய வேண்டிய
சீரியசரித மாதையின் மொழிவழி
தபுதலு மிகுதலுஞ் சார்ந்துள வேனும்
பொறுத்தவன் கருணை பொழிவண நீவிர்
ஆசி கூறி மாசின் ருக்கித்
தருதல் வேண்டுமெனத் தாழ்மையொடு
வேண்டுதல் செய்தனன் யாண்டுந்
தூடணை முதலிய சொருவுரு விந்நூல்
எங்கணு முறுமவ்வே ரம்பன்னெனப்
பொலிக பொலிக பூதலத் திடையே
என்றவன் வழிமொழி தவறுறுதிலகக்
குன்றவில்லி குலவிடத் துற்ற
அம்மை செம்மை யொடருட் கண்சாத்திக்
குற்றங் கடிந்து குணமலி வித்து
நற்றவர் மகிழ நயப்பிப்ப வென்று
வெண்ணிக் கிடக்கு மென்மேல்
மண்ணினர் குற்ற மாட்டுதல் தவறே
யாதலா லெல்லாந் திருவரு ளெனக் கருதி
இதனிடை யாண்டேனும் மாறுபாடுகள்
தோன்றுமாயின் மன்னித்துக் கொள்ளுமாறு
உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்
ம. தி. பானுகவி.

மஹாகணபதி

கடவுள் வாழ்த்து.

கணபதி.

ஓதவ னவளது வென்ன வோங்கிய
சேதன விறைவன்யா னென்னச் சென்னியும்
பாதமும் புயங்களும் பண்பிற் கொண்டுயர்
மோதக மேந்திய முதலை முன்னுவாம். (க)

பசுபதி.

சதுர்முகப் பிள்ளைதன்னைத் தண்டுழா யவனிலாக்கி
யதிர்மறை முரச மார்ப்ப வந்தியி னட்டஞ் செய்யும்
முதிரெரி வடிவார் ஞான முதல்வனை முகுந்தப் புத்தேள்
பதியென வறைந்து போற்றும் பரமனைப் பணிந்துவாழ்வாம் (உ)

அம்பிகை.

செக்கரஞ் சடைமுடித் தேவ நாயகன்
பக்கமுற் றகிலமும் பண்பி னுக்கிய
துக்கமி லுருவநற் சோதி வாமிதன்
மிக்கநூம் பதமலர் மேவி வாழ்த்துவாம். (௩)

மயூரேசவிநாயகர்.

சந்தையி னளிகள் முந்திநின் றிரைத்துத் தாதுண வலர்ந்தநறிய மந்தார, நிந்தையில் தூர்வை வனசமென் றின்ன நெருங்கிய திருமுடி மிசையிள மதிய, முந்தைநர் னொடித்த கோடென விலங்க மூரிமா யானை முகத்தினோ டுற்ற. வெந்தையை முக்க ணிறைவனை யுமையா [illegible] வாழ்த்திடுவோம். (௪)

மகோற்கட விநாயகர்.

திசைத்திருக்கரமுங் கருந்தரெண் முகமுந் திகழ்மணி வருத்தியொ டுறுபக்ர விழியு, மிசைத்திடு முருவி லிறுக்கிய வரவு மேந்திய வுதரத் தார்ந்த மோதகமும், விசைத்திடு வளிகொள் குழைச்செவி யிடத்தில் விளங்கெழிற் கடிப்பிணை யசைந்திட வென்னை, யசைத்தென துள்ளத் தடத்தினிலலர்ந்த வாம்பலின் பூம்பத மார்ந்து வாழ்த்திடுவோம். (௫)

கசான்ன விநாயகர்.

பாட்டளி முரன்று தேத்துளி யருந்திப் படர்ந்திற மகன்று படலையாம் நீலத், தீட்டமுற் றமைத்த மணிவட மென்ன விழிமத வருவி மேற் படிதர வசலக், கூட்டமு மருளு நாற்புயத் துயர்ந்த குஞ்சர மெனவென் னெஞ்சகத்திலங்கி, யாட்டய ரம்மைதனையனை யலர்தா யடிபணி பவர்க்கரு ளாதியைப் பணிவாம். (௬)

தூமிரகேது விநாயகர்.

இலங்கெழனீல வரையிருபுறனு மிசைதர வெழுமொரு மலைபோற், றுலங்கிய வுருவிலானை மாமுகமுந் தூங்கெழிற் சுண்டமுங்காட்டி, அலங்கிய னெடுவேற் படையுடனீல வயமிவர்ந்தடியருக் கருள்புரிந் துலகின், மலங்கிய லகற்றி யருள்கணேசன்றன் மாமல ரடியிணை பணிவாம். (௭)

சித்தி புத்தி தேவியர்.

காதளவகன்ற கயனெடுங் கண்ணிற் காசினியாதிய கண்டுதொண் டுடையா, ரேதமுற்றகற்றி வேண்டிவ வளித்தெம் மிருதய கமலமே லிருந்தரு ளிறைவி, யாதியோடிலங்கு மம்பிகையளித்த வாரணம் புகழும் வாரணமுகத்தன், மேதினிகளிக்க மணந்தருள் பிரமன் மெல்லிய ரடியிணை புல்லிவாழ்த் திடுவோம். (௮)

குமரவேள்.

சம்பரநவெ ணலர்ந்தெழில் காட்டுந் தாதுருநளினப் போதகத்தடிய
ரெம்பரமென்ன வுற்றுமையாட னிலங்கெழின் மடியி னலங்கியா
டேறி, யும்பரும்வியப்பத்தேரிலாய் மயிலினுற்றெறன துள்ளப் பொற்
றைமே னடஞ்செய், செம்பதமலரிற் றண்டையார்சேயைத் திரு
வுடம் பிடிக்கைச் செம்மலைப் பணிவாம். (கூ)

சமயாசாரியர்.

ஏருறு மாமூர் காழிநன் ஞவ லெதிரறூ வாதை யென்பவை செய்த
சீருறு தவத்தி னவ்வயிற் றேன்றித் திருவருளெய்தி யமணரே முத
லாம், பேருறு பொய்யர் மதவிருளிரிந்து பிறகிடவருட்கதிர் பெண்
பொனென் றின்ன, சாருறு திறத்திற் காட்டிய நால்வர் தம்முரு
நினைந்து வெம்மைதீர்ந் திடுவாம். (க0)

புருசுண்டி முனிவர்.

சங்கட முலகங்கொள்ளப்பல வியற்றித் கறுகண்வேட்டுவச் சாதியோ
டமர்ந்து, பங்கயன்வகுத்த விதிவலிதாகப் படரிலட் யருளினுருவ
மா யடைந்த, துங்கநன்ஞான முத்கலனருளாற் றுதிக்கையோன்
மனுவைத் தொடர்ந்து சிந்தித்துப், புங்கவர் பழிச்சப் புருசுண்டி
யான புண்ணிய முனியை யெண்ணி வாழ்த்திடுவாம். (கக)

ஆசிரியர்.

சிந்தைமலரி னிடைநின்றுந் தீராச்சிவமே சிறியேன்செய்
முந்தை வினையின் றொடர்பாலு முதிருந் தவத்தின் றிறத்தாலுந்
தந்தையெனவுங் குருவெனவுந் தானேயாகி மறைசையினில்
நிந்தை யறவாழ் சிவஞான நிமலனமல பதம்போற்றி. (கஉ)

அவை யடக்கம்.

ஒருங்கெழுகடலு மொருபுடைமருவி யுறினுமவ் வேழமாமுகத்தன்
மருங்குறுவீரச் செயற்கணோர்கூற்றை மன்னிடா தென்னிலோரறி
வும், ஒருங்குறு திறமில் மடமையேன் முற்று முரைத்திட முயல
லோர்பிலஞ், சுருங்கிடவமுத வேலையிற்றுலைத் தொடுத்திழுத்திடற்
கிணை யாமால். (கங)

தற் சிரப்புப் பாயிரம்:

இது நூலாசிரியர் மாணவர் ம-ா-ா-ஸ்ரீ
மதுரை கோவிந்தசாமி முதலியா ரியற்றியது.

திங்களு மரவுமலிர் சடை முடியெஞ்
    சிவபர னிடத் துறை யுமையாள்
எங்கோரின் மணியென்ற னுதிணமுறைக்கு
    மேரம்பன் வீர பராக்கிரம மெல்லாந்
துங்கநற் றமிழி னுரைத்துன னீசன்
    றுணையடி முடிமிசைத் துலங்கப்
பங்கமி லடியர்க் கருள்புரி பானு
    கவியெனப் பகர்தவத் தரசே.

க்ஷீரசமுத்ர கிரகணம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

க ணே சா ய ந ம:.

விநாயக பராக்கிரமம்.

சமுத்திர கிரகண பராக்கிரமம்.

திருவாருமணிமார்பன்முதலதேவர்
சிறுமூச்சிலுறுமணுவிற்செறிந்துமீளப்
பெருகீரமுறுகீரவேலைநீரைப்
பிறங்குமணித்துண்டத்துட்பெய்துகாற்று
மொருதேவைப்பழமறைக்குமுதலானானை
யுமையளித்தகான்முளையையுலவையொன்றுற்
திருகாமெய்ம்மறைவகுத்தபரனையன்பர்
சிந்தனையிலுறுபொருளைவந்தனைசெய்திடுவோம்.

(இ-ள்) திருமகளையுடைய மணிமார்பனான மாயோன் முதலிய தேவர்கள் தமது சிறிய மூச்சினுட் [illegible]

களைப்போலச் செறிந்துள்ளிலும் வெளியிலுமாக வுலவ, மிகுந்த குளிர்ச்சி யினையுடைய பாற்கடனீரை யழகிய துதிக்கையுட் பெய்து வெளியிற்சிதறிய ஒப்பற்ற தேவைப், பழய வேதங்களுக்கு முதலாகவுள்ளவனை, உமாதேவியின் புதல்வனை, யொருகொம்பினால் மாறுபாடற்ற உண்மை வேதங்களை யமைத்தபரனை, அன்பர் சிந்தனையிலுறுகின்ற பொருளாயுள்ள விநாயகப் பெருமானை வந்தனைசெய்வாம். என்றவாறு

சமுத்திர கிரகண சரிதம்.

முன்னொரு காலத்தில் திருக்கையிலை மலையிலுள்ள வழகிய கோபுரத்தின் முகப்பில் பானுகம்பன்முதலிய பிரமதகணங்களுடன் வீற்றிருந்த பாலகணபதியாகிய விநாயகப்பெருமான் திருவிளையாடல் கருதியெழுந்து பூம்பொழிலுட்புகுந்து தருக்கிளைகளை யொடித்து விளையாடி மகாகணங்களுடன் மேருமுதலிய விடங்களிலும் விளையாடியிறுதியில் அனேக லட்சயோசனை யகலமும் ஆழமுமுள்ளதும் மாயோனிருப்பிடமுமான சுவேதத்தீபஞ் சூழ்ந்தபாற்கடலுட்சென்று நீர்விளை யாடுவான் தொடங்கிக் கணங்களுடனப்பால்வேலையைத் தமது துதிக்கையாற் துழாவியும் சிறிது சிறிதாகவானில் வாரித்தூவியும் சிறுகுறும்புசெய்து இறுதியிலக்கடனீர் முழுதுந் துதிக்கையுட் புகுமாறு செய்து ஆடலயர்ந்தனர் அப்பாற்கடலவெண் பாம்பணைப் பள்ளியுட் கண்ணுறங்கின நாராயணமூர்த்தியும், அவர் வாகனமான கருடனும், மனைவியான திருமகளும், மகனான பிரம

னும், மருகியான கலைமகளும், விசுவசேனன் முதலிய சேனை வீரர்களும் அவரைக்கண்டு வணங்கவந்திருந்த முப்பத்து முக்கோடித்தேவர்களு நாற்பத்தெண்ணுயிரமுனிவர்களுஞ் சித்த கந்தருவ யட்ச கிம்புருஷர் திகளும் பிறரும் பாலாழி நீருடன் துதிக்கையுட் பிரவேசித்து இன்னவிடத்தி லிருக்கின்றேமெனத் தெரியாது மனந்தளர்ந்து ஒருவரையொருவர் அறியாது தழுவி இப்பொழுது பிரளயகாலமு மன்றே பிரளயமும் இவ்வண்ணம் நீரையிழுக்காதே இழுக்கினு நம்மை யெல்லாமு மிழுக்குமா! இழுக்காது இழுக்காது என்று வெளிவருவான் முயன்றகாலத்துப் பிள்ளைப் பெருமான் மெல்லெனத்துதிக்கை நீரினை மேல் வீச்சாக வெளியேவிடுத்தனர் அங்ஙனம் விடுத்தலும் ஒரு விடத்திலிருந்த முன்னுரைத்தவர்கள் பலவிடங்களிற் சிதறிவிழுந்து தத்தம் ஆயுத வாகனுதிகளைத் தேடித் தேடிக் கண்டுபிடித்துக் களிகூர்ந்திச் செயலெவரா லுண்டாகியது என வாராயுங் காலத்து மாயோன் தானும் ஓரிடத்தில் விழுந்து நிதானித்து இது உமாகுமாரரின் திருவிளையாட்டெென வறிந்து கொண்ட பின்னர் தங்கரத்திருந்த சங்கத்தினைக் காணுது கவலையுற்று ஏவலனொருவனைச் சங்கினைக் கண்டெடுத்து வருமவண்ணம் உத்தரவளித்தான். அவன் பலவிடங்களினுந் தேடி யக்குடவளையை விநாயகப் பெருமா னுடைய கணங்களி லொன்று எடுத்து வைத்திருந் தலையுணர்ந்து மாயோனிட முணர்த்த மாயோன் விநாயக ரெதிரேவர வஞ்சித் திருக்கைலைமலையை யடைந்து சிவபெருமானிடம் நடந்தவைகளை விண்ணப்பஞ்செய்து அவர் கட்டளையால்

திருக்காஞ்சி நகரமெய்தி விநாயகரைக் குறித்து வெகு காலந் தவஞ்செய்ய வவர்தோன்றி வலம்புரிசங்கினையும் மற்றும் பிறவரங்களையு மளித்தனர். இதனை

பொரு வருந்தட நெடும்புழக்கை யேந்தலு
மிருமுது குரவர் தாளிறஞ்சி மேவுநா
ளொருவருங் கணங்களோ டலவி யெங்கணுந்
திரு விளையாடலிற் சிந்தை வைத்தனன்.

ஒளித்து நின்றுடன் பயிலுமைச் சிறூர்மிசைத்
தெளித் தெழுபுழக்கை நீர்த்திவலை தாயிது
துளித்தது முகிலெனச் சொல்லி யுள்ளகங்
களிப்பவான் கருமையைக் காட்டி வஞ்சித்தும்.

புழைக்கையை மோந்துயிர்ப் பெறிந்து பூமியைக்
குழித்து முன்னணிந் தனபழமை கூர்ந்தவென்
றொழித்த கல்பாதலத் துரகம் யாவையு
மிழுத்தெடுத் தணியெனப் புயத்தி னேற்றியும்.

ஒன்பது கோள்களு முடுக் கணங்களுந்
தன்புறப் பிணித்தசை துருவ சூத்திரம்
வன்பணைக் கரத்தினாற் பறித்து மார்பிடை
யன்பமர் நவமணி யார மாக்கியும்.

என்னை நீர்கண்டெழா திருப்பதென் னெனப்
பன்னக மெவற்றையுங் கனன்றுபற்றி வான்
மன்னிட வீசியங் குடைந்த வானதி
தன்னுண்டத் தந்தைபோற் சடிலத் தேர்ந்தியும்.

இவ்வகை பலசிறுகுறும் பெங்கணு மியற்றிக்,
கௌவ்வை நீர்விளையாட்டினிற் காதலொருநாட்
பவ்வம் யாவையு முழக்கினன் பாற்கடல்புகுந்தான்
கொவ்வை வாயுமை பயந்தருள் குஞ்சரக்குரிசில்.

புகுந்து வெள்ளநீர் முழுவதும் புழக்கையின் மடுத்தான்
மிகுந்தபன்மணி நீருறையுயிர்கள் வெம்பணிக் கோன்
முகுந்த னுந்தியன் றிருந்திநான்முகப் பிரான்முகுந்தன்,
சகுந்த மன்னவன் றிருவுமப்புழைக்கை யுட்சார்ந்தார்.

வறுங்கடற் பரப்பகட்டினி லெஞ்சு கூர்மங்கள்
வுறுங்கரும் பெருஞ் சேற்றிடை யொளிப்பனமுன்னு
ணுறுந்துழா யணியா மையை நலிவுறப்பற்றிக்
குறும்பீடக் கியபிரான் வருதிறங் குறித்தனபோல்.

மாயமீன் விழிப்றித் தவன்முன் வருமிளவன்
மேயவாறு கண்டனவெனத் துடிப்பன சிலமீன்
பாயபூம்புன லரசனம் பனுக்கிடுந் திறைபோற்
சேயபன் மணிவயின்றொறு மிமைப்பன சிலவே.

ஐயன்வார் செவிக்காற்றினி லலைகண் மிக்கெறிந்து
வெய்ய பேரொலி காட்டுவெபிறவியின் கட்கண்
மையகன்ற தங்கிளை வறங்கூர்ந்த மைகாணூஉக்
கையெறிந் தழுதிரங்கி வீழ்ந்தரற்றுவ கடுக்கும்.

இன்னவாறு பாற்கடல் வறந்தழிவுற விருங்கை
தன்னிலேற்ற நீர்மீளவுந் தரைமிசை விடுத்தா
னன்னநீருடன் விழுந்தன ரயனரி முதலோர்
துன்னுநீர் படுதுரும்பெனத் திசைதொறுஞ் சிதறி.

விநாயக பராக்கிரமம்.

பின்னரோ ரிடைத்திரண் டேன்குழீ இயினர்பெரிது
மின்னுற்ற மைதத் தமிற் பேசின ரெளியோ
முன்னை நல்வினைப் பயத்தினலின்று மூதுலகந்
தன்னில்வந்த வாமறு பிறப்பென மதித்தனரால்.

மருட்சி தீர்ந்தபின் மாயவனிடக் கையின்வழுவு
முருட்சிகூர்ந்த வெண்சங்கினைக் காண்கில னுயங்கி
வெருட்சி கொண்டனன் றேடினன்வியன் றிசைப்புறத்துத்
தெருட்சி கொண்டது வொலிப்பது கேட்டனன்செவியில்.

ஓசையாலது பாஞ்ச சன்னியமென வுணர்ந்தவ்
வாசையிற் சிலர்தமைச் செலவிடுத்தன னவர்போய்
மாசி லங்கரப்பிரான் கணம்வாயிடைக் கொண்ட
வேசறுஞ் சுரிமுகந்தினைக் கண்டுமீண் டுரைத்தார்.

சொன்ன வாசகங்கேட் டுளந்துளங்கி மற்றினிநா
னென்னை செய்வலென்று சாவினன் கண்ங்களோடெழூஉப்
பன்னகப் பகையரசுமேற் கொண்டனன் படர்ந்தான்
கன்னிபாகன் வீற்றிருந்தருள் வெள்ளியங் கைலை.

அங்குநந்தி தன்னருளினுற் றடைகடந் தணுகி
யெங்களுயகன் றிருமுன்பு வீழ்ந்துதாழ்ந் தெழுந்து
பங்கயக் கரங்குவித்து நின்றிமவரை பயந்த
நங்கையோடுறை செவ்விகண் டின்னது நவில்வான்.

அண்ணலே யுனதாணையி னடியனேன் கடலுட்
கண்வளர்ந்தன னுயிடை யாட்ல்செய் கணேசப்
பண்ணவன் கடற்புனலொடு மென்னையும் பணைக்கை
யுண்மடுத்தன் விடுத்தனன் மீளவு முலகில்.

மறுசூழ் மணிமன்றுளாய் நின்னருள் வலியான்
மறுபிறப்பென வுய்ந்து நின்பால்வரம் பெற்றேன்
மறுகும்ப் பொழுதென் கையில் வழீஇனசங்கை
மறுவிலங்கரப் பிரான் கணத்தொன்று வவ்வியதால்.

ஐயனே யதுவடியனேன் கரத்தெய்த வருளிச்
செய்யவேண்டு மென்றிரந்திரந் திறைஞ்சலுஞ் சிறுமான்
கையனெம்பிரான் கவுரிபாற் கூட்கடை செலுத்தி
வையமுண்ட வகேளென வாய்மலர்ந் தருள்வான்.

வலம்புரிந்த பேராண்மையோய் யாமிது வல்லேம்
வலம்புரிச் சங்குநீபெறக் காஞ்சியில் வைகி
வலம்புரிக் கணபதியை நின்னத்தி மால்வரைமேல்
வலம்புரிந்து தாபித் தருச்சனை புரிமரபால்.

வேண்டுந் திருநெடுமாற் கெங்கோன் வெளிநின்று
காண்டகைய பூதகணங் கரத்துக் கொண்டிருந்த
மாண்டபுகழ்ச் சங்கமளித் தருளி மாயோனே
யீண்டுநினக் கின்னும் வேண்டுவ தென்னென் றருள.

என்பனவாதியாக வரும் காஞ்சிமான்மியச் செய்யுட் களா லுணர்க.

கஜமுகசங்கார பராக்கிரமம்.

இலங்கெழில் விபூதி மாகதற்
சாரவேருறு நடைமலை யுருவில்
வலங்கொடு புகுந்திம்மா நிலத் துயிரை
வாட்டிய கயமுகன் மார்பிற்
சலங்கொளு முலவை செறித்துயிர்
செகுத்த தயாபரவிபாகரன் றன்னைக்
கலங்களு ரகற்றுகத் தனைநினைந்து
கரமலர் குவித்து வாழ்த்திடுவோம்.

(இ-ள்) மிக்க வழகினையுடைய விபூதியென்பவள் மாகத முனிவனைப் புணர்ந்தகாலத்தில் அழகிய யானைமுக வடிவத்துடன் பிறந்திம்மண்ணுலகத்திலுள்ள உயிர் வருக்கங்களை வருத்திய கஜமுகாசுரனது மார்பிற்சென்று படும் வண்ணம் சீற்றமமைந்த தமது தந்தத்தி லொன்றினை முறித்து விடுத்தவனைக் கொன்றருளிய கருணை சொரூபியுந் தம்மை வழிபடுவோரின் துன்பங்களை நீக்குகின்ற கருத்தாவாகவுமுள்ள விநாயகப்பெருமானது சரணகமலங்களை நினைந்து கைகளாகிய மலர்களைக்குவித்து வாழ்த்துவோமாக. எ-று.

கஜமுகனைக்கொன்ற சரித விவரம்.

முன்னாளில் தேவாசுரயுத்த நடந்து அசுரர்குலமிளைத்துத் தேவர்குல முயர்ந்து விளங்கும்வண்ணமாயதனை அசுர

ரின். இந்திரனுனவன் கண்டு கவலைகொண்டு "தேவேந்திரன் செழிப்புற்று வாழ வசுரேந்திரனுனயான் இவ்வாறு வருந் திக்கிடக்க விதி யேற்பட்டதே வன்மையர்ளராக விருந்த அசுர ரெல்லாம் இறந்து பட்டார்களே இப்பொழுது தேவர்களென்னை அவமதிப்பாகப் பார்க்கின்ருர்களே எம் மினத்தவர்களைக்கண்டு தேவர்கள் அஞ்சிக்கிடந்த காலம் போயிற்றே. அசுரர்கள் தேவருக்கூழியஞ்செய்ய நேர்ந்த தே, இந்த மனேவியாதியை யெவ்வாறு நீக்கிக் கொள்வது நமதாசாரியனுன சுக்கிர முனிவனிடம் சென்றிக் குறையை உரைப்போம் அவனதற் கேதுவேனு மொருவழி கூறுவா னெனப் பாதலத்தி லொளித்து வாழ்ந்திருந்த அசுரேந்தி ரன் சுக்கிரனிருக்கு மிடத்துக்கு வந்து அவனடிகளை வணங்கி யவனுசிபெற்று, உசிதாசனத்தி லிருந்த பின்னர் சுக்கிரன் அவனைப்பார்த்து அசுரேந்திரா நீ இதுகாறும் என்னிடம் வருங்காலத்தில் முகவிலாசத்துட னிருப்பாய் இன்றவ்வாறன்றி நின்முக நணிவாடி வதங்கிச் சுருங்கி இருக்கின்றதே என்ன குறை நேர்ந்ததுனக்கு, விரைவாக வுரைப்பாயாக' வென்றவுடன் அசுரேந்திரன் அசுரர் குலம் நாராயணன் முதலிய தேவர்களால் அழிந் தொழிந்தது வுந் தேவர்குலம் வீறடைந்துள்ளதனையும் கூறி யெங்குல மங்காதுயர்வடைதற் கொருவழி தேடவேண்டு மென வாலோசனை செய்தயான் தேவரீரை யடைந்தா லொழிய விக்கவலை யொழியாதென நிச்சயித்துத் தங்கள் சன்னிதி யையடைந்தேன் 'என்குலந் தேவகுலத்திலும் மேற்பட்டு விளங்கும் வண்ணம் அருள்புரிதல் வேண்டும் என்று கூறி

ஞன் இம்மொழியைக்கேட்ட சுக்கிரன் சிறிதுநேரம் கண் களை மூடித்தியானத்திலிருந்து கண்களைத் திறந்து இவ் வாறு கூறினன்.

அசுரேந்திரா! இவ்வாறுசெய்தி, மேருமலையி னொரு புறத்திலுள்ள ஒரு மகதரண்ணியத்தில் உலக மெல்லாம் புகழும் தவ சிரேட்டனுன வசிட்டமுனியின் வங்கிசத்தில் வந்தவனுய் அக்கினியினுஞ் சிறந்ததூய்மையாளனுய் எப் புவனத்தும் ஒப்புடையரெவருமுளரென்று கூறக்கூடாதவ னுய் மாகதனென்னும் பெயருடைய முனியொருவன் அள வற்ற பெரும்புண்ணியங்களை யுடையவனுய் அசையாத உள்ளத்தினனுய்ப் பிரமசாரியாக விருந்து தவஞ் செய்கின் ருன் அவனிடத்துக்கு அழகிற்சிறந்த ஓரசுரமாதையனுப்பி அவனை வசஞ்செய்து சேருமாறு செய்தால் நினது குலம் விளங்கத்தக்க வீரனொருவன் பிறப்பான் அவனல் நீயும் நானும் நின்னினத்தி னருமழியாத புகழினைப் பெறலாகும் இதுவே இக்காலத்துக்கேற்ற யுத்தி என்றனன்.

இம்மொழி கேட்ட அசுரேந்திரன் சுக்கிரனை வணங்கி அவ்வாறு செய்வதாக வுரைத்துத் தன்னிடத்து வந்து எவளையனுப்பலாமெனச்சிறிதுநாழிகை ஆலோசனைசெய்து மாகதனை மயக்கத்தக்கவள் விபூதியேயென நினைந்து விபூதி யென்னுமியற்பெயரினை யுடைய அசுரமங்கையின் வீட்டிற் குச்சென்று அவளையழைத்து நீநன்மகனைப்பெறுவாயென ஆசிகூறி அவளைப்பார்த்து அசுரகுல திலதமான விபூதியே என்னுடைய சொற்களைக்கேள் என்ருன் இம்மொழியைக்

கேட்ட விபூதிவெட்கத்துடன் எங்களாண்டவரே! தாங்கள் தங்கள் ஊழியக்காரியான அடியாளைப்பார்த்து இவ்வளவு கவுரவமாக உரைக்க வேண்டுவதில்லை தாங்கள் காலா லிட்ட வேலையைக் கையாற் செய்வேன் என்றனள் இம் மொழி கேட்ட அசுரேந்திரன் மகா சந்தோஷத் துடன், அவளைப்பார்த்து என்குலந்தழைந்து நான் அசுரேந்திரனாக விளங்கும் வண்ணம் நீசெய்தல் வேண்டும் அஃதெவ்வண் ணமென்னின் மேருவினொரு புறத்தில் அருந்தவஞ் செய்வா னாய் மாகதனென்பா னொருமுனிவனுளன் அவன் பெரும் புண்ணியங்களையுடைய பிரமசாரியும் உக்கிர தவசியுமாக வுள்ளவன் அவனைமயக்கி அவனுக்கு மனைவியாகி அவனைப் புணர்ந்தா லொப்பற்ற வீரனொருவன் வருவான் அவனால் நாமெல்லாம் மேன்மையுறலாகும் விரைந்துசெல் என்று கூறி அவளை உச்சாகப்படுத்திப் பிரயாணப்படுத்தி அனுப்பி னன் அவன் சொல்லுக்கிணங்கிய விபூதி யானவள் நறு மணம் வீசுங் கலவைத்தூளா லுடலமுக்ககற்றிப் பன்னீரிற் குளித்துப் புனுகுசவ்வாது சந்தனமாதி பரிமளத்திரவியங் களை யுடலிலணிந்து சாதி சம்பகாதியலர்களை அளகத்தி லணிந்து பலவகையான பொன்னாபரணங்களாலும் அரதனா பரணங்களாலும் வெள்ளிய பட்டாடையாலும் உடலினை வேண்டுமளவு நன்றாக அலங்காரஞ் செய்து கொண்டு மேருச்சாரலில் மாகதன் தவஞ்செய்யு மிடத்தினை யடைந் து அசுரேந்திரனுரைத்த குறிப்பின்வண்ணம் ஆராய்ந்து இவனே மாகதன் அம்மம்மா விவனை மயக்குவதெவளாலா கும் இந்திரனுலகத்துச் சுந்தரிமாராலும் இசையாது; நமது

நடைநொடிபாதிகளா லிவன் மயங்கத் தக்கவ னல்லன் மகா திடசித்தமுள்ளவன் மந்தைவெளிக் கல்லைப்போல தேகமும் மசையாது சுவாசமும் விடாது கோரதவஞ்செய்யு மிவன்தானாக நம்மோடிணங்கினாலன்றி மற்றொரு விதத்தி லிவனைமயக்க வியலாது இவனெனக்குக் கணவனாகவேண்டு மென இவனெதிரிலிருந்து அரியதவஞ் செய்தலே அசுரேந்திர னெண்ணத்தினை நிறைவேற்றுதற்கு வழியாகும் மற்றொன்றும் மார்க்கமாகாது எனத் தீர்மானஞ் செய்தவளாய் அம்மாகத னெதிரிலொரு மரத்தடியினின்று கண்டாருள்ளங் கரையுமாறருந்தவம் வெகுகாலஞ் செய்தாள். ஒருதினமும் இவள் முகத்தை யவனுற்றுப் பார்த்தவனேயல்லன். இங்ஙனம் பலவாண்டுகள் கழிந்தபின்னர் ஒரு தினம் ஆணும் பெண்ணுமான விரண்டு யானைகள் காம வெறிகொண்டு ஒன்றோடொன்று மிக்க காதலுடன் மாகத னெதிரிற் கலவிப்போர்புரிதலும் அச்செயலினைக்கண்டவவனுள்ளந் தவநிலையிலின்றிக் காமத்தின் மிகுதியாகக் கண்ட விபூதியென்பாள் இதுவே நமதெண்ண நிறைவேறத் தக்க காலம் இக்காலந் தப்பினாலெக்காலஞ் செல்லுமோவென வெழுந்து அன்னப்பேடு நாணநடந்து மாகத னெதிரே சென்றவனடிகளை வணங்கினாள். காமத்தான் மருண்டிருந்த வம்முனிவன் அவளைக் குளிரப்பார்த்து மாதே! நீயாவள்? எங்குவந்தனை? யென்றனன். இவன் மொழிகேட்ட விபூதி புன்னகையுடன் என்னையாளும் பெருமானே! யானோரசுர மாது விபூதியென்று பெயருள்ளவள் புத்திரப் பேற்றைக் கருதி உன்னைக் குறித்து தவஞ்செய்துகொண் டுன்னெதிரி

விருப்பவள் எனதெண்ணத்தினை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன் என்றனள்.

இம்மொழி கேட்ட வம்மாதுதன் அவ்வாறே யாகுகவென்று மகா மகிழ்வுடனவள் முகத்தினைப்பார்த்து மாதர் திலதமே! மனதுக்குகந்த மயிலே! காதன் மிக்கவென்கண்ணுக்கினியவளே! யான் கொள்ளுமுருவினை நீயுங்கொள்ளுதல் வேண்டுமென்றவுடன் உன்னுற் கொள்ளப் படுமுருவினையே யானுங்கொண்டுன்னைக்கூடி மகிழவிழைகின்றேனென்றனள் உடனே முனிவனொரு ஆண் யானையினுருவங் கொண்டனன் அதுகண்ட வவளும் ஒரு பெண் யானையினுருவினைக் கொண்டனள். பெண் யானையாக வுரு மாறிய அரக்கியைக்கண்டு அடங்காக் காமங்கொண்ட முனிவன் மிக்கமகிழ்வுடன் அவளை யணைந்தான். அணைந்த வுடனே இருவர்மேனி வியர்வைத் துளிகளி னின்றும் அளவற்ற யானைமுகவசுரர்கள் கைகளிற்கத்தி கேடக மேந்தினராகப் பிறந்தார்கள். புணர்ச்சிமுடிவிற்பேரிடியு நாணத்தக்க பெருமுழக்கத்துடன் மேருமந்தரகைலாயாதி மலைகளுங்காணின் நாணத்தக்கப் பேருருவினையுடைய கஜமுகா சுரன் பிறந்தான். இவ்வசுரப் பேருருவினைக் கண்டவுடன் மாகதமுனிவன் காமநீங்கி ஓட்டமாகவோடி மறைந்தனன். அவனுடன் மனைவியான விபூதியுமோடி அம்முனிவனொளித்திருக்கின்ற குகைக்குட் சென்றுடனிருந்தாள். அப்பொழுது கஜமுகனும் அவனுடன் பிறந்தாரும் கத்திகேடகங்களுடன் பருவதங்களைத் தகர்த்துத் தகர்த்துத் திரிதலைக் குகைக்குள்

மறைவாகவிருந்து கண்டமாகதன் விபூதியைப்பார்த்து இவ ளிவ்வாறு தோன்றியதற்குக் காரணமென்னை? யென்ன வவள் நடந்த விருத்தாந்தங்களை விடாமலுரைக்கக் கேட்டு மனம் வருந்தி அந்தோ என்புத்தி சபலத்தா லன்றோ வுலகங் கேடடையப் போகின்றது அனைத்துயிர்க்கு நானே தீங்கு செய்தவனுனே னென்று விரைந்தெழுந்து மற்றோ ரிடத்துக்குச்சென்று அருந்தவத்தி லிருந்தனன்.

முனிவன் சென்றவுடன் அசுரி அசுரேந்திர னிடஞ் சென்று நடந்தவையுரைத்தலு மவன் மிக்கமகிழ்வடைந்து கஜமுகனையடைந்தவனுடன் இந்திராதிதேவர்களை வருத் தித்திரிவதை யுணர்ந்த சுக்கிரன் கஜமுகனை யடைந்து மைந்தா தெய்வ வலுவற்ற வுனக்கெங்கேனு மபாயநேரிட் டாலு நேரிடுமாதலால் நீ சகலகுணசம்பன்னனுன பரமேசு வரனைக்குறித்தருந்தவஞ் செய்துவரம்பெற்றபின்னர் உன் னிச்சைபோல நீயுலாவலாகும் எனமந்திரோபதேசஞ் செய் தலும் மேருவினொரு புறத்தையடைந்து பதினுயிர வருஷ காலம் ஒற்றைக்காலில் நின்று அருமையான தவத்தினைச் செய்தவுடன் சிவபெருமா னவனெதிரேதோன்றி அவனுக் கு வேண்டும் வரங்களையும் வச்சிரகாயத்தையும் செயற்கை யானமைந்த எவ்வித ஆயுதங்களாலும் ஒருசாதியுருவின வான வெவ்வித சீவராசிகளாலும் அழிவின்மையும் அழிய நேர்ந்தாலினிப் பிறவாமையும் அளித்து மறைந்தவுடன் கஜ முகன் பரிவாரங்களுடன் இந்திராதி தேவர்களை வென்று அன்னுர் பதவிகளைத் தன்னுடன் பிறந்தவசுரர்க் களித்துத்

தான் பூவுலகில் தென்னாட்டை யடைந்து பத்து யோசனை சுற்றளவுள்ள ஒரு நகரினைச் செய்வித்து அதற்கு மதங்க புரமெனப் பெயரிட்டு அதனுள் வெகு சந்தோஷத்துடன் அசுரேந்திரன் புதல்வியான விசித்திரகாமிகையை மணந்து பட்டத்தரசி யாகக்கொண்டு சுகமாக வாழ்ந்திருந்த காலத்தில் இவனுக்கு இந்திராதி தேவர்கட்குரிய சிந்தாமணி காமதேனு கற்பக முதலியவை யூழியப் பொருள்களாக விளங்கின.

அசுகரேந்திரனுஞ் சுக்கிரனு மற்றையசிறந்த வசுரர்களும் மதங்கபுரத்தையடைந்து இவன்மந்திரி புரோகிதசேனுபதியாதியர்களாகவாழ்ந்தார்கள். இங்ஙனம்வாழுநாளில் தன்னைநாடிவரும் இந்திராதிதேவர்களைப்பார்த்துக் கஜமுகன் நீங்கள் எம்மெதிரில்வந்தால் இதுகாறும் வழக்கமாகச் செய்யும் வணக்கமன்றியும் நுங்கைகளைப்பின்னி நெற்றிகளிற்குட்டிகொள்ளுவதுடன் காதுகளில் கைகளை மாறிப் பிடித்துக் குனிந்துதாழ்ந்தெழுவீராகஎன்றனன். மறுத்தற்கஞ்சிய தேவர்கள் வெறுப்புட னிச்செயலினைச் செய்து வந்தார்கள். இவன் தேவர்களையுந் தேவர்மாதர்களையும் பல வகையிலுந் துன்பஞ்செய்து வந்தனன். இவன் கொடுமைகளைச்சகிக்காததேவர்கள் திருக்கைலை மலையிலெழுந்தருளி இருக்குஞ் சிவபெருமான்றிருவடிகளை வணங்கி நடந்தவைகளை விண்ணப்பஞ் செய்தனர். இறைவனு மவர்கட்கு கஜமுகன் கொடுமைகளை நீக்கியருள்வதாக அபயாத்த மளித்தனன்.

வசந்தருதுவானது உலகத்துக்கு இனிமையைச்செய்
கின்றகாலத்திலொருதினம் கனகமணிமண்டபத்து ளெழுந்
தருளி இருந்த கண்ணுதலெம்பெருமான் கழலிணைகளை
வணங்கிக் கருணைக்கடலே! சிங்காரவனமானது தேவரீர் திரு
வடிதரிசனத்தை வசந்தவிருதையாதாரமாகக்கொண்டு தரி
சிக்க விரும்புகின்றது என்றவுடன் இறைவன் வசந்தவிரு
தை யவயங்களா லொத்த நித்தியகல்யாணி யான உமா
தேவியின் திருக்கரத்தி லொன்றினைப் பிடித்தவராக உத்தி
யான வனத்தையடைந்து கொடிசெடிகளின் தழைவுகளைக்
கடாட்சித்து மகிழ்ந்து மனோகரமான ஒரு சித்திர மண்ட
பத்துளெய்தி யிருந்தான்.

அங்கு ஒருபுறத்தில் விசித்திர வர்ணங்களால் அட்
சரப்பிரணவம் இரண்டிணைந்து ஒன்றி னெதிரி லொன்றாக
அமைத்திருந்தது இரண்டு யானைகள் தும்பிக்கை களைப்
பின்னினவையாகிப் புணர்தல் போன்று காணப் படுதலும்
உமாதேவியார்வியப்புடன் அண்ணல் இஃதென்னை? பிரண
வசித்திரங்கள் யானைவடிவினவாகிப் புணருந்திற மென்னை
யென்றதற்கிறைவன் அன்னமு நாணும் வன்ன நடையு
டைய கன்னியே நின்னிருவிழிகளின் விசேஷத்தாலன்றோ
இவைகளிவ்வாறு செய்கின்றன வென்றருளிச் செய்தான்.
இங்ஙனமிருவரும் அளவளாவி யிருக்கும் பொழுதே அப்
பிரணவ சித்திரத்தினின்றும் யானைமுகமும் சதுர்ப்புயங்
களும் குடவயிறும் குறுகியதாளும் உடைய ஒரு சிறுவன்
வெளிப்பட்டு உமாதேவியாரையும் சிவ பெருமானையும் அடி

பணிதலும் அன்னோர் அச்சிறுவனை வாரியெடுத்து மார்புடனணைத்து உச்சிமுகந்து உடலந்தைவந்து அருகிலிருத்தி மூத்தமகனாக முறைகொண்டாடி உடனழைத்துக் கொண்டுத்தியான நீங்கித் திருவோலக்கமண்டப மடைந்து தமது கணங்களனைவரும் வருமாறு கட்டளையிட்டு அனைவரும் வந்தபின்னர் மங்கல மேளமுழங்க வச்சிறுவனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து மணிமுடி புனைந்து பாசாங்குசாதியாயுதங்களை யளித்துக் கணபதி யெனப்பெயரிட்டு நின்னை யனைவரும் வணங்க வேண்டுமாதலின் நீ விநாயக னென்று கூறிக் கணபதியாக்கி வைத்தனர். கணபதியும் கணங்களுக்குப் பதியாய் விநாயகனாய் திருக்கையிலையில் முன் கோபுர முகப்பில் எழுந்தருளி இருந்தனர்.

இங்ஙனங் கணபதி எழுந்தருளி இருந்தகாலத்தில் கஜமுகன் செய்யுங்கொடுமைகளை யாற்றாத இந்திராதி தேவர்கள் ஸ்ரீகைலாயத்தில் கோபுரமுகப்பி லெழுந்தருளி இருக்கின்ற கணேசப்பெருமானை மோதகங்கள், லட்டுகங்கள், பழங்கள், புஷ்பங்கள், சந்தனங்கள், தூபதீபங்கள் முதலியவைகளால் பூசைசெய்து வேதமந்திரங்களால் துதிபுரிந்து பன்முறைபணிந்து எங்களைக்காத்தருளவந்த கடவுளே! கருணாநிதியே! சரணாகதி யடைந்த எங்களைக் காப்பீராக! சரணாகதியடைந்த எங்களைகாப்பீராகவென்றுவேண்டு

தலும், பூசையாலுந் துதியாலும் மகிழ்வுற்ற கணேசர்தேவர்களே! "உங்கள் துதிகளை யங்கீகரித்தோம் எம்மாலுங்களுக்காக வேண்டுவதென்னை? யுரையுங்களென் றருளிச் செய்தலும் தேவர்கள் மீட்டும் பணிந்து எம்பெருமானே! மகா துராத்துமனான கஜமுகாசுரனால் மிகவும் வாடி வருந்துகிறோம் எங்களை ரட்சிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இம்மொழிகேட்ட கணபதி தேவர்களைப்பார்த்து அஞ்சன்மின் உங்கள் துன்பங்களை "யொழிக்கின்றே மெனக்கூறி ஆசனத்தி னின்றும் எழுந்து மலையனைய அசலனென்பானொருபூதன் முதுகிலேறி மாமுரசும், பெருங்கிணையும், வெண்சங்குந், தண்முழவுந், தழங்க அனேகமாயிரம் பூத வீரர்களுந் தேவர்களும் உடன்வரத் திருக்கைலையை விடுத்துப் பிரயாணமாகிப் பூவுலகிலுள்ள மதங்க புரத்தினருகி லெய்தினார்.

இவர் வருகையைத் தூதர்களாலுணர்ந்த கஜமுகாசுரன் ஆயிரம் வாகினி யசுரப்படைகள் உடன் வரப் பேரிகாகள சின்னதிகள் முழங்க ஆடம்பரத்துடன் மதங்கபுரிக்கு வெளியில் வந்தவுடன் அசுரசேனைகளும் பூதசேனைகளும் எதிர்த்துப் போராடின. பூதசேனைகளா லசுர சேனைகள் தோல்வியுற்றன.

தன்சேனை தோல்வியுற்றதனைக் கண்ட கஜமுகன் மகா கோபத்துடன் தேவர்கள்மீது அஸ்திரவருஷம் பொழிந்து அவர்களைத் துரத்தியடித்துக் கணேசரெதிரேவந்து அடா! சிறுவா! என்னோடு போர்புரிந்த வயதின் முதிர்ந்தாரெல்லாம் அழிந்தொழிந்தனர் நீயோ சிறுவன் எல்லாம் வல்ல இறைவன் எவராலும் வெல்ல முடியாத வரமளிக்கப் பெற்றுள்ளேன் நீ ஓடிப்போனால் பிழைப்பாய் இல்லாவிடில் உன்னையும் அதஞ்செய்து உன்னுடன்வந்த தேவர்களையு நாசஞ்செய்வே னென்று ஹட்டஹாஸம் செய்த வுடன், கணேசப்பெருமான் புன்னகையுட னவனைப்பார்த்து மூர்க்கனே! நின்னை எந்த மகாதேவர் வரத்தாற் சிறப்புடையவனாகச் செய்தாரோ அவர் கட்டளையினாலேயே யானும் உன்னை நாசஞ்செய்ய வந்திருக்கின்றேன். நீ நெடுநாளிந்த வுடலுடனிருக்க விழைகின்றாயாகில், தேவர்கள் பதவிகளை யவர்களிடம் ஒப்பித்துவிடு இல்லாவிடி லென்னுடன் போர் புரிதி என்றருளிச்செய்தலுங் கஜமுக னதிகோபத்துடன் ஒருபெரிய வில்லினைவளைத்து அதனிலாயிரம் அம்புகளை வைத்து விநாயகர்மீது விடுத்தான். அம்புகள் தும்புகளாக வருதலைக்கண்ட கணேசப் பெருமான் முசல மென்னும் ஆயுதத்தினா லவ்வம்புகளை நாசஞ்செய்து வில்லினையும் ஒடித்தெறிந்தனர் உடனே யவன் மற்றொரு வில்லேந்தி மிகவுங்கருகிய முகத்துடன் எதிர்க்க வதனையு நாசஞ் செய்த

வுடன் வேறொரு தண்டமேந்தி ஹட்டஹாஸஞ் செய்து கொண்டெதிர்க்க அத்தண்டத்தினையு நாசஞ்செய்து அவன் மார்பிலம்முசலத்தாலோங்கி ஓரடி வைத்தவுடன் அவன் நிலைகலங்கி நிற்றலும் இவன் வேறெவ்வித ஆயுதங்களாலும் இறவானெனவறிந்த கணேசர் தமது தந்தங்களி லொன் றினையொடித்து அவன் மார்பிற்படும்படி யெறிந்தனர். அது விரைந்துசென்று அவன் மார்பைப்பிளந்து நன்னீர்க் கட லுள் மூழ்கித் தூய்மையெய்தி அவர் திருக்கரத்தில் வந் திருந்தது. உடனே கயமுகனொரு பெரியமூஷிக உருவெய்தி எதிரே வருதலும் அசலன்றேளி னின்றும் அதன்மீது பாய்ந்து அதனை வாகனமாக்கியதன் அகத்தை யடக்கினர். பின்னர் தேவர்கள் சுகமடைந்து கணேசர் திருவுள விசை வால் கஜமுகனுக்குச் செய்துவந்த குட்டேல் குனிந்தெழு தல் என்னு மரியாதைகளைக் கணேசப் பெருமானுக்குச் செய்து வந்தனர். கணேசரு மவர்கள் வந்தனத்தை யேற் றுக்கொண்டு கயமுகனுலிறந்த பூதர்களை யெழுப்பி யவர்க் கருள்புரிந் துடன் கொண்டு திருக்கைலை மலையை யடைந் தனர். இதனை

"அயன்முதற் றலைவர்வானத் தயன்முதற் புலவரார்றும்
செயன் முறைக்கடன்கள் யாவுஞ்சிந்தினன் சிதைக்கும் வண்ணம்
கயமுகத்தடவு கொண்ட வயிர்த்திரு மருப்பினூல்வாய்க்
கயமுகத் தவுணனங்கே கதுமென வுதயஞ் செய்தான்.

அக்கணத் தாயிடை யைங்கரத் தவனருள்
முக்கணல் வாயினல் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனு மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையனோர் சிறுவன் வந்தருளினன்.

தடக்கையிலேந்து கோட்டைத் தந்தியா மவுணன்மீது
விடுத்தலு மனையன் மார்பை வெய்தெனக் கீண்டுபோகி
யுடற்படி மிசையே வீழ்த்தி யொல்லையி லோடித்தெண்ணீர்க்
கடற்படிந்த மலன்மைந்தன் கரத்தில் வந்திருந்ததன்றே.

என்று வரும் கந்தபுராணத்தாலும்.

ஸ்வயம் மதம்கஜம் பூத்வாரேமேதாம் மாகதஸ்ததா
ததாகஜமுகோ கோரோதைத்யதஸ்யாமஜாயத
ததாகஜமுகஸ்தத்ர: பராதுராஸீத் கணேஸ்வர:
சண்டார்க்க கோடிஸம்காச: க்ரீடயோ கஜயுக்மயோ
ஸோயங்தேவக்தேவீம பிமுதாததா
ப்ரணதாம மகாஸத் வோதண் டவத்ப்ரசரயான்வித
நுநொத தந்தமே தஸ்மின்னக் ரேச்சித்வா மஹாபல:
ஸஸமப்பேத்யவேகேனபித்தோரஸ் தஸ்ய நிஷ்டுரம்.
க்ஷணாத்ஸ்வா தூதகாம் பேர்தௌஸ் நாத்வாதஸ் யகரம்யெயள

என்னும் மகா ஸ்காந்தத்தாலுமுணர்க.

இராவண கந்துகதாடன பராக்கிரமம்.

௧

சுருள்படு குடுமிப்பிசிதவூணரக்கர் தொழுகழலிராவண னளித்த
வருள்படு லிங்கநிறீஇ யவன்றன்னை மியந்தரமீதெறிந்தவனை
யுருள்படு பந்திற்புடைத்த ருளீந்தவும்பலை யிம்பரிலடியார்
தெருள்படு முள்ளத்துறுகணபதியைச்சீறடிபணிந் துவாழ்த்திடுவோம்.

(இ-ள்) சுருள்பட்டுக் கிடக்குங்குடுமை யினையும் ஊனுண வினையுமுடைய அரக்கர் வணங்குங் கழலணிந்த காலின னான இராவணன் றம்மிடத்தளித்த சிவலிங்கத்தினைப் பூமி யில் வைத்து ஊடுருவச்செய்து அவனுக்குக் கோபமுண் டாக்கி அவன்றம்மை இருபது கரங்களாலுங் குட்ட வந்த சமயத்தில் அவனைத் துதிக்கையாலெடுத்துப் பல்லாயிரந்த ரம் வானிலெறிந்து பந்தாடியிறுதியில் அவனுக்கருளளித்த யானைமுகனான விநாயகப் பெருமானை இவ்வுலகி லுள்ள தெளிந்த வுள்ளத்தினரான அடியரி னிருதய கமலத்தி லுறுகின்ற கணபதியை நினைந்து அவரது சிறிய திருவடி களை வணங்கித் துதிப்போமாக. எ-று.

இராவணனைப் பந்தாடிய சரிதம்.

பிரமதேவன் புதல்வர் பலருட் சிறந்த புலத்திய னென்னு முனிவன் குபேரனென்னு மொருவனைப் பெற்று

3

அவனைச் சிறந்த இலங்கைக்கரசனுக்கி வைத்தனன். ஒரு நாள் இலங்காதிபனான குபேரன் அதிகசம்பந்துடன் வாழ் தலைக்கண்டவவன் தந்தையான புலத்தியன் அழுக்காறு கொண்டு தன்னுடலி லொருபாதியை விச்சிரவஸென்னு, மொரு முனிவனுக்கி நீ இலங்காதிபனான குபேரனுக்கெதிரி யாக விருப்பாயாகவென்ன வன்னான் குபேரன்மீது அழுக் காறு கொண்டானாய் ஒரு சோலையிலிருந்து தவஞ் செய்த் னன். இதனையுணர்ந்தகுபேரன் அவ்விச்சிரவசினிடம் எய்தி அவனடிகளை வணங்கி யானுனது மைந்தன் நீயெனது தந் தையாதலினென்னிடங் கருணைவைத்தல் வேண்டு மெனப் பணிந்து பணிந்து கூறினான். குபேரன் வாய்மொழி களைக் கேட்டுள்ளம் குளிர்ந்த விச்சிரவசு அங்ஙனமேயாகுகவென அவனை மைந்தனாகவே யங்கீகரித்துப் பொறாமை நீங்கி அருந்தவத்தி லிருந்தனன்.

ஒருதினம் இவ்விச்சிரவசைக் காணவந்த குபேரன் அழகிற்சிறந்த மூன்று அசுரமங்கையரை யுடன்கொண்டு வந்து அடிபணிந்து இவர்களைப் பணிவிடைப் பெண்களாக வங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண் டான். அவனுமதற் கிசைந்து அவ்வாறேயாகுகவென்றான். பின்னர் குபேர னிலங்கைக்குச் சென்றான். இம்மடைந்தை யர் மூவரும் இவனுக்கூழியஞ் செய்துவந்தார்கள். வெகு

காலம் முனிவனுந்தவத்திலிருந்தான், ஒருதினம் இம்மடந்தையர்களை யம்முனிவன்பார்த்து நீங்கள் எனக்கூழியஞ்செய்து மிகவுமிளைத்துப் போனீர்கள் உங்களுக்கு வேண்டியவரங்களைக் கேளுங்கள் தருகின்றேன் என்றனன் அதற்கம்மாதர்கள் நாங்கள் புத்திரப் பேற்றை விரும்பினோம் எங்கள்மூவருக்கும் புத்திரபாக்கியமருள்க என்றனர்.

இம்மாதரி னினியவசனத்தினை கேட்ட முனிவனதற்கிசைந்து ஒருதினம் மூவரில் மூத்தவளான புத்கலாவென்பாளைச் சேர்ந்து தசக்கிரிவனையும், கும்பகர்ணனையும் அளித்தான். இரண்டாவது மாலினி யென்பாளைச் சேர்ந்தான், அவள்வயிற்றில் விபீஷணனென்பான் பிறந்தான். (இராவணனுங் கும்பகர்ணனும் ஒருதாய்மக்கள்) விபீஷணன் மற்றொருதாயின் மகன். பின்னொருநாள் மூன்றாவதான வாகையென்பாளையும் முனிசேர்ந்தான். உடனே கரனென்னும் பெயருடையவன் பிறந்தான் இந்தவாகையை இரண்டாமுறையு மம்முனிசேர்ந்தான். சேர்ந்தவுடன் சூர்ப்பநகையென்னும் பெண்ணொருத்திபிறந்தாள் (கரனும் சூர்ப்பநகையும் ஒருதாயின்பிள்ளைகள்) இவ்வைவருமாக அன்னைதந்தையர்களைச் சென்றடிபணிந்தார்கள். பணிந்தாரை யம்முனிவன் பராமுகமாக விட்டுவிடாமல் சாதகன்மாதி சடங்குகளை நிறைவேற்றி உபநயனஞ்செய்து சகலகலைகளையு முணர்த்

திறன் சகலகலைகளையு முணர்ந்த விராவணனுந்தியர் பிரம னை நோக்கி வெகுகாலம் தவஞ்செய்து அவனால் அள்வற்ற ஐசுவரியங்களைப் பெற்று அசுரர்களைச் சேனைகளாகக் கொண்டு இலங்காதிபனான குபேரனை யிலங்கையி னின்று மோட்டி இலங்காதிபனாகித் தேவருமசுரருஞ்சேர்ந்து மணி முடிசூட்ட மண்டலாதிபனாய் மண்டோதரி முதலிய மனைவி யர்களுடன் சுகமாக வாழ்ந்திருந்தான்.

இங்ஙனம் வாழ்ந்திருந்து மிவன் தன்மனதினுள் இலங் கை யழியாதிருக்கவும் இதனிலிருந்தரசுபுரியும் யானென்று மிந்நகரிலேயே அரசுபுரியவும் சிவ பெருமானைக் குறித்துத் தவஞ்செய்து வரம் பெறவேண்டு மெனக் கைலைமலையின் தாழ்வரையை யடைந்து அரியதவத்தினை வெகுகாலஞ்செய் து உடல்வருந்தி உள்ளங்குழைந்து பிள்ளைபிறையணி வள் ளலை நினைந்து கண்ணீர் வார்த்துக் கரமலர் குவித்துச் சிவத் தியானத்தி லிருந்தனன். இவன் தியானத்துக்குகந்த சிவ பெருமான் இவனுக்குக் காட்சியளித்து நின்றவத்துக்கு மெச்சினேன் நினக்கு வேண்டியவைகளைக் கேள் தருகிறே னென்றவுடனே இராவணன் சிவபெருமானது பொன் னடிக் கமலங்களை வணங்கி அடியேன் வாழும் இலங்கை யும் யானும் என்றும் அபசெயமடையாவண்ணம் அருள் புரியவேண்டு மென்றனன். இவன்மொழிகேட்ட கருணை

வள்ளல் ஒருசிவலிங்கத்தினை யெடுத்து இதனை அருமையாக ஆசாரத்துடன் வாகனாதிகளி லேறாமலும் கீழே வைய்யாமலுங் கொண்டுசென்று உனது இலங்கையில் பிரதிட்டிப்பாயானல் அவ்விலங்கையு நீயு மழியாதிருக்கலாம் இதனை ஒருமுறைபூமியில் வைப்பாயானல் இது அங்கேயே தாபனமாகி விடும் ஆதலின் நினைவாக வெங்கும் வையாது கொண்டு சென்று நின்னிலங்கையில் நினக்கிட்டமான இடத்தில் பிரதிட்டிக்கவென்றருளிச்செய்தனர் இறைவனாணையை யங்கீகரித்த இராவணன் சிவலிங்கபெருமானைக் கரத்திலேந்தித் தெற்குநோக்கிவருங்காலத்திற் கண்ட தேவர்கள் நனிநடுங்கி ஆவோ இவன் இப்பொழுதே நம்மையெல்லாம் ஏவல் கொள்கின்றான் இனி இந்தச் சிவலிங்கத்தினை யிலங்கையில் பிரதிட்டித்தால் அதனருள் விசேஷத்தால் இவனென்று மழியாதவனாவான் வல்லமையிலும் மிக்கோனாவான். ஆனல் நம்மையெல்லாம் முன்னினுமதிகமாக வுபத்திரவஞ் செய்வான் இவன்கையிலிங்கத்தினை யிலங்கையி லிவன்கொண்டு போகாவண்ணம் செய்யவழியென்னை ? யெனச்சிறிதாலோசனை செய்து மோதகங்கள், புட்பங்கள், பொரிகள், சந்தனாதிகள் முதலிய வைகளுடன் திருக்கைலை மலையை விரைவிலடைந்து விநாயகப்பெருமானை அன்புடன் பூசித்து விக்கினராசரே! எங்கள் துன்பத்தினை ஒழிக்கவேண்டும் மகா துஷ்டனான ராவணன் சிவபெருமானா லளிக்கப்பட்ட சிவலிங்க,

பெருமானை இலங்கையிற் கொண்டு பிரதிட்டிக்க நடந்து செல்லுகின்றான் அவன் அவ்வாறு செய்தால் எங்கள் குலமடியோடு நாசமுறும், எங்குலநாசமுறா வண்ணம் ஈடேற்ற வல்லார் தேவரீரையன்றி யெவருமிலர் கருணாநிதியே! விரைந்து சென்று அக்கொடியனெண்ண நிறைவேறாது விக்கினம் புரிகவென்று வேண்டுதலும் அடியார்க்கெளியரான விநாயகப்பெருமான் அஞ்சன்மினென அபயாத்த மளித்து வருணனை விளித்து நீ இராவண னுதரத்துட்புகுந்து சலோபாதியை யுண்டாக்கக்கடவை நமது மறுவுத்தரவுக்குப்பின்னர் நீ அவனை விட்டு நீங்கலாமென்று முன்னர் வருணனை யனுப்பி பின்னர் இவர் தேவரெல்லாங் கண்டாச்சரியங்கொள்ளுமாறு ஒருபார்ப்பனச் சிறுவனுருவுடன் இராவணனைத் தொடர்ந்து சென்றனர் இதற்குள் இராவணன் தென்கடலின்மேற் புறத்துக்குச் சென்றான். வருணனும் அவன் வயிற்றுட்புகுந்து சலபாதையை அதிகமாக வுண்டாக்கி வயிற்றைப் பெருக்கச் செய்துநடக்க வொட்டாமல் உபத்திரவப்படுத்தி வலிய வெளிப்படுவான் போல நின்றனன். சிவபெருமான் அனுசாரத்துடன் இச்சிவலிங்கத்தினைத் தாங்குதல்கூடாது என்றருளிச்செய் திருக்கின்றனர் இச்சிவலிங்கம் கரத்தினிலிருக்கும்போது மூத்திரம் வீழ்த்தினால் நமதெண்ண நிறைவேறாது எந்தவித நிறுத்தினாலுமிந்த மூத்திரநிற்காது சிவலிங்கத்தையுங் கீழேவைக்கப்படாது இதற்

கென்ன செய்யலாமென்றுலோசிக்கும் பொழுது.

விநாயகப்பெருமான் முஞ்சிப்புல் லரைஞாணும் முன் கையிலேந்திய சிறுதண்டமும் உடையராய் ஒருசிறுபிரம சாரியைப் போல எதிரில் வருதலைக்கண்ட இராவணன் இவனிடம் எம்பெருமானையளித்துச் சலமோசனஞ்செய்து வருவோமெனக் கருதிப்பிரமசாரியை விளித்தான் பிரமசாரியும் எதிரிற்சென்று ஏன் விளித்தனை யென்றனர்.

இவன் நீ தூய்மையுடையவனாகக் காணப்படுகின்றனை யான்சலமோசனஞ்செய்து வருங்காறு மிச்சிவலிங்கத்தினை நீவைத்திருத்தல்வேண்டும்! ஸ்நானமுதலிய சுசியில்லாதவர்கள் இதனைத் தொடப்படாது தரையிலும் இதனை வைக்கப்படாது என்றான். அதற்குப்பிரமசாரி நீ என்னிடம் இச்சிவலிங்கத்தினைக்கொடுத்து அதிகநேரம்வராமலிருக்கக்கூடாது மூன்றுமுறை உன்னை விளிப்பேன் மூன்று முறைக்குள் நீ வந்திதனை வாங்கிக்கொள்ளுதல் வேண்டும் வாங்காவிடில் கீழேவைத்து விடுவேனென்று கூறினர். அவ்வாறே செய்யக்கடவை என்று கூறிச் சிவலிங்க, பெருமானை அப்பிரமசாரியிடம் அளித்துத் தான் சலமோசனத்துக்குச் சென்றான் சென்று வெகுநேரம் வராதிருத்தலும் இப்பிரமசாரியொருமுறை யிவனை விளித்தான் வந்திலன் பின்னருஞ் சிறிதுநேரங்கழித்து மற்றொருமுறை விளித்தான் அப்பொ

ழுதும் வந்திலன் பின்னரும்சிறிது நேரங்கழித்து மற்றொரு முறைவிளித்தான் இங்ஙனம் வெகுநேரம் பொறுத்து மும் முறைவிளித்தும் இராவணப் பார்ப்பான் வராமையால் பிரமசாரியார் சிவலிங்க பெருமானைத்தரையில் வைத்தனர். உடனே வருணனும் அவ்விராவணன் வயிற்றுளிருந்து உபத்திரவஞ்செய்தலை யொழித்து விலகினான், சல பாதையும் அடங்கியது. அடங்குதலும் விரைவிற் கால் கரங்களைப் புனிதப்படுத்தி ஆசமனஞ் செய்து தூய்மையாளனாய் எக்ஞோபவீதத்தை முறையாகத் தரித்துப் பிரம சாரியிடம் வந்துபார்த்தான் பிரமசாரிகையிற் சிவலிங்கமின்றி வெற்றாளாய் நிற்கக்கண்டு எங்கே. சிவலிங்கமென்றான்? அதற்குப் பிரமசாரி துர்ப்பலனான யானந்தச் சிவலிங்கத்தைச் சுமக்க மாட்டாமல் சுமந்து நெடுநேரம் வருந்தி நேரம் பொறுத்துப் பொறுத்து உன்னை மூன்றுமுறை விளித்தேன் நீ வந்திலை வராமையால் யான் சிவலிங்கத்தை அதோ கீழே வைத்துவிட்டேன் நீ எடுத்துக்கொண்டுபோ என்று கூறுதலும் இராவணன் கடுங்கோபத்துடன் பிரமசாரியை யுருட்டிய விழிகளாற்பார்த்து ஓ! அவசரபுத்திகாரனே! இன்னஞ் சிறிது நேரம் பொறுக்கப்படாதா. என்று கூறிக்கொண்டே சிவலிங்கத்தினருகிற் சென்று கைலைமலையை எடுத்த அம்மானை யாடின எனக்கு இச்சிறுலிங்கம் எவ்வளவு என்று சிவலிங்கத்தினைப் பிடித்திழுத் தெடுத்தான்.

அது பாதாள மேழினுங் கீழ்மிகப்படர்ந்து வேரோடி நின்றுள்ளதனை இவ்வரக்கனறிந்திலன், அறியாது மலையனை யதங்கைகளால் பிடித்திழுத்தனன் இழுத்தவுட னச்சிவ லிங்கமான்து பசுவின்காதுபோல நீண்டுநின்றது ராவண னுந்தன்னாலான வரைக்கும் இழுத்துப்பார்த்து மகாபல வென்று கூறினான்.

அத்தலமானதிப்பொழுது கோகர்ணமென்னும் பெய ரினையும் அச்சிவலிங்கம் மகாபலநாதனென்னு நாமத்தை யும் பெற்றன. நிற்க ராவணன் தன்னெண்ண நிறைவேறா வண்ணஞ் சிவலிங்கத்தினைக் கீழ்விடுத்த சிறுவனைப்பார்த்து அடா! உன்னாலன்றோ இக்கேடுண்டாயதெனத் தனதிரு பதுகைகளையும் மடக்கி வன்மையுடன் பிரமசாரியைக்குட் டினான் கைலைமலையை யெடுத்தம்மானை யாடிய தனக்கும் இச்சிறு பிரமசாரிக்கும் ஒப்பல்லவென்று கருதாமல் ஓங் கிக்குட்டுதலும் பிரமசாரியாகிய விநாயகப்பெருமான் யானை முகத்துடன் றோன்றித் தமது துதிக்கையினாலவனைப் பிடித் துக் கறகறவென்று சுழற்றி விண்ணுலக பரியந்தஞ் செல்லு மாறு வீசியெறிந்தனர் விநாயகராலெறியப்பட்டு மேற் சென்று கீழ்மறிந்து தலைகீழாகவருகின்ற வவனைப் பின்ன ருந்துதிக்கையாற்றாக்கி மேலெறிந்தனர் இங்ஙனம் அனேக முறை எறிதலும் இளைப்படைந்து இராவணன் இனி நாம்

சும்மா இருந்தால் சாவோமென ஹட்ட ஹாஸம் அகம்பாவ முதலியவனைத்தும் விடுத்து என்னை மன்னிக்க வேண்டும், என்னைமன்னிக்க வேண்டு மென்று கூவினன்." இங்ஙனம் கூவுதலும் விநாயகப்பெருமான் இராவணனைப் பந்தாடு தலையொழித்து அவனைப்பூமியிற் பிடித்து நிறுத்துதலும் அன்னோன் மிகநடுங்கி என்னை மன்னித்தல் வேண்டுமென்று வணங்கிக்கேட்டலு நீ நினது கைகளால் நின்மண்டை குலுங்கக்குட்டிக் கொள்ளுவாயானல் நின்னை மன்னிப்பே னெனராவணன் அதற்கிணங்கி நான்செய்த குற்றத்துக்கிது தண்டனையெனத் தந்நெற்றிகளின் மிகவும் கடினமாக மோதிக்கொண்டனன். இரத்தம் வடியத் தந்நெற்றிகளில் மோதுதலுடன் அநேகவிதமாக விநாயகப்பெருமானைத் துதித்தவுடன் அவர் களிகூர்ந்து நின்குற்றத்தை மன்னித் தாம் நின்போல வெமமுந்திரிலிவ் வண்ணங்குட்டிக் கொள் ளுவோர் செய்யுங்குற்றங்களையாம் பொறுத்தருள் செய்வே மென்று கருணைபுரிந்தனர். இதனை

இருட்கறை மிடற்றுச்செம்ம லினிதருள் கூர்ந்தன் னைகை
யருட்குறி யொன்றுநல்கி யந்தநும் பதியில் வைத்துத்
தெருட்குணத் தோடும்பூசை செய்யிதுகொண்டு போங்கான்
மருட்குண மகற்றி யூர்திமாற்றியே செல்லல் வேண்டும்.

நெறியிடை வைப்பினிந்த நின்மலக் குறிதான்வாரா
தறியெனவ ருளினீங்கவரக் கன்கைத்தலத்தி னேந்திச்
செறிதரு வரையுங்கானுந் திகழ்பதி பலவுநீங்கி
யெறிதிரைக் கடலில்வைகு மிலங்கையிற் செல்லப்புக்கான்.

உளைதரு வயிற்றினோடு முறுமிராவணனும் வீரன்
களைகணுமிறைவன் சொன்ன கடப்பாடு கடவான் சூழ்ச்சி
விளைவையோ ராதுமுன்னே மேவியமறைச்சி றார்க்குத்
தளைபுரி மன்பாலின் சொற்சாற்றி மற்றிதனைச் சொல்வான்.

நீர்மிகுந்தகத்தை வாட்டி நெடுந்துயர் செய்யா நின்ற
தூர்மிகு தூரத்துள்ள தொருவரும் வேறுசாணேன்
சீர்மிகு சிவலிங்கத்தைச் செங்கையிற்றாங்கு நான்போ
யேர்மிகு தோயந்தொட்டிங் கெய்திடும் வரையுமென்றான்.

மெல்லிய வாக்கையேனுன் விழுச்சிவலிங்கந் தாங்கும்
வல்லமையுடையே னல்லேன் வலிதினீ தருதிதந்தா
னல்லதே முக்கூற்கூவ நண்ணிடாயாயின் மண்மேற்
செல்லுற விடுப்பனென் றான்றேவர் கடேவதேவன்.

குட்டலு மறைச்சிறுன்போற் குறுகியநாதன் வல்லே
யட்டுமும்மத மால்யானை யானனாகி விண்ணின்
முட்டவொள் ளொளிகான்மோலி முதிர்ந்தபேருநவு கொண்டு
சட்டவல்லரக்கன் றன்னைத் தடக்கைப் பந்தாடினானே.

என்று வராநின்ற கணேசபுராணச் செய்யுட்களா
லுணர்க.

4.

விரஜாமோக்ஷண பராக்கிரமம்.

சந்தனகளப் குங்குமமணிந்து தையலர்மையல் கொளுருவில்
வந்தருளின்றி யரம் பையின்கனி போல்வாயிடுவிரசைவாய் பிளவுற்
றந்தரநடுங்கவுயிர் விடப்புரிந்தன்னுண் மலைமார்ப மீதிருந்த
சுந்தரக்களிற்றினடியிணை மலரைத்துயரறத்தொழுதுவாழ்த்திடுவோம்.

(இ-ள்) சந்தனக்குழம்புமுதலிய வணிந்த வுருவினளாய்ப் பெண்களுங் காமுறத் தக்கபேரழ குருவினளாகி வந்து தம்மையொரு சிறுவாழைக் கனியைப் போல வாயிலிட்டு விழுங்கியெழுந்த விரசையென்னும் பெயரினளான அரக்கியின் உதரத்தினைப்பிளந்து அவள்மார்பிற் கிடந்து விளையாடிய அழகிய யானைமுக விநாயகப் பெருமானது திருவடித்தாமரை மலரை நந்துன்ப நீங்க வணங்கித்துதிப்போமாக. எ-று.

விரஜாமோக்ஷண சரிதம்.

பிரமதேவன் புதல்வருட் சிறந்த காசிப முனிவனும் அதிதியுஞ்செய்த தவத்துக்கிரங்கிய விநாயகப்பெருமான் மகாமேருவும் நாணத்தக்க பேருருவுடன் அவரெதிரே தோன்றி என்னைக்குறித் தருந்தவஞ் செய்தவர்களே! உங்கள் தவத்துக் கிரங்கினேன் உங்களுக்கு விருப்பமான வரங்களைக் கேளுங்களென்றவுடன் இருவரும் வணங்கி தேவரீரிவ்வாறு பத்துத்திருக் கரங்களுஞ் சிங்கவாகனமும்

பேருருவுங்கொண்டன்றி யெமக்கிசைந்த சிறு குழைந்தை யாகி எங்களுக்கருள் தரல்வேண்டும் என்றுவேண்டு கோள் செய்ததற்கிணங்க இருபுயங்களும் மனிதமுகமும் உடைய சிறுகுழந்தையினுருவமாய் வவர்களிடந் தங்குதலும் அன்னூர் சாலமகிழ்ந்து தமது கருவிலூறி வந்தசிறுவனைப் போல் மதித்து சத்தவிருடியர் முதலிய பெரியோர்களின் வேண்டு கோளுக்கிணங்கி மகோற்கடன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தார்கள்.

எம்பெருமான் மகோற்கட நாமத்துடன் காசிபாச்சிர மத்தி லிருந்தருளி இளங்குழந்தையாகி விளங்கியகாலத் தில் மகாதுஷ்டையான விரசையென்னும் அரக்கியொருத் தி இச்சிறுவன் வளர்ந்து பெரியவனுனல் தம்மினத்தவரான அரக்கர்க்குத் தீங்கையுந் தேவர்க்கு நன்மையையுஞ் செய் வான் துஷ்டவிருக்ஷத்தினை முளையிலழிப்பதே நலம் அன்றே லதனைக்கோடரி கொண்டழித்தல் வேண்டும் இவன் பிறப்புக்காகத் தேவருமுனிவருமகிழ்வு கொண்டி ருக்கின்றூர்கள் இம்மகிழ்ச்சியை நீக்கிவைக்கின்றேனென்று தனது கோரவுருவினைமறைத்து அழகிய பார்ப்பனச்சாதி யின் வேடந்தாங்கி நல்ல பட்டாடை யுடுத்தி விலை யுயர்ந்த ஆபரணமணிந்து மணமிகுந்த மலர் மாலைசூடி கண்ணின்மை யெழுதி காசிபன் வீட்டுக்கு விருந்தாளியைப் போல அதி தியுங்காசிபனு நீராடச்சென்றிருந்த சமயம்பார்த்து ஆசிர மத்துள் நுழைந்து பேரழகுவாய்ந்த திருவுருவினை யுடைய மகோற்கட மூர்த்தியை யெடுத்துச் சிறிதும் இரக்கமின்றி

சிறுவாழைக் கனியை விழுங்குமாறு விழுங்கி ஒருவருக்குந்தெரியாமல் வெளியேறிச் சென்றனள்.

இனித்தேவர்களும் முனிவர்களு மெங்ஙனஞ் சந்தோஷ முறுவார்களோ பார்க்கலாம் தேவர்களின் மகிழ்ச்சிப் பொருள் என்னுதரத்துள்ளது என மிகுந்த மகிழ்வுடன் செல்லுங்காலத்து விநாயகமூர்த்தியின் திருமேனிவெப்பமானது இவளுக்கு அதிகதாகத்தை யுண்டாக்கி நாவறண்டு கண் புகைந்து முகங்கருகி வருந்த வேண்டியவளானள் குழந்தையை விழுங்கிக் குதூகலத்துடன் செல்வாட்கு அடங்காத் தாக முண்டாகவே நிஜவுருவங் கொண்டு அங்கு சமீபங்களிலுள்ள நதி வாவி கூவ மடு வோடையாதி களிலுள்ள நீரனைத்தையும் உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தனள். எவர்க்கும் அவசரத்தில் நீர்கிடைக்காவண்ணம் நீரனைத்தையும் முற்றவற்றக் குடித்தும் தாகமொரு சிறிதுந்தணியாமையால் அரவங்கடித்த மனிதன்மயங்கி வருந்துமாறு மிகவும்வருந்திப் பின்சிறிதுதெளிந்து சூலேநோய் கொண்டவளைப்போல கடகடவென்று புரண்டு ஆகாயகங்கை நீரையும் பருகிப்பார்ப் போமென நீர் குடித்து மலைபோலப் பருத்த வயிற்றுடன் மேலெழுந்து சிறிது தூரஞ் செல்வதற்குள் உள்ளிருந்த பெருமான் காலா லோருதை கொடுத்தனர். உதைபட்ட விரசை வயிறிருபிளவாகப் பிளக்கப் பட்டவளாய் பிரளயகாலத்துப் பேரிடியுநாண ஓ ஓ வென விரைந்து பூமியில் விழுந்துபடபடவென்று புரண்டுபுரட்சியில் அருகிலுள்ள மரங் கொடி செடிகளையுஞ் சின்னபின்னம்படவள

சரர்களும் வன மிருகங்களும் பயந்து ஓடாநிற்க உயி ரிழந்து நீலமலைபோல விரித்த கை கால்களை யுடையவளாக விழுந்திறந்தனள்.

இவளின் பிறப்பட்ட வயிற்றின்வழி வெளியெய்திய விநாயகப் பெருமான் அவள் மார்பையே தொட்டிலாகக் கொண்டு விளையாடல் புரிந்துகிடந்தனர். நீராடச்சென்ற காசிபனும் அதிதியும் ஆசிரமமடைந்து மகோற்கட மூர்த் தியைக்காணுமல் பலவிடங்களிலும் தேடிச்சென்று சின்னு பின்னப்பட்ட மரங்களின் இடையில் மலைகிடப்பதுபோல கிடக்கும் அரக்கியையும் அவ்வரக்கியின் பருத்த மார்பிற் கிடக்கும் மகோற்கட மூர்த்தியையும் பார்த்து ஆச்சரிய மடைந்து கலப்பைகளைப்போல் வளைந்துநீண்ட பற்களையும் மலைக்குகைபோலும் பிளந்த நாசியையும், மலை பிளந்தாற் போல திறந்துகாணப்படும் வாயினையும், இரும்பூசிகளைப் போன்ற ரோமங்களையும், வட்டமிட்டகன்ற கண்களையும், உரல்போன்ற இடையினையும், தடித்துத்தொங்கும் கீழு தட்டினையும், குறுகிக்காணப்படுங் கழுத்தினையும் உடைய இந்தக்கொடியராட்சசியின் பெருவயிறு பிளக்கப்பட்டுயிர் போகி இரத்தமொழுகக் கிடத்தலின் இவ்வரக்கி நாமில் லாத சமயத்தி லாசிரமம் புகுந்து சிரமமின்றி நம்மகோற் கடனை எடுத்துவிழுங்கி இருத்தல்வேண்டும் நமதப்பனது பராக்கிரமத்தா லிவ்வாறு உடல் பிளந்து உயிர்துறந்திருத் தல் வேண்டும் என உத்தேசத்தாலுணர்ந்து மலை மீதேறு வது போல அவள் வயிற்றின் மீதேறி மார்பிற்கிடந்த பெரு

மானை எடுத்து அதிதியானவள் என்கண்மணி நினது பராக்கிரம மின்னதென்றும் நின்னை இன்னவனென்றும் அறியாது இக்கொடியவ ளிறந்தனள் இன்னம் நின்னைப்பகைக்கும் சத்துருக்களை யெல்லாம் இவ்வாறேவிளையாட்டால் வென்று விளங்கு வாயாக வென்று கூறி உச்சி முகந்து மார்புடனணைத்து ஆசிரமத்துக்குக் கொண்டு சென்றனள். இதனை,

ஏகஸ்மின் திவஸேப்ராதஃ ஸ்நாதும் யாதேமுனௌபஹி;
அஸ்வாபயத்ஸ்வதனயு மதிதிக்ரஹ மாயயௌ
சகாரயக்ஞஸம்பாரம் ஸ்தாதேகாநிசாசரி
விரஜேத்யாபி விக்யாதா விகராலேட்சணனு.

ஹலதம் தீதரீநாஸாபாத சூர்ணீதபூதரா
தீர்க்கஸ்தனிலஸா ஜிஹ்வாகோபுரஸ் பர்த்திஸத்பகா
ஜக்ராஹபாலகம் ஸாதுஸர் வபக்ஷ்யாநிசாசரி
க்ஷுதிதாபட்சயச் சீக்ரம் பக்வம் ரம்பாபலம் யதா.

சனைஜகாமககனம் ஜலம்பாதும் புவம்யயௌ
பபௌஜலம் பெகுதரம் பபாதப் ருதுரோதரா
மூர்ச்சாமவாப மஹதீம்ஸர்பதஷ்டோநரோயதா
லுலோலதரணிப் ருஷ்டேமஹா ரூபவதியதா.

முஞ்சமுஞ்சேதி ஜல்பம்தீபதங் கந்துமதாக்ஷமா
ஹாஹாகாரம் ப்ரகுர்வதீகினதீ வக்ஷசிரோமுகம்
தாவத்வேஹாந்தரே தஸ்யாவவ் ரூதேமுனிநந்தன;
விதார்யஜடரம் தஸ்யாவக்ஷஸ்யே வஸ்திதோபவத்.

என்னுங் கணேச புராண வசனத்தாலுணர்க.

அகஸ்தியதாடன பேதன பராக்கிரமம்.

விந்தநன்மலையை விரலினலடக்கி விரிகடல்குடித்தொருகிரியைக்
கந்தனர்சத்திக் கிலக்கியமாக்கிக் கடத்திடை வருகுறு முனிவன்
நொந்திடக் கவித்தகரத்துடலுடல நோவுறப்புரிகய முகனைச்
சந்ததமடியர் மனத்துறைபுரனைத் தண்மலர்த்தூயடி பணிவாம்.

(இ-ள்.) சத்தியலோக பரியந்தம் உயர்ந்து நின்ற நல்ல விந்தமலையைக் கரவிரலினாற் பாதலத்தழுத்தியும் ஆழமு மகலமுமான கடல் நீரைச்சுருக்கி ஆசமனஞ் செய்தும் கிரவுஞ்சமென்னும் அசுரமலையைக் குமரக் கடவுளின் வேற்படையா லிருபிளவாகச் சபித்தும் பொதிகை மலைக்குச் செல்லு தலையுத்தேசித்துச் சையகிரிச்சாரல்வழி வராநின்ற அகத்தியமுனிவன் குட்டுவான்மடக்கியகைகளுடன் அங்குமிங்குமாக ஓடி உடல்வருந்துமாறுசெய்த யானைமுகப்பெருமானை, எந்நாளும் அடியவர் உள்ளத்தில் விளங்கும் பரமேசுவரரை நினைத்து அவர்திருவடிகளில் சீதளமமைந்த புட்பங்களை இட்டருச்சித்து நமஸ்கரிப்போமாக. எ-று.

இதன் விவரம்.

முனிவருளெல்லாஞ் சிறந்தவரும் விந்தமலையின் செருக்கினையடக்கியவரும் எவராலுங் குடிக்கமுடியாத விரி

ட்ல் நீரை ஒருகரத் தேந்தி குடித்தவரும் தேவர் முனிவர் சித்தர் வித்தியாதரர் கந்தருவர் முதலிய அனைவரையும் தனது மாயையினால் அச்சுறுத்தி வருத்திய கிரவுஞ்சமலையைத் தண்டத்தாலடித்துக் கருவமடக்கிக் குமாரக்கடவுளின் வேற்படையா லழியசபித்தவரும் வாதாவி வில்வலர்களின் கொடுந்தன்மையையடக்கி அவரைச் சங்கரித்தவரும் நிகரற்றவரும் ஒப்புமுயர்வுமற்ற சிவபெருமான் தமக்கிணையாகவுள்ளவர் இவ்வகத்திய ரொருவரே எனப்பார்வதிதேவியார் திருமண காலத்திலருளிச் செய்யப்பட்டவருமான மஹாபராக்கிரம மூர்த்தியாயுள்ள அகத்தியமுனிவர் சையகிரிச்சாரலிலொருபுறத்தி லிருந்து சிவபூசைசெய்யுங் காலத்தில்காவேரியென்னுந் தேவநதியையுள்ளடக்கி யுள்ள கமண்டலத்தினை எதிரில்வைத் திருந்தனர்.

இந்தசமயத்தில் தேவராசனெனவன் தனதுபூங்காவனமானது நீர்வளமின்றி வாடிவதங்கி யொழிவதனைக்கண்டு நாரதருடைய உபதேசத்தால்அப்பம், வடை,தோசை,யவல் கடலை, கரும்பு, தப்பிலிளநீர், சருக்கரைப்பொங்கல், கொப்பரைமுதலான சிறந்தநிவேதனங்களாலும் பாரிசாதாசோக, புன்னகசம்பக, மந்தாரகுரவகாதி புட்பங்களாலும் தூபதீப சந்தன, சவ்வாது, கஸ்தூரியாதி உபசார திரவியங்களாலும் பூகலவங்க கற்பூராதிசகித தாம் பூலாதிகளாலும் பிரதட்

சிணகமஸ்கார ஸ்தோத்திரங்களாலும் விநாயகப் பெருமா ஜனப் பூசனைசெய்து வேண்டுதலும் அவன் வேண்டுதலுக் கிணங்கி வெளிப்பட்ட விநாயகப்பெருமான் நினக்குவேண் டிய வற்றைக்கேளென விந்திரன் எனதிந்த நந்தவனஞ் செழிப்புறுதற்குச் சீவநதியான காவேரியை அகஸ்திய கமண்டலத்தி னின்றும் பேதித்துத் தருதல் வேண்டும் தேவரீரையன்றி அகஸ்தியர் கமண்டலநீரைக் கவிழ்க்கவல் லுகர் எவருமிலர் என்று கூறியிரந்ததற்குத் திருவுள மிரங் கிய வெம்பெருமான் தேவராகனே! அஞ்சாதை யானுனக் குக் காவேரிநதியைத் தருகின்றேனென் றருளிச்செய்து அந்தர்த்தான மாகி முன்னுரைத்த சையகிரிச் சாரலை யடைந்து ஒருகாகப்பறவையி னுருவமாகி அகத்தியரெதிரி லிருந்த கமண்டலத்தின் விளிம்பிலிருந்தனர்.

சண்டாளபட்சியான காகமானது கமண்டல நீரைத் தொடவந்ததெனக்கருதி ஒருகரத்தினல் அகத்தியரிக்கா கத்தினை யோட்டினர் காகம் இவரோட்டுதலை யாதரமா கக் கொண்டு கமண்டல நீரைக்கவிழ்த்துச் சிறிது பறந்து ஒரு சிறுவ னுருவெய்தி எதிரில் நின்றது.

உடனே கமண்டல நீரானது அலைகடல் கரைபுரண் டாங்கு அளவற்ற பெரும்பிரவாகமாகி யோடியது இத னைக்கண்ட அகஸ்தியர் மகாகோபங்கொண்டு இங்ஙனஞ்

செய்த இக்கொடியவன் யாவனாகவிருக்கலாம் தேவனோ? அல்லன் அரக்கனோ? தேவாசுரர்களாகிய எவரும் எம்மிடத் தித்தகைய தீங்கிழையாரே காகவுருவுடனெய்தி யெம் கமண்டல நீரைக்கவிழ்த்து ஒரு சிறுவனுருவந்தாங்கி நிற் கின்றானே இங்ஙனநிற்கும் இவன் மனச்செருக்கினை யகற் றுகின்றேன் உடல்த்திமிர்ப்பையும் ஒழிக்கின்றேன் அறியா மையாற் செய்தவனல்லன் அறியாமையுடையவன் இவனாகு வனோ? காகவுருவங்கொண்டென் கமண்டல நீரைக் கவிழ்த் தவிவன் இதனை வேண்டுமென்றே செய்திருக்கிறான் இவன் மடவோனல்லன் எவனோ ஒரு திமிர்பிடித்தவன் என்று விரைந்தெழுந்து கரங்களைமடக்கி யடிக்கச் சென்றனர். அடிப்பான் வரும் அகத்தியர் சமீபத்தில் வந்தவுடன் அவர் ஓங்கி அறையும் அறை தம்மீதுபடாமல் சிறிது விலகி னர். அதுகண்டவகஸ்தியர் மிகுந்த கோபத்துடன் நீ எங்ஙன மாறி நிற்கினு நின்னைவிடேன் என்று பின்னு நெருங்கி அடிக்கச்சென்றனர். அதுகண்டபெருமான் ஒட்டங்காட் டிக்கண்ணெதிரி னின்றனர் இவரும்பின்னுந் துரத்திச் சென்றனர் இங்ஙனம் அநேகமாயிரமுறை நெருங்கியும் விலகியும் ஒட்டங்காட்டி நின்றவிவரை நெருங்கி ஓரடியே னுமடிக்கமுடியாமையால் மிகுந்த சீற்றங்கொண்டு இவனை எவ்விதத்திலேனும் அடிக்காமல் விடுவதில்லையென மிகு வேகமாக ஓடியோடிப்பார்த்தும் ஓரடியும் அடிக்கமுடியா

மல் இளைத்துக்களைத்து வருந்தி உயிர்போகினும் இவனை விடப்படாதென இளைப்புடனோடி யடிக்கவருதலும் விநாயகர் தமதுண்மை யுருவமான யானை முகத்துடனெதிரே நின்றனர் முனிவரதுகண்டு அந்தோவென் செய்தேனென வெட்கி விநாயகரையோ குட்டநினைத்தேன் அபசாரம் அபசாரம் எனத்தமது தலையிற் நன்றாய்க்குட்டிக் கொண்டனர். விநாயகர் முனிவனே அஞ்சாதே! நினக்குவேண்டியவரத்தினைக்கேளென முனிவர் யான் குட்டிக்கொண்டது போலே தேவரீர்சன்னதியிற் குட்டிக்கொள்ளுவோருக்கு அருள் செய்வதுடன் காவேரியையுந்தருதல் வேண்டுமென்றனர். விநாயகர் அவ்வாறே ஆகுகவென்று தமது திருக்கரத்தாற் காவேரி நீரிற் சிறிதெடுத்துக் கமண்டலத்தில் விடுத்து இது எப்பொழுது நினது கமண்டத்தி லிருக்கக் கடவதென்று கூறி மறைந்தனர். அகத்தியர் பொதிகைக்குச் சென்ற பின்னர் கமண்டத்தினின்றும் பொங்கி வடிகின்ற நீரானது தாம்பிரபருணி நதியாகிவிளங்குகின்றது. இதனை.

கொங்குலா முனிவன்பாங்கர் குண்டிகை மீதிற் பொன்னி
சங்கர னருளின்வந்த தன்மையும் புணர்ப்பு முன்னி
யைங்கரன் கொடியாய் நண்ண வகத்தியனவனென் றோரா
னிங்கொரு பறவைகொல்லா மெய்திய தென்றுகண்டான்.

கண்டனன் பிள்ளைசெல்லக் கரதலமெடா நின்றேச்ச
வண்டருக் கலக்கண் செய்த கயமுகத்தவுணற் செற்றோன்

குண்டிகை யதனைத்தள்ளிக் குளிர்புனற் கன்னியன்றான்
பண்டையி லிசைவு செய்தான் பாரினீபடர்தியென்றான்.

பெயர்தலு முமைதன் பிள்ளை பிள்ளையினுருவநீத்துப்
பயிறரு மறைநூல் வல்ல பார்ப்பனமகன்போற் செல்லச்
சயமிகு தவத்தின் மேலான் றன் மையங்கதனை நோக்கி
யுயிர்முழுதடவேதோன்று மொருவன் போலுருத்து நின்றான்.

தேவனோவ வுணன்றானோவரக்கனோ திறலின்பாலோன்
யாவனோ வறிதறேற் றேனீண்டுறு நதியைசிந்திப்
போவனோ சிறிதுமெண்ணா தகந்தையன் போலுமம்மா
யாவனோ வன்மைதன்னை யறிகுவன் விரைவினென்றான்.

குட்டுவான் றுணிந்து செல்லுங் குறுமுனிக் கணியனாகிக்
கிட்டுவான் விசும்பினூடு கிளருவான் றிசைகடோறு
முட்டுவான் பின்புபாரின் முடுகுவானனையின் கைக்கு
மெட்டுவான் சேயனாகி யேகுவானெவர்க்கு மேலான்.

இப்படி முனிவன் சீற்றத்தலமர யாண்டு மேகித்
தப்பினன் றிரிதலோடுஞ் சாலவுந் தளர்ச்சி யெய்திச்
செப்பரி திவன்றன்மாயஞ் செய்வதெனினி யானென்னு
வொப்பருந் தவத்தோனுன் னவெந்தைஃதுணர்ந்தானன்றே.

என்பனவாதியாக வருங் கந்தபுராணச் செய்யுட்
களா லுணர்க.

உத்தததுந்துர சங்கார பராக்கிரமம்.

மதத்தவேழத்தினுயிர மடங்குமாவலி யுடையரா யிருந்த
உதத்ததுந்துரருயிரினைப்பாற்றி னுருவுகொண்டழித் தருளொருவ
இதத்தடியவர் களுளத்தினையளிக்கு மேந்தலேயென வனுதினமும்
பதத்தலர்தூவிப்பணிபவர்க்கருள் செய்பண்ணவனடிமலர்பணிவாம்

(இ-ள்.) மதம்பொருந்திய யானையினும் ஆயிரம்பங்கு மிகுந்தபலம் பொருந்திய அசுரர்களான உதத்தன் துந்துர னென்னுங்கொடியவசுரரின் உயிரினைபருந்தி னுருவெய்திச் சென்றழித்த ஒப்பற்ற பரமனே அன்புடன் வணங்கும் அடியரின் மனோபீஷ்டங்களை யளிக்கின்ற தலைவரேயெனச் சதாகாலமும் திருவடிகளில் மலரிறைத்து வணங்குவோருக்கு அருளைக்கொடுக்கின்ற விநாயக பெருமானுடைய சரணகமலங்களை வணங்குவாம். எ-று.

இதன் விவரம்.

அதிதியுங் காசிபனுஞ்செய்த வருந் தவத்தாலவரிடம் மகோற்கட மூர்த்தியென்னும் பெயருடன் விநாயகப்பெருமானெழுந்தருளி இருந்தகாலத்தில் உதத்தன் துந்துர னென்னும் அசுரர் இருவர் மகாதுஷ்டர்கள் இவ்விநாயகப் பெருமானால் தமது அசுரகுலத்துக்குப் பிற்கைறக்காலத்தில் நாசமுண்டாகுமாதலினி ளைமையிலேயே இவனை அழிப் பது நலமெனக்கருதினராய் இரண்டு கிளிப்பறவையி னுரு

வுடன் காசிபாச்சிரமத்திலுள்ள ஒரு மரத்தின் மீது வந்திருந்து கீழிறங்குவதும் மேலெழுவதும் முற்றத்திற் கிடக்குந் தானியங்களை யெடுப்பதுமாக நடிப்புக்காட்டியுலவினர்.

இங்ஙனம் இவர்கள் கபடவெண்ணத்துட னுலவுவதனைக்கண்ட விநாயகப் பெருமான் தமதன்னையைப் பார்த்து மாதாவே யிப்பறவைகளைப் பிடித்துத் தருகவென்றனர் அது கேட்டவன்னை என்னை பறக்குங் குருவியை யானெவ்வாறு பிடித்துத்தருவே னென்றனள் உடனே விநாயகர் தமதன்னையின் மடியினின்றும் ஒரு பருந்துருவாகப் பறந்து மேற்சென்று அக்கிளிகளை மூக்கினாலுங் கால்களாலுங் கொன்று விரைந்து திரும்பி மகோற்கடவுருவுடன் அதிதியின்மடியி லெய்தி யிருந்தனர்.

அசுரிருவரும் மலையனைய நிசவுருவுடன் கீழேவிழுந்திறந்தொழிந்தனர். இதனை.

உத்ததோதுந்துரச்சாபி ராக்ஷஸௌபலவத்தரௌ
சுகரூபதரௌ பாலோத் ருஷ்ட்வாப்ரோ சேதிதிம்ததா
த்யக்த்வாஸ்தனம் தியதாம்மே உபௌரந்தும் சுகாவிமௌ
பக்ஷாகர்தேன சஞ்சுவாச ஜக்னதுதௌப்ருசம் சதம்.

என்பனவாதி பார்க்கவபுராண வசனங்களா லுணர்க.

நக்கிரவுத பராக்கிரமம்.

நல்லவருள்ளி லிலங்கெழிற்ற ளநுளின கல்லார வாரிசங்கள்
புல்லிய தடனிலுறுமவரு யிரைப்புரட்டிய முதலையையடக்கி
எல்லவர் தமக்கு மிறைவனென்றிலங்கி யிருந்தவேரம்பனையுள்த்தி
லல்லலென்பதுபோயின்பமுண்டாகவமைத்தடியிணைமலர்பணிவாம்

(இ-ள்.) தூய்மை வாய்ந்த ஞானிகளின் உள்ளத்தைப் போலப்பரிசுத்தமான வெண்ணிறமமைந்த சிப்பி முத்துக்களும் இன்பத்தைத் தருகின்ற செங்கழுநீர் மலர்களும், தாமரையலர்களும் மற்றுமுள்ள நீரிற்றோன்றும் பொருள்களனைத்தினையுந் தன்னிடத்திலுடைய சோமவதியென்னுந் தடத்திற் பொருந்தி உயிர்களைவதைத் துபத்திரவப்படுத்திய முதலையைக்கொன்று அனைவருக்குந் தலைவராகவிளங்கியிருந்த ஏரம்பமூர்த்தியை நமதுள்ளத்தி லுள்ளதுன்பமென்பதநீங்கி இன்பமுண்டாகப் பொருத்தி அவர் திருவடித்தாமரைமலர்களை வணங்குவாம். எ-று.

இதன் விவரம்.

சித்திரனென்னுமொருகந்தருவர் தலைவன் தமது மனையின் மணச்சடங்கு நடந்தகாலத்துத் தம்மால் விளிக்கப்பட்டுவந்த முனிவருள் பிருகுமுனியென்பவருக்கு மரியாதைசெய்ய மறந்து இருந்த குற்றத்தால் அம்முனி அவனை நீ சோமவதிமடுவில் முதலையாகிக் கிடக்கக்கடவை யெனச்

சபித்தலும் கந்தருவன்வணங்கி மறதியால் நேர்ந்த இந்தக் குற்றத்தினை மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தனைசெய்தலும் அம்முனிவன் மகோற்கட மூர்த்தியான விநாயகரா லுனக்கு இச்சாபவிமோசன முண்டாகுமென்று கூறியபடி யவன் பொதுமாதர்முகம்போல கமலநாண் மலர்களையும் கண்களைப்போல கருங்குவளைமலர்களையும் அன்னார் பற்களைப்போல முத்துராசிகளையும் தனங்களைப்போல தாமரை யரும்புகளையும் கணுக்கால்களைப்போல வரால்மீன்களையும் அதரம்போல செங்கிடைகளையும் அவர்கள் கூந்தலைப்போல நீண்டுவளர்ந்த கொடிப்பாசிகளையும் அவர்களுள்ளம்பொலும் ஆழத்தையும் அவர்களெண்ணம் போலும் அகலத்தினையும் அவர்கள் புறவடிகளைப் போலும் யாமைகளையும் அவர்கள் முழந்தாள்கள் போலு நண்டுகளையும் அவர்களுந்திச் சுழிபோலும் சுழிகளையும் அவர்களல்குல் போலு நீரரவங்களையும் அவர்கள் விரல்கள் போலும் தேளிகளையும் அவர்களின் சலனம் போலுஞ் சலனத்தினையும் அவர் கண்டம்போலும் சங்கங்களையும் அவர்களின் அந்தரங்க துர்க்குணம்போலும் சேறுமுள் முதலை யாதிகளையும் அவர்களின் உடலம்போல விரும்பினோரெல்லாம் தொடத்தகுந்த தன்மையையும் அவர்களை யணைவார் பிணிவருமோவெனவஞ்சுமாறுமுதலை வன் மீனாதிகளாற்றீங்குநேரிடுமோவென வெண்ணத்தக்க தன்மையையு முடையசோமவதியெனப் பிரசித்தமான தடாகத்தில் முதலையாகிக் கிடந்தான் இவன் இதனுள் முதலையாகி இருந்தபின்னர் இவனை யிறந்தோரனேகர் இத்தடம் முதலையின் உபத்திரவமுடை

யதென அனைவராலு மச்சத்துடனும் சாக்கிரதை யுடனும் நீராடல் முதலிய செய்யத் தக்கதாயது.

நிற்க, புண்ணியதினமாகிய விதிபாதத்தன்று அனேகம் ஆயிரம் முனிமடந்தையருடனும் முனிச்சி றுர்களுடனும் அதிதியானவள் தன்தவத்தால் தன்னிடம் புதல்வனாக வெழுந்தருளி இருக்கும் மகோற்கட விநாயக மூர்த்தியை இடுப்பில்தாங்கிச் சோமவதியின் கரையையடைந்து முதலில் தனது தவப்புதல்வனை விநாயக மூர்த்தியை நீராட்டி. அரிசனசூரண முதலியவைகளால் திருமேனியைத்துலக்கி "தமாலவ்ருக்ஷஸரள ஜம்பு வாம்ர பனஸான்விதம் நானாவிர்க்ஷலதாகிர்ணம், பலபுஷ்ப சுசோபிதம்" என வருணனை புரியத்தக்கதாய்ப் பச்சிலைமரங்கள் மஞ்சாடிமரங்கள்நாவன் மரங்கள் பலாமரங்கள் முதலியவைகளுடன் நானாவிதமான கொடி செடிகளுடன் அழகுவாய்ந்து தூய்மை பொருந்தி விளங்கும் கரையில் மகனை இருத்தி என்கண்மணி இங்குச் சிறிதுநேர மிருப்பாயாக இதோநீராடி வருகின்றேனென்று மகளிருடன் நீராடச்சென்றனள்.

அன்னை நீராடச் சென்றவுடன் விநாயகப்பெருமானு மந்நீருட்குதித்து விளையாடுவான், தொடங்கினர் இவர் முனிச்சிறுருடன் நீரில்விளையாடுங்கால்முன்னுரைத்த முதலையெய்தி யிவரைப்பிடித்துக்கொண்டது அதுகண்டு சனங்கள் கூச்சலிட்டார்கள் காசியசிட்டர்கள் நீரிற்குதித்துமகோற்கட மூர்த்தியை மீட்கமுயன்றும் பயன்படவில்லை அதிதி அடைந்த துக்கத்துக் களவில்லை.

இங்ஙனமாய சமயத்தில் முதலையின் வாயினின்றும் அதன்முதுகிற்றுவி யிருந்து இரு திருவடிகளாலும் அதன் கண்டப்பிரதேசத்தை இறுக்கி அதனை அத்தடமுழுமை யும் பலமுறை சுழலவடித்துத் துன்புறுத்தி அம்முதலை யோடு கரையிற்குதித்தனர். முதலையுடன் கரையிற்குதித்த வுடனது ஒருயோசனை அகல நீளங்களை யுடைய தாகிக் கரையில் விழுந்திறந்தது. இதனைக் கண்ட அனைவரும் ஆச்சரியமும் அச்சமும் அடைந்தார்கள். அடைந்து மகோற்கட மூர்த்தியைப் புகழ்ந்தார்கள். உடனே அம் முதலையினின்று மொரு புருஷன் றோன்றித் தான் சித் திரகந்தருவனெனத் தன் வரலாற்றினை யுணர்த்தி என்னைச் சபித்த பிருகு முனிவர் எனக்குப் பிரதிசாபமாக "கஜா னனஸ்ப்ருசேத்வாம் துதாஸ்வம் வபுராப்ஸ்யஸி" என்று உன்னை கஜானனர் என்று தொடுகின்றாரோ அன்றுன் சாப மொழிந்துன்னுருவம் பெறுவை யென்றனர். அடியனவ் வாறேயின்று பெற்றேன். தேவரீருக்கு நமஸ்காரஞ் செய் கின்றேனென்று நமஸ்கரித்துச் சென்றான். விநாயகப் பெருமான் அன்னையுடன் ஆச்சிரமமெய்தினர்.

இதனை

"லீலயைவததாநக்ரம் ப்ருதிவ்யாம்ஜலதோக்ஷிபத்
கதசேஷ்டம் கதப்ராணம் யோசனயதமத்புதம்"

என்பனவாதியான கணேசபுராணவசனங்களா லுணர்க.

கிருத்திராசுர சங்கார பராக்கிரமம்.

வாளியேத்தி யுடம்பிடி நல்வாசி முதலகிழக்காக
வோளிமிகுந்த துண்டமுடனுலவி யுலவியுற்றெடுத்த
கூளியுடல மொருமூச்சிற் குறுகுதுணிகள் பலசெய்த
கோளிலிறைவன் பதமலர்கள்குறித்து வாழ்தல் குறித்துமால்.

(இ-ள்) அம்பும், வாளும், வேலும், நல்லவாசியு மாதிய வைகூர்மை கொலைபுரிதல் முதலிய திறங்களில் தாழ்ந்தனவாமாறு கூர் முதலிய பொருந்தி ஒளிமிகுந்த மூக்குடன் வானத்திற் பறந்து பறந்து தம்மை வந்தெடுத்த கிருத்திராசுரனைத் தமது மூச்சினுல் கீழேவிழுந்து இறக்கும் வண்ணம் செய்த குற்றமற்ற கணேசப் பெருமானுடைய திருவடித் தாமரைகளைத் தியானித்து வாழ்தலையே பொருளாகக் கருதி வாழ்வோமாக. எ-று.

இதன் விவரம்.

திரிசந்தியென்னும் இடத்தில வாசம்புரிந்த முனிவர்களின் வேண்டுகோளுக் கிணங்கிச் சிவபெருமா னுமாதேவியாருடன் எழுந்தருளி இருந்தகாலத்தில் விநாயகப் பெருமான் மயூரேசரென்னும் புதல்வராக அவரிடம் உலகரட்சணார்த்தம் எழுந்தருளி இருந்தனர்.

இவர் மிகவும் சிறுவராய் எழுந்தருளி இருந்தனொன்று இவரைக்கண்ட ஒரு கொடிய அசுரன் தன் மனதினுள் அம்மம்ம! விச்சிறுவன் நமது குலவைரியாகத் தோன்றி யிருக்கின்றான். இவன் வளர்ந்து பருவ முடையவ னானால் அசுரர்களை இவன் எளிதில் நாசஞ் செய்து விடுவான். நானிவனை எடுத்துத் தின்றுவிடுகின்றேன்என்று தீர்மானித் தவனாய் ஒரு பெருங்கழுகின் உருவங் கொண்டு விரைந்து வானிலெழும்பி நாலுபக்கத்திலும் பறந்துலாவினான். இவ னது இறகுக்காற்றினால் மலைகளெல்லாம் அடிபெயர்ந்து விழுந்தன, மரங்களெல்லாம் கிளைகளொடிந்து சின்னபின்ன மாயின, பூமியினின்று மெழுந்த புழுதிக்கூட்டங்கள் கண் ணுள்ள பிராணிகளின் கண்களிலெல்லாஞ்சென்று விழுந்து துன்பம் விளைத்தன.

அந்தோ வந்தோ! வித்தகைய கொடுஞ் செயலினை யுண்டாக்கிய வக்கிருத் திராசுரன் வெளிமுற்றத்தில் விளை யாடிக்கிடந்த பச்சிளம் பாலரூபியான கணேசப் பெரு மானைத் தனது வாளினுங்கூரிய மூக்கினாற் கொத்தி யெடுத்து மேற்சென்று வட்டமிட்டுலாவி மகிழ்ந்தனன்.

இத்துர்ச் செயலினைக் கண்ட பூதகணங்கள் இஃ தென்னை யிஃதென்னை! ஒரு பெருங் கழுகு நங் கணபதி

யை மூக்காற் கொத்தி யெடுத்துச் சென்றுலாவுகின்றதே யெனக்கூறி வருந்தினார்கள்.

கழுகினாற் றமது சுந்தரகுமாரனான விளமயூர நாதனை எடுத்துச் செல்லுதலான வச்செயலினைக் கண்டு நடுங்கி யோடிவந்துகூறிய பாங்கிமார்களாலும் பூதகணங்களாலும் உணர்ந்த உமாதேவியார் ஆ! விஃதென்னை யென்னிளஞ் சிறுவனைக் கழுகு தூக்கிச்சென்றதே! தேவதேவனும் ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் என்னும் பஞ்ச கிருத்தியங்களை யியற்றும் கருணாநிதியுமான எமது ஸ்ரீகண்டப் பிரபுவுக்கிதனை உணர்த்துவா ரெவரு மில்லையே ஐயோ! நெடுந்தூரந் தூக்கிச் சென்றதே யதன் வாளனைய மூக்கினால் என்னிளஞாயிறு புண்பட்டதோ என் செய்வேன் மிகவுங் கொடியதாக விருக்கின்றதே அந்தோ வந்தோ! அதனினின்றும் என்மகனை மீட்பாரில்லையே! எனக் கவலையுடன் மேற்பார்வையுடன் நின்றனர்.

இங்ஙனம் உமாதேவியார் முதலிய அனைவரு மஞ்சுதலைக் கண்ட விநாயகப்பெருமான் காலினாலப்பெருங் கழுகினை யதன் மூக்கிலிருந்த வண்ணமேஒருதை யுதைத்து ஒரு பெருமூச்சு விடுத்தனர். அந்த மூச்சினாலும் உதையினாலும் நிலைகெட்டவனாய் கிருத்திராசுரன் வன்மை குன்றி உடலந் திரும்பிப் பத்துயோசனை யகலமுள்ள தன்னுடலுடன் வச்

சிராயுதத்தினு லடிக்கப்பட்ட மலை விழுந்தாலென விழுந் துயிர் துறந்தனன். இவனது பேருருவினைக் கண்ட அனை வரும் பயமடைந்தனர். இவனுடலின் வீழ்ச்சியால் அனே கம் மரங்கள் முதலியன நாசமாயின. பின்னர் உமாதேவி யார் கணேசப்பிரானை அவ்வசுரன் வாய்ப்புறத்தினின்றும் எடுத்து முத்தமிட்டுச் சென்றனர். பூதகணங்கள் அவ்வ சுரனுடலினை அப்புறப் படுத்தினர் என்ப.

இதனை

க்ருத்ஞ சுரோக்ருத்ன ரூபீமகாபல பராக்கிரமஃ
பக்ஷவாதேன யஸ்யாத்ரி சயசூர்ணத்வமீய்வான்
நயஞனிச ஸர்வேஷாம் பக்ஷாகாத ரஜஃகணைஃ
ஆச்சாதயன் மஹாசப்தைஃ ச்ரோத்ரேபதிரதாமீதேத்
ததச்சஞ்சுவாது தம்பாலம் க்ரஹீத்வா க்ரத்னபுங்கவஃ
வ்யோமமார்க்கம் கதோதூரம் கருடோபுஜகம்யதா
பப்ராமககனே துஷ்டோஜானன் பாலபராக்ரமம்
ததார சஞ்சும்பலவான் யதாச்வாஸோ நனிர்யயௌ
ச்வாஸரோதாத்கதா ஸூஸக்ருத்ன ஸ்தேனஸமன்விதஃ
நிபபாத மஹீப்ருஷ்டே வஜ்ராஹத இவாசலஃ
பதமானேக்ருத்ன தேஹோ தசயோஜனவிஸ்மிருதஃ.

என்பன வாதியாக வரும் கணேசபுராண வசனங்களா லுணர்க.

க்ஷேமகுசல சங்கார பராக்கிரமம்.

வாகுவலத்தி லுயர்சேம குசலரென்னும் வாளரக்கர்
ஆகுவுருவி னுடனெய்தியமர் செய்காலையத் தத்தாற்
போகுபோகென் றேச்சியவர்ப்புரட்டும் பெருமானடி மலர்கள்
ஓகைபெற வைத்தேத்துமுள முடையோமிடை யோமுலகத்தே.

(இ-ள்.) புயபல பராக்கிரமத்திலுயர்ந்த க்ஷேம குசல ரென்னும் அசுரர்கள் இருவர் கொடியபெரிய பெருச்சாளி யென்னும் ஆகுவினுருவங்கொண்டு ஒருவரோ டொருவர் போர்புரிந்து வஞ்சனையாகத் தம்மீது விழுந்தாரை போக போகெனவோட்டினரைப்போலத் தமது புறங்கையா லடித் துப் பன்னிருயோசனை யகலமுள்ள உடலினராக விழுந் திறக்கச்செய்த விநாயகப் பெருமானுடைய திருவடி மலர் களை மகிழ்வுடன் வைத்த உள்ளத்தினை யுடையே மாதலி னிவ்வுலகத்தில் எச்செயலிலும் பின்னிடே மென்பதே யெமது துணிபாம். எ-று.

இதன் விவரம்.

மயூரவாகனராக மகாதேவகுமாரரான கணேசப் பெரு மான் உமாதேவியாரிடம் எழுந்தருளி இருந்த காலத்தில் அவரை வதை புரியவேண்டுமென்னும் எண்ணத் துடன் பன்னிரண்டுயோசனை யகல நீளங்களையுடைய சரீரிகளான க்ஷேமன் குசலனென்னும் இரண்டு கொடிய அசுரர்கள் பலவகை யாலோசனைகளைச் செய்து கடைசியாக இரண்

டாருவின் உருவத்துடன் சண்டையிட்டுக் கொண்டே சென்று சிறுவன்மேல் விழுந்து கொலை புரிந்து விடலா மென்று தீர்மானித்தவர்களாய் விரைந்திரண்டு பேரெலி யுருவந் தாங்கி (பேரெலி-பெருச்சாளி) ஒருவரோ டொரு வர் சண்டையிட்டுக் கொண்டே விநாயகப்பெருமான் சயனித்திருந்த அறைக்குள்புகுந்து சண்டையிட்ட வண்ணம் இருவருமாக அவர் மார்பின்மீது சென்று விழுந்தார்கள். இவர்களை அசுரர்களென்றுணர்ந்த பெருமான் இருவரையும்போவென விரட்டுவார்போல சிறுகர மெடுத்தோச்சினர். இதற்குள் உமாதேவியார் பெருச்சாளிகளின் சீறுதலைக் கேட்டு விரைந்து வந்தனர். இவர் வருங்காலசுரர்கள் ஆகு வுருவுடன் விநாயகப் பெருமான் மார்பினின்றும் மறிந்து பேரொலியுடன் பன்னிரண்டியோசனை விஸ்தீர்ணம் பூமி யானது சின்னபின்னப் படும் வண்ணம் நிச வுருவுடன் விழுந்து கடன்மடைதிறந்தாங்கு ரத்தங் கக்கிக்கக்கி யிறந் தனர். இதனைக்கண்ட உமாதேவியார்முதலியோர் ஆச்சரிய மடைந்தார்கள். பூதகணங்கள் அம்மூர்க்கர்களினுடலங் களை யப்புறப்படுத்தித் தூய்மைசெய்தார்கள் என்பதாம்.

இதனை

தாவதா கூஸமாயாதெள மாயாரூப தரௌஸுதம்
தெளக்ஷேமகுசலெள தைத்யெள தத்வதா காம்க்ஷிணவுபெள
க்ருத்வாகர்க்கச சப்தந் துஸ்லா விபாயததாசிவா
பாலபாவேன ஹதஸ்தெளஸ சாலயாமாஸபீதித
ததாகாதாவுபெள ஜீவிதெள பதிதாவத:

என்னுங் கணேச புராணத்தாலுணர்க.

குரூராசுரசங்கார பராக்கிரமம்.

வில்லார் நுதலெம்பெருமாட்டி விழிகண் மூடியுறல்நோக்கிப்
பொல்லாக் குரூரனெனு மசுரன்புக்கு வவ்விக்கொடுபெயரா
நில்லாயென்னக் கன்னமிருகரத் தாற்பற்றி நீளுதையாற்
கொல்லாநின்ற கணேசனடி குலவாநின்ற தென்னுளத்தே.

(இ-ள்.) வில்லனைய நெற்றியினளும் எம்பெருமாட்டியு மானஉமாதேவியார் கண்ணுறங்கு மற்றநோக்கி(அற்றம்-சமயம்) அவரருகின் மஞ்சத்திற் கண்வளர்ந்ததம்மை யெவரு மறியாது எடுத்துத் தலைமீதாகக்கொண்டு வானிலெழும்பி மஞ்சத்தைக் கவிழவிட்டகொடியகுரூரனென்னும் அசுரன் இறந்துபடும் வண்ணம் அவன்காதிரண்டினையும் கெட்டியாகப்பிடித்திழுத்துத் தொங்கிக் கொண்டு திருவடிகளாலவனைப் பன்முறையுதைத்து அவன்வன்மையைக் கெடுத்து வதைத்தருளிய கணேசப்பெருமானுடைய செவ்வியதிருவடிமலர்கள் என்னுள்ளத்தில் விளங்குகின்றது. அதனால் யான் இடரினின்று நீங்கினேனாயினேன். எ-று.

இதன் விவரம்.

ஒரு தினம் ஸகலலோக நாயகியாரான உமா தேவியார்



ஒருமஞ்சத்திற் றமதரிய திருக்குமாரரான கணேசப்பெருமானைக் கண்வளரச்செய்து தாமும் சேடியர் முதலியவர்களுடன் கண்வளர்ந்தனர்.

இந்த சமயத்தில் செயலாற் குரூரனாக வுள்ளவனும் பெயராற் குரூரனென் றழைக்கப்படுவோனுமாகிய அசுரனொருவன் இதுவே தருணம் அருணநிறமுள்ள சிறுவனை வதைத்தற்கெனவெண்ணி ஒருவரு மறியாதவண்ணம் பூனையுருவுடன் மஞ்சத்தினருகிற்சென்று மயூரநாதனான கணேசப்பெருமானை மஞ்சத்துடனெடுத்துத்தலைமீது வைத்துக்கொண்டு ஆகாயத்தில் நெடுந்தூர மெழும்பிப் பறந்து சென்று மஞ்சத்துட னிவனைக் கீழேதள்ளி விட்டால் கவிழ்ந்து விழுந்திறப்பான் என்னும் எண்ணத்துடன் மஞ்சத்தினைத் தலையினின்றும் கவிழ்த்தான். உடனே கணேசப்பெருமான் சிறுகுழந்தை யச்சத்தாலழுமாறு சீறியழுது விரைந்தவனிருகாதுகளையும் எட்டிப் பிடித்துக் கொண்டு தொங்கலாடினர் கீழே தள்ளிவிட்டால் விழுந்திறந்தொழியுமென நினைத்த வவனெண்ணம் பலியாதாகி நமதப்பன் அவன் காதுகளை யெட்டிப்பிடித்துத்தொங்கலாடிய வுடன் அவன் சுமைதாளாதவனாகிக் காதுகளி னின்றுங் கைகளை விடுவிக்க முயன்றும் அவனெண்ணம் நிறை வேறாமற் போயது.

விநாயகப்பெருமான் தமது சிறிய திருவடிகளாற் பல வுதைகளை யவன்மார்பிற் கொடுத்தனர். உதைப்பட்ட குரூரன் இடியேறுண்ட நாகம்போனடங்கி நாற்றம்பொருந்திய இரத்தத்தினைக் கக்கிக்கொண்டு மலை விழுவதென பன்னிரண்டுயோசனை யகல வுடலுடன் விழுந்து உயிர் துறந்தனன். இச்செயலினைக் குழந்தை யழுதவொலிகேட்டு கண் விழித்துக்கண்ட உமாதேவியார் முதலியோர் கண்டு அழிவற்ற பரம்பொருளான விநாயகப் பெருமானைக் கொண்டாடினர்கள்.

இதனை

க்ரூராக்யச்சோது வேஷேண விவேசகிரிஜாலயம்
லாவகான் மஞ்சகாரூடோ பாலமாதாய மஸ்தகே
ந்யபாதயத்ச்சிரோதேசம் மஞ்சகாதோ மஹாசுரம்
ஸபின்னஹிர்த யோதாவத் பஹிர்கத்வாபபாதஹ
துர்க்கந்த ருதிரந்தஸ்ய பதிதம் தரணீதலே.

என்பன வாதியான விநாயக புராண வசனங்களாலறிக.

பாலாசுர சங்கார பராக்கிரமம்.

கோலாகலமாய் வருமுனிவர் குலமாமகளிர் குழுவுடனே
ஆலாகல மோர்வடிவாகி யார்ந்தாலென்ன வணுகியமர்
மேலாயியற்றிவஞ் சனைசெய்மிண்டபர சுரனிவனென்னும்
பாலாசுரனைவதைத்த வருட்பரமா நினது பதம்போற்றி.

(இ-ள்.) பலவித வைபவங்களுடன் உமாதேவியாரிடம் முனிவர் மாதர்கள் தத்தஞ்சிறுவர் சிறுமிகளையேந்தி யெய்திக் கண்டு களிகூருஞ் சமயத்தில் ஆலகாலமே பாலனுருவெய்தி வந்தாங்கு ஒருமுனிச் சிறுவனுருவுடனெய்திச் சண்டையிட்டுத் தம்மைக் கொல்ல நினைந்த பாலாசுரனை வதைத்த வருண் மூர்த்தியான பரமனே! நினது திருவடிகட்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

ஒரு கொடியராட்சதன் விநாயகப்பெருமானைச் சதிவழியிற் கொலைபுரிய வேண்டுமென்று காலம்பார்த்திருந்தனன்.

ஒரு சுபதினத்தில் தபோவனங்களில் வாசம்புரியும் பெருந்தகமைவாய்ந்த முனிவரின் மனைவியர் சந்தனம் புட்

பங் தாம்பூல முதலிய உபசாரப் பொருள்களுடன் தங்கள் தபோவனத்தி லெழுந்தருளி இருக்கும் உமாதேவியாரிடம் எய்தி அவரால் உபசரிக்கப் பெற்றாராய் அவர் குமாரரான மயூரநாதனென்னும் விநாயகப் பெருமானைக் கண்டு களிகூர்ந்து சிலரெடுத்து முத்தமிட்டும் சிலரெடுத்துச்சி முகர்ந்தும் சிலர் காடாலிங்கனஞ் செய்தும் மகிழ்வுற்று உமாதேவியாரைப்பார்த்துத் தாட்சாயணி தேவியே! நின் மகன் மயூரநாத னென்பானால் நீமகனைப் பெற்ற பெரும் பேற்றினை யெய்தினாய். நின்மகன் நிதிகளின் கூட்டத்திற் சிறந்தநிதியாகியும் லோகத்தின் கூட்டத்துட் பொன்னென வும் விளங்குகின்றான் உன்மகனுடைய திருமேனியி னொளியாலெங்கள் மக்கள்முதலியோர்விளங்குகின்றார்கள் என்று பலவாகப்புகழ்ந்து மஞ்சளரிசியிட்டு வாழ்த்தித் தங்கள் தங்கள் கரங்களிலிருந்த தஞ்சிறுவர்களைக் கீழே விடுத்தார்கள். அவர்களுடனே நமதப்பன் ஆடலயர்ந்தனன் ஒருவரை யொருவர் தள்ளியும் புரட்டியும் உருட்டியும் விளையாடினார்கள் இவ்விளையாடல்களைக்கண்டு உமா தேவியார் மிகுந்த மகிழ்ச்சியடைந்து முனிவர் மாதவர்களுடனெய்தி யிருந்தனர் இங்ஙன மிவர்கள் மகிழ்விலிருக்குஞ் சமயத்தில்.

முன்னுரைத்த அசுர வஞ்சகன் உமா தேவியாரும் காசிபர்முதலிய சிறந்த முனிவர்களின் குமாரர்களும் அவர்

களைப்பெற்ற வன்னைமார்களும் ஒருங்கே கூடி யிருத்தலை யும் அங்ஙன மிருப்பவருட் பல சிறுருடன் மயூர நாதன் விளையாட்டுப் போர்புரிதலையுங்கண்டு ஹாஹா! இதனை யொத்த சமயம் இனி யெனக்குக் கிடைப்பது கஷ்டம் இம்மயூர நாதன் இச்சிறுவர்களுடன் நின்று சண்டை யிட்டு விளையாடுதலி னிவனை யிப்பொழுது நாம் எளிதாக் வதைபுரிதல் கூடும் நாம் நம்முடைய சுய வுருவத்துடனும் கோரமான வேறுருவத்துடனும் போதல் தகுதியன்று இங்கு வந்துள்ள விப்பார்ப்பனச் சிறுவரைப்போல வுருத் தாங்கிச் சென்று இவனைச் சண்டைக்கழைத்தால்வருவான் வந்தால் எளிதாக விவனைக்கொன்று விடலாம் என்று தீர் மானஞ் செய்தவனுய் ஒரு முனிச்சிறுனைப் போல வுருக் கொண்டு இதுதான் தருணமென அன்னுர் நடுவெண்புகுந்து சிலமுனிச் சிறுருடன் சண்டை யிட்டு அவர்களைக் கீழே தள்ளி விநாயக பெருமானையெய்தி என்னுடன் சண்டை யிடுக வென்றழைத்துச் சண்டைக்கு நின்றனன். இவனிக் கொடிய வசுரனெனவறிந்த நம்பெருமான் அவன் அழைத் ததற் கிணங்கி அவனுடன் விளையாட்டாக சிங்கமும் நரியும், யானையும் எருமைக் கடாவும், போலச் சண்டை யிட்ட சமயத்திலவன் தனது வன்மையை யெல்லாங் கரத்திற் கூட்டியோங்கி யறைதலும் பெருமான் அவன் கழுத்தைப் பிடித்துக் கண்பிதுங்க நெருக்கி அவனைக்கீழு மேலுமாகப்

புரட்டித் துவைத்து நசுக்கி வருத்தி வதைக்கக் கண்ட முனிவர் மாதர் அவனை யொருமுனிச்சிறு னெனக்கருதி ஐயோ! பாவமே! யார்மகனோ! உமைமகன் முனிகுமாரனை யிரக்கமில்லாமற் கொல்லுகின்றானே! கொல்லுகின்றானே! என்று கூவினார்கள். இம்மொழி கேட்ட வம்பிகை ஒட்டமாகவோடி யாண்டெய்தி மகனே! விடுவிடு வென்னும் பொழுதில் மாயச் சிறுவன் கண்களின் வழி உயிரை விடுத்து இரத்தம் கக்கி அனேகயோசனை விஸ்தீரணமாகத் தனதுடலினை விடுத்துப்புரண்டிறந்தனன். இச்செயலினைக் கண்ட முனிமடந்தையர் இந்த அசுரன் நஞ்சிறுவனைப் போல வெஞ்சிச் சதிபுரிந்தனன் பார்வதிமகனறிந்தேகொன் றானு யிருக்கலா மெனப் பார்வதி குமாரரை வாழ்த்திச் சென்றனர். இவனது பாரிய வுடலினைக் கணங்கள் தூரத்தே யகற்றினர். உமாதேவியார் கணேசப் பிரானை யெடுத்து முத்தமிட்டு மகிழ்ந்தனர்.

இதனை

ஏதஸ்மின்னவஸ ரேதைத்யோ நாம்னுபாலா ஸுரோமஹான்
பாலரூபி ஸமவயாதன்மத் யேக்ரீடிதும்யயௌ
ததோபாலா ஸுரோதுஷ்டோ ஹஸ்தாப்யாம்பலவத்தரம்
ஜீவக்ராஹம்கண்ட தேசேததார கணநாயகம்
நேத்ரத்வா ரேணதத்ப்ராணு கதா புத்புதயத்க்ஷணாத்.

என்னுங் கணேச புராணத்தா லுணர்க

12.

வியோமாசுர சங்கார பராக்கிரமம்.

வன்மைக்கரி களொருநூறு வலித்திட்டாலும் வாராத
தன்மைக்குரிய சூதமெனத்தடத்தி னின்று கொடுமைபுரி
வின்மைக்குரிய வியோமனுயிர் வீட்டியுலகந் தனையாண்ட
நன்மைக்குரிய கணபதி செந்நளின சரணவிணைபோற்றி.

(இ-ள்.) வலிமிக்க நூறு யானைகளொருங்கே நின்றீர்ப்பி னுஞ்சலியாத திடமமைந்த மாய மாமரமாக வழியில்நின்று காற்றின்றியசைந்து கண்டாரஞ்சிக்கவன்றோடுமாறு பல தீங்கிழைத்த கொடியனை வியோமாசுரனைக் கொலைபுரிந் துலகினைரட்சித்த நன்மையினையுடைய கணேசப் பெருமா னுடைய சரணகமலங்களுக்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

மாயாவல்லவனும் வியோமனெனப் பெயர் வாய்ந்தவ னும்மிக்ககொடியவனுமான ஓரசுரன் ஒருதினம்உலகினிலினி யுயர்ந்ததாக வேறொருபொருள் உண்டெனக்கூற வியலாத உயர்ச்சியையும் அகற்சியையும் கிளைகளையுமுடைய மாமர மாகிச் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் முதலிய கோளி னங்கட்குங் கோளிழைத்துற அந்தர வாசிகளுக்குந் தடை யுண்டாக்கிப் பண்டு விந்தமலை நின்றதினு மிதன்நிலை பெரி

தென்னுமாறு நின்று அசைந்து அசைந்து கிளைகளை முறிய விடுத்து வேரற்று வீழுவதுபோலவு நிமிர்வதுபோலவு நின் றுயிர்களுக்குத் துன்பமுண்டாக்கி யதனைக்கண்ட முனிவர் கள் சித்தர்கள் முனிவர்மநுதர்முதலியோர் மிகவும் பயந்து பண்டுசூரனுனவன் மாமரமாக நின்முனென்பர் அவன்நிலை யும் இம்மாவின் நிலைக்கிணையாகாது இது எந் தப்புறத்தில் விழுந்து எவரைக் கொல்லுமொ வறிகிலோமென பயந்து ஓடினூர்கள். இச்செயலினைக்கண் டனைவரும் பயந்து ஓடி ஓடித்திரும்பிப் பார்க்கின்ற சமயத்தில் உமா தேவியாருடன் திருசந்தி க்ஷேத்திரத்தில் மயூரேசரென்னுந் திருநாமத்து டன் எழுந்தருளி இருந்த சிற்றுருவினையுடைய விநாயகப் பெருமான் விரைந்தம் மரத்தினருகிற்சென்றதனைப் பிடித் தோ ராட்டாட்டி யோருதை கொடுத்தனர். உடனே அம் மரக்கிளைகளெல்லாம் பலபலவென்று ஒடிந்து இடிவிழுந்த இளம் பாக்குமரம்போலச் சிதைந்து அழிந்து விழுந்தது. விழுந்த வுடன் வியோமன் நிசவுருவினனுகி வாயின்வழி உதிரம் கக்கி ஒவென விரைந்து விழுந்து மாண்டனன். இவ் வாச்சரியமான செயலினைக் கண்ட முனிவர்களும் பிறரும் பேரொலிகாட்டி விநாயகப் பெருமானைப் புகழ்ந்தார்கள். இவ்வோசை கேட்டெய்திய வுமாதேவியார் கணேசப்பெரு மானை எடுத்துமார்புட னணைத்துச் சென்றனர்.

இதனை "ததோவ்யோமசுரோதுஷ்டோ கதாஸு நிப பாதஹ, வ்யாதாயாஸ்யம் வமன்ரக்தம் சதகாதேனஸோப வேத்" என்பனவாதியான கணேசபுராணங்களாலுணர்க.

சதமகிஷபட்சணி சங்கார பராக்கிரமம்.

அன்னஞ் சகடமொரு நூறுமசல மகிடமொரு நூறுந்
தின்னுங்கொடிய வாயரக்கிசெறிந்துசசியி லெடுத்தணைத்துப்
பின்னம் புரிய நினைத்தலுமப்பேழ்வாயரக்கி நாசிகா
தென்னு மிவைகளுடனு யிரையிறுத்த பரமனடி போற்றி.

(இ-ள்.) ஒவ்வொருநாளும் நூறுவண்டி யன்னக்குவியலை யும் அதற்கேற்ற கறிவகைகளையும் இவையன்றி நூறு எருமையேறுகளையுந் தின்னுந் திறத்தால் சதமகிஷ பக்ஷணி எனப் பெயர் வழங்கப்பெற்ற கொடிய அரக்கியானவள் தேவராசன் மனைவியான இந்திராணியைப்போல உருவங் கொண்டு தாமிருக்கு மிடத்தையடைந்து தம்மை யெடுத்து முத்தமிடுபவள் போலக் கொலைபுரிய நினைத்தலை யுணர்ந்து அவள்காதுகளையு நாசியினையுந் தமது கரங்களால் அறுத்து அவளுயிரைத் தொலைத்த மயூரநாதரான விநாயகப் பெருமானுடைய சரணகமலங்களுக்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

பார்வதிதேவியாரின் திருவுளக்களிப்பின் பொருட்டுந் துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனார்த்தமுங் கணேசப் பெருமான் மயூரநாதரென்னுந் திருநாமத்துடன் எழுந்தருளி

இருந்தலையறிந்த அசுரரிற் பலர் பல மாயைகளைச் செய்து தமதெண்ணம் பலிதமுறாமல் இக்கணேசப் பெருமானால் இறந்தொழிந்தாராயும் இவனருகில் நாம் எந்த மாயரூபத்துடன் செல்லினும் நம்மை இவன் கொல்லுவானென்று கருதாதவளும் பூனை கண்மூடினாற் பூலோகங்கண் மூடியதென்று கருதுவாரைப்போலத் தனது மாயையை விநாயகப்பெருமான் அறிந்துகொள்ளார் என நினைத்தவளும் ஒவ்வொருநாளும் நூறெருமைகளையும் அவைக்கேற்ற சோறு கறிகள்முதலியவைகளையுந் தின்பவளும் இங்ஙனநாடோறு நூறெருமைகளைத்தின்னு நியமமுடையவளா யிருத்தலால் சதமகிஷ பக்ஷணி யெனப்பெயர் பெற்றவளும் நீண்டு வளைந்து கலப்பைகளைப்போல விளங்குங் கடைவாய்ப் பற்களையுடையவளும் அகன்ற துளைகளையுடைய நாசியையுடையவளும் பருத்துநீண்டுகாணப்படுந் தனங்களை யுடையவளும் தடித்த கால்களை யுடையவளும் பருத்துத்தொங்கும் உதட்டினை யுடையவளும் செம்பட்டையான தலை ரோமங்களை யுடையவளும் கிணறு போல வுள்ளாழ்ந்து காணப்படுங்குழிகண்களையுடையவளும் பூமியதிர நடக்குந் திறமுடைய வளும் புனிதமென்பது குடியிருந்த வூரிலுமிருந்தறியாதவளும் கொடுமையனைத்தும் ஒருருக்கொண்டு வந்தவளும் தன்னினமேன்மையுறவேண்டுமென்னு நினைவினளுமான ஒருகொடும்பாதக வரக்கியானவள்,

விநாயகப் பெருமானுடைய அழகுருவினைக் கண்டு மகிழ்ந்து செல்லாமல் சதிவழியாற் கொலைபுரிய நினைந்து நல்ல பேரழகுடைய தேவராசன் மனைவியான இந்திராணியைப்போல உருவங்கொண்டு பார்வதிதேவியை யடைந்து அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்து லோகமாதாவே! உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன் என்று கூறினாள். இவள் இவ்வாறு வணங்கிக் கூறிய மொழிகளைக் கேட்ட ஜகதம்பிகை அவ்வஞ்ச நெஞ்ச மாயவரக்கியைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள்.

சுந்தராங்கி! நின் கணவன் யாவன்? நீ யெங்கிருப்பவள்? என்னாலுனக்காக வேண்டுவதென்னை? நீ விரும்பி வந்தவைகளைக் கேட்டால் யான் தருதற்குச் சித்தமாகவிருக்கின்றனன் உரைக்கக்கடவை என்றனர். இங்ஙனமம்பிகை கூறுதலும் அரக்கி இவ்வாறு கூறுகின்றனள்.

தேவதேவனும்? பஞ்சகிருத்திய நிருத்தருமான பரசிவப் பிரபுவின் பாகத்துறையும் பார்வதிதேவியே! ஸர்வஜனனியே! ஸர்வ தேவமயியே! சுபையே! அனைவராலுந்தியானிக்கப்படு மன்னையே! ஸர்வகாரணகாரணியே! ஜகன்மோகனவல்லவையே! உன்னைச் சரணடைந்த எனக்கென்னை குறையுளது யான் தேவர்களின் அரசனான இந்திரன்மனைவி அசுரர்கள் செய்யுங் கொடுமையால் தேவர்களுடன் தேவரா

சன் அசுரர்களால் வெல்லப் பட்டமையால் மறைந்திருக்கின்றுன் அசுரபயநிவாரணுர்த்தம் ஏழையானயான் சரணுகதியாகவடைந்தேன் என்று கூறினுள். இம்மொழிகளைக் கேட்ட உமாதேவியார் அவளைப்பார்த்து இவ்வாறு கூறினுர்கள்.

ஓ இளமாதே! நீ எனக்குத்தங்கை உனக்கு இவ்விடத்தில் ஒருதீங்கும் உண்டாகாது உங்களுக்குத்துன்பஞ்செய்யும் அசுரர்களை நாசஞ் செய்தற்காகவே கணேசப்பிரான் பிருதிவி மூர்த்தியினின்றுந்தோன்றி மயூரநாதரென்னும் பெயருடன் என் சிறுவனுகி அதோ இருக்கின்றுர்பார். இச்சிறுவனு லுங்கள் துன்பமனைத்து நீங்கும் என்றுகூறிச் சேடியர்களைக் கொண்டு நீர் முதலிய கொடுப்பித்துக் கான் முதலிய தூய்மை செய்வித்துக் குங்குமம் புஷ்பம் தாம்பூலம் சந்தன முதலிய வளிப்பித்து உபசரிப்பித்து தேவருணவுங் கசப்புடைய தென்னுமாறுன நல்ல போசனத்தினை யளிப்பித்து ஒரு உசிதாசனத்தி லவளை இருக்கச் செய்து சந்தோஷித்தனர்.

இளைப்பாறுவாள் போலச் சிறிதுநேரமிருந்த பாதகவரக்கி மிகவும் அன்புட னெடுத்தணைப்பவளைப் போல நம்பெருமானை வாரியெடுத்து மார்புடனணைத்து முத்தமிட்டுக் குலாவிக் குலாவி யெவ்வழியே எடுத்துக் கொண்டோட

லாமென வழிபார்த்தனள். இப்பாதகி இவ்வாறு சமயம் பார்த்திருத்தலை அறிந்த கணேசப்பெருமான், இப்பாதகி தம்மை வஞ்சித்தற்கு ஆலாலவிஷம் அமுதவுரு வெய்தி வந்தாங்கு தனது கோர உருவத்தை மறைத்து இந்திராணியின் நல்லழகுருவினை யெய்தி வந்திருக்கின்றாளென்றறிந்தவராதலின் மெல்லெண அவள் காதுகளை இருகரங்களாலும் மற்றிரு கரங்களால் மூக்கினையும் அழுத்தமாகப் பிடித்துக்கொண்டு அவளால் சுமக்கமுடியாத கனங்காட்டித் தொங்கலாடினர். இவர் உஞ்சலாடுதலில் காதுகளும் மூக்கும் மிகவும் வருந்தி ஆற்றமாட்டாமல் இருந்த ஆசனத்தினும் எழுந்து கால்களையுங் கைகளையும் உதறிக்கொண்டு மூக்கடைப்புடன் கண்கள் சுழல விடு விடு என்று குயிலுநாணக் கூவிக்குதித்தனள். இச்செயலினைக்கண்ட சேடியர் நனிவருந்தி நிரபராதியான பெண்பிள்ளை இறக்கப்போகின்றாளே! என் செய்வதென வருந்தி உமாதேவியாருக்குக் காட்ட தேவியார் விரைந்தெய்தி என்னிளஞ் சிறுவ இந்திராணியை வதைபுரிகின்றனையே இந்திரன் வந்து கேட்டால் என்செய்வேன் விடு விடு என்றனர். அம்பிகை இவ்வாறு கூறுதலும் நமதையன் அவளைக் கால்களாற் பலவுதைகளைக் கொடுத்துக் கீழேதள்ளினர். அவள் கீழே விழும்பொழுது அவள் காதுகளிரண்டையும் மூக்கினையும் அடியோடு இழுத்தறுத்தெடுத்துக் கொண்டு அவள் மார்

பிணிற் கிடந்து விளையாடினர். இவளோ கீழ் விழுங்காலத்தில் தினது நிசவுருவெய்திப் பேரொலியுடன் விழுந்துயிர்துறந்தனள் இவள் விழுந்தமையாலத் தபோவனத்தின் பெரும்பாகங்களிலுள்ள மரமுதலியவை யொடிந்து நாசமெய்தின. பத்துயோசனை யகலம்பூமி யிவள் வீழ்ச்சியாற் சூரணமாகியழிந்தது. உமாதேவியார் விரைந்து சென்று நமதப்பனை எடுத்துப் பாலளித்தனர். இந்திராணி யல்லள் சதமகிஷபக்ஷணியென்னு மரக்கியே இவ்வுருவுடனெய்தியவளென வனைவருமுணர்ந்து பாலகணபதியின் பராக்கிரமத்தினைப் புகழ்ந்தார்கள்.

இதனை

நாமசக்ருததாலோகாசதமாஹிஷபக்ஷணத்
ராட்சஸீமிதிமிச்சித்யஹஸ்தாப்யாம்ச்ரோத்ரயோரதாத்
நாஸிகாம்சததோபாரம்மஹாபர்வதஸன்னிபம்
ததங்கெபாதயாமாஸஸாசச்வாஸநிரோததஃ
தத்கர்ணநாஸிகாஹஸ்தோத்ருஷ்ட ஸாஸிர்க்ஸ்ரவோபிச
ததர்சப்ரதோகத்வாராக்ஷஸீம்தாம்சிவாசிவாம்
தசயோசனவிஸ்தீர்ணம்க்ஷதபூருஹாம்ததா.

என்பன வாதியான பார்க்வ புராண உத்தர காண்ட வசனங்களா லுணர்க.

14.

கமடாசுரசங்கார பராக்கிரமம்.

நமிடநீயார்க வென்னநயத்துடன் மனத்துளாக
நிமிடமொன்றேனு நன்குநினைப் பவர்க்கருளுந் தாளாற்
சுமடர்கள் குழுவைச்சார்ந்த தூய்மையில் கொடியபாவக்
கமடனை யுதைத்துக் கொன்றகருணையங் கடலேபோற்றி.

(இ-ள்.) எம்பெருமானே எம்மிடத்தில் நீ எழுந்தருளி இருப்பாயாக வென்று அன்புடன் உள்ளக்கமலத்தில் ஒரு கணப்பொழுதேனுஞ் செவ்வனே நினைப்பவருக்கு மகிழ்வுடன் தரிசிக்கப் பூசிக்கப் பணியப் பாமாலை சூட்டவளிக்குந்திருவடிகளால் அறிவற்றார் கூட்டத்தைச் சார்ந்தவனும் தூய்மையற்றவனுமான கொடிய பாவச் செயலினையுடைய கமடனென்னு மசுரனை யுதைத்து அவனுயிரை மாய்த்த கிருபைக்கடலான கணேசப்பெருமானே! பொற்றி போற்றி. எ-று.

இதன் விவரம்.

பத்துத்திக்கு மண்டலங்களும் இருட்டினால் மூடிக் கொள்ளவுண்டாகிய ஒருதினம் இரவில்அனைவர்களுந் தங்கள் தங்கள்சயனங்களில் கண்ணுறங்கினர். உமாதேவியார்

கணேசப்பெருமானை ஒருமஞ்சத்திற் கண்வளரவளர்த்திச் சேடியர்களைக் காவல்புரியக் கட்டளையிட்டுப் பிரமதகணங்களை வாசலிற் காவலிருத்திப் பத்திரமெனக்கூறிச் சிவபூசைக்கெழுந்தருளினார்கள். இதனை யுணர்ந்த மஹாதுஷ்டனான கமடாசுரனென்பவன் பூமியைத்தோண்டிக்கொண்டு உமாதேவியின் மாளிகையுள் முற்றத்துட்சென்று சேர்ந்து பார்த்தான் சிலர் நன்றாயுறங்குகின்றனர் சிலர் விழிப்புந் தூக்கமுமாக இருக்கின்றார்கள் சிலர் சிவயோகம் புரிகின்றனர் சிலர் ரமிப்பிலிருக்கின்றார்கள் ஒருபுறத்தில் சந்திர மண்டலம்போல சீதளவொளி வீசிக்கொண்டு சிவகுமாரரான விநாயகப்பெருமான் மஞ்சத்திற் கிடத்தலைக்கண்டு மெல்லென மஞ்சத்தினருகிலெய்தித் தனது பின்புறத்தால் மஞ்சத்துடன் கணேசப்பிரான் கீழ்விழுந்தழிய வேண்டுமெனப்பலமுறை பூமியதிர வசைத்தனன் இவனசைதலும் உமாதேவியின் மாளிகையினுடன் அவ்வனத்தின் பெரும் பாகமும் கீழுமேலுமாக வசைந்தது. இவ்வசைதலைக்கண்டு இஃதென்ன உத்பாத மாகவிருக்கின்றதே பூகம்பமுண்டாயிற்றே யென்று அனைவரும்கண்விழித்து நடுங்கினார்கள். சிலர் இச்சம்பவத்தினை உமாதேவியிடம் உரைக்க ஓடிச் சென்றார்கள். இதற்குள் அசுரன் கணேசப் பெருமானுடைய காற்புறத்தை யடைந்து அவர் பிருஷ்ட பாகத்தில் தன்னுடலை வைத்தசைத்தனன். இவனை வஞ்ச வசுரனென

வறிந்தபெருமான் தமது திருவடியால வனை விரைந்து கொல்லக்கருதித் திருவடிகளாற் பலவுதைவிடுத்தனர் உதைபட்டு ரத்தம்கக்கிக் கமடனிறந்தான். உமா தேவியார் விரைந்தெய்தி தசயோசனை விஸ்தீர்ணமாகத் தன்னுடலினை விடுத்து இறந்து கிடக்குமசுரனைக்கண்டு அடாது செய்தநீ படாது பட்டனையெனக் கூறிக் கணேசப் பெருமானை யெடுத்தணைத்து மகிழ்ந்தனர்.

இதனை

ஏதஸ் மினந்தரேதுஷ்டோநாம் னுயகமடாசுரஃ
ஆச்சாதயஸ்வதே ஹேனசிவாபராங்கண மத்புதம்ஃ
ஏவம்ஞாத் வாஸௌ கமடம்ஸ்வய பிருஷ்டமசாலயத்
ததைவதேனபாலேன ஸர்வக்ஞேன விவர்த்திதாஃ
உட்டானங்கர்த்துமாரேபே நாசகத்கமடஸ்ததா.

என்பன வாதியாக வருங்கணேச புராண வசனத்தாலுணர்க.

தல்பாசுர சங்கார பராக்கிரமம்.

வஞ்சத்துயர்ந்து கொடுஞ்செயல்கள் வைக்குமொரு பேரறையாகி
மஞ்சத்துயர்ந்து தற்றூக்கிமறைந்து சென்றகொடியோனைக்
கஞ்சத்துயர்ந்த பதத்தெற்றிக் காலனூரிற் புகச்செய்தென்
நெஞ்சத்துயர்ந்த கணபதி தன்னிரைத்தாமரைத் தாளிணைபோற்றி.

(இ-ள்.) வஞ்சனைச்செயல்களின் மிகுந்துகொடியகொலையாதி பாவச்செயல்களை யடைத்து வைத்த ஒருபெரியவீடாகி யுள்ளவனும் மஞ்சத்தின் மீதுகண்வளர்ந்த தம்மைக் காற்றி னுருவாகித் தூக்கிமறைந்து சென்றவனுமான கொடிய தல்பாசுரனென்பவனைத் தமது திருவடிகாளாலுதைத்துக் கொலைபுரிந்து எமலோகம் புகச்செய்து எனதுள்ளத்திற் தியானரூபமாக விளங்குகின்ற கணேசப் பெருமானுடைய உபய திருவடிகளுக்கும் நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

உள்ளிடங்களில் வியர்வையைத் தருவதும் வெளியிடங்களில் தென்றலால் சுகமடையச்செய்வதும் சீதளமான நன்னீர் பன்னீர் வெந்நீர் முதலியவைகளைத் தேகவித்தியாசங்களுக்குத் தக்கவாறடிக்கடி குடிக்கச் செய்வதும் பகனித்திரை இரவினித்திரை யின்மை முதலிய வைகளைத்தருவதுமானவசந்தகாலத்தில் சீதளசுகானுபவத்தின் நிமித்தம் உமாதேவியார் ஊழியக் காரிகளாலிடப்பட்ட ஒரு சப்பிர

LITHO: P.N.N.

தல்பாசுரசம்ஹாரம்.

கூடமஞ்சத்தில் ஸ்ரீ கணேசப்பெருமானாகிய தமது புதல்வருடன் தேமாந்தளிராலும் சீதள வசோகின் குழையாலும் தளிர்த்த சந்தனவாடையாலும் மனோகரமானதும் பலாமா வசோகுமா புன்னை பாரிசாதஞ், சம்பகம் பாதிரிபுன்கு முதலிய விருட்சங்களாலும் கான்கோழிகளாலும் வானம்பாடிகளாலும் மற்றும் பிறசோபனீயமான பட்சி சாலங்களாலும் கிருஷ்டிணஜின முதலிய விலங்குகளாலும் கண்டோர் மனதினைக்கவரத்தக்க ரம்மியமான ஒரு சோலையிற் கண்வளர்ந்தனர். கண்வளருங்காற் சேடியரையுங் கணங்களையுங் காவல்புரியுமாறு உத்தர வளித்திருந்தார்கள் உத்தரவின் வண்ணம் அவர்களும் வெகு சாக்கிரதை யுடன் காவல் புரிந்தார்கள். இவ்வாறான சமயத்தில் இச்செயலினைக்கண்டவனும் தல்பாசுரனென்று பெயருள்ளவனும் மஹாவீர பராக்கிரமனும் மாயாவியுமான ஓரசுரன் இது நல்லதருணம், இவ்வுமையுடன் இவள் குமாரனையும் நாம பகரித்துச் செல்லுதற்கு இதனினுஞ் சிறந்தமற்றொரு தருணம் நமக்குக் கிடைக்காது நாமிவர்களை எவ்வாறாகவேனும் இவர்களைச் சதிசெய்வதே தகுதி என்று கருதி என்ன விதத்திற் சதிபுரிந்தால் நமக்குச் சந்தோஷ முண்டாகும் என்று சிறிதாலோசனை புரிந்து ஒரு சுழற் காற்றாகச் சென்று இவர்கள் கிடக்குங் கட்டிலை வானத்தி லெழுப்பி நெடுந்தூரங் கொண்டு சென்று பின்னரிவர்களைக் கொலை புரிதல் வேண்டுமென்று துணிந்து ஒரு சுழற் காற்றாகி விரைந்து சென்று மஞ்சத்தி னடிப்புறத்தில் நின்று அதனைச் சுமந்தவண்ணம் வானிலெழும்பி நெடுந்தூரஞ்சென்ற

னன். வானில் நெடுந்தூரஞ் சென்று வீராட்ட ஹாஸம் செய்தனன். அவன் செய்த ஹட்ட ஹாஸத்தால் கண் விழித்த உமாதேவியார் தாம் சயனித் திருந்த மஞ்சம் பூஞ்சோலையி லன்றி வானத்தில் மேலெழுந்து செல்லக் கண்டனர்.

சோலையி லிருந்தயானும் சிறுவனும் மஞ்சத் துடன் வானில் மேற் செல்லவேண்டுவதென்னை இது அசுரமாயை யோ! வேறென்ன விபரீதமோ! வெனத்திருவுளத்திற் சிறி து கவலைகொண்டு ஆ! சிறுவனே! நீயும் நானும் இங்ஙனம் வருதற்குண்டான விதியையறிகிலேனே! நீ என்னிளஞ் சிறு வனாக வந்தநாள் முதல் இந்தநாள் வரைக்கும் உண்டான இடையூறுகளுக்குக் கணக்கேகாணோம் இன்று இது எந்த அசுரனு லுண்டான மாயச் செயலோ வறிகிலேம் என்று கூறுதலும் மஞ்சத்துட்கண் வளர்ந்தகணேசப் பெருமான் திருவடிகளால் மஞ்சத்தினை உதைத்தனர். உதைத்தலும் மஞ்சம் பன்னூறு சுக்கலாகிப் பூமியை நோக்கி வருதலும் தல்பாசுரனடிப் புறத்திலிடியே றெனக்கருச்சனைப் புரிந்து மலைபோல நிற்றலும் கணேசப் பெருமான் ஒரு திருக்கரத் தால் தமதன்னையை யணைத்துப் பிடித்துக் கொண்டு மற் றொரு திருக்கரத்தால் தல்பாசுர னுடைய தலை மயிரைக் கெட்டியாகப் பிடித்து அவன்பிடரியிற் பதுமாசன மிட் டிருந்தனர்.

இவர் பதுமாசன மிட்டிருந்து குதிரையை யடித் தோட்டுமாறு அவனை உரப்பி யடித்துதைத் தோட்டினர்.

இங்ஙனங் கணேசப்பெருமானாற் செய்யப்படுதலும் அவரைச்சுமந்து நிற்கவாற்றலின்றிக்கீழே மறிந்தனன். மறிந்தவனை விடாமல் சிகையைப் பிடித்தவண்ணம் கீழேதள்ளித் திருவடிகளால் நன்றாயுதைத்தனர். காண்பார் கண்களுக்கு மெல்லியவழகிய சிறிய திருவடிகளாகக் காணப்பட்டாலும் அத்திருவடிகளாலுதைக்கு முதைமயொவ்வொன்றும் தல்பாசுரனுக்குமிகுந்ததுன்பத்தையே யுண்டாக்கியது. பேரிடிவிழுந்த இளம்பாக்கு மரமெவ்வாறுதுமோ அவ்வாறு ஆற்றல் எல்லாங்குன்றிக் கரசரணங்களை அசைத்தற்குஞ் சத்தியின்றி வாயின்வழி குபீல் குபீலென்று ரத்தங் கக்கிப் பேரொலிக்காட்டி உயிர் விடுத்தனன்.

இச்செயல்களைச் சூழநின்று கண்ட பூத கணங்களும் முனிவர் கணங்களும் தேவர்கணங்களும் விநாயகப் பெருமான் மீது மலர்மாரிபொழிந்து வாழ்த்தினர்கள். இச்செயலினைத்தினையுங் கண்டருளிய உமாதேவியார் தமது செல்வத்திருக்குமாரரை மகிழ்வுடனெடுத்து மார்புடனணைத்து மகிழ்ந்தனர்.

இதனை

தல்பாஸுரோ இதிக்யாதோ வாயுரூபோ விசத்தத்தத:
மஞ்சகோந்தர்கத: ஸோதேன ஸாகம்யயௌதிவம்
ததத்தல்பாஸுரோத்ருச் யோஜாதோபாலோ ததாரதம்
ஹஸ்தேனகேனஜனனீம் ததார ஸௌஸ்வலீலயா
ஸபூமௌபதிதோ ஹ்ராஸன்மர்த்திதோ பலவத்தரம்
ப்ராணும்ஸதத்யாஜதைத்யோத வமன்ஹஸ்யாதஸ்ருக்முஹு:

என்பன வாதிய கணேச புராண வசனங்களாலறிக.

துந்துபி மர்த்தன நிர்த்தன பராக்கிரமம்.

அந்தரர்நடுங்கப் பாற்கடன் முளைத்தவால நேர்கனியளித்திருந்த
துந்துபியுடலமழி தரப்புரிந்த தூயவமாயவன் முதலோர்
வந்தடிபணிய வருள்புரிபெரும வாமிகண்மணியென விளங்குஞ் [ம்.
சுந்தரகளிற்றினுருவுடனெனையாள் தோன்றனினடிமலர்தொழுவா

(இ-ள்.) தேவர் நடுங்கும் வண்ணம் பண்டு பாற்கடலிற் பிறந்த விடம்போன்ற கொடிய பழங்களை யளித்துத் தம்மை மடிமிசை யிருத்தி யிருந்த கொடிய துந்துபியின் றொடையின்மீது நின்று நிருத்தப்புரிந்து அவன் தலையைத் திருகியெடுத்து அவனை வதைத்த தூயவரே! திருமால் முதலியோர் வந்தடிபணியா நிற்ப அவர்க்கருள் புரிகின்ற பெருமானே! சுந்தரியான வுமாதேவியின் கண்ணின் மணியென விளங்கும் அழகரே! யானை யுருவத்துடனெய்தி என்னையாண்ட தலைவரே! உமது திருவடிமலர்களை வணங்குகின்றோம். எ-று.

இதன் விவரம்.

துந்துபியின் ஒலிபோன்ற பேரொலியினை யுடைய கண்டத்தினை யுடையவனாதலால் துந்துபியெனப் பிரசித்தனான ஒரு கொடியவசுரன் தன்னுடைய பாதங்களைத்தரையில்வைத்து நடந்தாலும் கைகளைக் கீழே மோதினாலும் புழுதியெழுந்து சூரியனையு மறையச்செய்யும் இயல்பினை

யுடையவன் இத்தகைய விவன் கணேசப் பெருமானை வஞ்சனையாற் கொலை புரிந்து விடவேண்டுமென்று கருதி ஒரு சிவபூத குமாரனாக உருக்கொண்டு ஆலகாலம் போன்ற கொடிய விஷக்கனிகள் சிலவற்றைக் கையில் வைத்துக் கொண்டு உமாதேவியின் மாளிகையை யடைந்து அங்கு விளையாடி யிருந்த கணேசப் பெருமானை அன்புடனெடுத்து விளையாடு வானைப்போல வாரியெடுத்துத் துடைமீதிருத்தி விடக்கனிகளை யெடுத்துக் கொடுத்து இவை "ஜன்மமிர்த்யுஜரா மரணங்களைப் போக்க வல்ல வருமையானதென்று" கூறிச் சிறுவன் தின்னுவானெனவும் தின்றாற் சாவானெனவும் இருந்தான் ஆலகாலத்தையே யுண்டு தமது கண்டத்துள் என்று நின்று நிற்கச்செய்த ஸ்ரீகண்டமூர்த்தியின் திருக்குமாரரை யிக்கொடிய கனிகள் தீங்கு செய்யாதெனவும் தன்து கபடச்செயலை யவரறிந்து கொள்ளுவாரெனவும் அறியாத மடவோன் தனதெண்ணம் நிறைவேறுமென விருந்த சமயத்தில் கணேசப் பெருமான் அவனுடன் விளையாடுவார்போல அவன் தொடையிலிருத்தலை விடுத்தெழுந்து விளையாடு வார்போல அவனுடைய தலைமயிரனைத்தையும் ஒரு கரத்தாலும் இரண்டு கரங்களையும் இரண்டு கரங்களாலும் பிடித்துக் கொண்டு கால்களாலுதைத்துதைத்து நடனம்புரியத் தொடங்கினர்.

இவரிங்ஙனம் நடனம்புரிதலால் தொடை யென்பு முறிந்து தோளென்பு கட்டுவிட்டுத் தலைசுழன்று சிறுவனே! யென்னை விடுவிடு நீ கூத்தாடுதலால் யான் மிகவும் நொந்தவ

னுகின்றேன் விடுவிடு என்றவன் கூவினன். அப்பொழு தெம்பெருமான் அவன் தலையைத் தமது கரத்தாற் திருகி யெடுத்து அவனை வதைத்தனர். அவன் தலைதிருகி யெடுக் கப்பட்டமையாற் தமது திருமேனி முற்றிலுய்ரத்தவெள்ள மானது பாய்ந்து சொரியால் நனைந்த திருவுருவின ராயி னர் இச்செயலினைச் சேடியர்களா லுணர்ந்த உமாதேவி யார் விரைந்தெய்திக் கணேசப் பெருமானை எடுத்து அபி ஷேகஞ் செய்து திருமேனியைத் தூய்மைப்படுத்தி மகிழ் வடைந்தனர்.

சிவகணங்கள் அசுரன் றலையையும் உடலையும் அப் புறப்படுத்தினுர்கள்.

இதனை

துந்துபேஸதிர்சம்ஸோபிக்யாதோ துந்துபிநாமத:
யஸ்யபாணி தலாகாத தராசூர்ணத்வமாகதா
உத்திஷ்டபலாத்தைத்யோபக்னதேஹஸ்துபூர்வதப்
பலாத்சகர்ஷ பாலோபிமூர்த்தானம ஸ்யதத்க்ஷணுத்
கண்டநாளாத் சிரோபி பாலஹஸ்த கதமபௌ

என்பனவாதிய கணேச புராணவசனங்களா லுணர்க.

.17

சலபாசுர சங்கார பராக்கிரமம்.

கருதலைமுன்ன ரெய்துங் காளையர் தம்போலெம்மை
யொருதலையாக நின்னை யுவண்வதை புரிவேனென்று
விருதலைப் புள்ளாய்வந்த வீடறு மசுரற்செற்றென்
னொருதலை யகத்துள்வாழு மும்பரு ளுகந்துவாழ்வாம்.

(இ-ள்.) முன்னர் நின்னைக்கொலைபுரியவந்தாரை யொப்ப வென்னைக் கருதேல் யானுன்னை யிவ்விடத்தில் வதை புரிதலைத் துணிவாகச் செய்வேன் என்று சரபபட்சியி னுருவந் தாங்கிவந்த சலபாசுரனை வதைத் தெனதொப்பற்ற வுன்மனந்தத்தே விளங்கும் யானைமுகப் பெருமானுடைய திருவடிகளை விரும்பி வணங்கி வாழ்வாம். எ-று.

இதன் விவரம்.

உமாதேவியார் தமது புதல்வரான கணேசப் பெருமானுடன் வளமமைந்த வொரு சோலையுள் எழுந் தருளிச் சேடியர்களுடனும் முனி மடந்தையருடனும் தம் புதல்வருக்கு விளையாட்டுக்காட்டி மகிழுகின்ற சமயத்தில் மஹா துஷ்டனுகிய சலபாசுரனென்பான் அச்சோலையுள் ஒரு சரபபட்சியாகத் தோன்றி விநாயகப் பெருமானைச் சதி புரிய விரும்பி அவரெதிரே யங்குமிங்குமாக உலாவினன். இவனிவ்வாறு சதி நினைவுடன் உலாவுதலை அறிந்த கணநாதர் விளையாட்டாக அதனைப் பிடிப்பார்போல அங்கு

மிங்குமாக உலாவி அதனைத் தொடர்ந்து தொடர்ந்து சென்றனர். அதுவும் இவரை யேமாற்றிக்கொண்டு போவதாக நினைத்து நெடுநேர மங்குமிங்கு முலாவியது. இறுதியில் பெருமான் அதன் இரண்டு இறகுகளையுங் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவ்விறகுகளை நன்றாய் முறுக்கியொடித்தனர். இறகுகளை ஒடித்தவுடனே தான் கருதி வந்த வாற்றலனைத்தும் இழந்து பெருங்கூச்சலிட்டுக் கதறினான். இவ்வொலி கேட்ட வுமாதேவியார் அவனை யசுரனென்று கருதாமல் தம் மகனாரைப்பார்த்து மகனே! "ஜீவகாதோ நகர்த்தஸ்யோ முஞ்சைனம் ப்ராணினம் சிசோ" என்றனர் (அதாவது பிராணிகளைக் கொலை புரிதல் கூடாது ஆதலினிதனைவிட்டு விடுக என்றனர். என்பதாம்) இம்மொழி கேட்ட எமதப்பன் அதனை வீசியெறிவார்போன்று அங்குள்ள ஒரு பாறையின் மோதி யடித்து அதனைக் கொன்றனர். இறந்த சலபன் பத்துயோசனை விஸ்தீரணத்துக்குத் தன் நிஜவுருவைக் காட்டி இரத்தங்கக்கியிறந்து கிடந்தனன் இச்செயல் கண்ட வுமாதேவியார் தஞ் சிறுவனை யெடுத்து அணைத்துக்கொண்டு கோயிலுளெய்தினர்.

இதனை

ததார ஸஹஸாதைத்யம் சலபம் பலவத்தரம்
பலாத்புனர் சிலாப்ருஷ்டே ஹடாத்சிக்ஷேபபாலக
வமன்ரக்தம் பஹுமுகாத் தசயோஜன விஸ்தரம்.

என்பன வ்ரதிய கணேசபுராண வசனங்களாலுணர்க.

சர்ப்போதர பேதன பராக்கிரமம்.

மாசகல் முனிவர்தேவர் மறைமுதலுரைத்து நாளுங்
காசக லுளத்தினோடுங் கருதியவனைத்து நல்குந்
தேசிக மலைப்பாம்பாகிச் செறிதரு கொடியபொல்லா
வாசக ரனைவதைத்த வருட்பெருங் கடலே போற்றி.

(இ-ள்.) குற்றமற்ற முனிவருந் தேவரும் வேத முதலான பிரணவ முரைத்துக் களங்கமற்ற மனத்தினுடன் தினந்தோறுந் தியானித்து வேண்டியவைகளை அளிக்கின்ற அழகினை யுடையாய், மலைப்பாம்பி னுருவந்தாங்கி வந்து தம்மையெடுத்து விழுங்கிய கொடிய பொல்லா ஆசகரன் என்னும் அசுரனை வதைத்தருளிய பெரிய வருட் கடலே நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

உமாதேவியாரின் திருக்குமாரரான விநாயகப் பெருமான் திருக்கோயிலுக்கு வெளியிலிருந்த சமயத்தில் நூறு யோசனை யுயரமும் பருமனுமுடைய சரீரத்தினை யுடைய ஆசகரன் என்னும் பெயருள்ள அசுரன் கண்டு விரைந்தேகி மலைப் பாம்பினுருவங்கொண்டு மண்டல மிட்டிருந்து விநாயகப் பெருமானை மிகவுமெளிய பொருளாகக்கருதி யெடுத்து விழுங்கி விட்டான்.

இவன் எடுத்து விழுங்குங்காறுஞ் சிற்றுருவத்துடனிருந்த எம்பெருமான் அவன் வயிற்றுட் சென்ற வுடனே அவுன் வயிற்றினுள் நிறைந்த பேருருவங் கொண்டனர். அதனால் மூச்சுவிட்ப்படாமல் அவன் வருந்தி வாலடித்துப்புரண்டு இரத்தங்கக்கி மார்பு பிளந்துயிர் துறந்தனன். பிளக்கப்பெற்றிறந்த இவன் பயங்கரமான தனது சொந்த வுருவத்துடன் நூறுயோசனை விஸ்தீரணத்துக்குப் பூமி பாழடையும் வண்ணம் உடலைப்புரட்டி யிறந்தான். அவனுடைய பிளந்தமார்பி னின்று மொழுகித் தோயப்பெற்ற விரத்தத்துடன் விநாயகப்பெருமான் வெளிப்பட்டனர். மகனைக்காணோமே யெனத்தேடிய வுமாதேவியார் பூத கணங்களாற் சங்கதிதெரிந்து விரைந்துவந்து தன் மகனை யெடுத்துச்சென்று இரத்தந்தோய்ந்த திருமேனியைப் புனிதப்படுத்தி மகிழ்ந்தனர்.

இதனை

ஏதஸ்மின் னந்தரே துஷ்டோ தைத்ய ஆஜகராபிதஃ
வமதக்னி கணான் த்ருஷ்டியா வஜ்ரஸாரதனுத்திருடஃ
லலாஜிஹ்வோ தீர்க்கதேஹோ க்ரஸன்னிவமஹாகிரிம்
உபவிஷ்டோ த்ருமதலேத்வேஜிஹ் வேலாலயன்முஹுஃ
தம்பாலோ பாலபாவேன ரிம்கித்வா விததாரஹ
ஸனிஞய சதம்சீக்ரம் ஆஸ்யாந்த: மஹதேனச
அந்தப்ரவிஷ்டே ஓஷ்டெளஸன் னய மீலயதாவாயுபுக்
ப்ராணவாயுஸ்து நேத்ராப்யாம் ருதிரேணவிநிர்யயெள.

என்பன வர்திய கணேசபுராண வசனங்களாலறிக.



அவிஜேயாசுர சங்கார பராக்கிரமம்.

ஆரணர்மறையின் விபுதரையழைப்ப வடைபவர் விமானவோசையி
ஞல், தோரணநிரையிற்குரீ இக்குலமெழுந்துதொடர் வுறவிலங்கு
வானத்தில், வாரணவுருவினெய்திய வசுரன்வாய்வழி சோரிநீர்வழி
யா, வேரணவழிந்து சாவுறப்புரிந்த வேரம்பனடி மலர்பணிவாம்.

(இ-ள்.) மறையொர்கள் வேத மந்திரங்களால் தேவர்
களையழைப்ப மந்திரத்துக்கிணங்கி வராநின்ற தேவர்களின்
விமானங்களினேசையினுல் தரையில் வரிசையாக விருந்த
பச்சைப் புருமுதலிய சிறு பறவைக்கூட்டங்கள் பச்சிலைத்
தோரண வரிசையைப்போல மேலெழுந்துவிட்டு விலகாமல்
விளங்குஞ் சிறந்தவனத்தில் யானையுருவுடன் வந்த அசுர
னுடைய வாயின்வழி இரத்த வெள்ளம் ஒழுகி அழகழிந்து
இறக்குமாறு செய்த வேரம்பரான விநாயகப் பெருமா
னுடைய திருவடிமலர்களை வணங்குவாம். எ-று.

இதன் விவரம்.

விநாயகப்பெருமான் சில முனிச்சிறு நடனும் பூதச்சிறு
ருடனும் வனத்திலுலாவி விளையாடித் திரிதலைக்கண்ட அவி
ஜேயன் என்னும் ஒரு அசுரன் ஒரு யானை யுருவந்தாங்கி
மரங்களையொடித்துங் காறைற்றுநீரை வாரியிறைத்தும் வழி
யிற்கண்டாரை வதைத்துந் துன்பஞ் செய்து கொண்டே
விநாயகப்பெருமானை யணுகிக் கொலைபுரிய வருதலும் முனி

வர் சிறாரும் பூதச்சிறாரும் பயந்தோடினர். விநாயகப்பெருமான் விரைந்தெதிரேசென்று அதனிரண்டு கோடுகளையும் பிடித்துப் பின்னுக்குத்தள்ளினர். யானையுங் கணநாதருமிங்ஙனம் மல்லாடுதலைக்கண்ட முனிச்சிறார் விரைந்தருகிலெய்திச் சிலர் துணிந்து அதன் வாலைப்பிடித் திழுத்தனர் சிலர் வெதிர்க்கோலா லோங்கி யடித்தனர் பின் புறத்தில் முனிச்சிறார் தாடனமும் முன்புறத்தில் விநாயகப் பெருமான் கொம்புகளைப் பிடித்துந்தலுமாக வுபத்திரவப் படுத்துதலும் அசுரன் பேரிடியெனப் பெருமுழக்கங் காட்டிக் கருச்சித்தனன் உடனே கணேசப்பெருமான் அதன் கோடுகளைப் பிடுங்கி யெறிந்து வாற்புறமெய்தி வாலைப் பிடித்திழுத்துச் சுழற்றினர். உடனே யவ்யானை வாலறு பட்டுக் கீழேவிழுந்து ரத்தங்கக்கி யிறந்தது. இறக்கும் பொழுது யானை வுருவமாறி யசுரவுருவத்துடன் விழுந்திறந்தனன் இதனைக்கண்டாரனைவரும் ஆச்சரிய முற்றனர்.

இதனை,

"அவிபுத்ரஸ்வரூபேண தைத்ய: ஸிந்துப்ரணோதித:
ஸயயௌபார்வதீபாலம் ஹந்துகாமோ மஹாஸுர:
வமன்ரக்தம் பஹுமுகான் ப்ரஸார்ய விக்ருதம்முகம்.

என்பனவாதிய கணேசபுராண வசனங்களா லுணர்க.

LITO. P.N.N. கூபுராசா சங்காரம்

நூபுராசுர சங்கார பராக்கிரமம்.

அண்டர்கடமுளங்குளிர முனிவர்சிந்தையானந்த
வாரிதியிலாழ்ந்து நிற்கக்
கெண்டைவிழிய பிராமிமகிழயாண்டுங்
கேடிலாவொருவன் முதங்கெழுமிநிற்பத்
தண்டையுடன்சிலம்பதிர நடனமாடித்தானவன்
கொள்சிலம்புருவந் தகர்த்துமாயை
யெண்டவிருநிருத்த கணபதியாய்நின்ற
விறைவனிருபதமலரை யிறைஞ்சிவாழ்வாம்.

(இ-ள்.) தேவர்களுள்ளங்குளிரவும் முனிவர்கள் சிந்தை யானந்தக் கடலிலாழ்ந்து நிற்கவும் சேற்கெண்டை போலும் விழியிணையுடைய உமாதேவியார் மகிழ்வுறவும் எந்நாளும் எவ்விடத்தும் எச்செயலிலும் அழிவில்லாதசிவபெருமான் சந்தோட நிறைந்துகாணவும் தண்டையுடன் சிலம்பு முழங்க நடனம்புரிந்து நூபுராசுரன் கொண்டிருந்த மாயாரூபத்துடன் அவனையு நாசஞ்செய்து மாயா ரகிதனைப் நிருத்த கணபதியெனப் பெயரெய்தி நின்ற விநாயகப் பெருமானுடைய உபயதிருவடி மலர்களையும் வணங்கிவாழ்வாம். எ-று.

இதன் விவரம்.

உமாதேவியின் றிருக்குமாரரான விநாயகப் பெருமான் ஒருதினம் திதி தித்தா வென்னும் ஓசை யுண்டாமாறு

காலணிகளொலிக்க நடனம் புரிந்தனர். இவர் திருவடிச்சிலம் பேரிசையைக்கேட்டு முனிவர்களுந் தேவர்களு நெருங்கிவந்து நடனங்கண்டு தந்தை நடனத்தினு மைந்தன் நடனஞ் சிறந்ததென வாழ்த்தித் துதித்தனர். இங்ஙனஞ் செய்யுங்காலத்தில் மகா மூர்க்கனுன நூபுரா சுரனென்பவன் அதி சூட்சும ரூபத்துடன் விநாயகப் பெருமான் காற்சிலம்புட் புகுந்து காலம்பார்த் திருந்தனன். இங்ஙனமாய சமயத்தி லுமாதேவியாரெய்தி விநாயகப்பெருமானை வாரியெடுத்தனர். எடுத்த சமயத்தில் அவர் கால்கள் அதிக கனமாக இருக்கக்கண்டு இஃதென்னை இவன் இவ்வளவு கனமாகக் காணப்படு கின்றானே என்னாற் சுமக்கப் படுந்தரத்தி லில்லையே என்று வருந்தினர். அப்பொழுது கணேசப்பெருமான் தமது திருவடிகளை நன்றாய்த் தூக்கி உதறினர் அவ்வுதறலால் சிலம்புட் கிடந்த வசுரன் காலினின்றுந் தவறிப்பட்சியைப்போல சூரியமண்டல மளவுஞ் சென்று கீழே விழுந்து பூமியிற் பத்துயோசனை யகலம் பாழாமாறு செய்து உயிர் துறந்தனன். இவன் விழுவதைக் கண்ட அனைவரும் விநாயகப் பெருமானைப் புகழ்ந்தனர். இங்ஙன நடனமாடிய காரணத்தால் நிருத்தகணபதியென விநாயகப்பெருமான் பெயரெய்தினர். இதனை

நூபுராக்யோ மஹாதைத்யோ மஹாக்ருஷ்ணதனுத்ருட
சரணுத்யாஜிதோதைத்யோ நவிம்ண்டலலோபகஃ
ஸோகஸமான் நிபபாதோர்வ்யாம் சததாசபவத்கல.

என்பன வாதிய கணேசபுராண வசனங்களாலுணர்க.

LITHO^D. P.N.N.

மச்சாசுராசங்காரம்.

மச்சாசுர சங்கார பராக்கிரமம்.

ஈனம்பொருந்து குணத்தானும்பழிவே பொருந்து முளத்தானும்
மீனம்புரியுஞ் செயலினுடன் மேவுமசுரன் றனைக் கோறித்
தேனம்புயமாமுக நல்லார்செறிவி னுமையின் முகமலர்த்தி
வானம் பரவும்படிநின்ற வள்ளல்பத மாமலர்பணிவாம்.

(இ-ள்.) இழிந்த குணத்தானும் தாழ்ந்த செயல்கள் பதிந்து கிடக்கு முளத்தானும் வன்மீன்கள் செய்யுஞ் செயல்களைச்செய்து கிடந்த மச்சாசுரனை வதைத்துத்தேனுடன் விளங்குமலர்ந்த தாமரைமலரனைய் முகத்தினையுடைய பெண்களின் நடுவில் உமாதேவியாரின் திருமுகத்தினை மகிழ்வினால் மலரச்செய்து வானுலகுந் துதிபுரியுமாறு நின்ற வள்ளலான ஸ்ரீ கணேசப் பெருமானுடைய சிறந்த திருவடிகளை வணங்குவாம். எ-று.

இதன் விவரம்.

அனேகம் முனிமக்களுடன் ஆடியும் பாடியும் பூம் பொழிலினுலாவிய கணநாயகர் வெகுயோசனைவிஸ்தீரணத்தையுடைய ஒருதடாகத்தினைக்கண்டு அதனருகிற்சென்று விளையாட்டயர்ந்தனர். அதுகண்ட ஒரு கொடிய வரக்கன் ஒரு மீனினுருக்கொண்டு வாலால் நீரினை மோதி வெகுதூர

பிறைத்தும் முகத்தால் நீரைப்பிளந்தோடியும் பயங்கரங் காட்டிப் பலமுறை மடுவின் கரையை யடைந்துலவு தலைக்கண்ட கணேசப்பிரான் அதனருகிற் சென்றதனை யஞ்சாது பிடித்தனர். இவர் பிடித்ததனை யுணர்ந்து இவரை நீருளமுத்தி நெடுந்தூரம்போயது இவரும் மீனுரு வெய்தியதனுடன் போர்புரிந்தனர். இதனைக்கண்ட முனிச் சிறுருட் பலர் உமாதேவியா ரடிப்பாரென ஆங்கு நில்லாம லோட்டம் பிடித்தனர் சிலர் புறங்கைகளால் வாயிலடித்துக் கொண்டனர். சிலர் ஓட்டமாக ஓடி உமாதேவிக்குணர்த்தி னர். உமாதேவியார் தம்மகனை மீன்விழுங்கிய தெனக் கேட்டு நனிவருந்திச் சேடியர் குழாத்துடன் விரைந்து தடாகக் கரையையடைந்து தம்புதல்வரைக்காணுதுவாட்ட முற்றுச் சிவபெருமானைப் பலவாறு துதித்தனர். துதித்த லும் "ஸ்வயமண்டஜரூபோபூத்யு துதாதேபரஸ் பரம்" என்று அசரீரியானது அஞ்சற்க கணேசன் கொடிய மீனுருவங்கொண்ட வசுரனுடன் தானும் மீனுருவமெய்திச் சண்டை யிடுகின்முன். இன்னஞ்சிறிது நேரத்தி லவன்வா யோலியை நீகேட்பாய் என்று கூறியிது. உடனே நம்பெரு மானும் அவ்வன்மீனுடன் நெடுநாழிகை போர்புரிந்து அதன் இறகு வால் கண்கள் முதலியவைகளைப் பெயர்த்து வாயால் வாலைப்பிடித்துக் கரையிலெறிந்து தமது சிற் றுருவுடன் அம்மீனின் அருகினின்றனர். உடனே உமா

தேவியார் மகிழ்வுட னவரை யெடுத் தணைத்து மகிழ்ந்தனர். அங்கு வந்திருந்த முனிவரும் பிறரும் பத்திர புஷ்பாதிகளால் விநாயகப் பெருமானுடைய திருவடிகளை யர்ச்சித்துத் துதித்தனர். கரையில் விழுந்த மீனுருவ வசுரன், தனது பேருருவுட னிறந்தொழிந்தனன்.

இதனை

ததோதைத்யோ மத்ஸ்யரூபி தேஷக்ரீடாரதோபவத்
க்வசித்லீனந்துதம் த்ருஷ்ட்வாபுச்சாகாதைரதாடயத்
தத்புச்சந்துமுகேத்ருத்வா கணேசோபகிராணயன்
த்யஜந்தம் ருதிரம்வக்த்ரான்னதந்தம் பலவத்தரம்.

என்பன வாதியான கணேசபுராண வசனங்களா லுணர்க.

கூடாசுர சங்கார பராக்கிரமம்.

பொல்லாவிட மூட்டியதடத்திற் புகுவார்தமதாருயிர் வீட்டி
யுல்லாசத்தோடுயர் வானத்தொளிவி லிருந்தகூடனுரு
வெல்லாம்வெந்து நீறுகவெழிலார்விழியாற் புரிந்தருளும்
வில்லாரோடைமதமாவின்விரைத்தாமரைப்பூம்பதம்போற்றி.

(இ-ள்.) ஆலகாலம் போன்ற கொடியவிஷத்தினை ஒரு தடாகத்திற்கரைத்து அந்நீரையுண்டிறப்போரையெல்லாங் கண்டுமகிழுகின்றவனாய் ஆகாயத்தில் மறைந்திருந்த கூடாசுரனென்பவனைத் தமது விழியாலெரித்தருளிய முகபடாமணிந்த திரு முகத்தினையுடைய விநாயகப் பெருமானுடைய திருவடித் தாமரைகளுக்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

திருசந்திக்ஷேத்திரத்தி லுமாதேவியாருட னெழுந்தருளி இருக்குங் கணேசப்பெருமானை வதைபுரியவேண்டுமென்னும் விருப்பத்துடன் காலம் பார்த்திருந்த வசுரன் ஒருவன் அநேகம் முனிச்சிறுருடன் சோலையொன்றினில் பலவிதமாக விளையாடல் புரிந்துலவிய கணேசப்பெருமானைக் கண்டு இதுவே தருணமெனத் தனது மாயையால் விஷமயமான நீரினையுந், தாமரை, யல்லி, கழுநீர், சங்க முதலியவைகளையுமுடைய ஒருதடாகத்தினை உண்டாக்கிவைத்துத் தான் ஆகாயத்தில் நெடுந்தூரத்தில் மறைந்தவ



ஞைக விருந்து விநாயகப்பெருமான் வருதலையெதிர் பார்த்திருந்தனன். விநாயகப்பெருமானும் விரைந்து அத்தடாகத்தி னருகிலெய்தினர். புதியதடாகத்தினைக் கண்ட முனிச்சிறுர்கள் சரேலென அதனுட்பாய்ந்து தாமரை முதலிய மலர்களைக் கொய்தும் நீருண்முழுகியும் விளையாடி விஷச் சுவாலையா லுயிர்துறந்தனர். இனிக்கணபதியும் விழுந்திறப்பானெனக் கூடனெதிர் பார்த்தான். தம்முடன் வந்தாரனைவரும் இறந்ததனைக்கண்ட கணேசர் இவ்வுளவை யறிந்து சீற்றத்துடன் வானத்தினை நிமிர்ந்து பார்த்தனர் பார்த்தவுடன் அவர்திருக்கண்களி நின்றுந் தோன்றிய தீப்பொறி யக்கூடனுடலிற்பற்றி எரிந்தமையாற் சாம்பராகி யழிந்தான். இவனுடைய வீழ்ச்சியால் ஐந்துயோசனை விஸ்தீரணத்துக்கந்தச் சோலையழிவுற்றது. விநாயகப்பெருமான் இறந்தவரனைவரையுந்தமது கருணைக்கண்ணால் பார்த்தனர் அனைவருமுயிர் பெற்றெழுந்தனர் பாவியான கூடன் மாத்திரம் செத்தொழிந்தான். இச்செயலினை யுணர்ந்த உமாதேவியார் முதலியோர்கள் மகிழ்வெய்தினர்.

இதனை

> க்ரூரத்ருஷ்டியா கூடதைத்யம் ம்ரும்ப்ரூமௌன்ய பாதயத்
> பஞ்சயோசன விஸ்தீர்ணும் சூர்ணிகாந்தேன வாடிகாம்.

என்பன வாதிய விநாயகபுராண வசனங்களா லுணர்க.

சிலாசுர சங்கார பராக்கிரமம்.

கறையின் மிகுந்தசெவ்வாயுங் கையுமுதல வொழித்துயர்ந்த
வறையினுருவத்துடன் கிடந்தவசுரன் றன்னைக்கண்டத்துள்
நிறையும்வளியி னீருக்கி நிலத்தோர்க் கின்பநனிதந்த
விறைவன்னுலவைமுகத்தேவாமெந்தையிருதாளிணைபணிவாம்

(இ-ள்.) இரத்தத்தான் மிகுந்த செவ்வாயுங் கையு முதலிய வுறுப்பெவையு மின்றிப்பெரும்பாறை யினுருவாய் வழியடைத்துக் கிடந்த கொடிய சிலாசுரனென் பவனைமூக்கின் வழிவிடுத்த காற்றினல் பல சுக்கல்களாக உடைந்து உருவழிந்து இறந்து பிசவுருவுடன் நெடுந்தூரத்திற் சென்று விழச்செய்து சீவகோடிகளுக் கின்பத்தினை யளித்த தலைவரும் யானைமுகப் பெருமானும் கணேசப்பெருமானுமாகிய எந்தையின் உபயசரணங்களைப் பணிவோமாக. எ-று.

இதன் விவரம்.

முனிவர்களும் அவர்பத்தினியரும் முனிச்சிறுர்களும் உடன்வராநிற்ப மச்சாசுரனை வதைத்த கணேசப்பெருமானை உடனழைத்துக்கொண்டு சேடியர்புடைசூழ உமாதேவியார் வருதலும் இவர்களின் வருகையைக்கண்ட



ஓரசுரன் சிலாசுரனென்னும் பெயரினன் மார்க்க மத்தியத்தில் வழி சிறிதுந்தெரியாதவண்ணம் ஒரு பெரும்பாறையினுருவுகொண்டு கிடந்து தடுத்தனன். இங்ஙனம் இவன் கிடத்தலைக்கண்டவனைவரு ஞ்ஜி நடுங்கி இஃதென்னை கொடிய செயலாக வெவரிவ்வாறு செய்தவர் நாம் போகுங் காலத் திவ்விடத்து இப்பெரும்பாறை யில்லையே இப்பொழுதிது இங்கு காணப்படுதலினொரு அசுரன் செயலாகவே இருத்தல் வேண்டும் இனி நாமெவ்வாறு போவது வழியெங்கு மில்லையே எனக் கூறினர்கள் இவைகளைக் கேட்ட கணேசப்பெருமானதனருகிற் சென்று ஒரு பெருமூச்சு விடுத்தனர். இவர் விடுந்த மூச்சினலைக்கல்லானது அனேகமாயிரஞ் சுக்கல்களாக உடைந்து நெடுந்தூரத்தில் சென்று விழுந்து அழிந்தது. உடனே அம்மாயவுருவங்கொண்டிருந்த வசுரனும் மூச்சுக்காற்றிற் காற்றுது வானினெடுந்தூரமுயர்ந்து கீழ்விழுந்து ரத்தங்கக்கி உயிர்துறந்தனன் இச்செய லினைக்கண்ட வனைவரும் விநாயகப் பெருமானைப் புகழ்ந்து சென்றனர்.

இதனை

"மார்க்கமத்யேபரஃசைலநாம்னதைத்யோமஹாபல:
தச்சவாஸயோ,காத் ஸகிரிபப்ராமககணேததா.

என்பன வாதிய கணேசபுராண வசனங்களாலுணர்க.

கர்த்தமாசுர சங்கார பராக்கிரமம்.

மாயமறைமா முனியாகி மன்னியுமை யாடிருமுன்னர்
ஏயத்தன்னை யெடுத்தகன்ற வேதிலானுங் கருத்தமனை
மாயப்புரிந்திட்ட கிலமுந்தன்மலர் வாயிடத்தி லுறக்காட்டித்
தூயவரனு ருருவாகித் துலங்குமிறை தாட்டுணைபோற்றி.

(இ-ள்.)மாயவித்தையினுற் சிறந்த வேதமுணர்ந்த பார்ப்பன முனியையொப்பத்தோன்றித் தன்னையே உமாதேவியாரெதிரே யெடுத்தகன்ற பகைவனுன கருத்தமனென்பவனை இறக்குமாறுசெய்து அனைத்துப் பொருள்களையும் தனது மலர்வாயினிடத்துப் பொருந்தக்காட்டி நிருமலரான சிவபெருமானுடைய திருவுருவாக விளங்கிய கணேசப்பெருமானுடைய திருவடித்தாமரைகளுக்கு நமஸ்காரம் எ-று.

இதன் விவரம்.

திரிசந்தி க்ஷேத்திரத்தி லுமாதேவியார் கணேசப்பெருமானைப் புதல்வராகக் கொண்டெழுந்தருளி யிருந்து புத்திரானந்த மநுபவிக்கின்றகாலத்தில் ஒருதினம் உதயகாலத்தில் தமதருமைத் திருமகனுர் கண்ணுறங்கக்கண்டு பார்த்திவலிங்கத்தில் சிவபிரானை ஆவாஹித்துப் பூசிக்க உத்தேசித்து வாமஹஸ்தத்தில் வைக்கப்பெற்ற சிவலிங்கத்துடன் மற்ற உபகரணங்களையுங் கொண்டு நீராடி நியதி முடித்துப் பூசைக்காரம்பித்தனர்.

பூசாரம்ப சமயத்தில் கண்விழித்த கணேசப் பெருமான் மாதாவிருக்குமிட மடைந்து அன்னையே பால்தருக பால் தருக என்று பன்முறைகூறி மேல்விழுந்தனர். தம்மகனுர தெண்ணமறியாத உமாதேவியார் 'இரு இரு பின்னராகட்டும் சற்றேபொறு' என்றனர். இவ்வாறு கூறுதலும் கணேசப்பெருமான் சிவலிங்கப் பெருமானைக் கையினின்றும் தள்ளியுடைத்து விட்டனர். சிவலிங்கப் பெருமானை உடைத்ததனைக்கண்ட உமாதேவியார் தம்மகனுர் நிலையைமறந்து அவரை இங்ஙனமுஞ் செய்தல் தகுமோ வெனத் திருக்கரத் தாலோங்கியடித்தனர். அன்னை மிக்க கோபத்துடன் 'தன்னையடித்தவுடன் , பயந்து போய் விடாமல் கணேசப் பெருமான் அதிக சோபக்குறியுடன் பின்னரு மவரருகிலெய்தி அவரடித்த விரலைப்பிடித்து நன்ருய் ரோஷத்துடன் இரத்தம் ஓடிவரும் வண்ணம் கடித்தனர். இங்ஙனம் கடித்த சமயத்தில் உமாதேவியார் விடு விடு என்னுயிர் போகின்றது என்று மிகவருத்தத்துடன் ("முஞ்சமுஞ்ச மமப்ராணு க்மிஷியந்தீதியோ ப்ரவீத்") கூறுதலும் கையை விடுத்து விரைந் தோடித் தூரத்தே நின்றனர். விரலைக்கடித்ததனுல் அதிக கோபங் கொண்ட உமாதேவியார் ஒரு கல்லினையெடுத்து அதனுற் கணேசப் பெருமானை அடிக்கும் வண்ணம் ஓடிவந்தனர் வருகின்ற சமயத்தில் ("பஞ்சவக்தரந் தசபுஜம்த்ரிநேத்ரம்

சேஷ சோபிதம் த்ரிசூலம் டமருகம் பஸ்மருண்ட மாலாம் சவிப்ரதம், வஸானம் சர்மணீ ஹஸ்திவ்யாக்ரயோசசி சேகரம்") என்றுரைத்தாங்கு ஐந்து திருமுகங்களையும் பத்துத் திருக்கரங்களையும் சூல டமருகங்களையும் விபூதிப்பூச்சினையும் முக்கண்களையும் ருத்ராக்ஷ மாலைகளையும் யானைத்தோல் புலித்தோல்களையும் உடைய சிவபெருமானாக எதிரே தோன்றினர். இங்ஙனம் காணப்பட்டவுடனே கையிலிருந்த கல்லினைக்கீழே எறிந்து நாணத்துடன் உமாதேவியார் நின்றனர்.

உமாதேவியார் நாணிநின்ற சமயத்தில் அவ்வுருவினை மறைத்துப் பழயமயூரநாதனுருவுடன் வெளியே ஓடி விளையாடும் சிறுவர்கள் நடுவிற் புகுந்து மறைந்து சென்றனர். பின்னர் உமாதேவியார் மகனைநினைந்து முனிமக்களை வினவினராய்ப் பலவிடங்களிலுந் தேடிக்கால் சலிப்பெய்தி நிற்றலும் அதனைக்கண்ட பெருமான் அம்மையா ரெதிரே தோன்றி நின்றனர் அவரும் இவரை இனி நீ யெங்குச் செல்வாயென இடையிற் கயறிட்டுப் பிணித்து முற்றத்து விடுத்துள்ளே சென்றனர்.

இந்த சமயத்தினையறிந்த கர்த்தமனென்னுங் கொடியவசுரன் தண்ட கமண்டலங்களையுஞ் செவ்வாடையையும் உடையவனாய்க் கணேசப் பெருமா னெதிரே தோன்றி

நீ யேனழுகின்றனை நின்குறையை யென்னிட முரைத்தால் யான் நீக்குவேனென்றனன். அம்மொழிகேட்ட பெருமான் பாலலீலையால் அழுதலைநிறுத்திப் பெரியோய் நீயே எனக்கு அன்னையுந் தந்தையும், உன்னிடமே யடைக்கலம் புகுந் தேன், என் அன்னை என்னைத்தண்டிக்காத வண்ணம் செய்ய வேண்டுகின்றேனென்ற வுடனே நல்லது அஞ்சாதே யானவ்வாறே செய்கின்றேனென்று பாலரூபியான விநாயகப்பெருமானை எடுத்துக் கனிந்தசிறு வாழக்கனியை விழுங்குமாறு விழுங்கிவிட்டான் இவனிவ்வாறு விழுங்குதலைக் கண்ட பார்வதி தேவியார் விரைந்தவனருகி லடைந்து, மறையோய்! என் சிறுவனை யாதுசெய்தனை எங்குமறைத் தனை யென்றனர். அதற்கு வஞ்சனைப் பார்ப்பான் யான் அனைத்தையும் வெறுத்த உதாஸி யெனக்கு ஒருவர் தாட்சிணியமும் வேண்டுவதில்லை நின் மகனை யானெடுத் தொளித்தென் செய்யப் போகின்றேனென்றனன்.

அம்மொழி கேட்ட வுமாதேவியார் புத்திரவாஞ்சை யில் நனிவருந்துதலைக் கண்ட கணேசப் பெருமானெதிரே தோன்றி அன்னையே! யானிதோ இருக்கின்றேன் என்றனர். இச்செயலினைக்கண்ட கொடியவசுர சன்னியாசி உமா தேவியாரின் அருகிலிருந்த கணேசப் பெருமானை வலிந் தெடுத்துக்கொண்டு தனது தலையானது வானுல கெட்டு மாறு பேருருவங்கொண்டு நின்றனன். அங்ஙனநின்றுழி

யசுரனென வறிந்த உமாதேவியார் கவலையுறுதலைக்கண்ட கணேசப்பெருமான் அவ்வசுரன் கொண்ட உருவினளவு பேருருவங் கொண்டவனை நன்றாய்ப் புடைத்து அவனுயிரை யமலோகமனுப்பி அநேகயோசனை விஸ்தீர்ணத்தில் அவன் உடலை விழுமாறுபுரிந்து பழயவுருவுட னெதிரே தோன்றினர். இவ்வாறு தோன்றிய பெருமானை அங்கிருந்த முனிவர்களும் முனிவர் மடந்தையரும் பத்திர புஷ்பங்களைக் கொண்டு செவ்வனே பூசனை செய்தனர் பூசிக்குங்காலத்திற் றமது திருமுகமண்டலத்தி லனைத்து லோகங்களையும் அனைத்துப் பொருள்களையு முமாதேவியாருக்குக் காட்டித் தாமேயனைத்துப் பொருள்களாகவும் விளங்குவோரென விளக்கி யுமா தேவியார் தம்மைப் புகழ்ந்த சமயத்தில் அந்நிலையினை மறைத்துப் பழய பாலவுருவுட னெழுந்தருளி இருந்தனர்.

இதனை

ஏதஸ்மின்னந்த ரேதுஷ்டோதானவா கர்தமாஸுர:
த்விஜரூபத ரோமாலாம் ததாஞோதக்ஷிணேகரை:
ஆவிராஸீன் நிர்விகாரஸ்தன் முதாத்கணேச்வர:
ஜனன்யாக்ரதஸ் தௌஸம் ஹ்ருதைவந்து தானவும்.
இதிதஸ்ய வசச்ருத்வாஸதைத் யோநிர்க்கதேஹவான்:
வ்யோமஸ்ப்ருங் மஸ்தகோபால மாதாய நிர்யயௌ:
கணேசோபித தோதத்னேதஸ் மாத்நிர்க்க தரம்வபு:
தத்தேஹம் சததாக்ருத்வா சூர்ணங்கிரிவிகாதத:
ஜனன்யாக் ரததஸ்தௌஸம் ஹ்ருதைவந்து தானவம்.

என்பனவாதிய கணேச புராணவசனங்களா லுணர்க.

LITHO D P N N

சாயாசுர சங்கார பராக்கிரமம்.

வில்லார்நுதலும் மணிக்குழையும் விழியினிரையு மழகெறிப்ப
எல்லாவுலகுந் தொழுமழவாயிலங்கி யுமையாடிருவுள்ள
முல்லாசத்திலுற விருந்தவொரு வாசாயா சுரனென்னும்
பொல்லானுயிரைச் சிலைகொண்டு பொதுத்தகினது பதம்போற்றி.

(இ-ள்) ஒளி தங்கிய நெற்றியும் அரதன குண்டலமணிந்த திருச்செவிகளும் அழகிய கண்மலர் வரிசைகளும் அழகெறிப்ப அனைத்துலகமும் வணங்கு மிளந்திருக்கோலத்துடன், உமாதேவியாரின் திருவுள்ள முவப்பெய்தும் வண்ணம் எழுந்தருளி இருந்த ஒப்பற்றபெருமானே. சாயாசுரனென்னும் கொடியோனுயிரைச் சிலைகொண்டெடுறிந் தழித்ததேவரீர் திருவடிகட்கு நமஸ்காரம் (எ-று.)

இதன் விவரம்.

ஆறுமுகப் பெருமானுக்கு மூத்தவரான கணேசப் பெருமான் அழகியதொரு பூஞ்சோலையில் முனிச்சிறுர்களான சிறுவர்களுடன் ஆடியும் பாடியும் ஆனந்தநிருத்தஞ் செய்தும் ஒடியுஞ் சாடியு முற்று விளையாடல் புரிதலைக் கண்ட ஒரு கொடிய வசுரன் சாயாக்கிரகணத்தா லுயிர்களைவருத்தப் பயின்றுள்ளவன் விநாயகப் பெருமானையும் அவ்வாறு செய்யக்கருதி வானின் மறைந்தெய்தி அவர் நிழலைப்பற்றினுன் விநாயகப்பெருமான் அவன் வஞ்சனைக்

கூட் சிக்கிறரை யொப்ப வானிலுயர்ந்து கண்டார். பிரமிக்குமாறு புற்பல விசித்திரகரணங்களுடன் சிறிது நேரஞ் சுழன்றனர். இவரிவ்வாறு சுழலுதலும் இவரருகி னின்ற முனிச்சிறுர்கள் கணேசப் பெருமானைப் பார்த்து மயூரா நீ இவ்வாறு சுழலுதலால் நாங்கள் மிகவும் வருந்துகின்றோம் என்று கவன்று கூறினார்கள். தமது நண்பர்கள் இவ்வாறு கூறியதனைக் கேட்ட எமதப்பன் விரைந்து அவன் பிணிப்பினின்றும் விலகித் தரையிற் குதித்து ஒரு துண்டுக் கல்லினை யெடுத்து மறைந்து வானினின்று தம்மைப் பிணித்த கொடிய வசுரனுடைய வயிற்றிற் குறிவைத் தெறிந்தனர்.

இவ ரெறிந்த கற்சிலையால் வயிறு பிளந்த சாயாசுரன் இரத்தமொழுகிப் பூமி சேருமாறு தனது நிசவுருவத்துடன் விழுந்து புரண்டுயிர் துறந்தனன். இவனது வீழ்ச்சியாற் பூமியின் அனேகபாகம் சிதறி சீர்கெட்டது அசுரன் விழுந்திறந்ததனைக்கண்ட முனிமைந்தராதியர் களிப்புற்றனர்.

இதனை

சாயாரூபம் ஸமாஸ்தாய மஹாபலபராக்கிரமம்
பாதகா தேனதஸ்யாசுசகம் பேசேக்ஷ விக்ரஹ
கண்டசைலம் ஸமாதாயப் ராக்ஷியச் சோதரேஸ்யேஹ
உபரீஷ்டான நர்த்தாஸௌ ஸம்ருத சூர்ணதாம்கத
அந்தகாலே மஹத்ருபம் ஸமாஸ்தாயநிஜம்கலஃ

என்பன வாதிய் கணேசபுராண வசனங்களாலுணர்க.

26

சஞ்சலாசுர சங்கார பராக்கிரமம்.

வஞ்சனை கொலையென்றின்ன வைக்குமோர் பேழையான
நெஞ்சகமுடையனாகி நீளுருமறைத்து மோனர்
மஞ்சரினெய்தித்தம்மை மகிழ்வுட னெடுத்துச்சென்ற
சஞ்சலன்றனை வதைத்த தயாநிதிசரணம் போற்றி.

(இ-ள்.) வஞ்சமுங் கொலையு முதலியவான கெட்ட குணங்களனைத்து மிருக்குமொரு பெட்டியாகிய நெஞ்சகத்தினை யுடையவனாகித் தனது நெடியவுருவினை மறைத்து முனிவர் மைந்தரை யொப்பவுருக்கொண்டு வந்து விளையாடல் புரிந்து முனிமைந்தருடன் தம்மையும் எடுத்து வானிற்சென்ற சஞ்சலாசுர னென்பவனை வதைத் தருளிய கருணா நிதியான கணேசப் பெருமானுடைய திருவடிகளுக்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

முனிவர் மைந்தர்களுங் கணேசப்பெருமானுமாக, பந்தாடல் முதலிய விளையாடல்களைச்செய்து கொண்டொரு சோலையி னுல்லாச மாகவிருந்த காலத்தில் பலவித மாயாசேட்டைகளில் வல்லவனும் கோரரூபியும் துட்டகுணத்

தனுமான ஓரசுரன் சஞ்சலனென்று பெயருள்ளவன் கண்டு இம்முனிச்சிறுர் குழுவுள் ஆறுகரங்களும் மூன்று கண்களும் உடையவனுக இருக்கின்ற சிறுவன் நமது குலவைரியாக வுள்ளவன் இவனைக் கொலைபுரிதற்கு நம் மினத்தவர்கள் எத்தனை விதங்களாக முயற்சித்தும் முடியவே இல்லை நாமிவனுடன் பழகு முனிமக்களிலொரு வனைப்போல வேடங்கொண்டு சென்று இவனுடன் பந்து முதலியவாடி இவனையு மிவனினத்தவர்களையுங் கொன்று விடலாகுமெனத் தீர்மானித்து ஒரு முனிமகனைப்போல வுருக்கொண்டெய்தி விநாயகப்பெருமான் முதலியவர் களுடன் பந்து முதலிய விளையாடி அவ்வனை வரையுந் தனது முதுகிலேற்றி வானிலுயர்ந்து சென்றனன். இவன் வானிலெழுந்து சேறலைக்கண்ட முனிமைந்தர் பயமுற்று நடுங்கினுர்கள், அதுகண்ட கணேசப் பெருமான் இமயகிரி யளவு பாரத்தையுடையவராகி இருந்தனர் இதனுலவன் வலியிழந்து கூச்சலிட்டவனுய் விரைந்து ஆற்றகில்லேன் ஆற்றகில்லே னெனக்கீழ் மறிந்தனன். மறிந்தானை விடாது பிடித்துக் கால்களாலிறுக்கிச் சர்ப்பங்களைக்கொண்டு கலு ழன் சுழலுமாறு சுழன்று அவனைப் பலவிடங்களில் மோதி வாயால்ரத்தம் ஒழுகச் செய்து கீழேதள்ளினர், கீழ்விழுந்து அசுரன் உயிர் துறந்தொழிந்தனன். அவனை எடுத்துத் தூரத்திலெறிந்து முனிச்சிறுரை அபாய

நேரிடாவண்ணங் காத்துக் கரத்தா லணைத்து வந்தபெருமான் அவர்களுடன் தங்கோயிலெய்தினர்.

இதனை,

சஞ்சலாக்யோமஹாதைத்யோபாலரூபதரோவிசத்
ஹிமவத்சதிர்சம்பாரம்சகாரஸஹஸாவிபு :
பாரேணபதிதோதைத்ய:ப்ராவதத்தங்கணேச்வரம்
ஏவம்வதன்முமூர்ச்சாஸௌதோபாலோத்தாரதம்
தத்யாஜ்ஜூரதேசேதம்துஷ்டதானவம்

என்பன வாதியாகவருங் கணேச புராணவசனங்களா லுணர்க.

விருகாசுர சங்காரபராக்கிரமம்.

முருகனை யிளையோ னாகமுன்னினர் மூத்தோனென்ன
வருமொரு பெரியோய் ஞானவாரிதி யானவள்ளால்
கருகிரு ணிறத்துப்பொல்லாக் கயவருட் கயவனான
விருகனை வதைத்தமேன்மை விகிர்தநின் றிருத்தாள்போற்றி.

(இ-ள்) முருகக்கடவுளை இளையபெருமானாகநினைத்தவர்கள் மூத்தபிள்ளை யாரென வுரைக்குமா றெழுந்தருளும் பெரியோய்! ஞான சமுத்திரமான வள்ளலே! கருதிய இருட்டின் நிறமான பொல்லாக் கயவரினுங் கயவனாக வுள்ள விருகனென்னு மசுரனை யழித்த மேன்மையினை யுடைய சுயம்புவான பெருமானே! நினது திருவடிகட்கு நமஸ்காரம் எ-று.

இதன் விவரம்

முனிவர் சிறுர் பலருடன் சூழ்ந்துவராநிற்பக் கணேசப்பிரா னெழுந்தருளி ஒருவனத்திலாட லயர்ந்தகாலத்தில் விருகனென்னும் இயற்பெயரினை யுடைய செந்நாய் முகமுள்ள ஒரு கொடிய பாதகவசுரன் கணேசப் பெருமானைக்கண்டு விரைந்து வந்துவஞ்ச நினைந்து ஒரு பெரிய

LITHO D P.N.N.

விருகாசுரசங்காரம்

செந்நாயி னுருவந்தாங்கி வால்வீச்சிறுலுங் குரைப்பினுலும் மிகுந்த பயங்கரத்தை யுண்டாக்கிக்கொண் டோடிவந் தான். பெருஞ் செந்நாய் ஒடி யிரைந்து விரைந்து வருவதைக்கண்ட முனிமைந்தரனைவரும் நடுநடுங்கிப் பயந்து கணேசா! கணேசா! வென்று கூச்சலிட்டோடினர்கள். ஓடினுரை யஞ்சன்மி னென்று கூறிய கணேசப் பெருமானைத்தாவிக் கடிக்கவந்தவச் செந்நாயான வசுரனைத் தமது திருக்கரத்திலிருந்த பாசத்தினை வீசிக் கொலை புரிந்தனர் பாசத்திற் சிக்கிச் சோரிகக்கி யுயிரிழக்குமசுரன் தனது நிசவுருவுடன் வீழ்ந்திறந்தனன்

இதனை

தத்ராயயௌவ்ருகோநாமமஹான்துஷ்டதமோஸுரஃ
புச்சாகாதேனபுவம்கம்பயன்ஹலதந்தவான்
த்ருஷ்ட்வாபயங்கரம்தைத்யம்முனிபுத்ராபலாயிதா
ஆயுனிக்ரத்யசுதம்வ்ருகம்அதாடயத்
அங்குசாகாதமாத்ரெணஃபதிதோபுவிஸோஸுர
வமன்ரக்தம்நிஜம்ரூபமாஸ்திதச் சூர்ணயன்த்ருமான்

என்பனவாதிய கணேசபுராண வசனங்களாலுணர்க.

கட்காசுர சங்கார பராக்கிரமம்.

உட்கவண்ட முமங்குள்ள வுவரியுமு யிருமொன்றிக்
கொட்கலுற் றலையப்புச்சங் கொண்டலைபுரிந்துநாணம்
வெட்கமென்பன விடுத்துவி புதரையலைத்து நின்ற
கட்கனை வதைத்தசெல்வக் கணேசனைக் கருதிவாழ்வாம்.

(இ-ள்) அண்டமு மதனிலுள்ள கடலும் அக்கடலுளுங் கரையுளும் பொருந்திய வுயிர்களும் நிலையிலாது சுழல வாலால் மோதிவருத்தி நாணம்வெட்கம் என்பன ஒழித்து அறிவிற் சிறந்த தேவரையு மிருடியரையுந் துன்புறுத்தி வனத்திலெய்தி யொட்டக் வுருவமாக நின்ற கட்காசுர னென்பவனைவதைத்த செல்வக்கணேசப் பெருமானை நினைத்து வாழ்வாம். எ-று.

இதன் விவரம்.

கொன்றையும் பகன்றையும் கொடியுறு முல்லையும் துன்றியதாளியுந் தோன்றியுமத்தமும் வன்னியு நொச்சியும் வழையுஞ்சூதமும் புன்னையு முன்னையும் புனையுமந்தாரமும் வாழையுந் தாழையும் வளர்ந்தபூகமும் கோழரைக் கதம்பமுங் குல்லையு மலரியும், வெட்சியுந் தும்

பையும் வியன்மருவன்னியும் கட்கிணையுறவலர் கருவிளைய சோகமும் கரந்தையு மூணாறுங் கருது மாவிலிங்கனுஞ் சிறந்த நற்றிலதமுந் திகழ்செப்பரத்தையும் ஆகிய பூசாயோக்கிய மானபத்திர புட்ப பலங்களை யளிக்கும் மரங்கொடி செடி முதலிய வைகளையும் மாடப்புறு கானங்கோழி வானம்பாடி சிச்சிலிமுதலிய பறவைகளையும் முத்தன மணலுறு மொய்கரை யிடங்களில் தத்துறு மாரலார் தண்கானியாறும் தவஞ்செய்வார்க்குரிய விவை களையும் பிறபொருள்களையு மிகுதியாகக்கொண்டு விளங்குமோ ரரண்ணியத்தில் ஒருதினம் பார்வதி நந்தனரான கணேசப்பெருமான் அனேகம் முனிச்சிறுர்களுடன் கலந்து பற்பலவித பாலலீலைகளைச், செய்துலவி யொரு சமவெளியி லெய்தி முனிவர் சிறுர்களை மல்யுத்தஞ் செய்யுமாறுசெய்து கண்டு மகிழ்ந்து தாமும் சிலருடன் மல்யுத்தம் விளையாட்டாக வியற்றி விளையாட்டிலேயே விருப்பமுடையவராய் எழுந்தருளியிருந்தனர். இங்ஙனம் விளையாடுகலைக் கட்காசுர னென்னு மொரு துட்ட வசுரன் கண்டு தன்னுக்குள் இவன் நமது பார்வைக்குச் சிற்றுருவ னாயினும் பேருருவின ரான எம்மவர்களை எளிதில் வதைக்கின்றான் எம்மவர்கள் எத்தனையோ பேரிந்தச் சிறுவனாலிறந்து போனார்கள் நங்குல வைரியான விவனை யிவ்விடத்துக் கண்ட நாம்

சும்மா விடுத்து செல்லுதல் நங்குடிப் பிறப்பிற் கழகன்றும் இவ னிப்பொழுது இச்சம வெளியில் பார்ப்பனச் சிறு வர்களுடன் விளையாடுதலில் மனஞ்செலுத்தி இருக் கின்றான். இந்தசமயத்தி லிவனை நான் திடீரென வொரு மாயவுருவங்கொண்டு சென்று கொலைபுரிதல் வேண்டும் எனத்தீர்மானித்து மேகமண்டலத்துக்கு மேற்சென் றுயர்ந்த முதுகும் வானுலகங்களைக் கடந்த கழுத்தும் பருத்து நீண்டகால்களும் கூரிய ரோமங்களையுடைய நீண்டவாலு முடைய ஒருபேரொட்டகத்தி னுருவந்தாங்கி வாலைவீசி மரங்களை யொடித்துப் பேரிடிபோ லிரைந்து கோணைக்கழுத்தை நீட்டி நிமிர்த்தி விரைந்தோடிவந்தான் இவன் வருகையைக்கண்ட முனிச்சிறாரனைவரு நடுங்கி யோட்டம் பிடித்தனர் கணேசப் பெருமானவனை அசுர னென்றறிந்து தாமும் மிகவும் பெரிய வொருருவங் கொண்டு அவ்வொட்டகத்தை யுதைத்தும் முட்டியுந் துன்புறுத்தி னர் தலையான் முட்டிய முட்டுக்களும் காலாலுதைத்த வுதைகளுங் கட்கனுக்கு வெட்கத்தையுந் துக்கத்தையு நோவையு முண்டாக்கின உதையும் இடியும் சன்மா னமாகப் பெற்ற துஷ்ட குணமுள்ள வசுரன் வாயின் வழி அனையுடைந்தால் வருயாற்று நீரை யொப்பச்சோரி கக்கிக் கொண்டு பதினெட்டு யோசனை விஸ்தீரணமான பேருருவுடன் கீழ்விழுந்து கடகட வெனப் புரண்டு அனே

கம் மரங்களையும் ஆசிரமங்களையும் பாழ்படுத்தி உயிர் துறந்தனன் இவன் உயிரிழந்தவுடன் கணேசப்பெருமான் மயூரேசராக விளங்கினர் தூரத்திலோடின முனிச்சிறு ரனைவருமங்கெய்திக் கணேசரைப் புகழ்ந்து தாஞ்செய்த புண்ணியத்தாலவருடன் விளையாட்டயர்ந்து சென்றனர்.

இதனை

ஏவம்யுத்தேஸு தேஷ்வேவம் கட்கநாமா மஹாஸுர:
ஆயயாவுஷ்ட்ரு ரூபேணவிசர்லேன நபஸ்ப்ருசா
புச்சாகாதேன மஹதாபதிதாவ் ருக்ஷஸம்சயா:
சூலதந்தோலால ஜிஹவ: பாதேனுமர்த்தயன் திசம்
க்ருத்வாமஹத்தரம் ரூபம்உட்டீயதம் ஜஹானஹ
ஸபின்னஹருதயோ துஷ்டோவமன்ரக்தம் முகாத்பஹு
க்ருத்வாகோரம் மஹாசப்தம் பதிதோதரணிதலே
ஸ்வீயம்தேகஸ மாஸ்தாயதத்யாஜ ஜீவிதம்க்ஷணாத்.

என்பன வாதியாகவருங் கணேச புராண வசனங்களா லுணர்க.

தூமாக்ஷ சங்கார பராக்கிரமம்.

சந்திரனிலங்கு மொலித்தாணு வினிடப் பாலுற்ற
வந்தரிகௌரி நீலியம்பிகை யெமையாள்செல்வி
சந்ததமெடுத்தணைக் குந்தயாநிதிய மரர்தம்மை
நிந்தனைபுரி தூமாக்ஷ நிருதனைவதைத்தாய் போற்றி.

(இ-ள்.) சந்திரகலையானது விளங்குகின்ற சடா மகுடத்தினையுடைய தாணுவாகிய சிவபெருமானதிடப் பாகத் தெழுந்தருளி யிராநின்ற அந்தரியு நீலியுங் கௌரியு மம்பிகையுமாகிய வெம்மை யாண்ட சகலைசுவரியங்களையுமுடைய உமாதேவியார் சதாகாலமு மெடுத்தணைக்கின்ற தயாநிதியே தேவர்களை யிகழுகின்ற தூமாக்ஷனெனிய வசுரனைச் சங்கரித்த பரமனே நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

பிரம புத்திரராகிய காசிபரும் அதிதியுஞ் செய்த தவத்தாலவர்களிடம் புதல்வராக வவதரித்திருந்த மகோற்கட நாமத்தினையுடைய கணேசப் பெருமானைக் காசிராஜனானவன் தன் புதல்வனுடைய விவாகத்தை யுத்தே

சித்து காசிபராற் கொடுக்கப்பெற்ற ஒரு சிறந்த இர தத்திலேற்றித் தானுமதனி லேறிக்கொண்டு காசியை நோக்கிவரும் வழியில் ஒரு பெருங்கானத்தில் தூமாட்ச னென்னும் பெயரினையுடைய அசுர மறையவ னொருவன் தேவர்கள் முதலிய யாவரையு நாசஞ் செய்யத்தக்க திவ் யாஸ்த்திர மொன்றைத் தருவாயாக வெனச் சூரியனை நினைத்து அரியதவஞ் செய்திருந்தனன் (இவன் தவஞ் செய்தானாயினும் இவனுட்கருத்து உலகத்துள்ள வுயிர னைத்தினையும் நாசஞ் செய்ய வேண்டு மென்றேயாம். உயர்ந்த தேவர்க ளிழிவுறவும் இழிந்த வசுரர்கள் உயர் வுறவும் வேண்டு மென்பதவன் சங்கற்பம்) இவன் தவமும் வாழ்நாளும் ஒருங்கு முடிந்தமையா லாயிருக்கலாம் சூரிய னிவனுக்குக் காட்சி யளிக்காமல் தன் மண்டலத்தி லிருந்த வண்ணமே மகத்துவம் வாய்ந்த ஒரு வேலினை இவனிடத் துக் கனுப்பினன். இவ்வேல் கீழ்நோக்கி வருங்காலத்தில் விநாயகப் பெருமா னெழுந்தருளி வந்த இரதமும் அத் துஷ்டாத்துமாவின் தபோவனத்துக்கு வந்தது. காசிராச னுடன் தேரிலிருந்த விநாயகப் பெருமான் வேலின் வரு கையைக் கண்டு விரைந்து வானி லெழுந்து பாய்ந்தவ் வேலினைப் பிடித்துத் தூமாட்சன் மீது விடுத்தனர். அவ் வேல்பட் டவனிறந்தனன். பின்னர் விநாயகப் பெருமான் தேரில்வந்து வீற்றிருந்தனர்.

இதனை

ரௌத்ரகேதோபலிப்ராதா தூம்ராட்சோநாம நாமத:
ஸஹஸ்ரகிரணம் நித்யம் நித்யமாராதயன் முதா.
ப்ரேஷிதம்பானுனாதஸ்மை ரக்ஷஸாயத பஸ்யதே
வ்யோமவ்யாபி யஸ்யதேஜோ ததர் சஸவிநாயக:
சீக்ரமுட்டீய ஜக்ராஹ கருத்மாணிவபன்னகம்
ஊர்த்தவம் கதம்ததை வாசுரவம்க்ருத்வா பயானகம்
தூம்ராக்ஷபதிதம் தத்துஸததைவத்விதாபவத்
கண்டசைலாத்ருமாஸ்தாப்யாம் கண்டாப்யாம் சூர்ணிதாப்ருசம்.

என்பனவாதிய விநாயகபுராண வசனங்களா லுணர்க.



LITHO P.N.N.

ஜகமணைக்வமிகம்.

ஜகமனுத்வம்ஸ பராக்கிரமம்.

அகமதி லெழிலின்மிக்கவா றெழுத்ததனை யெண்ணி
யிகலற விருப்பார்முன்ன மெய்தருட் பரமானந்த
சகமதிலெ வருமீடில் தன்மையரென்னப் போந்த
செகமனு வென்பார்தம்மைச் செயிர்த்தருள் தேவாபோற்றி.

(இ-ள்.) வாய்மையுந் தூய்மையுமாதிய வழகுகளமைந்த சிறந்த உள்ளத்தி லுன்னை யமைத்து சிறந்த சடாட்சரமாகிய மஹா மந்திரத்தினைச் செபித்தலாகிய தொழிலுடன் இந்திரியங் கரணமென்னு மிவைகளின் பகையின்றித் தியான யோக சமாதிகளி லிராநின்ற அன்பர்களெதிரே யெழுந்தருளா நின்ற வருவுருவமான பரமானந்த மூர்த்தியே! உலகத்திலெவரு மெமக்கிணையான வரன்றென வந்த கொடிய வசுரர்களான சகமனு வென்பவர்களைச் சீறி யழித்தருளிய திருவிளையாட்டினையுடைய தேவனே! நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

தூமாட்சனைச் சூரியன் விடுத்த வேலாலழித்த விநாயகப் பெருமானைக் கண்டவவன் மைந்தர்களான ஜகனென்பானும் மனுவென்பானும் நமது தந்தையை நிஷ்காரணமாகக் கொலைசெய்த பார்ப்பனச் சிறுவனை நாம் சும்மாவிட்டு விடக்கூடாது, இப்பொழுதே யிவனை

யழித்து விடவேண்டும் என்று விரைந்தோடி வந்து தேரினைமறித்து, அடா சிறியனே! எங்கள் தந்தையான தூமாட்சனுக்கு நீ ஈடானவனு, உறங்குவோன் கழுத்தைக் கத்தியால் வெட்டினவனை யொப்பச் சூரியனைக் குறித்துத் தியானத்திற் கண்மூடியிருந்த சமயத்தில் வேல் விடுத்துக் கொன்றனையே இதனால் நீ யாதொரு சிறப்பினையும் எய்தாய், இங்ஙனஞ் செய்த நின்னையும் நின்னைக் கொண்டிக் காரியத்தினைச் செய்த இக்காசி ராசனையும் இதோ கொல்லுகின்றோ மென்ச் சீறி மேல் விழுந்து பொர வந்தனர். இவர்க ளிங்ஙனஞ் சீறி வருதலைக்கண்ட விநாயகப் பெருமான் சீற்றமும் அதட்டலுமுடன் அவர்களைப் பார்த்து ஒரு பெருமூச்சு விடுத்தனர். அம்மூச்சினாலிருவர்களும் பெருங்காற்றி லகப்பட்ட இலவம் பஞ்சினைப் போல நெடுந்தூரம் பறந்து விழுந்துயிர் துறந்தனர்.

இதனை

ததஸ்யஸுதௌக்யாதௌஜகனேமனுரேவச
ப்ராஸார்யவதனம்பாலோகோரம் சப்தமதாகரோத்
சகம்பேசத்ரிபுவனம்தௌசநிச்வாஸயோகத:
ஸம்ப்ராப்தௌமேகபடலம் வாத்யைவயதாத்ருணம்
முகூர்த்தத்விதயேஜாதெவ்யகஸ்தௌதௌதௌநிபேதது

என்பனவாதிய் விநாயக புராணவசனங்களா லுணர்க.

29

பஞ்ச சதாசுர சங்கார பராக்கிரமம்.

கஞ்சன் முதலியதேவர் கரங்கூப்பிப் பணிதற்குச்
செஞ்சரண விணைகாட்டுந் தேசிகமாமுகத் தெந்தாய்
வஞ்சனையிற் கோறுமென வந்தேற்ற பொல்லாத
பஞ்சசதவசுரருயிர் பாற்று மருட்பரபோற்றி.

(இ-ள்.) பிரமன் முதலிய தேவர்கள் தங்கைகளைக் குவித்து வணங்கும் வண்ணம் அவர்கட்குத் தமதழகிய செவ்விய சரணயுகளங்களைத் தரிசனமாக வளிக்கின்ற யானை முகத்தினையுடைய எந்தையே! வஞ்சனையினாற் கொலை செய்வோமென வந்தெதிர்த்த பொல்லாங்கினை யுடைய ஐந்நூறசுரர்களின் உயிரினை யொழித்த அருளினை யுடைய பரமனே! நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

நராந்தகனென்னும் கொடியவசுரனு லேவப்பெற்ற கொடிய ஐந்நூறசுரர்கள் ஒன்றுச்சேர்ந்து காசிராசனுடன் இரதத்திற் செல்லாநின்ற மகோற்கடநாம விநாயகப்பெருமானைக் கண்டு, இவன் தான் நமது குலகாலன் இவனைக் கொலைசெய்தால் அசுரர்களாகிய நம்மினத்தவர்களுக்கு யாதொரு துன்பமு முண்டாகாது, இவன் காசிரா

சுனுடன் காசிநகருட்சென்றால் அனேகஞ் சேனை முதலிய வைகளையுடையோனாகி வன்மையின் மிகுந்து நிற்பான், ஆதலின் இவ்வனத்திலேயே இவனை வதைபுரிதல் வேண்டும் நாமனைவருமாகச் சென்று இவனைப் பிடித்து வதைத்துக் கொல்லுவோமெனப் பேரிரைச்சலுடன் திடீரெனவந்து சூழ்ந்துக்கொண்டு யுத்தஞ்செய்யத் தொடங்கினார்கள். இவர்களின் துஷ்டச்செயலைக் கண்டவனைவரும் நடுங்கினார்கள். அப்பொழுது விநாயகப்பெருமான் சீற்றத்துடன் ஊழிகாலத்துப் பேரிடியு நாணத்தக்க ஒருவீர கர்ச்சனை செய்தனர். அப்பேரொலியைக் கேட்ட வசுரர்கள் கைகால்முதலிய வொடிந்து நாற்றிசைகளிலும் சிதறி விழுந்து கண் காதாதிய விழுந்து உயிர்துறந்தனர்.

இதனை

ததோவிநாயகச் சக்ரேபீம சப்தம்பயா வஹம்
ததோநிசாசர: வெதுத்ஸ்த்யக்த்வாப்ராணும்ஸ்துகேசன
கேசித்பலாபாதா: கேசித்பக்னபாதா: ப்ரபேதிரே
கேஷாஞ்சித்மஸ்தகாபின்னுகேசித்ஜீர்ணேதராகலா.

என்பனவாதிய விநாயகபுராண வசனங்களாலுணர்க.

தந்தூரவிகண்ட சம்ஹாரம்.

தந்துர விகண்டாசுர சங்கார பராக்கிரமம்.

சிந்துர மணிந்தநெற்றிச் சேயிழை மடவார்வாழ்த்த
வந்தருள் பவனிதன்னில் வயம்பெறக் கருதிமுந்நூ
லந்தணருருவந் தாங்கி யடைந்தவக் கொடியநீசத்
தந்துர விகண்டர்ச்செற்ற தலைவநின் சரணம்போற்றி.

(இ-ள்) சிந்தூரத்திலதம் மிட்டநெற்றியினையும் செவ்விய கலன்களணிந்த வுடலினையுமுடைய பெண்கள் மங்கல வாழ்த்துப் பாடாநிற்பக் காசிநகரத்தில் வந்தருளிய பவனி தன்னில் விநாயகப் பெருமானைக் கொலைபுரிந்து வெற்றி பெறவேண்டு மென்று நினைத்து முப்புரி நூலணிந்த பார்ப்பன வேடத்துடன் வந்த தந்துர விகண்ட ரென்னுங் கொடிய வசுரர்களை அழித்தருளிய தலைவனே! நினது திருவடிகட்கு நமஸ்காரம் எ-று.

இதன் விவரம்.

விநாயகப்பெருமான் மகோற்கட மூர்த்தியாகிக் காசி நகரத்தில் இரதாரூடராகி உலாவருங்காலையில், தந்துர விகண்டரென்னும் இரண்டசுரர்கள் பூமாலைகளாலும், பொன் மாலைகளாலும், மகர தோரணங்களாலும், மணி மாலைகளா லும், கண்ணாடி, சிவிறி, சாமரை, சாந்தாற்றி யிணைக்கயல்

பூரண கும்பாதிகளாலும் வாழை, கரும்பு, கமுகு முதலிய வைகளாலும் அலங்கரிக்கப்பட்ட வீதிகளில் மேலுலகமாதர் களுங் கண்டுகளிகூரு மாறு நாட்டிய மாதர்கள் நாட்டியம் புரியவும் ஏழிசைவழி யெழு மினியராகங்களை நாகசுரமுத லிய துளைக்கருவிகளில் அத்தொழில் வல்லோரற்புதமாக வாசியாநிற்பவும் பேரீ படக துந்துபி முதலிய முழங்கவும் மாணிக்க மரகத கோமேதக புஷ்பராக இந்திர நீலாதி மணி களிட்டிழைத்த கவாட்சிகளையுடைய மேனிலைகளினின்று சுமங்கிலிகள் பொரியும் பூவு மலருமிறைத்து மங்களம் லாலி முதலியபாடி வாழ்த்தவும் காசிராசனும் அவனது பரிவாரமும் ஆயுதபாணிகளாய் ஆபரணாலங்கிருதராய் அருகில் உசிதமான வாகனங்களில் வரவுங்கண்டு, பொறா மைகொண்டு அசுர வைரியான இவனை எவ்வா றழிப்ப தென்னப் பலவாறுலோசித்து வேறெவ்விதத்தாலும் இவனை வெல்லமுடியாது இவன் பிராமணவேஷத்துட னிருத்த லால் நாமும் பிராமண வேஷத்துடன் சென்று எதிரேற்ப துபோல நடித்து இறுகக்கட்டிக் கொன்றுவிடலாம் என்று தீர்மானித்துக் காசிராஜாவின் புரோஹித குமாரர்களைப் போல உருமாறி எதிரேவந்தனர். இவர்களின் வருகையை உணர்ந்த விநாயகப்பெருமான் விரைவாகத்தேரி னின்றும் இறங்கி அவர்களை யுபசரிப்பான் செல்வார்போல அவ்விரு வரினிடையே சென்று அவர்களிருவரையும் இருகரங்களா

லும் இழுத்துப்பிடித்துத் தமது திருமேனியில் வைத்து நன்றாய்க் கசக்கி அவர்களுயிரைப் போக்கினர் அவ்விருவரும் கோரவுருவத்துடன் விழுந்திறந்தனர். இவர்களை யசுரர்க ளௌனவறிந்த வனைவரு மளவற்ற வானந்த கடலிலாழ்ந்து விநாயகப் பெருமானை அடிபணிந்து துதித்தனர்.

இதனை.

தத்தோவிநாயகோபச்யபுரமத்யெமஹாஸுரௌ
விகண்டந்துந்துரம் ரந்தும்ஸமாஹூய தஸாதரம்
தௌதைத்யௌ துஷ்டமனஸௌபாலகைஸமுபாகதௌ
ஆலிங்கிதுங் ய்ருதோத்யோகேனதெனக்ஞாதௌ துராசயௌ
ஆலிங்கய சூர்ணயாமாஸ புஷ்பம் ஹஸ்தகதம்யதா
த்யக்தௌ பூமிகதௌ தௌதூரேசதுர்தசயோசனௌ.

என்பனவாதிய கணேசபுராண வசனங்களாலறிக.

பதங்க விதுல சங்கார பராக்கிரமம்.

மதங்கொளு முரற்கால்யானை மாமனையெதிர்ந்தாலென்னப்
பதங்கனும் விதுலனென்னும் பதகனு மெய்திக்காற்ரு
யிதங்கெடப் புரிந்துவாட்ட விடையுறு மரவிற்போக்கிக்
கதங்கொடு வலித்துக்கொன்ற கருணையங்கடலே போற்றி.

(இ-ள்.) உரலனைய காலினையும் மதத்தினையு முடைய யானையானது மிருகாதிபனுன சிங்கத்தை யெதிர்த்தாற் போல பதங்கனென்றும் விதுலனென்றும் பெயருள்ள விழிஞர்களான விரண்டு கொடிய வசுரர்களும் வராநின்று சண்ட மாருதமாகி நின்று வீசிக் காசிநகரின ருக்குத் துன்பமுண்டாமாறு கொடுமை செய்தலும் அதனைக்கண்டு தம திடையி லணிந்திருந்த வாதிசேடனுகிய வரவினையெடுத்து விடுத்து அக்காற்றின் வலிமையையடக்கிச் சுயவுருவுடன் நின்ற வவ்விருவரையுஞ் சீற்றத்துடன் ஒன்ருய்ப் பிடித்து மோதி யழித்த கருணைக்கடலான விநாயகப்பெருமானே! தேவரீர் திருவடிகட்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

எம்பெருமானுன மகோற்கடநாதன் காசிநகர்வாசிக ளும் அந்நகரமன்னனுங் கண்டு மகிழுமாறு திருவுலா வருங்

காலத்தி லவரது வருகையின் வைபவத்தினைக் கண்டு பொறாமைகொண்டு பதங்கன் விதுலனென்னும் பெயருள்ள விரண்டு கொடிய வசுரர்கள் இவனதுலாவுக் கிவ்வளவு கெம்பீரத்தைக் கொடுப்பது மாடமாளிகை கூடகோபுரங் களையுடைய இக்காசிப்பட்டண வீதியன்றோ விதனை நாமழித்து விடுவோமெனத் துராலோசனைசெய்து இருவ ரும் பிரசண்ட வாயுவினுருவாகி இரைந்து நாலுபக்கங் களிலும் மோதிவீசினார்கள் இம்மாயக் காற்றினாலுண்டான புழுதியால் நேத்திரானந்தமாகச் சகதீசனான விநாயகப் பெருமானைத் தரிசித்து நின்றவர்கள் கண்களை மூடவேண்டி யவர்களானார்கள். அடிக்குங் காற்றினாலேழடுக்கு முதலிய அடுக்குகளாகவுள்ள கட்டிடங்களெல்லாம் அடிபெயர்ந்து விழுந்து அனேகருயிரை மாய்த்தன. ஒருகணநேரத்து ளிஃதென்ன வூழிகாலமோ வெனயாவரும் பயந்து நடுங் கும்வண்ணம் செவ்விய வந்நகரினை இவர்களழித் தொழித் தனர். இக்கெட்ட சம்பவத்தினைக் கண்ட காசிராசன் முத லியவர்கள் இஃதென்னை யெனக் கவலையுற்றனர். இச்செ யலினைக் கண்ட விநாயகப் பெருமான் தமதிடையி லணிந் திருந்த வுதரபந்தனமான வாதிசேடனைக் கட்டவிழ்த் து நீ சென்றிவ் வாயுவினை யுண்டொழிக்கக் கடவை யென்று விடுத்தனர். கணேசப் பெருமானுடைய கட்ட ளையால் ஆதிசேடன் தனது பேருடலை விரித்து வாய்

களைப் பிளந்து காற்றனைத்தினையும் புசித்து ஒழித் தனன். வாயுவொடுங்கியது கண்டு வலியிழந்து அசுரர் இருவரும் பூமியினின்றனர். இவர்களின் நிலைமையுணர்ந்த கணேசப்பெருமான் திருத்தேரி னின்றுமிறங்கி ஒருதிருக் கரத்தினு லவ்விருவரையும் பிடித்துக் கறகறவென்று சுழற் றிப் பூமியிலறைந்து கொன்று தூரத்தில் வீசியெறிந்தனர். இவ்வற்புதச் செயலைக்கண்ட காசிநகரினர் வியப்பெய்தி னர். உடனேபெருயா னழிந்து போனவக் காசியைத் திருக் கண்களாலுற்று நோக்கினர். பட்டினம் முன்னரினுமதிக சிறப்புடையதும் புதியதுமாகி யமைந்தது. இறந்தவர்களு முயிர்பெற்று சுகசீவிகளாகத் திருவுலாத்தரிசித்தனர். இத னைக்கண்ட காசிராசன் அச்சமு மானந்தமு முடையவனுகி விநாயகப்பெருமான் திருவடிகளை வணங்கினுன். அதுகண்ட வ்னைவரும் அன்புடனவர் திருவடிகளை வணங்கினுர்கள்.

இதனை

தேதோன்யாவஸூரௌத்ர்வ்ஷடௌஹர்துமேனம்ஸமீயது
பதங்காவிதுலௌநாம்னுவாத்யாரூபௌமஹாபலௌ
ததோவ்யாருலிதோலோகோரஜஸாசசாதிதோகில:
ப்ராஸாதாவ்ருக்ஷஸங்காச்சபதிதாவஸூதாதலெ
ததோதிபலிநௌஜ்ஞாத்வா ததாரசிகயோருபௌ
ஏகேனமுஷ்டினுதேவோப்ராமயித் வாபலாச்சிரம்
தத்யாஜதராப் ருஷ்டேவ்ய ஸ்ஞெதௌதத்ருசேஜனர்:

என்பனவாதிய கணேச புராணவசனங்களா லுணர்க.

நராந்தக சங்கார பராக்கிரமம்.

எல்லா வுலகுந் தலைவணங்க விருநீர் வைப்பி னிடையிருந்து
பொல்லா வசுரர் குழாம்புகழப் புதரை வெருட்டித் தீங்கனைத்துங்
கல்லா வமர்க்குத் துணைவருடன் கலந்து புகுந்து துமிலஞ்செய்
மல்லார் புயத்து நராந்தகனை மடித்த பெருமான் கழல்போற்றி.

(இ-ள்.) உலகனைத்துந் தலைசாய்த்து வணங்கக் கடல் புடையுடுத்த நெடுநிலவரைப்பில் அரணமைத்து வாசஞ் செய்து பொல்லாங்கினையுடைய வசுரர்குழாத்தினர் புகழா நிற்பத் தேவரை வெருட்டித் தீங்கனைத்துங் கற்றுத் தம்மொடு போர்புரிவான் மந்திரியர் முதலிய துணைவருடனெய்தி ஆரவாரஞ்செய்த மல்லிற்பழகிய புயங்களையுடைய நாராந்தகனென்பவனை வதைத்தருளிய விநாயகப் பெருமானது திருவடிகட்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

சகலாகமபண்டிதனுஞ் சிவபத்தனும் அந்தணகுலோத்பவனும் யஜனயாஜனாதிகளிற் சிறந்தவனும் ரௌத்ரகேதுவெனு நாம முள்ளவனுமான் ஒருவன் அங்க தேசத்தினுள்ள வொருநகரத்திலிருந்தான். "அங்கதேசீயநகரே ரௌத்ரகேதூர பூத்விஜ: ஸர்வசாஸ்த்ரார்த்த தத்வக்ஞோ

வேதவேதாந்த பாராக" என்று பிரமனுந் துதிபுரியு மாறிருந் தவிவன் மனைவி சாரதா வென்னும் இயற்பெயருடையவள். இவள் அப்ஸரஸாக்களிலுஞ் சிறந்த தேககாந்தி யாதியுடையவள். இவள் முகத்துக் கிணையாக வேண்டு மென்றே நிறைந்துங் குறைந்தும் சந்திரன் வானிலுலாவுகின்றனென்றும், இவள் கண்களுக்கிணையாக வேண்டுமென்றுங் கருதி முறையே யுற்பலமுந் தாமரையு மோடைகளி லொற்றைத் தாளினின்று தவஞ்செய்கின்றன வென்றும், பஞ்சலக்ஷண பண்டிதர்கள் வருணனை புரியுமாறு சிறந்தவழகினைப்படைத்தவள். இவளணிந்துள்ள அணிகளினொளியால் பாதலலோகத்தையும் பிரகாசமுடையதாகச் செய்பவள். சரற்கால சந்திரபிம்பம் போலும் ஒளிமுகம் வாய்ந்த கிளிமொழியாளான விவளுடன் ரௌத்ரகேதுவாழ்ந் துவப்புறுங் கால்த்திற் கல்வி கேள்விகளிற் சாரதா தேவியையான இச்சாரதா கருப்பவதியாகி ஒரு நன்னாளி லிரண்டாண்மக்களைப் பெற்றனள்.

உபயமைந்தர்களை யொரேகாலத்தி லுடையவனான ரௌத்ரகேது மனமகிழ்வுடன் ஜாதகன்மமுதலிய சடங்குகளை நிறைவேற்றி யம்மைந்தர்க்கு முறையே தேவாந்தகன் நராந்தகன் என நாமகரணஞ் செய்து அன்புடன் வளர்த்துவந்தான். ஒரு தினம் ரௌத்ரகேதுவின் மாளிகையை

யடைந்த நாரதமுனிவர் இவ்விரட்டையரை யுற்றுப்பார்த்து அவர்களை யருகிலழைத்து அன்புடனவ்விருவருக்கும் "பஞ்சாட்சரீம்மஹா வித்யானுபயோரு பதிஷ்டவான்", என்றபடி ஸ்ரீபஞ்சாட்சரீமந்திரோபதேசஞ்செய்து அதன் அநுட்டான முறையையுங்கற்பித்துச் சென்றனர். இருவரும் பிதாமாதாக்கள் ஆச்சரிய முறத்தக்க நிலையிற் தீர்க்கமுந் திருஷ்டமும் பொருந்திய தேகிகளாகவளர்ந்து பிதாவினிடம் விடைபெற்று ஒருமஹாரணியத்துட் சென்றுபஞ்சாட்சரீமந்திர ஜெபத்துடன் காற்கட்டை விரலைக்கிழூன்றி மேனோக்கி நின்று சிவபெருமானைக் குறித்தருந்தவஞ் செய்தனர். ஆகாரநித்திரைகளை விடுத்து ஆயிரவருடகாலம் அருந்தவஞ்செய்தனர். இங்ஙனஞ் செய்யுநாளில் சிவபெருமான்

ஏவம் தத்தபதுஷ்டஃ பஞ்சவக்த்ரஸ்த்ரிலோசனஃ
தசபாஹுர்பர்ணுங்கோவ் யாக்ரேபசர்மசூலவான்
பிப்ரத்சிரஸிகங்காம்சண்டமரும் தட்சிணேகரே.
பணீஹாரஸமாயுக் தோருண்ட மாலலஸத்களஃ
வ்ருஷாரூடோ நீலகண்டஃ ப்ரபயாபாஸிதாம்பரஃ
நாணுலங்கார ஸம்யுக்தஃ ச்வேதாங்கச் சந்திரசேகரஃ

என்றபடி ஐந்து திருமுகங்களையும், முக்கண்களையும், பத்துத்திருக்கரங்களையும், உமாதேவியையுடைய விடப்புறத்தினையும், புலி யானையிவற்றின் தோல்களான் மூடப்பெற்ற

திருமேனியினையும், வலக்கரத்திற் சூலத்தினையும், இடக்கரத்தில் அக்கினியையும் சிரசிற் கங்காதேவியையும் மார்பில் சர்ப்ப ஹாரத்தினையும், கண்டத்திற் கபால மாலையையும் உடையவராகி நீலகண்டராய் இடபாரூடராய் திசைகளிலெல்லாந் திருமேனிப்பிரகாசம் பொருந்த நானாவிதமான நவலங்காரங்களை யுடையவராகி வெள்ளிய இளம்பிறை யணிந்தவராய் அவர்களெதிரே காட்சியளித்து நின்றனர்.

இத்தகைய வியல்புடனெழுந்தருளிய சிவபெருமானை கண்டவிவர்கள் மிகுந்த அன்புடன் வணங்கி எம்பெருமானே! அடியேங்கள் தேவரீர் தரிசனையால் குலத்திலும் நலத்திலுந் தூய்மையுற்றேம் இனி யடியோங்கட்கென்னை குறையுளதென வாடியும் பாடியும் இறைவனைத் துதித்தனர் இவர்கள் தவத்துக்கிரங்கி இவர்களெதிரே யெழுந்தருளிய சிவபெருமான் கருணைமிகுதியா லவர்களைப்பார்த்து நீங்கள் செய்ததவத்தால் மகிழ்ச்சியுற்றோம், உங்களுக்கு விருப்பமான வரங்களைக் கேளுங்கள் தருகின்றோம் என்றருளிச்செய்தனர். அத்திரு மொழிகளைக்கேட்ட விருவரும் எம்பெருமானே! அடியோங்களுக்கு காலையாலும், மாலையாலும், இரவாலும், பகலாலும் தேவராலும் விலங்காலும் ஊர்வனவாலும், பரந்துகளாலும், மரணநேராத வண்ணமும், மூவுலகமும் எங்களாணையிலடங்கி நடக்கவும், சகல

ஐசுவரியங்களும் எங்களதாகவும் திருவருள்புரிதல் வேண்டுமென்று சிவபெருமானுடைய பொன்னடிகளை வணங்கினார்கள். சிவபெருமானும் மிக்க மகிழ்வுடன் அவர்கள் விரும்பிய அனைத்து வரங்களையும் "யத்யத்வாம் வாஞ்சிதம் ஸர்வம்தத்ததான ததன்யதா", என்றளித்து மூவுலகங்களினு நீங்கள் பயமற்றவர்களாய் உலாவலாமென அருளிச்செய்து அந்தர்த்தானமாயினர்.

இறைவனளித்த வரத்தினைப் பெற்ற இருவரும் மிகுந்த களிப்புடன் தந்நகரமடைந்து பிதாமாதாக்களை வணங்கித் தவஞ்செய்த திறத்தினையும் சிவபெருமானை மூந்தருளி வரமளித்ததனையும் உரைத்து அன்னை தந்தையருக்கு மிக்க மகிழ்வினையுண்டாக்கிப் பிராமணர்களுக்குத் தானம், போசனஞ் சன்மானமுதலிய நடத்தி மகிழ்வித்து ஒரு நன்னாளில் இருவர்களுமாக ஆலோசித்துத் தேவாந்தகன் சொர்க்க வுலகத்தையும், நராந்தகன் மண்ணுலகத்தையும், அடிப்படுத்தி ஆள்வதாகத் தீர்மானஞ்செய்து கொண்டு தேவர் மனிதர் முதலிய வனைவரையும் வென்று தேவாந்தகன் சுவர்க்கத்திலும், நராந்தகன் பூமியிலும் இருந்து அரசுபுரிந்து வந்தார்கள். இங்ஙனஞ் சுவர்க்கத்திலும் பூமியிலும் இருந்த இவர்களிடம் அனேகங்கோடி யசுரர்கள் வந்து தங்கித் தேவர் முனிவர் முதலியவர்கட்கு இடுக்கண் புரிந்துவந்தனர்.

இவர்களில் நராந்தகன் அங்கம் வங்கமாதிய தேச வரசர்களை யடிபணியச்செய்து அசுரர்கூட்டத்துடன் ரௌத்ரமென்னு நகரத்தில் வாழுங்காலத்தில் அசுரர்களின் சேர்க்கை மிகுதியாற் றீங்குபுரிதலையன்றி நன்மை புரிதலையில்லாதவனாகவிருந்தான். இதனாலிவன் எப்பொழு திறப்பான் இவ்வுலகமெப்பொழுது சுகமுறுமென நன்மக்களெல்லாம் நினைவுகொண்டிருந்தனர். இவனு மிவன் சகோதரனுஞ் செய்யுங்கொடுமையாற் றேவர்கள் வருத்த முறுதலை யுணர்ந்த தேவரனைவருக்குந் தாயான அதிதி யென்பவள் அசுரரையழிக்கத்தக்க ஒரு மகவினைப்பெறுவான் தன்னாயகனான காசிபனுபதேசித்தபடி விநாயகப் பெருமானைப் பூசிக்க வவர் அவளெதிரேதோன்றி அநேக வரங்களையளித்து அப்பொழுதே ஒரு சிறுகுழந்தையாகி அவளெதிரி லவள் வேண்டு கோளாற் கிடந்து மகோற்கடனென நாமமெய்திக் காசிபனாலும் அதிதியாலும் போஷிக்கப்பெற்று வருங்காலத்தில் தங்குலவைரியாக அதிதிக்கொருமகன் பிறந்துள்ளா னெனக்கேட்ட நராந்தகன் பலவசுரர்களையும் அசுரிகளையும் ஏவித் தந்திரமாகக் கொல்லப்பார்த்தும் வந்தவர்களையெல்லாம் விநாயகப் பெருமான் பலவிதவுருவங்களைத்தாங்கிக் கொன்று நாசஞ்செய்தருளி வருங்காலத்திற் காசிராசாவின் வேண்டுகோளால் அவன்மாளிகையில் விநாயகப்பெருமான் காசியர்கட்டளை

யாலெழுந்தருளி இருந்தலையறிந்து பலவகை யசுரர்களை யனுப்ப வவர்களும் பலமாயவுருவங்களுடன் வராநிற்ப வவர்களை யெல்லாம் பெருமானொளிதி லழித்தருளி இறுதியில் வந்து போர்புரிந்த சூலைகலர்களை மாத்திரம் அவர்கள் வேண்டு கோளாற் சங்கரியாது நிறுத்தி அசுரர்களே! உங்கள் தலைவனுகிய நராந்தகனுட் பியவர்களு ளடிபணிந்து நும் மிருவரையன்றி மற்றையனைவரும் இறந்தே யொழிந்தார்கள். நீங்களுங்க ளரசனிடஞ்சென்று நீதி வழியே நடக்கச் சொல்லுங்கள் நடவா விட்டால் நாமவனை விரைவிற் சங்கரிப்போ மென்று கூறியதாகக் கூறுங்கள் எம்முடனெதிர்த்து நின்று போர்புரிய வாற்றலுடையவனுல் தன்படைகளுடனே வந்து போர்புரியச்சொல்லுங்கள் என்று பல கூறியனுப்புதலும் அன்னோர் சென்றவ்வாறே கூறக்கேட்ட நராந்தகன் அதிக கோபமுடையவனுகித் தம்மந்திரியர் முதலியவர்களையழைத்து எமது சைநியங்களைப் போர்க்கோலங் கொள்ளச் சொல்லுங்கள் எம்மிரதத்தினைத் தருவியுங்களென்று இடி இடித்தாற் போலவிரைந்து கோபக்குறியுட னுரைத்ததனைக் கேட்ட மந்திரியர் வள்ளுவனைக் கொண்டு பறைசாற்றுவித்துச் சேனைகளனைத்தினையும் போர்க்கோலத்துடன் வரச்செய்ததுடன் தாமும் போர்க்கோலங் கொண்டு அரசனை நராந்தகனைதிரிலுற்றடி பணிந்தனர். நராந்தகன் குளித்தும்

புசித்துடுத்துக் சனித்துப் போர்க்கோலங் கொண்டு அலங்கரித்து நிறுத்தப்பட்டிருந்த தேரின்மீது தேவராசனை யொப்பவேறிக் காசி நகரின்வெளிப் புறத்தினையடைந்து அசுரசைனியங்களாற் காசியை வளைத்து அருகிலுள்ள சிற்றூர்களை யெல்லாங் கொள்ளையடிப்பித்துந் தீயிட்டுக் கொளுத்தியு முபத்திரவஞ் செய்வித்தனன். இச்செயலினையுணர்ந்த தூதர்கள் காசிராசனை வணங்கி நராந்தகன் செயலினையுரைத்தனர். தூதரால் நராந்தகன் வருகையையுணர்ந்த காசிராசன் மந்திரிமார்களுடன் ஆலோசனைசெய்து போர்க்கோலங் கொண்டு விரைந்து தன்னகரின் கீழ்ப்புறத்தையுடைந்து மந்திரியர் முதலியோருக்குச் சன்மானமளித்துத் தனது படைகளைக் கொண்டசுரன் படையினைதுரத்தக் கூறினான்.

அரசன் மொழிகளைக்கேட்ட சேனாவீரர்கள் அசுரரோடெதிர்த்து விற்படைகளாலும் வேற்படைகளாலும் வாட்படைகளாலும் போர்புரிந்தனர். மனிதர் போர்புரிதலைக்கண்டவசுரர் மிகுந்த கோபங்கொண்டு தாமும் போர் புரிந்தனர் இருபுறத்திலும் பலர்மாண்டனர் இச்செயலினைக்கண்ட காசிராசனு மவனமைச்சரும் விற்களை வளைத்துச் சிறந்தவம்புகளை விடுத்துப்போர்புரிதலும் அசுர சேனைகள் பயந்து நராந்தகனைநோக்கி யோடின.

அதுகண்ட நராந்தகன் கடுங்கோபங் கொண்டு நடந்து காசிராசனுடன் போர்புரிந்து அவனையும் அவன் மைந்தர்களையும் அமைச்சர்களையும் பிடித்துச்சிறைப் படுத்தித் தனது மந்திரிகளைப் பார்த்திவ்வாறு கூறினன். "காசிராஜேஜிதே பாலேஜிதஏவ நஸம்சய" அதாவது நாம்காசிராசனை வென்றுவிட்டமையினினிப் பார்ப்பனச் சிறுவனையும் வென்றவர்களாகின்றோம் இதற்குச் சந்தேகமேயில்லையென்று கூறி ஜயபேரிகை யறைவித்து மகிழ்ந்தனன்.

வெற்றிபெற்ற விசேஷத்தினல் நன்றாயலங்கரித்துக் கொள்ளப்பட்டவனாய் உன்னதமான தேரிலேறிக்கொண்டு மந்திரி பிரதானியர் புடைசூழக் காசிராசனை முன்னடத்துவித்து வந்திகளென்னு மங்கலபாடகர் காசிராசனை யிகழ்ந்து தன்னைப்புகழ்ந்துடன் வராநிற்பக் காசிப் பட்டின்த்தினுட்பிரவேசித்தனன். இவன் வருதலாலுண்டான கோலாகலத் தொனியினல் காசிநகர்வாசிக ளனைவரும் மிகவும் அச்சமும் பயமுங் கொண்டவர்களாகி இருந்தார்கள் சிலராலிச் சம்பவத்தினை யுணர்ந்த காசிராசன் மனைவியான அம்பையென்பாள் விரைந்தோடி மகோற்கடரான விநாயகப்பெருமா னெழுந்தருளி இருக்கும் இடத்தையடைந்து மிகுந்த்துக்கத்துடன் சிங்கம்போலு மென்கணவனை நரிபோலு மிந்நராந்தகன் எவ்வாறு சிறையிட்டான்

தேவனே! வன்மையும் அனுக்கிரகமும் இந்தசமயத்தி லெங்களிடங் காட்டாவிடி லென்றுவேம் யாங்களெனக் கதறிப் பதறித் தோகையை யுதறிவிழு மயில்போல் வாளாய்க் குழலும் யாழும் குயிலு நாணத்தக்க தனது குரலோசையைக் காட்டிக் கரங்களால் நிலத்தின் மோதி யழுதழுது மூர்ச்சித்ததைக் கண்ட விநாயகப் பெருமான் அஞ்சற்க வெனவர மளித்து ஒரு ஹட்டஹாஸஞ் செய் தனர். இவரட்டகாசத்தாற் சுவர்க்க மத்திய பாதாள மாகிய மூன்று லகங்களு நடுங்கின, வானிலுலவும் பறவை களெல்லாம் மயங்கி விழுந்தன பூலோகினரிலு மநேகர் மூர்ச்சிதராயினர் ஹட்ட ஹாஸஞ்செய்த பின்னர் குரோத வியாகுல லோசனராய் மஹாத்தானயுத்த நடக்க வேண்டும். எங்கே என்றனருடனே சித்திதேவியார் அநேக மாயிரம் போர்க் கருவிகளையும் அநேகமாயிரங் கரங் களையுடைய வீரர்களையு நினைவினாலுண்டாக்கினர் இன் னோர் நாசித்துவாரங்களில் திக்கஜங்கள் நுழையுமாறு வின்னவிடஞ் சென்றன வென்றறிய முடியாதென்றும் கலப்பைபோலுங் கோரைப் பற்களை யுடையாரெனவும் பாம்பினைப்போலு நீண்டு தொங்கு நாவின ரெனவும் இவர்கள் மூச்சுவிடிற் சூரிய சந்திரர்கள் நிலைதவறிக் கீழே விழுவரெனவும் இவர்களின் சடைகள் மண் ணுலகனைத்தினையு நன்குதுடைக்கு மெனவும் ஆயிரம்

யோசனை நீளமானகைகளையும் இரண்டாயிரம் யோசனை யுயரமான கால்களையும் உடையவரெனவும் கூறத்தக்க வியல்பினையுடைய விப்பூதராயிரவருக்கு நாயகனுவான் குரூபனுன ஒரு காலபுருஷன். இவன் விநாயகப் பெருமானது சமீபத்தையடைந்து பிரபுவே! எனக்கென்ன வேலையைக் கட்டளையிடுகின்றனை, பிரபுவே! யான் மிகுந்த பசியுடையவனுக விருக்கின்றேன் திருப்திகரமான போசனந் தருதல்வேண்டும் என்றிவ்வாறு கூறினுன். இவ்வாறு கூறிய மஹா புருஷனைப்பார்த்து விநாயகப்பெருமான் ஓ பூதனே! நீ நின்பசியடங்குமாறு நராந்தகனுற் போஷிக்கப்படுகின்ற அவன் சைநியங்களைத்தின்று பசியாறுவாயாக அவன்றனை என்னிடங் கொண்டுவந்து காட்டுவாயாக அவன் சேனைகளை யுண்பதனுலும் பசியாருவிடினுனக்குப் பின்னரும் வேண்டியவுணவினைத் தருதும் என்றருளிச் செய்தலும் அவரடிகளை வணங்கி விடைபெற்ற வப்பூதவீரன் தனது பரிவாரங்களுடன் கர்ச்சனை செய்தானுய் நராந்தகனை நாடிச்சென்று தனதும் பிற பூதங்களினதும் பேரொலியைக் கேட்டு நடுங்குகின்றவரும் திசா திசைகளி லோடுகின்றோருமான நராந்தகன் சேனைகளைப்பிடித்து வாயிலிட்டு விழுங்கினன்: அன்னோரிவன் வயிற்றுட்புகுந் திருட்டிற் றடுமாறினர். இங்ஙனந் தன் சேனைகளை விழுங்கப்பட்டதனைக்கண்ட நராந்த

கனுவன் தன்மனதுள் இவன் அனைத்துயிர்களையு மழிக்கின்ற அந்தகனுடைய மற்றோருருவமேயன்றி வேறன்றாம் நானிவனெதிரே சென்றென்னபயன் என்னாலாவதென்னை? இவனது வன்மையைத்தான் கண்டேனே அகத்தியன் கடலைக் குடித்தாங்கிவன் என் சேனைகளனைத்தையும் உண்டு தொலைத்தானே இவனதட்ட ஹாஸத்தாலேயே பலரிறந்தனர் காலுதையினாலேயே சில ரொழிந்தனர் மூச்சுக்காற்றினால் பலரிறந்தனர் சிலர் பயத்தினாலேயே இறந்தனர் இவனோடுபோர் புரிதற்கெவனை யேனுமனுப்பலா மென்றாலென்னுடன் வந்தாரனைவரும் இவனாலழிக்கப்பட்டனர். எஞ்சிநின்ற யானைகளையுங் குதிரைகளையும் தேர்களையும் இவனே அழித்தும் விழுங்கியுமொழித்தனன் யானொருவனே இங்கிருக்கின்றேன். இனி இவ்வுடலத்தை யம்பினாற் தொளைப்பதையன்றி வேறொன்றுமில்லை யெனத் தரையையே தேராகக்கொண்டு முட்டிநிலையில் நின்று வில்லைவளைத்து நாணியேறிட்டுத் தன்னிடமிருந்த அம்புகளனைத்தையும் அப்பூதன்மீது விடுத்துக் கையுமோய்ந்தனன் அவனோ அம்புகள் பட்டு ஒழுகாநின்ற சோரியினால் முன்னிலுமதிக பயங்கரமானவனாகக் காணப்படுகின்றானே யன்றி யாதொருதுன்பமு மில்லாதவனாக விருக்கின்றான். இவ்வாறிருக்கும் இவனெதிரே யினியிருப்பதிற் பயனில்லை யெனக்கருதி நராந்தகனோடவாரம்பித்தனன்.

நராந்தக னேடுவதனைக் கண்ட பூதவீரன் முன்னிலு மதிக பயங்கரமான தொனியுடன் அவனை விழுங்கு வான்போல அவனடியைத் தொடர்ந்து சென்றனன். அதி வேகமாகவோடியிளைத்த நராந்தகன் அருகிற் பூதன் வரு தலைக்கண்டு மற்றொரு திசையிலோடினு னங்குமவனவ் வாறே வரக்கண்டு நடுங்கிப் பூமியிலுள்ள எந்தத்திசையிற் சென்றாலுமிவன் தொடர்ந்து வருவதைக்கண்ட விவன் பாதலத்துக்காவது போகலாமென வோடினான். அங்கு மவனருகிற் றொடர்ந்து வரக்கண்டு நடுங்கி விண்ணுல கிற்கேனுஞ் செல்லலாமென மேலெழுந்து விண்ணுலகஞ் செல்ல முயன்றகாலத்தி லங்குமிவன் றொடர்ந்து வரக் கண்டு பூமியிலிறங்கி யோடினு னோடினனை மடக்கிப் பூத வீரன் அடே! துன்மார்க்கா நீ யெங்குப்போனாலு முன்னை விடேன் உன்னைச் சங்கரிக்க எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமானையடைந்து எம்பெருமானே! இனி யான் முறையாக நடந்து கொள்ளுகின்றேன் என்று கூறி வணங்கிச் சிவபெருமானைக்குறித் தருமையாகத் தவஞ் செய்து பெற்றவரங்களைக் காப்பாற்றிக்கொள் இல்லையே லுன்னையும் இப்பொழுதெடுத்து விழுங்கி விடுவேனென்று கூறினான்.

இவன் மொழியைக்கேட்ட நராந்தகன் அங்கு

மிங்குமாக வோடிப் பூதனூற் றுரத்தப்பட்டு விநாயகப் பெருமா னெழுந்தருளி யிருக்குமிடத்தை யடைந்து ஓடுந்திறமொழிந்து சலித்து நின்றனன். உடனே இறை வனுணையின் வண்ண நராந்தகனை யெதிரே கொண்டு வந்து நிறுத்திய பூதவீரன் றிருவடிகளைவணங்கி எம் பெருமானே! அடியேங்கள் நித்திரைசெய்வதில் விருப்ப முள்ளவர்களாக விருக்கின்றோம் அடியேங்களுக்கு நித் திரைசெய்ய இடங்காட்ட வேண்டுமென்று வேண்டிக் கொண்டனன். அம்மொழிகேட்ட விநாயகப் பெருமான் நீங்கள் நித்திரை செய்யத்தக்க நல்ல இடமிதோ பாருங் களென்று தமது திருவாயைத் திறந்துகாட்டினர். குரு ரன் முதலிய பூதரனைவரும் அவர்வாயுட் புகுந்து மறைந்தனர்.

இவர்களிவ்வாறு பெருமானுடைய திருவாயின்வழி உள்ளேபுகுந்ததனைக் கண்டாச்சரியமுற்று நின்றனன் நராந்தகன். இங்ஙனம் இவன்பார்த்துக்கொண்டு நிற்கும் பொழுதே விநாயகப் பெருமானுடைய திருமேனியிலுள்ள ஒரு ரோமத் துவாரத்தின் வழி காசிராசனும் அவன் மைந்தரும், அமைச்சர்களும், அவர்மைந்தர்களும், திடீ ரென்று வெளிப்பட்டு மகோற்கட விநாயகரைவணங்கி நின்றனர். இங்ஙனம் வணங்கியவர்களிற் காசிராசன்

பெருமானைப்பார்த்து எனதையனே நராந்தகன் தனது சேனைகளோடு வந்து போர்புரிவான் நின்றதனை யுணர்ந்து யான் சைனியங்களுடன் சென்று அவன் படைகளைச் சின்னா பின்னப்படுத்திப் பெரும்போர் புரிந்தசமயத்தில் நராந்தகனென்னோடு போர்செய்தென்னையு மிவரையுஞ் சிறைப்படுத்தி நகரியுட்பிரவேசிக்குந் தருணத்திற் தேவரீராற் படைத்தனுப்பப்பட்ட காலபுருஷனெய்தி நராந்தகனைத் தனியாக்கி அவன் சைநியமுதலிய வனைத்தையும் விழுங்கி அவனையுந் தேவரீர் முன்னிலையி லாக்கித் தேவரீர் திருவாயுட் புகுந்து லயித்தனன்.

அடியேனுந்தேவரீர் திருவயிற்றிலிருந்து நராந்தக சைநியங்களையும் இக்காசி நகரத்தினையும் அனேகம்பிரமாண்டங்களையும் அவைகளுக்குள் வேறு வேறு யுள்ள புவனங்களையுங் கண்டு மையல்கொண்டு தேவரீரைத் துதித்த சமயத்திற் தேவரீ ரெங்களுக்கு வழிகாட்டியாகப் பின்வர யானுமிவர்களுந் தேவரீர் ரோமத்துவாரத்தின் வழி தேவரீர் முன்னரெய்தினோம் இது என்ன ஆச்சரியமான செயல் என்னலாம் எம்பெருமானே! இந்த வுண்மையை யடியேனுக்கு விளக்கியருளவேண்டும் என்று மகோற்கட மூர்த்தியைப் பணிந்தெழுந்தனன்.

அவன்மீது கருணை வைத்த விநாயகப் பெருமான்

தமது திருக்கரங்களை யவன்றலைமீது வைத்தருளினர். உடனே யவன் ஞானதிருஷ்டி பெற்றவனாய் விநாயகப் பெருமானை யன்றி, வேறெப் பொருளும் இல்லாமை யைத்தரிசித்து அனைத்துப் பொருள்களாயும் விளங்கா நின்ற ஆண்டவனே! உனது பொன்னடிகளை நமஸ்கரிக் கின்றேன் ஓ, பிரம்மா, விஷ்ணு, ருத்திராதியருக்குத் தலைவனே! யுன்பொன்னடியை வணங்குகின்றேன் மாயா லீலையை யுடைய மஹா தேவனே! யுன்மல ரடியை நமஸ்கரிக் கின்றேனென்று அன்புடன் துதித்தனன். இங்ஙனந் துதி புரிந்து நிற்குஞ் சமயத்தில் அரசன் மனை வியான வம்பையானவள் விரைந்தெய்தித் தன்கணவனு மக்களும் பிறருஞ் சிறையினின்றுந் திரும்பி வந்ததனைக் கண்டு மிகுந்த சந்தோஷங் கொண்டவளாய் முதலில் விநாயகப் பெருமானை வணங்கிப் பின் தன் கணவனைப் பணிந்தனள். தன்னை வணங்கியதன் மக்களனை வரையுந் தான் மூதுகுதைவந்து களிப்புற்றனள். அமைச்சர் முதலியோரும் அரசியை வணங்கினர். பின்னரரசன் நடந்த வாச்சரியமான செயலனைத்தினையும் மனைவியினிட முரைத்து மகிழ்ந்தனன். இங்ஙனமனைவரு மகிழ்வுறும் பொழுது விநாயகப் பெருமான் ஜயபேரிகை முழக்கத் துடன் அரசனை நகருட் செலுத்தினர் அரசனும் பரி வாரமு மமைச்சரும் புதல்வரும் மனமகிழ்வுடன் காசி

நகரினுள் ஜயகோஷத்துடன் புகுந்தனர்.

இஃதிங்ஙனமாக இவ்வனைத்துச் சம்பவங்களையுங் கண்டு நின்ற நராந்தகன் விநாயகப்பெருமானைக் குறித்துப் பலவாறு யாலோசித்துக் கடசியாக ஓரிந்திரசாலக் காரனிவனெனத்துணிந் திவ்வாறு கூறுகின்றான். சிறுவனே! நீ கற்ற இந்திரசாலவித்தைகளனைத்தையுங் காட்டினையோ? இன்ன முளதோ? மிகுந்த வன்மையுந் திண்மையுமுள்ள சரீரியான யான் மிகவுஞ் சிறுவனும் வன்மையற்ற வுடலினனுமான வுன்னுடனெவ்வாறு போர்புரிவதெனக் கவர்கின்றேனெஃறனன். அதுகேட்ட விநாயகப்பெருமானவனைப்பார்த்து அடா மூடனே! தீயில்விழும் விட்டிற் பறவையைப்போலக் கெட்டொழிய விரும்பியோ இங்கு வந்தனை என்று கூறித் தீச்சுவாலை விசாநின்ற ஒரு சுவாசத்தை விடுத்தவுடனே அதினின்றும் காசிராசன் முன்போல ஆகர்ண பரியந்த மிழுத்துப் பிடிக்கப்பட்ட வின்னாணியில் வைக்கப்பட்ட அம்போடுகூடிய கையுடன் தோன்றி நராந்தகனைப்பார்த்து எபாபாத்மாவே! நீ தேவரை உபத்திரவிப்பதை விடுத்து சரணாகதியடையக் கடவை இன்றேல் இறந்தேபோவாய் வீணாகச்சாகாமற் சரணாகதியடையக் கடவை என்றவாக்கியத்தைக்கேட்ட நராந்தகன் கடுங் கோபத்துடன் அரசனைப் பார்த்துரைக்கின்றான்.

"நராந்த கேதி மேநாத்வாதிர் சரணும் ஹிபக்ஷ ணுச், இதானீம்சரணம் யாஹியதி ஜவிதுமிச்சஸி" நராந்தகனென்றன்றோ வென்பெயர் வழங்குவது அது உன்னை யொத்தவர்களை யழித்தலினாலன்றோ உண்டாகியது. அங்ஙனமாக யானோ சரணாகதியடைவது நீயும் நின்னனையருஞ் சரணா கதியடைந்தாற் பிழைப்பீர்கள் என்று பலவாறாகக்கூறியதனைக் கேட்டு மன்னவன் பின்னரு மவனைப்பார்த்து "விநாசஸமயே மூடவிபரீதா மதிபவேத் மித்ராணிசத்துருதாம்யாதி விபரீதெய்யனோ ஹஸி" நாசமாகுங் காலத்திலறிவிலியா யுள்ளவனுக்குப் புத்திவேறுபட்டதாகவே நிற்கும், சிநேகராயுள்ளாரும் பகையாளராகக் காணப்படுவார்கள் இங்ஙனமான விபரீதங்கள் அனேகங்கள் உண்டாகா நிற்கும் நீயென் செய்வை நினக்குக் காலமுடிந்து விட்டது அதனால் நீ இவ்வாறாயினை நின்னைக் கொல்லும்பொருட்டு எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் காசிபகுமாரராக எழுந்தருளி இருக்கின்றார் என்றிவ்வாறு பலகூறக் கேட்ட நராந்தகன் உள்ளத்தில் நடுக்கங்கொண்டு அரசன் கையிலிருந்த வில்லினையு மம்பினையும் வலித்துப்பறித்து வன்மையுடனரசனைக் கீழேதள்ளி நன்று யுதைத்தனன் இதனாலவ்வரசன் வச்சிரத்தாலடியுண்ட மலையைப்போல விழுந்தனன் இதுகண்ட விநாயகப்பெருமா னதிகோ

பத்துடன் ஒரு கர்ச்சனைசெய்தனர் அக்கர்ச்சனையால் திக்குவி திக்குகளெல்லாம் நடுக்கமெய்தின. அப்பொழுது கணேசப்பெருமான் பரசாயுதத்தா லோரடி யிந்திரன் மலையை வச்சிரத்தா லடித்தாங் கடித்தனர் உடனே நராந்தகன் மூர்ச்சிதனாய்ப் பூமியில் விழுந்து சிறிதுநேரம் மூர்ச்சிதனாகக் கிடந்து பின்னரெழுந்து பலவிதமாய வுருவந்தாங்கிப் போருக்குநின்றனன் விநாயகப் பெருமானும் அவன் கொண்டமாய வுருவங்களெல்லாந் தாங்கியவனோடு போர்செய்தனர். இதன்பின்னரிவன் இவரோடு மல்யுத்தம் புரிந்தனன். "சரணம் சரணேனவஹஸ்தம் ஹஸ்தேனஜக்னது ஜானுப்யாம் ஜானுனீசேரபௌ புஷ்பிதாவிவகிஞ்சுகௌ" என்றாங்கு கால்களோடு கால்களும் கைகளோடு கைகளும் தொடைகளோடு தொடைகளும் பொருந்தப் பூத்த முருக்கினைப்போல விளைந்து பொருந்திப் போர்புரிந்தனர் மரங்களைப் பிடுங்கி யெறிந்தனன் நராந்தகன். அவைகளைப் பதும பரசாதி யாயுதங்களால் நாசஞ்செய்தனர் விநாயகப்பெருமான். இருவருஞ்செய்த யுத்தத்திலுண்டான ரத்தப்பிரவாகத்தினைக்கண்டு காசிராசனு மஞ்சியோட வேண்டியவனானன் இங்ஙனம் பலவகைப் போர்புரிந்த நராந்தகன் சிவபெருமானைத் தியானித்துப் பிறைதுல்லியமான வில்லொன்றில் நாணியேற்றிட்டுச் சிவகிருபையால் நிறையப்பட்ட தூணீரத்திலிருந்து அம்புகளை யெடுத்தடுக் கடுக்காக

விடுத்துப் பூமியந்தராதிகளை மறைத்து அனைத்துயிர்களுக் குந் துன்பத்தினை யுண்டாக்கினன்.

இவனது செயலினைக் கண்ட விநாயகப்பெருமான் இரண்டுபாணங்களை யேவி யொன்றாலவன் விடுத்தபாணங் களை யழித்து மற்றொன்றால் அவனுடலை இரண்டுதுண் டாக வெட்டியெறிந்தனர் "ஸபாணச்சேதயத்தஸ்ய சரணௌஸபாதஹ" என்றபடி காலிரண்டும் வானி னுயர்ந்து சென்று இவன்சகோதரன் தேவாந்தகனுடைய கிரகத்தில் விழுந்தனேகரை யழித்தது.

பின்னர் துண்டுபட்டவுடலினுள்ள முகத்தினால் பயங் கரமான கர்ச்சனையைச் செய்தனன் அற்றகால்கள் முன் போற்றோன்றின கால்கள் தோன்றியவுடன் விநாயகப் பெருமானைக் கிட்டி என்னுடைய சாமர்த்தியத்தினைக் கண்டனையா வினி யுன்னுடைய சாமர்த்தியத்தினைப் பார்க்க விரும்புகின்றே னென்றவுடன் விநாயகப் பெரு மான் கோபக்குறியுடனனேக பாணங்களை விடுத்தனர். அவைகளை யெல்லாமவன் விழுங்கி ஹட்டஹாசஞ் செய்தனன். அதுகண்ட கணேசப் பெருமான், "தத எகம் மஹாபாணம் அபிமந்த்ர்ய விநாயகஃ, அக்னி துண் டம் ருக்மமுகம் கர்ஜமானம் பயானகம், ஆகர்ணம் பாண மாகர்ஷய தத்தயாஜதைத்ய மஸ்தகே" என்றபடி

உடனே கணேசர் ஒரு மஹாபாணத்தினை யெடுத்தபி மந்திரித்து தீச்சுவாலை வீசாநின்ற நாசியையும் உக்கிர முகத்தினையும் உடையவராகி அதனை வில்லில் வைத்துக் காதளவும் இழுத்து விடுத்தனர். அது வ்பாயுவேகத் துடன் சென்று நராந்தகன் தலையைக்கண்டா ரெல்லா மஞ்சுமாறு வெட்டி யெறிந்தது. இங்ஙனம் வெட்டியதலை யும் வீரகர்ச்சனையுடன் வானிலுயர்ந்துசென்றது. உடனே நராந்தகன் மற்றொரு புதியதலை யுடையவனாகி நின்ற னன். பின்னும் விநாயகப்பெருமான் அவன்தலையை யறுத்தனர். பின்னுமது முளைத்தது. இங்ஙனம் இரவும் பகலும் ஓய்வின்றி யிருவரும் போர் புரிந்தனர். பின்னர் விநாயகப் பெருமான் கோபக்குறி யுடையார்போல் நடித்து அக்கினிச்சுவாலை வீசாநின்ற பரசினைக் கரத்திற் றாங்கி யவன்றலையை வெட்டியெறிந்தனர். பரசேந்தி நின்று போர்புரியுங் காலத்தில், விநாயகப் பெருமான் கொண்டிருந்த கோர வுருவினைக்கண்டு, தேவர் முதலிய வனைவரும் நடுங்கினார்கள். தலையை வெட்டி யெறிந்த வுடன் "புனரன்யத பூத்ச்சாருசிரோ முகுடகுண்டலம்" என்றபடி பின்னரும் அழகிய குண்டலத்தோடுங் கூடின புதிய தலை யுண்டாகியது. அதனையும் வெட்டியெறிந்த னர் பின்னுந் தோன்றியது. அதனையும் வெட்டியெறிந்த னர் "ஏவம்சதஸஹஸ்ராணி சிராம்ஸி ஸோச்சின க.வி. ௧௮)

10

என்றபடி நூறாயிர முறை அவன் றலைகளை வெட்டியெ றிந்தனர். அங்ஙனமோயாது வெட்டியு மது முளைத்த லைக்கண்டு, இது சிவனளித்த வரத்தாலாயது அவ்வர மோ காலையாலு மாலையாலு முச்சியாலுந் தேவராலு மனிதராலும், அசுரராலும், பிறசீவர்களாலும், அழிவில் லாதிருப்பதே யாதலின் நாம் இவ்வனைத்து மாகியும் அல்லவாகியும் உள்ள விசுவரூபங் கொண்டிவனைச் சங்க ரிப்போமென விசுவரூபங்கொண்டு "விநாயகம் விராட் ரூபம் ககனோர்த்துவக மஸ்தகம்" என்றபடி அண்டகூ டத்துக் கப்பாலுஞ் செல்லு மஸ்தக முடையவராகி "பாதாளவ்யாப்த சரணம் திக் சுரோத்திரம் விர்க்ஷரோ மகம்" பாதாளத்தினை யடைந்த பாதமும் திக்காகிய காதுகளையும் விர்க்ஷங்களாகிய ரோமங்களையும் உடைய வராகி நின்று பதினான்கு புவனங்களுங் குக்ஷியிற் கிடந் தலையநின்று அசுர ராசனான நராந்தகனை "ததோ விநாயகோதைத்யம் மர்த்தயாமாஸ தத்க்ஷணாத் பாதாங்குஷ்ட நகாக்ரேண மத்குணம் பாலகோயதா" அந்தக் கணத்திலேயே திருவடியிலுள்ள நகநுனி யால் சிறுவர்கள் மூட்டு பூச்சியை எவ்வாறு நசுக்கித் தேய்த்துக் கொல்லுவார்களோ அவ்வாறே தேய்த்துக் கொன்றனர். இங்ஙனஞ் சங்கரித்த பின்னர் நராந்தகன் இறந்தொழிந்தனன். உண்மையாக இவனிறந்தொழிந்தா

னென்பதனை யுணர்ந்த தேவர் முனிவராதியருடன் மற்றனைவரும் அடிக்கடி ஜயசப்தங் காட்டிப் புஷ்பவருஷம் பெய்து பெருமானுடைய விசுவரூபத்தைத் துதித்தனர். இவ் வாச்சரியங்க ளனைத்தினையுங் கண்ட காசி மன்னன் விநாயகப் பெருமானை யடிபணிந்து பூசித்து நின்றனன்; பெருமானும் பழயமகோற்கட மூர்த்தியாகி நின்றனர். அனைவரும் களிப்பெய்தினர்.

இசனை! இடையே யிடையே காட்டியுள்ள கணேச புராண வசனுதிகளாலுணர்க.

கூடசிலாபேதன பராக்கிரமம்.

வேடனை யிளையோனாக விரும்பிய பரனைக்கஞ்சத்
தாடனை மருமத்தேற்ற வண்ணலை யலரோன் றன்னைத்
தாடனைப் பணியநல்குந் தலைவனைத் தறுகட்பொல்லாக்
கூடனை வதைத்த வொற்றைக்கொம்பனைக்குறித்துவாழ்வாம்.

(இ-ள்) ஸ்ரீகுமரப் பெருமானைத் தனது தம்பியாக விரும்பிய பரமனையுள்ளவனைக் கமலமலரைப்பீடமாகயுடைய திருமகளை அழகிய மார்பிலணைத்துள்ள மாயோனையும், தாமரைப்பூவினை இருப்பிடமாகவுடைய பிரமதேவனையும், தமது திருவடிகளை வணங்குமா றருளளித்த கர்த்தனை, அஞ்சாமையினையும் பொல்லாங்கினையு முடைய பொல்லாத் கூடனென்பவனைச் சங்கரித்த ஏகதந்தரான விநாயகப் பெருமானைத் தியானித்து வாழ்வோமாக. எ-று

இதன் விவரம்.

காசி நகரினரும் அங்கரத் தரசனுஞ் செய்த புண்ணிய விசேஷத்தா லங்நகரிற் காசிபகுமாரரென்னு முறையுடன் மகோற்கட மூர்த்தியென்னும் பெயரினராய் விநாயகப் பெருமான் எழுந்தருளிய காலத்துக் கண்ட கூடனென்னு மோரசுரன் மிக்க பெருமையினால் காசிநகரின் கோபுரத்

துவாரத்தி லோரடைகல்லாகி எவரையுமுள்ளே போக வொட்டாது தடைசெய்து கிடந்தனன்.

இந்நூதனமான கல்லினைக் கண்டாரெல்லாம் இப்பெரும்பாறை முன்னரிங்கில்லையே இப்பொழுதெங்கு நின்றுண்டாகியது அறிகிலோமே யென மயங்கித் தியங்கிப் பலவாறு கூறினர்கள். அனைவருந் தியங்கி நிற்பதைக் கண்ட விநாயகப் பெருமான் தமது பரசாயுதத்தினலதனையோங்கி யடித்தனர். அடிபட்டவுடன் சீற்றங்கொண்டு பாறையுருவ நீங்கி அனேக யோசனை நீளமுமகலமு முள்ள கோர ரூபத்துடன் எழுந்து நின்று அனைவரையும் எடுத்து விழுங்குமாறு முயன்றனன். அவனதச் செயலினைக் கண்ட விநாயகப்பெருமான் தமது மழுவாயுதத்தாலவனை வெட்டியெறிந்தனர். மழுவினல் வெட்டுண்ட வசுரன் பேருருவுடன் விழுந்து பூமியினனேகபாகஞ் சிதையுமாறு செய்திறந்தனன்.

இதனை.

ததோ தர்சபாலோஸௌதைத்யம்பாஷாணரூபினம்
ததோஹனத்பரசுனசதகாலோபவத்ததா
தஸ்மாத்விநி:ஸ்ருதோபீமோதம்ஷ்டாரதசனபாஸுர:"

என்பனவாதிய விநாயகபுராண வசனங்களா லுணர்க.

காமக் குரோதவத பராக்கிரமம்.

அருந்தவ முனிவர் வாழ்த்த வாரணம் புகழ்ந்து போற்றத்
திருந்தெழிற் பணவரோடுஞ் செல்லு நாளிடுக்க ணுண்டுப்
புரிந்திடக் கரங்களாகிப் போர்புரி காமக்குரோத
ருரங்கிழிந் தழியச்செற்ற வும்பருடலைமேற் கொள்வாம்.

(இ-ள்) அரியதவத்தினையுடைய முனிவர் வாழ்த்தவும், வேதங்க ளுருக்கொண்டு துதிபுரியா நிற்பவும், செவ்விய வழகினையுடைய பார்ப்பனச் சிறுருடனெழுந்தருளிச்சித்தி புத்தியரின் கிரகத்துக்கெழுந் தருளுதலைக்கண்டு இங்ஙனஞ் செல்லுமிவனை யுபத்திரவிக்கவேண்டு மெனக் கழுதைப் புலியினுருவங்கொண்டு சண்டையிட்டெதிரே வந்த காமக் குரோதரின் வன்மை கெடுமாறழித்த யானைமுகப் பெருமானது திருவடிகளைத் தலைமே லேந்தித் துதிப்போமாக. எ-று.

இதன் விவரம்.

காசிராசன் விருந்தினராய் அவன் செய்த புண்ணியத்தினா லவனரண்மனையி லெழுந்தருளி இருந்த விநாயக மூர்த்தியை தரிசிக்க வந்த காசிராசனுக்கு நண்பரான தரும தத்தரென்னு முனிசிரேட்டர் தம்புதல்வியரான சித்தி புத்தியரை மகோற் கடமூர்த்தியான விநாயகப்பெருமானுக்கு மனைவியராகச் செய்தற்கு விரும்பினாராய் அவரை நனிவேண்டுதல் செய்து அவர் மறுத்தும்

காமக்குரோத சங்காரம்

விடாமற்றொடர்ந்து ஒரு பல்லக்கிற் பெருமானை யெழுந்தருளுவித்துக் கொண்டு அரசபடரும் முனிவர் குழாமுமுடன் சூழ்ந்துவராநிற்ப வழைத்துச் செல்லுங்காலத்துக் கண்ட காமக்குரோதரென்னு மிரண்டுகொடிய வசுரர்கள் பொறாமைகொண்டு இரண்டு கழுதைப் புலியினுருவமாகி ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டு புழுதியை மிகவும் முண்டாக்கி அனைவர்களையு மூடும்படி செய்துகொண்டு வருதலைக்கண்ட வனைவரு மையோ விஃதென்ன விபரீதகாலம் இக் கழுதைகளிங்கு வந்து தொந்தரவு செய்கின்றனவென்று கருதுங்காலத்திற் றமது பிரயாணத்துக்கு விக்கினம் புரியுமக் கொடியவர்களை தீயில்விழுந்து விட்டிற் பறவை யழியுமாறழிக்கும் வண்ணம் வள்ளல் நினைத்துக் கரத்தாற் பிடித்திழுத்துச் சுழற்றி தள்ளினர். அங்ஙனந் தள்ளியவுட னவர்கள் கீழ்விழுந்து நிசவுருவுடன் இறந்தொழிந்தனர். இதனை அனைவருங் கண்டாச்சரிய மெய்தினர்.

இதனை

"காமஸம்க்ஞச்சக்ரோதேச்சத்வாதௌ ராட்சஸாதமௌ
பரஸ்ப'ரம்யுத்ய மானௌ ஹந்துமந்திகமாகதௌ
யுத்யமானௌ நிபதிதௌபாலகே துஷ்டமானஸௌ
கரரூபௌயதாவர் ஹிம்பதங்காவிவதுர்மதௌ:
ததோவிநாயகோத்ருத்வா தயோபாதௌபலேனஸ
ப்ராமயாமாஸபெகுதா போதயாமாஸபூதலே
ஸத்ததௌ பதிதௌவ்யஸு லோகாவ்ய லோகயத்"

என்பனவாதிய விநாயகபுராண வசனங்களா லுணர்க.

குண்டகுஞ்சரமர்த்தனபராக்கிரமம்.

கருங்கட லுடைந்து போந்தகாட்சியின் மதநீர் சிந்திச்
சுரும்பின மிழற்றுஞ்சோலை சூழ்குலாசலங்க ளெல்லாம்
ஒருங்கொருவடிவங்கொண்ட தெனவரு மொருத்தறன்னைத்
துரும்பெனவழித்தமாணி துணையடிதுதித்து வாழ்வாம்.

(இ-ள்) கரிய கடலானது கரையழிந்து வருதலையொப்ப மதநீரைமிகுதியு மொழுக விடுத்துக்கொண்டு வண்டினங்களிசை பாடுகின்ற சோலைகளாற் சூழப்பெற்ற சிறந்தமலைகளனைத்து மொருவடி வங்கொண்டு வந்தாங்கு வந்த யானையின் வன்மைகெடுமா றதனைக் கொன்ற மறைக்குலப்பிரமசாரியி னுருவத்தினையுடைய மகோற்கடப் பெருமா னதிரண்டு திருவடிகளையும் போற்றுதல் செய்துவாழ்வோமாக. எ-று.

இதன் விவரம்.

தன்னனைய விளைஞர்குழாஞ் சூழ மார்பிலணிந்த முப்புரிநூலு மான்றோலும் விளங்கா நிற்பச் சமித்து முதலியவைகளைச் சேர்த்துக் கொண்டு வனத்தின் வழியாய் மகோற்கட மூர்த்தியான விநாயகப் பெருமானெழுந்தருளி வருதலைக்கண்டு அவரைக் கொலைசெய்யக் கருதி ஒரு



கண்டரகா சங்காரம்

பெரிய யானையி னுருவந்தாங்கிக் குண்டனென்னு மொரு கொடியவசுரன் மற்றக் காட்டானைகளை யெல்லாந் துரத்திக்கொண்டு வஞ்சனையெண்ணத்துடன் மரங்களை வேருடன் பிடுங்கி யெறிந்துகொண்டு வராநின்றதனைக் கண்டு அனைவரு நடுங்கி நானுதிசையினு மோடுதலைக்கண்ட விநாயகப்பெருமான் விரைவாக வவ்யானையி னெதிரே சென்று அதன் கழுத்தைப் பிடித்துப் பிசைந்து அதன் நிலை கலங்க வுதைத்து அதன் வாயினின்றுஞ் சோரியொழுகுமாறுசெய்து கீழே தள்ளிக் கொன்றனர். இதன் வருகையைக்கண்டு பல திசைகளிலும் பயந்தோடினு ரனைவருமீட்டெய்தி விநாயகப் பெருமானைப்புகழ்ந்துடன் சென்றனர்.

இதனை

"ததர்சகுஞ்சரம்மத்தம் கூடரூபம்மஹாபலம்
ஆஸ்பாலயத்சத்கரம்பாலோ ருரோஹகரினம்பலாத்
விபேதகண்டம் ஸ்ருஂணிநாவாரம் வாரம்விநாயக:
அஸ்ருக்ப்ரவாக பரிதோநிபபாதமஹீதலே".

என்பனவாதிய விநாயக புராண வசனங்களா லுணர்க.

சிரம்பாபிராணக்கிரகணடாராக்கிரமம்

அரம்பையை நாணச்செய்யு மழகுடனெய்தித்தீய
கரம்பயி றயிலந்தன்னைக் கசிவுடன் றலையிற் ருக்கி
வரம்பெறத் தேய்த்த பொல்லா வரக்கியை யுலகமேசுஞ்
சிரம்பையைச் செற்றவீசன் றிருவடி முடிமேல் வைப்பாம்.

(இ-ள்) தேவலோகத்திலுள்ள அரம்பையையு நாணச் செய்யத்தக்க அழகுடன் வந்து கொடிய விடமிட்டுக் காய்ச்சிய தைலத்தினைத் தமது தலைமீது வீழ்த்தி வன்மையுடன் தேய்த்த கொடியவரக்கியை உலகமனைத்தும் பழிக்கின்ற சிரம்பையென்னும் பெயரினை யுடையவளை நாசஞ் செய்த வீசனென விநாயகப் பெருமானது திருவடி மலர்களைத் தலைமீது கொண்டு பணிவோமாக. எ-று.

இதன் விவரம்.

விநாயகப் பெருமான் சூரியன்விடுத்த வேலினைப் பிடித்து விடுத்துக் கொன்ற தூமாட்ச னென்னும் ராட்சதனுக்கு மனைவியும் சிரம்பையென்று பெயருள்ளவளுமான மாய வித்தையிற் சிறந்த அரக்கியானவள் அசுரகுலகாலரான விநாயகப்பெருமானை எந்த அசுரராலும் அழிக்க முடியாமையின் மாய வுருவங்கொண்டு விஷதைல லேபனத்தாற் கொலைசெய்து பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று கருதித் தனது கோரைப்பல்லும், தொங்குமுதடும், குழிந்தவிழியும், எடுத்தவயிறும், பருத்த இடையும், தடித்தகாலும், வெடித்தசொல்லுங் காட்டிச்சென்றூற் சீசீயென விரட்டுவாரெனவும் அஞ்சுவா

ரெனவுங்கருதிக் கண்டாரெல்லாம் விரும்பத் தக்கவளாய் முத்தனைய தந்தங்களும், கொவ்வைச் செவ்வாயும், காதளவோடி மீனுங்கருநெடுங்கண்களும், ஆலிலைபோன்றவயிறும், அருநூலிடையும், வராலனையசாலும், குயிலனையமொழியும், உடைய சுந்தராங்கியாகி விநாயகப் பெருமானதருகிலெய்தி மிகுந்த விநயத்துடன் அவரைப்பூசித்து எம்பெருமானே! தேவரீருக்கென மிகவுமருமையாகச்சிறந்த வனமூலிகைகளைச் சேகரித்துப் பரிமளமாகக் காய்ச்சிக் கொண்டுவந்தவிந் நறுந்தைலத்தினை அடியாள் கரத்தாற்றேய்க்குமாறுத்தரளிக்க வேண்டுமென்ற வுடன் இவளை இன்னவளெனத் தெரிந்துகொண்ட பெருமான் அவ்வாறே செய்க என்றனர். உடனே இனி நமதெண்ணம் பலித்ததென விஷதைலத்தை யெடுத்துச் சுவாமியின் சிரசில்விட்டுத் தேய்த்தனள் அப்பொழுதருகிலிருந்த வொருதேங்காயை யெடுத்தவள் தலைமீதடித் தவளை நாசஞ்செய்தனர். அவளுந் தனதெண்ணம் பலிக்காமற் தனது நிசவுருவுடன் பூமியில் விழுந்திறந்தனள். இச்செயலினைக் கண்டாரனைவரு மாச்சரியமு மச்சமு மெய்தினர்.

இதனை

"ஏதஸ்மின்னந்தரேதத்ர ச்ரும்பாநாம்னுப்யாகதாசுபா
பிதாம்பரதரோசாருகங் கணசாருபூஷணா
அதிதுஷ்டமனா ஸாதுபத்னீ தாம்பராட்சராக்ஷஸா
அப்யங்கங்குருதைலேன ஸுகந்தேன மஹாமதே
நாரிகேளபலேனுசுமஸ்தகே தாம்ஜகானஸா
தத்ஸ்நாபதிதாபூமௌநிஜரூபம் ஸமாஸ்திதா.

என்பனவாதிய கணேசபுராண வசனங்களா லுணர்க.

சுவாலாமுகவியாக்கிரமுக தாருணதி.

அசுரத்திரைய சங்கார பராக்கிரமம்.

ஒல்லொலிக் கங்கை சூழ்ந்த வுயரெழிற் காசிதன்னை
வல்லையி லழித்து மென்னு வளர்புலி யெரிகாற் றென்னப்
புல்லிய கொடியர் தம்மைப் புரட்டியின் பளியேரம்பர்
நல்லெழிற் சரணம்போற்ற நல்கிய வலரோன் வாழி.

(இ-ள்) ஒல்லென்னு மோலியினையுடைய கங்கையாற் றூற் சூழப்பட்ட மிக்க வழகினையுடைய காசி நகரத்தினை விரைந்தழித்து விடுவோமெனப் பெரும்புலியும் தீயுங் காற்றும்போல வந்தடைந்த கொடியவசுரர்களை அழித்து அனைவருக்கு மின்பத்தை யளித்த ஏரம்பனென்னுந் திரு நாமத்தினையுடைய விநாயகப்பெருமானது நல்ல வழகிய திருவடிகளைத் துதிக்குமாறெம்மைப் படைத்த நளினாசன ஞன பிரமதேவன் வாழ்வானாக. எ-று.

இதன் விவரம்.

மகோற்கட நாம விநாயகப் பெருமான் காசி நகரி லெழுந்தருளி யிருத்தலா லந்நகரினையும் அந்நகரவாசிகளை யும் அழித்து அவரையும் நாசஞ்செய்ய வேண்டுமென்று கருதி ஒருதினம் இரவில் அனைத்துச் சனங்களுந் தூங்கு கின்ற சமயத்தில் ஜ்வாலா முகனெனவும், வியாக்கிரமுக னெனவும், தாருணனெனவும், பெயருள்ள மூன்றசுரர்கள் ஒருங்குசேர்ந் தாலோசனைசெய்து தாருணனென்பான் வாயு ரூபனாகவும், ஜ்வாலாமுகன் தீயாகவும், உருக் கொண்டு நின்றார்கள். இவர்களில் பெரும்புலியான வியாக் கிரமுக முலடையவ்ன் கோபுரவாசலில் நின்று வெளியிற்



பயந்தோடி வருவோர்களை விழுங்குவோனாக விருந்தான். இத்தகைய சம்பவத்தால் ஊர்முழுதும் நெருப்புப் பற்றிக்கொண்ட தெனமனிதர்க ளங்குமிங்குமாகவோடி வியாக்கிர முகன்வாயிற் புகுந்தொழிந்தனர் பலர் காற்று நெருப்புங்கலந்து வீசினால் நகரமழியுமென்பதை நாமுரைத்தலும் வேண்டுமோ பெரும்புலியோ கீழுதட்டினைப் பூமியிலும் மேலுதட்டினை வானத்திலும் ஆக்கி நாவினை நீட்டி நின்றது. பண்டனுமன் வால்நெருப்பானது லங்கையை எரித்ததுபோல் இப்புலியின் முகத்திலுண்டான நெருப்பானது நீரைமொண்டு ஊற்றுந்தோறும் எரியுநெருப்பெண்ணெய் விட்டதுபோல அதிகமாகப் பற்றியெரியத் தொடங்கியது. அப்பொழுது காசிராசன்முதலிய வனைவரும் விநாயகப் பெருமானை வணங்கி நீயே மாதா நீயேபிதா எங்களையும் எங்கள் காசி நகரையும் காத்தருள வேண்டுமென வேண்டிக் கொள்ளுதலும் பெருமானொரு பேருருக் கொண் டவ்வியாக்கிர முகன்வாயைக்கிழித்து அவன் உடன் வந்தாரையு மழித்து இவர்களா லிறந்தோறையுங் காசிநகரையு முன்போ லுண்டாக்கி அனைவருக்கு மகிழ்ச்சியையளித்தனர். இதனை

"ஜ்வாலாமுகோவ்யாக்ரமுகோதாருணைத்ரையோஸுரா:
தாருணேவாயுரூபேண தத்ஸஹாயார்த்தமுத்யத:
வ்யாக்ரஸ்யோபக்ஷிதும்தத்ரபலாயனபரானபூத்
விதாரணம்மஹாகாயம்ஜ்வாலாஸுரஸம்யுதம்ததா
எவம்நிஹத்யதான்துஷ்டான்மோஹமாயாபலேனஸ:
அஜீவ்யஸம்ஹிருதான்ஸர்வான்நகரம்ச்யதாபுரா

என்பனவாதிய கணேசபுராண வசனங்களா லுணர்க.

மேகாசுர சங்கார பராக்கிரமம்.

ஏகனை யனேகனுகி யிருந்தருள் பரமன் றன்னை
மோகனை யானஞான முதல்வியை யேன்றுகொண்ட
பாகனை யத்தா வென்னும் பரமனைக் குய்யத் தூற்ற
மேகனை வதைத்த வாகு மேலனைக் குறித்து வாழ்வாம்.

(இ-ள்) ஏகனையும் அனேகனையும் இருந்து ஆன்மாக்களுக்கு அருள்செய்கின்ற பரமேசுவரனையும் மோகனையென்று கூறுகின்ற ஞானமுதல்வியை அமைத்துக் கொண்ட இடப்பாகத்தினை யுடைய சிவபெருமானை அத்தனே யென்றழைக்கும் பரமனுகவு முள்ளவனைக் கபட உருவத்துடன் வந்த மேகனென்னும் அசுரனைக்கொன்ற ஆகுவாகனத்தி லெழுந்தருளுகின்ற விநாயகப்பெருமானைத் தியானித்து வாழ்வோமாக. எ-று.

இதன் விவரம்.

மகோற்கட மூர்த்தியான விநாயகப் பெருமான் காசி நகரிலிருந்தனேக அற்புதச் செயல்களைச்செய்து வருதலிற் பொறுமைகொண்ட மேகனென்னும் பெயருள்ள ஒரு கொடியவசுரன் ஒரு பிராமணனுக உருவங்கொண்டு கக்ஷத்தில் பனையோலைப்புத்தகந் தாங்கிச்சென்று காசிராசனை யடைந்து மகோற்கட மூர்த்தியைக் காசிராசன் அழைத்துவந்த நாண்முதலுண்டான உற்பாதங்களனைத்தையும் உரைத்து இவ்விநாயக னிங்கிருந்தா

லிந்நகர மழிந்தேபோகும் இவன் நான்கு தினங்கள் வனத்திற் சென்றிருக்கவேண்டு மென்றதனைக் கேட்ட அரசனவனை வஞ்சகனென்றறிந்து நீ இவையனைத்தையும் விநாயகனிட முரைத்தழைத்துச் செல்லென விநாயகப் பெருமான் சிறுவர்களுடன் விளையாடு மிடத்துக்கனுப்பி ஞன். இவனை இன்னவனென்றறிந்த விநாயகப்பெருமான் அவனிடம் தன்னிலையைப்பற்றிக்கேட்க அவன் அரசனிட முரைத்ததுபோல வெகு சரியாக உரைத்து என்னுடன் நான்குதினங்கள் வந்திரு என்றவுடனே விநாயகப்பெரு மான் சாலமகிழ் தவரைப்போல எனக்கு ராசா வளித்த முத்துமாலையை உம்முடைய கழுத்திலிடுகின்றே னென்று ஸன்மானஞ் செய்பவரைப்போல தங்கழுத்திற் கிடந்த மாலையைக்கழற்றி அசுரன்கழுத்தி லணிந்தனர். அங்ஙன மணிந்த அதிக சீதளமான முத்துமாலை யக்கினியுருவமாகி அம்மகாசுரனை கணகனை எரித்துச் சாம்பராக்கியது. இந்த ஆச்சரியத்தினைக் கண்டவனைவரும் விநாயகப் பெருமானை அடிபணிந்து துதித்தார்கள். தீப்பற்றி யெரியுங் காலத்தி லசுரன் தனதுபயங்கரமான உருவத்தினைக்காட்டி யிறந் தனன்.

இதனை

"தைத்யோதப்ராம்ஹணோபூத்வாஜோதிஸ்சாஸ்த்ரவிசாரத:
ஸதயாபின்னஹிர்தயோவஜ்ரஹதஇவாசல:
நிபபாததராப்ருஷ்டேசாலயன்வஸுதாம்பிருசம்"

என்பனவாதிய கணேசபுராண வசனங்களா லுணர்க

கூபகந்தரா சுரசங்கார பராக்கிரமம்.

அருமறை முதலிற் றேன்றி யருளியபரமானந்தக்
கரியிவ னென்றுன் ஞது காசிபன் மதலை யென்ஞு
மருவிய வெண்ணன் மாய்க்க மன்னிய கூபனேடும்
பெருவலிக் கந்தரப்பேர்ப் பிசிதனை வதைத்தோய் போற்றி.

(இ-ள்) அரியவேதத்தின் முதலில் விளங்கா நின்ற பிரணவத்தி னின்றும் அவதரித் தருளிய பரமானந்த சொரூபமான யானைமுகத்தினையுடைய விநாயகப்பெருமானே இம்மறைச்சிறுவனென்று கருதாது காசிப முநியின் மகனென்று கருதிய கருத்தால் அழித்துவிட வேண்டுமென்றுவந்த மிக்க வன்மையாளரான கூபகந்தரர்களை வதைத்தருளிய பெருமானே! நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்

பலவசுரர்கள் பலவகையாக அழிக்கமுயன்றும் அழிக்க முடியாது இறந்து பட்டதனைக் கண்ட கூபன் கந்தரன் என்னும் இரண்டசுரர்கள் அனேகசேனைக ளுடனெய்திச் சேனைபாதிகளை ஒருவிடத்தில் நிறுத்தி இருவருமாக ஆலோசனைசெய்து வந்தவண்ணம் விநாயகப் பெருமான் மறைச்சிறாருடன் விளையாடல் புரியுமொரு சோலையில் அனேகயோசனை யாழத்தினையும் மிக்க வகலத்தினையும் உடைய ஒருகிணறாகக் கூபனும் அதனிற்றவளையாகக் கந்தரனும் தங்கிக் காலம்பார்த் திருந்தார்கள். இவர்களின் வருகையையுணர்ந்த விநாயகப்பெருமான் சமானவயதினரான சிறுவருடனங்குச் சென்று அக்கூபத்திற் குதித்து விளையாடிய சமயத்திற் கந்தரனென்பான் காலைப்பிடித்

துக்கீழே இழுத்து நீருக்குட் கொண்டுபோயினன். இத னால் சிறுவனிறந்தானென்று கருதிய அசுரர்கள் நீருளி ருந்தவண்ணமே பேரொலிகாட்டினர். இதனாற் பயமுற்றுச் சிறுவர்களெல்லா மழுதனர். இச்சம்பவத்தினை யுணர்ந்த காசிராசனும் நகரினரு மஞ்செய்தினர். அரசன் காசிப முனிக்கும் அதிதிக்கும் என்ன உத்தரவு சொல்லுவதென மனிவருந்தினன். அப்பொழுது விநாயகப்பெருமான் கந்த ரனறியாமற் கூபனெதிரிற் குதித்தனர். கூபனெடுத்து விழுங்கிவிட்டான். இனி இங்கெனக்கென்னவேலையென்று விரைந்து அசுரவுருவுடன் வானிலெழுந்து சென்றான். அவன் செல்லுதலைக்கண்டு கந்தரனுமெழுந்து சென்றான். சென்றானிற் கூபனென் வயிற்றிலிறந்தான் சிறுவனென்றான் கந்தரனைப்பார்த்துக்கந்தரனென் வயிற்றிலிறந்தான் சிறுவ னென்று கூபனைப் பார்த்துரைத்தான். ஒருவரோடொருவ ரிவ்வாறு கூறிக் கழுத்தைப்பிடித்து ஒருவரோ டொருவர் பிசைந்து பலவகைப் போர் நடத்தி "யதாஸுந்தோப ஸுந்தௌ ததா பிரஸ்பரான்ம்ருதௌ பரஸ்பரவதான் ம்ரு தௌ தத்வத் கூபகந்தர" எங்ஙனம் சுந்தோப சுந்தரர்கள் ஒருவரோடொருவர் போர்புரிந் திறந்தார்களோ அவ்வா றிறந்தார்கள் கூபகந்தரர்கள். இவர்களிறந்து காசிநகரினுள் விழுந்தார்கள். விநாயகப்பெருமான் அரசன் முதலி யோர் மகிழும்வண்ணம் அவர்களெதிரே தோன்றி நின்ற னர். அசுரசரீரங்களை யப்புறப்படுத்தி விநாயகப்பெருமா னுடன் காசிராசன் மாளிகையை யடைந்தான். இதனை முன்காட்டிய விநாயகபுராண வசனாதிகளா லுணர்க.

அம்பாந்தக துங்காசுர சங்கார பராக்கிரமம்.

வம்பரின் முதல்வனான துங்கனை வலியின்மிக்க
வம்பனைக் கொடியபொல்லா வந்தகக் கசடன்றன்னைப்
பம்பர மென்னவாட்டிப் பதைத்துயிர் சோரச்செய்த
நம்பனை யுலவை யொன்றூர் நாதனை நணுகிவாழ்வாம்.

(இ-ள்.) வம்புசெய்யு மவர்களில் முதல்வனாக வுள்ள துங்காசுரனையும் வன்மையின் மிகுந்த அம்பாசுரனையும், கொடியவனும், பொல்லாத வனுமான அந்தகாசுரனென்னும் கசடனையும், பம்பரம்போலவாட்டி அவர்களுயிர் பதைத்துச் சோரும் வண்ணஞ்செய்த நம்பனாயுள்ளானை ஒற்றைக் கொம்பினையுடைய கர்த்தனை அடைந்து வாழ்வோமாக. எ-று.

இதன் விவரம்.

"அந்தகாம் பாஸுரத்துங்கோ ராக்ஷஸாஃ க்ரூரதர்சனாஃ" என்றபடி பயங்கர வுருவினரான அந்தகாசுரன், அம்பாசுரன், துங்காசுரனென்னும் மூன்றசுரர்கள் ஒன்றுசேர்ந்து காசிநகரினையும்விநாயகப்பெருமானையும் அழிக்கக் கருதிக்காசியையடைந்து ஒருவருக்கொருவர் இவ்வாறுபேசிக் கொண்

டார்கள் அதாவது அந்தகாசுரன் யான் இருளுருவங்கொண்டு நிற்கின்றேனென்றான். "அந்தகஸ்த்வப்ரவீத் தத்ரதாம ஸாவ்யாப்தகம்திச" பின்னர் அம்பாசுரனென்பவன் "அம்பாஸுரோப்ரவீத் தத்ரமஹீம்ஸர் வம்ஜலேனஹ. ஆபுர ப்லவயிஷ்யாமிஸமந்தான் நகதிர்பவேத்" என்றபடி யான் ஜலரூபமாகி இக்காசி முழுமையும் மூடிக்கொள்ளுகின்றேனென்றான். உடனே துங்கனானவன், "துங்கோப்ர வீத் ஹம் துங்கோகிரி பூத்வா புரிந்துதாம், ஆலோட்யசூர்ண யிஷ்யாமி லபக்ஷ இவபர்வதம்:" யான் உயர்ந்த மலையுருவங் கொண்டு இந் நகரியைச் சூழ்ந்து நிற்கின்றேனென்று தீர்மானஞ்செய்து, செய்த வண்ணமே காசியை யடைந்து ஒருவன் மலையாகவும், ஒருவன் இருளாகவும், ஒருவன் மழையாகவுமாகிக் காசிநகரினை நனி வருத்தினர். இங்ஙனம் வருத்தியதனால் காசிநகர் வாசிகள் மிகவும் வருந்தி நீராடல் நியதிமுடித்தல் தேவபூசை புரிதல் முதலியவையு மின்றிக் காசிராசனுடன் விநாயகப்பெருமானை யடைந்து அவர் திருவடியை வணங்கி கோராங்கழி வெளிச்சத்துடன் நின்று எங்களைக் காத்தருளல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஊழியருக்கும், காமிகளுக்குந் நித்திரையாளருக்கு மிகுந்த விருப்பத்தைத் தரும் அந்தகாரத்தில் விநாயகப் பெருமானை யடைந்து நின்று வேண்டிய சனங்கள் பொருட்டுத் திருவுளமிரங்கிய

பெருமான் "ஸர்வேஷாம் ரட்சணம் கர்த்தும் பட்சி ரூபம தாரயத்" என்றபடி அனைவரையு மிரட்சிக்கும் வண்ணம் ஒரு பறவையினுருவங்கொண் டிறகினைவிரித்து மழையைத் தழுத்து மலைமேற் ருவிவிரூந்ததனை யுடைத்து மூக்கினாற் கொத்தியெடுத்து "சஞ்சுவாத ஜீமேனஸதுங்காத்ரிம் காச்யபி பணினம்யதா" என்றபடி துங்கனுகியமலையை மூக்கினால் கொத்தி கருடன் பாம்பினை எவ்வாறெடுப்பானோ அவ்வாறெ டுத்துச் சுழற்றி, மற்றிருவரையும் இரண்டு கால்களாலும் எடுத்து மேலெழுந்து, "அதிக்ரம்ய புவர்லோகம்" என்ற படி புவர்லோகதனையுங் கடந்து நானுதிசையினுஞ்சுழன்று பலவிடங்களினுமோதி நாசஞ்செய்தனர். இங்ஙனஞ் செய் தமையால் மூவரும் மலைபோல் விழுந்தழிந்தனர். இங் ஙனம் விழுந்திறந்தோரின் பாரியவுடலினை "த்ருஷ்டும் தைத்ய சரீராணி ஸ்திரீபால ஸஹிதாஜனு" என்றபடி அவர்களி னுடலங்களை பெண்கள் குழந்தைகள் முதலிய வர்களுட னனைவரும்பார்த் தாச்சரியமுற்றூர்கள். விநாய கப்பெருமான் பறவையுருவ நீங்கி முன்போல விளங்கினர். இதனை முன்னுரைத்த விநாயகபுராண வசனுதிகளா லுணர்க.

சூரசபல மோசன பராக்கிரமம்.

கரிய வுடலமெனுமிரவிற் கதிர்த்தவுபய நிலவென்னற்
குரிய பற்கடமைக்கோட்டி யுருமிற்சிறந்த குரல்காட்டிப்
பெரியமல்லுப் புரிசூர சபலர்தம்மைப் பிடித்தெற்றி
யிரியவிடுத்த மாமுகத்தெம் மிறைவனடிக ளிறைஞ்சுவாம்.

(இ-ள்.) கறுப்பான வுடலமென்னு மிரவிற் தோன்றிய விரட்டை நிலவே யென்னத்தக்க கோரைப்பற்களை வாய்க்கு வெளியேவிடுத்து மேகத்தினும் மிகுந்தபேரோசை யுண்டாமாறு கர்ச்சித்து மிகுந்த மல்யுத்தம் புரிகின்ற சூரன் சபலன் என்பவர்களைத் தமதிருகரங்களாலும் பிடித்துத் தரையிலடிக்க முயலுதலு மன்னோர் அடிபணிதலா லுயிருடன் விடுத்தருளிய யானை முகத்தினை யுடைய எமது விநாயகப்பெருமானது திருவடிகளை வணங்குவோமாக. எ-று.

இதன் விவரம்.

காசிப குமாரராக வவதரித்திருந்த மகோற்கட விநாயகப்பெருமான் முனிவர்களும் அன்னார் சிறார்களும் புடைசூழ்ந்து வரநிற்ப ஒரு பொன்னஞ் சிவிகையிலெழுந்தருளி வருதலைக்கண்ட சூரனென்றும் , சபலனென்

றும் பெயருள்ள விரண்டசுரர்கள் மேகமாக வுருக்கொண்டு இந்திராதிதேவர்களும் அஞ்சும் வண்ணம் வீரகர்ச்சனை செய்தலும். விநாயகப்பெருமானது சிவிகையைச் சூழவந்த வனைவரும் பயந்து நாலுதிசையிலும் ஓடினர். சிலர் மூர்ச்சிதராயினர் சிவிகைசுமப்போரும் விநாயகப்பெருமானுடன் சிவிகியை விடுத்தகன்றனர். உடனே இருவரும் கோரவுருவத்துடன் விநாயகப் பெருமானை வாரியெடுத்துச் செல்வானவரருகில் விரைந்தோடிவந்தனர். அங்ஙனம் வந்தாரைப் பெருமான் இருகரங்களாலும் இறுகப்பிடித்துச் சிவிகையினின்றும் இறங்கிக் கற கற வென்று சுழற்றினர். சுழற்றும்பொழுதே அவர் வன்மையையுணர்ந்த விருவரும் அறியாது வந்தோம் மன்னித்தல் வேண்டும் என்று கூவினர். அபய மடைந்தாரைக் கொல்லுதல் முறையன்மையால் விநாயகப் பெருமா னவர்களைக் கொலைபுரியாது விடுத்தனர். அவர்களும் கவிழ்ந்த தலையுடையராக வந்தவழியே திரும்பிப்போயினர்.

இதனை

"த்ருதௌவிநாயகேஞெளஹஸ்தாப்யாம்பலினௌபலாத்
உத்பாடிதும்தரண்யாம்ஸப்ராமயாமாஸதாவுபௌ
கருணப்தமனுத்பச்சாத்ஸ்தாபயாமாஸபூதலே."

என்பனவாதிய கணேசபுராண வசனங்களாலுணர்க.

வியாக்கிராங்க பின்ன பராக்கிரமம்.

முட்டாட்கஞ்சமிசையன்ன முகிழ்கண்காட்டுங் கமண்டலுவிற்
பட்டார்பாவமொழிதரப்போய்ப் படிந்து முடிந்தபொருளெண்ணித்
தட்டாதேற்ற முனிவர்க்குத் தம்மையருளிச் சார்புலியைக்
கிட்டாவழித்தமயூரேசன் கிளர்தாமரைப் பூஞ்சரண்போற்றி.

(இ-ள்) முட்குவால்களைத் தாளினிடத்துக்கொண்டுள்ள தாமரையின் விரிந்தவலரின் மீது அன்னப் பறவைகள்கு விக்கப்பட்ட கண்களா லுறங்குதலைக் காட்டுகின்ற பிரம்ம கமண்டலுவென்னும் பெயரினையுடைய தீர்த்தத்தின் முழு குவோர் பாவமொழியுமாறு சென்று முழுகிச் சித்தாந்தத் தைக் கருதி யதனைத் தவறாது கேட்ட முனிவர்க்குத் தம துண்மை நிலையை யதன்வழி விளக்கி எதிர்த்துவந்த புலி யையெதிர்த் தழித்த மயூரேசரான கணேசப்பெருமானது விளங்காநின்ற திருவடிக்கமலங்களுக்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

விநாயகப்பெருமான் மயூரேசரா யெழுந்தருளி யிருந்த காலத்தி லொருதினம் பிரம்ம கமண்டலு வென்னும் பெயர்வாய்ந்த சிறந்த தீர்த்தத்திற்சென்று முனிமைந்த

ருடன்நீராடி நியதிமுடித்துக் கார்க்கியரென்னும் பெயரினை ரானமுனிவராதாச்சிர மத்தினுட் கபாட பந்தனஞ்செய்து சிறார்களான வேனைய முனிமைந்தர்களை வெளியே நிறுத்தி உட்சென்று பத்மாஸன மயூராசனங்களி லிருந்து தம்மை நினைக்கிற முனிவர்களைக்கண்டு மகிழ்ந்து அவராற் பூசிக்கப்பெற்று அவர்களுக் குண்மைப் பொருளை யுணர்த் தி எழுந்தருளி இருக்குங் காலத்தில் ஸடா பின்னக னென்று கூறுமொரு கொடிய அசுரன் ஒரு பெரும்புலி யுருவந்தாங்கி வெளியிலிருந்த முனிமைந்தரைக் கொலை புரிவான் வருதலும் அன்னோர் மிகவும்பயந்து கார்க்கே யாசிரமத்து ளெழுந்தருளி யிருக்கு மயூரேசரைக் கூவி நீயே எங்களுக்கன்னையு மத்தனும் நாங்களென்ன குற்றஞ் செய்தோம் விரைந்து வெளிப்படுக பெரும்புலியெங்களைக் கொல்லவருகின்றதே நாங்கள் குற்றஞ் செய்திருப்பின் மன்னித்தருள்க வென்று வருந்திக்கூறுங்காலத்து விநா யகப்பெருமான் கதவை விரைவிற்றிறந்து தாமும் அப்பெ ரும்புலிக்கொப்பான வுருவந்தாங்கி விரைந்துசென்றனர். தன்னையெதிர்க்க மற்றொரு பெரும்புலிவருதலைக் கண்ட அசுரன் விரைந்தோடி ஒரு புதரிலொளித்தனன். அது கண்ட கணேசர் ஒருபெருமரத்தின் மீதேறி அப்புதரின் மீது குதித்து அதன் முகத்தையும் முன்காலையும் பிடித்து வெளியிலிழுத்து வந்து நிசவுருவந் தாங்கித்

தமது பரசாயுதத்தால் அவ்வசுரப் புலியின் காதுகள். மூக்கு கால்கள் வால் என்னு மிவைகளை வெட்டி. என் முகத்தெதிரில் நில்லாதேயென்று கூறிவிடுத்தனர். அசுர னுஞ்சிறிது தூரஞ்சென்று தன்து நிசவுருவ மெய்தினன். அதனிலும் மூக்குக்காது முதலியபின்னப்பட்டே இருக் கக்கண்டு தன்விதியைநொந்து போயினன்.

இதனை

ஏதஸ்மின் அந்தரேதைத்யோமஹாபலபராக்ரமஃ
யஸ்யசப்தேமஹதாகம்பதேபுவனத்திரயம்
ஸடாபின்னசஞேதஷ்டோவ்யாக்ரரூபிஸமப்யகாத்
வ்யாதாயவதனம்கோரம்க்ரஸன்னிவஜகத்ரயம்
ஸதுவாரம்விநிர்ப்பேத்யமயூரேசம்தமாயயௌ
சார்த்தூலசதிர்சம்ரூபம்க்ருத்வாயாத்ஸோபிதம்க்ஷணத்
பபாலஸஹஸாவ்யாக்ரலக்ஷேயயௌசஸ:
ப்ரயன்ஸதுவனம்யாதோநிகுஞ்சேலீயதாஸ்திவான்
தேவோவ்ருக்ஷஸமாருஹ்யகுஞ்சமத்யேபபாதஹ
உப்பாப்யாம்வதனம்தஸ்யகராப்யாம்ஜக்ருதேத்ருடம்
அன்யாப்யாம்பஹிரானீயததப்பரசுனசினத்
நாஸிகாம்சாவக்ஷயிதௌபுச்சமக்ரபவாவுபௌ

என்பனவாதிய கணேச புராண வசனங்களா லுணர்க.

மங்களாசுர சங்கார பராக்கிரமம்.

பவளவார் சடையிற் பான்மதி யணிந்த
பால லோசன னிடத் துற்ற
துவளுநூ லிடையாள் சுணங்கிணை
கொம்மைத் துணைமுலைப் பாலருந்துண்டு
தவளவெண் பொடியு முப்புரி நூலுந்
தயங்க நின்றெதிர்த்த மங்களனைத்
துவளவன் றெடுத்துக் கோறலைச் செய்த
தூயமா யூரனைத் தொழுவாம்.

(இ-ள்) பவளம்போலு நீண்ட சடையிற் பால்போலும் வெள்ளிய சந்திரனை யணிந்த நெற்றிக் கண்ணரான சிவபெருமான திடப்புறத்தி லெழுந்தருளி இராநின்ற துவளா நின்ற நூல்போலு மிடையினை யுடைய உமாதேவியாரின் சுணங்கு பொருந்திய பருத்த உபய தனங்களிலுள்ள பாலினை விடாமற் புசித்து வெள்ளிய திருநீற்றுக் காப்பும் முப்புரி நூலும் விளங்குமாறு தூய மயூரேசரென்னுந் திருநாமத்துட னெழுந்தருளி நின்று தம்முட னெதிர்த்த மங்களாசுரனை நாசஞ் செய்த விநாயகப் பெருமானை வணங்குவாம். எ-று.

இதன் விவரம்.

திரிசந்தித் தானத்தில் உமாசுதராய் மயூரேச நாமத்துட னெழுந்தருளி இருந்த காலத்திற் றம்முடனுலவப் புண்

ணியஞ்செய்த முனிமைந்தருட னொருசோலையிற் தருப்பை சமித்து முதலிய சேகரிக்கு முனிவர் முதலியோர் கண்டு மகிழுமாறு வாலலீலை செய்திருந்ததனைக்கண்டு பொறுமை கொண்ட மங்களாசுரனென்று பெயருள்ள ஒரு கொடிய அசுரன் ஒரு காட்டுப் பன்றியினுருவந்தாங்கி மலைகளையும் மரங்களையும் பெயர்த்தெறிந்து மேகமுங் கடலுமிகவு நாணும் வண்ணம் பேரொலிகாட்டி ஆரவாரஞ்செய்து வருதலைக்கண்ட முனிச்சிறுர் முதலியோர் அஞ்சி யோடுகின்ற சமயத்தில் கணேசப் பெருமான பயாஸ்தமளித்து அப் பன்றியி னெதிரேசென் றதனுடன் போர்புரிந் ததனைப் பிடித்துச் சுழற்றி யடித்துத் தூக்கியதன் கோரைகளான தந்தங்க ளிரண்டையும் பிடுங்கிக் கால்களாற் பலவுதைகள் விடுத்தனர். அவ்வுதைபட்ட மங்களன் தனது சுயவுருவத்துடன் பத்து யோசனை விஸ்தீரண முள்ளவனாக விழுந்து இறந்தொழிந்தனன்.

இதனை

ஏதஸ்மின்னந் தரேதைத்யோ மங்களஸம்ஞக:
கராள வதன:க்ரோடீ விஜேதா பரமாத்புத:
வராஹரூபீ பலவான் தந்தந்தச் சின்ன மஹீருஹ:
ததாரதம்தயோர் துஷ்டம் ததாஸுரதானவம்
அதாபரேண ஹஸ்தேனததார தரபோத்ரகம்
பாடயாமாஸ ஸஹஸாவம்ச க்ண்டமி வார்ப்பக:

என்பனவாதிய கணேசபுராண வசனங்களா லுணர்க.

கமலாசுர சங்கார பராக்கிரமம்.

மலைநடந் தென்னச்செல்லு மாக்குழை யுடையராகி
அலைகட லென்னவந்த வரக்கருட் டலைவனை
விலையறு மணிகொண்மோலி விளங்கிய கமலன்செய்ய
தலையறுத் துலகங்காத்த தலைவன தாளிற்றாழ்வாம்.

(இ-ள்.) மலைகள் நடந்து சென்றாற்போலுஞ் செலவினை யுடைய யானைகளைக் குண்டல மாகவணிந்த காதினராகி அலையினை யுடைய கடல்போல மிகுதியினராக வந்த வரக்கருக்குத் தலைவனை விலையற்ற மணிமய மான மகுடமணிந்து விளங்கிய தலையினை யுடைய கமலாசுர னுடைய செவ்விய தலையினையறுத்து உலகினைக் காத்தரு ளிய விநாயகப் பெருமானது திருவடிகளை வணங்குவோ மாக. எ-று.

இதன் விவரம்.

சிவபெருமானும் உமாதேவியாரும் இடப வாகனத்தி னும் கணேசப்பெருமான் மயில் வாகனத்திலும் ஆரோ கணித்துத் திரிசந்தி க்ஷேத்திரத்தினின்றும் ஆகாயமார்க்க மாக எழுந்தருளுகின்றகாலத்துப் பன்னிரண்டக்குரோணி

சைனியங்களுடன் கமலாஸுரனென்பவன் ஆயுதபாணியாக வருதலைக்கண்ட முனிவருந் தேவரும் கணங்களும் மயூரேசரான விநாயகப் பெருமானைப்பார்த்து கமலாசுரன் வருகின்றானே என்செய்வதென்றதற்கு முனிவீர் அஞ்சன்மின் என்றந்தையை வணங்கி அனுக்கிரகம் பெற்றுச் சென்றவனை யழிக்கின்றேனென்று கூறிச் சிவபெருமானை வணங்கிப் போருக்கு விடையருளல் வேண்டுமென்றவுடனே சிவபெருமான் ஒரு சூலமொன்றை யளித்துத் தமது திருக்கரத்தினை யவர் சிரமீதுவைத்து ஆசீர்வதித் தனுப்பினர்.

தந்தையினிடம் விடைபெற்றுச் செல்லு மைந்தரான மயூரேசர் தமது சத்தியாலனேகமான சைனியங்களைப் படைத்து அவர்களை அசுரர்களுடன் போர் புரியுமாறு ஆக்கினையிட்டனர். கணேசப் பெருமானிடம் தோன்றிய அனேகம் ஆயிரமான பூதவீரர்கள் மிகுந்து நெருங்கி வருதலைக்கண்ட கமலாசுரன் ஒரு பேருருவங் கொண்டு நிமிர்ந்து பார்த்து மயூரேசரின் வருகையை யறிந்து கடுங் கோபங்கொண்டு தனது சைநியங்களைப் பூதசைநியங்களுடன் போர்புரிய வாக்கியாபித்தான். உடனே அசுரவீரர்கள் பூத வீரர்களுடனே நெருங்கித் தொந்தயுத்தம் புரிந்தனர். இவ்வாறு செய்த யுத்தத்தில் அசுர சைநியங்கள்

பூதசைநியங்களா விறந்தொழிந்தன. இங்ஙனம் இறந்தொழிந்த சைநியங்களைக்கண்ட கமலாசுரன் வாளேந்திய கையினனாய் விநாயகப்பெருமா னெதிரிலெய்தி யவருடன் போர்செய்யத் தொடங்கினான்.

இவன் தம்மைக்கிட்டிப் போர்புரிய வருதலைக்கண்ட மயூரேசர் தமது மயில்வாகனத்தினை அவனெதிரே விடுத்துச்சென்றனர். இவர்மயில்வாகனத்தினில் வருதலைக்கண்ட வவன் விரைவாக வில்லேந்தி நாகாஸ்திரத்தினை யபிமந்திரித்து விடுத்தனன். அது அநேகம் பாம்புருவமாகிச் சீறிவருதலும் பெருமான் அதனைக்கண்டு அசுராதிபனே! நின்னைமெச்சினேன். நின்போலிங்ஙனம் அரும்போர் புரிபவர் யாவரெனத் தாம் கருடாஸ்திரப் பிரயோகஞ்செய்து அரவங்களை யழித்துச் சக்கிராஸ்திரமெனு மோரத்திரத்தினைவிடுத்து அவன் சைனியங்களி லனேகரை நாசஞ்செய்தனர். இதுகண்டகமலன் கட்கபாணியாய் விரைந்து கஜானனரை யடைந்து போருக்கு நின்றனன், இவனதிச்செயலினைக் கண்ட பெருமானுடனே பாசாயுதமேந்தி நீ சென்றிவன் கைவாளினையழிப்பாயாகவென்று விடுத்தனர். அதுவும் திக்குவிதிக்குகளிலெல்லாந் தன்னொளியைப் பரப்பிச்சென்று அவன் கைவாளினை அழித்துத் திரும்பியது. வாட்படையைப் பரசழித்ததைகண்ட கமலன் விரைந்து

விற்படையேந்தி அளவற்ற பாணங்களை விடுத்துப் பூமி முற்றினு மிருட்டாக்கிப் பூதவீரரை வருத்தினன். உடனே விநாயகப்பெருமான் வேறுபாணங்களாலவன் பாணங்களை யழித்துப் பாசத்தாலவன் சேனாபதி முதலியவர்களைக் கட்டியிறுக்கி யழித்தனர். அதுகண்ட கமலன் மிகுந்த கோபத்துடன் விநாயகப் பெருமானைப் பார்த்து ஹேசிறுவ! ஏனென்னுடன் போர்புரிய வந்தனை யுன்றாலென்னு கும் நின்னைப்பெற்ற வன்னையின் மடியிற் சென்றிருந்து பால் குடிக்கக்கடவை அற்பசிசுவான வுன்னுடனெவ்வாறு போர்புரிவது. யான் காலைத் தூக்கிவைத்தால் ஆதிசேஷன் முதலியவர்களு நடுங்குவார்கள். என் கைக்குத்தினால்மேரு மலை முதலிய பெருமலைகளெல்லாந் தூளாகும் அத்தகைய வென்னுடன் போர்புரியுமாற்ற லுனக்கில்லையென்றன னது கேட்ட விநாயகப்பெருமானதிககோபத்துடன் ஹே! துர்ப் புத்தே! பிசாசைப்போல என்னிட நின்றேன் வீண்மொழி கூறுகின்றனை நீ இதுகாறுஞ்செய்த சண்டையில் தோல்வி யையன்றி, வெற்றியை யெம்மிடம் பெற்றாயில்லை, எனக் குக் கோபமுண்டானால் மூவுலகமும் ஜ்வாலையால் வருந் தும் வீணாய்ப் பேசுவதிலென்ன? சண்டை செய்வதானாற் செய்தி இன்றே வுன்னையும் காரத்தினாலேயே யமனுல கனுப்பி விடுவேனென்றனர். உடனே கமலன் உலகனைத்து நடுங்கத்தக்கவண்ணம் ஒரு கர்ச்சனைசெய்தனன். அக்கர்ச

சனையாற் ப்ரமதகணங்களிற் பலர் மூர்ச்சிதராயினர். இங்ஙனங் கர்ச்சித்தவன் வளைக்கப்பெற்ற வில்லில் அம்புகளை வைத்து மழை பெய்வதுபோல விநாயகப்பெருமான் மீது விடுத்தனன். இங்ஙனம் அம்புமழை பொழிவதனைக்கண்ட பெருமான் சில பாணங்களை விடுத்தவைகளையழித்து விசுவரூபங்கொண்டு நின்றனர். விசுவரூபத்தைக்கண்டு ஆச்சரியமுற்றுப்பயந்து ஓடத்தொடங்கிய கமலனுடைய சிகையை யெட்டிப்பிடித்து நிறுத்தி அவனைப்பார்த் திப்பொழுதென் செய்வாயென் றிவ்வாறுகூறி விசுவரூபமொழித்துப் பத்தாயுதங்களை யேந்தினராகி அக்கமலனுடைய சரீரத்தினைப் பல பிளவுகளாகப் பிளந்தனர். பிளந்த விடங்களினின்று மொழுகுமொவ்வொரு சோரித்துளியிலு மொவ்வோரசுரருண்டாகிப்போர்புரிந்தார்கள். அங்ஙனந்தோன்றியவர்கள் அக்கமலன் எந்த வுருவினனோ அந்த உருவினராயும் அவனெவ்வளவு வன்மையாளனோ அவ்வளவு வன்மையாளராகவும் இருந்தார்கள். இங்ஙன முண்டாகு மிவர்களைக்கண்ட பெருமான் திருவுளக்களிப்புடன் தமது சத்திகளான சித்திபுத்திகளின் வழி மூன்றரைக்கோடிப் பூதவீரரைப் படைத்து அவர்களைப்பார்த்து நீங்களுங்கள் பசியடங்க இவ்வசுரர்களைத் தின்னுங்களென வருளிச் செய்தனர். அம்மொழிகேட்டபூதர் அசுரனிரத்தத்திலுண்டான அரக்கரனைவரையு முண்டு தொலைத்தனர். உடனே

கணேசர் கமலனைப்பின்னரும் வாள்கொண்டு வெட்டினர் அப்பொழுது ஒழுகின சோரியினின்றும் முன்னிலு நூறு பங்கதிகமான அசுரர்கள் பிறந்தார்கள். அவர்களையும் பூதர் விழுங்கியொழித்தனர். பின்னர் விநாயகப்பெருமான் சிவபெருமானளித்த சூலத்தினை எடுத்து விடுத்தனர் அது சென்று கமலனைக் கொல்ல முயலுகலுமவன் நாற்றிசை யிலுமோடி மலைகள் முதலியவைகளைத் தூளாக்கித் திரிந்த னன் அவ்வாறோடிய வவனை விடாது தொடர்ந்து சென்ற சூலவேல் அவன் தலையை யுடைத்தறுத்து அவனுடலை இரண்டாகப் பிளந்து நெடுந் தூரத்திற் றள்ளி யவனை மீட்டு மெழாமல் வதைத்தது. இவன் மரணமடைந்த தனைக்கண்ட தேவர்கள் முனிவர்கள் முதலியவர்கள் பெருமானை கண்டு துதித்தார்கள். உமாதேவியாரும் சிவ பெருமானும் கணேசப்பெருமானை யணைத்து முதுகுதை வந்து மகிழ்ந்தார்கள்.

இதனை

கமலாஸுர மாயாந்தம் தாளீதூஸரிதாம்பரம்
வினஷ்டேஂ பகுதாஸைன்யே குரூராச்வம் தம்தைத்யராட்
கட்கபாணிர் யயௌர்யோத்தும் மயூரேசம் ருஷான்வித:
சிகாமாக்ரம்ய தேவோபித் ருத்வாப்ரோ வாசதம்புன
யுடபதாஸ்யசரீரம்ஸ விக்னராட்ஸத்ரகாதத:
தத:ஙின்னே மயூரேச சூலமுத்யம்ய வேகவான்
வேகேன பதிதோதைத்ய தேஹம்பித்வாத் விதாகரோத்

என்பனவாதிய விநாயகபுராண வசனங்களா லுணர்க.

பிரமாத்துவமிச பராக்கிரமம்.

காரணப் பொருளைப் பின்வர்க் காரியப் பொருளாக் காண்டற்
காரண முணர்ந்தோ ராலு மாவதன் றென்னு தந்நா
ளோர யன்னை யாகி யெய்திய வரக்கி தன்னைத்
தாரணி தனிற் சாகுத்துந் தந்தி தாடலைமேற் கொள்வாம்.

(இ-ள்) நித்தியமான காரணப்பொருளினை அழிவு பாட்டினையுடைய காரியப்பொருளாகச் சித்தாந்தஞ் செய்தற்கு வேதநூற்புலவராலு மாவதன்றென்று நில்லாமல் அக்காலத்தி லழகியமாதாவாக வந்த வரக்கியை யுலகத்தில் சாமிறு குத்திய கணேசப் பெருமானுடைய திருவடிகளைத் தலைமேற் கொள்வாம். எ-று.

இதன் விவரம்.

சுரகுல வைரியான பிரமரை யென்பாளோ ரரக்கி கணேசப் பெருமானை வஞ்சனையினு லழிக்கக்கருதி "அதி ரூபலாவண்ய நிலையா ஸர் வாலங்காரசோபினி" என்றபடி மிகுந்த பேரழகுக் கிருப்பிடமானவளாயும் எல்லாவித அலங்காரங்களாலும் விளங்கப் பட்டவளாயும் " ஆகதா திதிரூபேண பாஸ்யந்திதி சோதச" என்றபடி பத்துத்திக்குக்களிலும் தன்னொளிவீச அதிதிரூபத்துடன் வந்த

னள் இங்ஙனம் மாய அதிதி ரூபத்துடன் காசிமன்னன் மனைவியின் அந்தபுரவாசலில் வந்து நின்றவளைக் கண்ட தாதிகள் மன்னன் மனைவியான அம்பைக்குணர்த்த அவள் மாதுளம் வித்துப்போலும் பற்களையும், கொவ்வைக்கனி போலும் அதரத்தினையும், சிற்றிடையினையும், விளங்குகின்ற கமலநயனங்களையும், முத்துமாலைகளுடன் விளங்குகின்ற தனங்களையும், உடைய விவளைக்கண்டு பலவாறாலோசித்து தேவஜனனியான அதிதி யென்றுணர்ந்து உள்ளழைத் துபசரித்துப் பீடத்திலிருத்தித் தேவமாதாவே! இவ்வளவு தூரம் பொன்னடி நோவ எழுந்தருளிய தெதற்காக என்றுபசாரமாக வினவித் தங்கணவனை யழைப்பித்துக் காட்டினள். மன்னவனும் லோகமாதாவே நீ யிங்கெழுந்தருள நான்செய்த பாக்கியமென்னையோ்வறிகிலேன் என்றுபசாரங் கூறினன். அதுகேட்ட மாயவதிதி மிகுந்த தாகத்துடன் என்மகன் மகோற்கடனெங்கே அவனையின்றிக் கணநேரமும் இருக்க வியலாதவளாகின்றேன் அவனெங்கே யென்றவுடனே மன்னவன் சிறுவர்களுடன் வீதியில் விளையாட்டி லிருந்த கணேசப்பெருமானையழைத்து அவர் திறங்களை யுரைக்கமுடியாதெனப் பலவாறுரைத்தனன். பின்னர் விநாயகப் பெருமானைக் கண்ட மாயஅதிதி "விநாத்வயா க்ஷணோமேதேயுககல்பசமாப்வத்" நின்னையின்றியுள்ள ஒருகணப்பொழுது எனக்

கு யுகங்களாகவும் கல்பங்களாகவும் ஆகின்றது. என்று துஷ்ட புத்தியுடனவள் கூறினள். இவள் மொழிகளைக் கேட்ட விநாயகப்பெருமான் விருப்பத்தில் மிக்காரைப் போல் அவள் மடியிலிருந்தனர் உடனே அவள் இரகசியமாகக் கொண்டுவந்துள்ள மோதகத்திலொன்று கொடுத்து விஷங்கலந்த மற்றொரு மோதகத்தையும் கொடுத்தனள். இரண்டையும் பெற்றபெருமான் இன்னமொரு மோதகந் தருதி யென்று பலாத்காரஞ் செய்தனர். அப்பொழுது அரசையும் காசிராசனும் அன்னபெழுந்தருளுக வெழுந் தருளுக குமாரனுடன் போசனஞ் செய்தற்கு என்றனர் உடனே எழுந்து செல்வான் முயன்றனள். அவள் அப் பொழுது பெருமான் அவள் மடியில் மேரு மலையின் பாரமெல்லாங் கொண்ட வுருவினராக இருந்தனர். இதனால் தொடை யசைக்கப் படாத மாய வதிதி விடுவிடு எழுந்திருப்போ மென்றனள். அதற் கெம்பெருமான் எத்தனை நாளாயிற்று நின்மடியில் யானுறங்கிக் கொஞ்சந் தூங் கித் தானெழுந் திருப்பே னென்று தூங்கத் தொடங் கிக் கைகளையும் கால்களையு நன்றாய் அவள் மீது நீட்டி மூச்சு விடுதலும் வாங்குதலு முடையவராகக் கிடந்தனர். பின்னரவள் எழுந்திருக்க முயலுதலும் கரங்களாலும் பாதங்களாலும் நித்திரையி லுதைப்பவர்போல வுதைத்த னர் உதையாலவள் நாசமுற்றனள். அவள்கதி யவ்வா

றுய பின்னர் பெருமானெழுந்துவருக எழுக போசனத்துக்கென்று பலவாறு கூறியும் அவளெழாமையின், அவள் தலையில் தமது திருவடிகளாற் செவ்வனே உதைத்தனர். இதனைக்கண்ட காசிராசன் முதலியவர்கள் இவ்வாறு மாதாவை யுதைத்துக் கொன்றுற் பிதாவுக்கென்னபதில் நாங்களுரைப்போ மென்றுகூறி வருந்தினுர்கள். இங்ஙனம் சனங்கள் கூறுங்காலத்திலவ்வரக்கியும் இறந்து "தசயோஜன தேஹேன வ்யாபிதம் பூதலம்மயா" என்றபடி பத்துயோசனை விஸ்தீரணமான கோர வுடலுடன் விழுந்தழிந்தனள். இவளுடலினைக்கண்டு அநேகர் பயந்தோடினுர்கள். பலரிவ்வாச்சரியங்காண வோடிவந்தார்கள். காசிராசனும் அவன் மனைவியும் மற்றையோருங் கரங்களைக் குவித்து விநாயகப்பெருமானது சரணகமலங்களை வணங்கிப் பலவாறு துதித்தார்கள். இதனை இடையிலிடையே காட்டப்பட்ட விநாயகபுராண வசனங்களா லறிக.

துராசத மதன பராக்கிரமம்.

கரசெல்லுங்கோடி யிணையினு முறழாக்கரியவர் பெரியவராகத்
தராதலமுழுதும் புயவலியதனுற் றனதெனக்கொடுகெடைமுறையில்
இராசதமிகுந்து மறைமொழிகடந்தவ் வெழின்மிகுகாசியிலிருந்த
துராசதற்செற்றதுணையடியுடைய துண்டிதனடியிணைதொழுவாம்.

(இ-ள்.) கோடி யானைகளொன்று சேர்ந்தாலு மிணையாகாத வன்மையினையுடைய விருணிறவசுரர் பெரியவராகும் வண்ணம் பூமிமுழுதையுந் தன்னதாகக்கொண்டு அதம மார்க்கமாக ரஜோர்குண மிக்கானய் வேதவசன வரம்பைக் கடந்து அந்த அழகிய காசியிலிருந்த துராசத னென்பானை யழித்த உபயபாதங்களை யுடைய துண்டிராச கண பதியின் உபயசரணார விந்தங்களைப் பணிவோமாக. எ-று.

இதன் விவரம்.

கைவர்த்த மென்னுந் தேசத்திலுள்ள முகுந்த புரமென்பதிலிருந்தவனும் பஸ்மாசுரனென்னும் பிரசித்த வசுரனுக்குப் புதல்வனும் சிவபெருமானைக் குறித்துப் பலவருடங்கள் அருந்தவஞ்செய்து அரிய பெரிய பல வரங்களைப் பெற்றவனுமான துராசதனென்னும் அசுரன் அனைத்துலகங்களையும் தேவபதவிகளையும் தன்னதாக்கி அரசு செ

னுத்தி வருங்காலத்துத் தேவர்களும் முனிவர்களும் இவன் செய்யுங் கொடுமைக்கஞ்சி காசிநகரடைந்து வாழ்ந்தார் கள். தூதர்களா லதனையுணர்ந்த அசுரன் தனது சைநி யங்களுடன் அக்காசிக்குச்சென்று தேவராதியரை ஆங்கு நிலைக்க வொட்டாமலோட்டித் தனதரசாக்ஷியைக் காசிநகரி லாக்கியிருந்தனன். இவனைக் காசி நகரினின்றும் விலக்க வேண்டுமெனவும் அழிக்கவேண்டுமெனவுங்கருதித் தேவர் கள் பன்முறை போர்புரிந்து நிலையழிந் தாலோசனைசெய்து அனைவருமாகக் கேதாரக்ஷேத்திரத்தை யடைந்து அங்கெ ழுந்தருளியிருந்த உமாதேவியாரை வணங்கித் தங்குறைக ளையுரைத்தனர். அவரும் அம்மொழிகளைக்கேட்டு உண்ணு டியுற்ற சமயத்தில் அவ்வுமாதேவியார் திருமுக மண்டலத் தினின்றும் விநாயகப்பெருமான் வெளிப்பட்டு அன்னே! என்னலாக வேண்டுவதென்னை யெனலும் உமாதேவியார் நீ காசியிலிருந் தித்தேவராதியரை வருத்துகின்ற துராசத னென்பானை யழித் தின்னோர்க்கின்ப மருளுவாயாக வென வருளிச்செய்து தமது சிங்கவாகனத்தையும் அளித்து வக் கிரதுண்டரென நாமகரணஞ் செய்தனுப்பினர். தம்மைத் துதிக்குந்தேவர்முதலியவர்களுடன் காசிநகரத்தையடைந் து போரைக்குறித்து நிற்றலும் இச்செய்தி யறிந்த துராச தன் கடுங்கோபத்துடன் தனது அசுர சைனியங்களுட னெய்தி விநாயகப்பெருமானைப்பார்த்து ஒருவனுகவுஞ் சிறு

வருகவும் உள்ள நின்னுடன் யானெவ்வாறு பொருவதென் றுகூறியவுடன் ஐம்பத்தாறு கணேச மூர்த்தங்களை யுண் டாக்கி யெதிரினிறுத்தினர், அவ்வன்பத்தாறு கணேசர் களும் துராசதனது சேனைகளை யனேகமனேகம் கணங்க ளுடன் நின்று பொருதழித்தனர். துராசதன் விநாயகப் பெருமானுடன் வெகுதினம் தேவாஸ்திரப் பிரயோகங் களாலும் மல்லுயுத்தத்தாலும் பொருது தனது ராக்ஷஸ மாயையால் அனேகம் விசித்திர ரூபங்களைத் தாங்கிப் பொருதனன். விநாயகப் பெருமானும் அவன் கொண்ட வுருவங்களைக்கொண்டு போர்புரிந் தவன்றலைகளைப் பன் முறையறுத்து மவை பன்முறை தோன்றுதலைக்கண்டு சிவ பெருமானிவனுக்கு மனிதர் தேவர்முதலிய எந்தவித உயிர் வருக்கத்தாலும் எந்தவித ஆயுதங்களாலும் அழி வின்மையாக வரமளித் திருத்தலைக்கருதி அகில வுயிரினு நிறைந்து நிற்பதான விசுவரூபங்கொண்டு ஒரு திருவடியை யவன் தலைமீதும் ஒரு திருவடியைக் காசிப்பட்டணத் துவாரத்திலும் வைத்து அவனை நன்றாகத் தேய்த்தனர். தேய்த்தவுடனே அவன் செருக்கிழந்து பெருமானைத் துதித்து அவரால் காசியின் காவற் பூதங்களி லொருவ னாகிப் பூசை கொள்வோனாயினன். தேவாதி யனைவரும் விநாயகப் பெருமானைத் துதித்துப் பயமின்றிக் காசியாதி யிடங்களில் வாசஞ்செய்தனர்.

இதனை

ததஸ்து வரகர்வேண சிவதத்தேன தைத்யராட்
கைவர்த்தகானும் விஷயே விவஸத் பத்மகேபுரே
முகுந்த புரமித்யே வம்க்யா தம்லோ, கேஷு ஸர்வதஃ
யஸ்மின் பஸ்மாஸுரோ ராஜா பூர்வ மாஸீத் பலான்விதஃ
தத்ரஸ்தித் வாத்ரிபுவனம் சாஸ்தி கர்வாத் துராஸதஃ
ஞாத்வா பராக்ரமம் தஸ்யவக்ர துண்டஸ்ய தைத்யராட்
ஷட்பஞ்ச ஸன்மிதா மூர்த்திச் சகாரா ஸௌஸ்வதேஜஸா
தஸ்மாத்யோ மாத்தமாத்தாஸ் யேவைவிராட் ரூபமுத்தமம்
ததோ வைராட்ரூ பேணததார கரேணதம்
ஏகபாதேன தஸ்தௌஸ காசீம்தாம் ரக்ஷிதும்பலாத்
ஏகம்பா தந்துதைத்ய ஸத்தார மஸ்தகேததஃ
உவாசதைத்யம் ரேதைத்ய வராச்சைவான் னதேமிர்தி
அதோஸ்மின் நகரேதிஷ்ட பர்வதே வஸுஙிச்சல:
துவாரபூத: புரஸ்யாஸ்யயத: பூர்வம் திர்சிஸ்தவ
துஷ்டானும்பீடிதோஙித்யம்ஙித்தியம்மேஸன்னிதிஸ்தவதைத்யோபீ

என்பனவாதிய கணேசபுராண வசனங்களா லுணர்க.

தேவாந்தக சங்கார பராக்கிரமம்.

வில்லார்நுதலுங் குவளைமலர் விழியுங்கொண்ட சித்தியுடன்
எல்லாவுலகும்பணி கேட்பவெழிலார் சிங்கமேலாகி
நல்லார்பணியும் புத்தியுடனயந்து பணிவார்க்கின்பருளிப்
பொல்லாத்தேவாந்தகனையுயிர்போக்கும்பரமன்கழல்போற்றி.

(இ-ள்) விருப்பத்துடன் வணங்குமவர்களெதிரே வில்லையொத்த புருவத்தினையும் நீலமலர்போன்ற கண்களையும் உடைய சித்தி புத்தியென்னுஞ் சத்தியர்களுடன் அனைத்துலகி லுள்ளாரும் தம்பணி கேட்ப அழகிய சிங்கத்திலெழுந்தருளி அவர்கள் விரும்புவன வற்றையளித்துப் பொல்லாதானாகிய தேவாந்தகனை வதைத்தபரமனது திருவடிகட்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

தேவலோகத்தி லிருந்தரசு புரிந்தவனும் நராந்தகனென்பவன் சகோதரனுமான தேவாந்தக னென்பவன் தன் மாதாபிதாக்களாற் கொண்டுவரப்பட்ட சகோதரன் சிரசைப்பார்த்து நனிவருந்திச் சகோதரனை யிவ்வாறு செய்தவன் யாவனென்று வினவிக் காசிப குமாரனான பார்ப்பன னெனவுணர்ந்து தன் அன்னை தந்தையருக்குச் சமா

தானமுரைத்துத் திரண்ட அசுரசைனியங்களுடன் போர்க்கோலங்கொண்டு விநாயகப்பெருமா னெழுந்தருளி யிருக்கும் காசி நகரையடைந்து போர்புரிவான் ஆரம்பித்ததனை யறிந்த காசிராசனும் அவன் மந்திரியரு மாலோசனை செய்து விநாயகப்பெருமானை யடைந்து வணங்கி நின்றனர். பெருமானவர்கள் குறிப்பினை யுணர்ந்து விசேடமென்னை யென்று வினவினர்.

அதுகேட்ட வரசனுமமைச்சரு மடிவணங்கி இறைவனே நராந்தக னிறந்தானெனவறிந்த அவன்சகோதரனான தேவாந்தகனென்பான் தீச்சுவாலை வீசுமுடலினரான அசுரரின்கூட்டத்துடன் சண்டையிடுவான் வந்து இக்காசியைச் சூழ்ந்துள்ளான் இவன் இறந்தழிந்த நராந்தகனிலும் மிக்க வாற்றலினை யுடையான் அவனைப் போல விவனையும் அழித்தொழித் தடியேங்களை யாளல் வேண்டுமென்றனர். இன்னோரிவ்வாறு விண்ணப்பம்செய்தலும் பெருமானவ்வாறே யாகுகவென்று அருளிச்செய்து பேருருவெய்திச் சிங்கவாகனமேறிச் சித்தி புத்தியருடன் ஆகாயமார்க்கமாக் காசிநகரின் புறத்திலெய்தி நின்றனர் உடனே தேவாந்தக சைனியங்கள் திரிலோகமு நடுங்கும் வண்ணம் அட்டகாசஞ் செய்தனர் அவ்வொலி கேட்ட சித்திதேவியாரின்றவனை வணங்கியவரருளினால் அட்டமகாசத்திகளை யுண்டாக்கினர். " அணிமாப்ராதம் ப்ராப்தா

கரிமா ததனந்தரம் மஹிமா லகிமாசாபி ஸம்ப்ராப்தே தத னந்தரம் ப்ராப்திச்சைவது ப்ராகாம்யம் வசித்வஞ்சஸமாய யௌ ஈசித்வம்ததநுப்ராப்தம் தாஸாம் ஸைன்யமபூதனு" என்றபடி அட்டசத்திகள் தோன்றினர். அவர்களின்வழி யனேகம் சதுரங்கசைனியங்கள் தோன்றின. தோன்றின சைனியங்களனைத்தும் பூதசைனியங்களாக விருந்தன.

இங்ஙனந் தோன்றிய பூதசைநியங்களும் அசுரசைநியங் களுநெருங்கி நின்று போர்புரிந்தன. இங்ஙனம் புரியும் போரிலிறந்தொழியும் அசுரரனைவரையும் அசுர குருவான சுக்கிரனென்பவன் மிருத சஞ்சீவினியென்னும் மந்திர சித்தியா லுயிர்ப்பித் தனுப்பினன். இறந்த அசுரர்கள் எழுந்து பேர்ர் புரிவதனைக்கண்ட அட்டமா சத்திகளில் ஈசசுத்தியானவள் தன்னனையா ளொருத்தியை முகத்தின் வழி தோன்றுவித்து துட்ட சேட்டிதனான சுக்கிரனை எடுத் து விழுங்கிச் செல்லுமாறு கடாக்ஷத்தாற் குறித்தனள். உடனே பேருருவுடன் தோன்றிய வம்மாயாசத்தி யானவள் விரைந்து நடந்து சுக்கிரனருகிற்சென்று அவனையெடுத்து வாயிலிட்டு விழுங்கி வயிற்றிலாக்கி அந்தர மார்க்கமாகச் சென்றனள். அதன்பின்னர் இந்த அசுர சைனியங்கள் உயிர் பெற்றெழாமல் இறந்தவர்களாகக் கிடந்தார்கள். இதன் பின்னர் பிராகாமிசத்தியும் காலாந்தகனென்னும் அசுரனும் ஒருவருக் கொருவர் போர்புரிந்ததில் காலாந்தகன் போரின்மீறி நிற்றலும் வசித்துவ சத்தியானவள் பிரா

காமிக்குத் துணையாக வந்தொரு மலையை யெடுத்துக் காலாந்தகன் மீதெறிந்தனள். அதனால் காலாந்தகன் சிதறிய சோரியுடன் விழுந்தனன். அவ்வாறு விழுந்த வனுக்குச் சகாயமாக முசலன் பல்லன் என்பார் இருவர் அங்குவந்து பூதசேனைகளை வருத்தா நிற்பப் பிராகாமிக்கு துணையாக ஈசத்துவ வசித்துவ சத்திகள் துணையாகி நின் றார்கள் ஒருவரை யொருவர் மலைகளாலெறிந்து கொல்ல முயன்றனர். அணிமாசத்தியானவள் தன்னுடனெதிர்த்த கர்த்தமனென்னு மசுரனுடைய சிகையைப்பிடித்துப் பூமி யிலறைந்து முகத்திற் சோரியொழுக விடுத்தனள் மகிமா சத்தி லகிமாசத்தி கிரிமாசத்தி யென்பவர்கள். மரக்கூட் டங்களால் யக்ஷமாஸுரன், தாலஜங்கன் தீர்க்கதந்தனென் னும் அசுரர்களை யடித்துத் தள்ளினார்கள். உடனே ரக்த கேசன், கண்டாசுரன் துர்ஜயனென்னு மூன்றசுரர்கள் அசுர சைனியங்களுடன் ஆரவாரங்காட்டி வந்தனர். இவர்க ளின் வருகையைக்கண்ட வசித்துவ சத்தியும், சித்திசத்தி யும், புத்தி சத்தியும் விரைந்துசென்று அவர்கள் மண்டை கள் பிளந்துபோமாறு அவர்கள் நெற்றிகளில் கைகளாற் குத்திப் பூமியிற்றள்ளினர். பின்னர் விநாயகப்பெருமானே ஜயமுள்ளவரென வனைவருங் கர்ச்சனை செய்தனர். இவர் களின் கர்ச்சனையைக்கேட்டு அசுரர்களுங் கர்ச்சித்தனர். இங்ஙன மிருபுறத்தவர்களும் கோலாகலத் தொனியுடன் கைகலந்து போர்புரியுங்காலத்து சூரியனஸ்தமனமானான். உடனே இருதிறத்தரும் திவ்விய வௌஷதக்ராகிகளாய் பரஸ்பரம் மூன்றுநாள் அகோராத்திரம் போர்புரிந்தனர்.

இதனைவ்விடத்திலொரு ரத்தநதி யுண்டாகியது. அப்பொழுது தேவாந்தகன் சிந்திக்கின்றான். ஏகனாக வந்தவிவன் சத்திகளின் வழி அட்டசத்திகளுண்டாகிப் போர் புரிந்தனர். இவர்களை நானழித்து விடுகின்றேன் பின்னர் பாலன் தனியனாவா னப்பொழுதவனைப்பிடித்து நமதரண்மனைக்குக்கொண்டுபோய் விடலாம். என்றிவ்வாறுசிந்தித்து மந்திரியருடன்கூடி ஆலோசித்துக் கையில் வாளேந்தினவனாய் விரைந்துசென்று விநாயக சைநியங்களை வெட்டியழித்தனன். இவன் செயலினைக்கண்ட தேவர்கள்பயந்து பூமியில் விழுந்தார்கள், சிலர் விநாயகப்பெருமானை நினைத்தோடினார்கள், சிலர் இரத்தநதியில் முழுகி மறைந்தார்கள். இங்ஙனந் தேவரஞ்சும் வண்ணம் வாட்படைவீசி அட்டசத்தி சைநியங்களை நாசஞ்செய்து வந்தனன். அங்ஙனம் வரும் அவனது போர்த்திறங்கண்ட கிரியாசத்தியானவள் மலைகளையும் மரங்களையும் எடுத்தும் பறித்து மவன் மீதெறிந்தனள் இவளெறிந்தவை யனைத்தையும் அவன் வாட்படையினாலே வெட்டிவெட்டி அழித்தனன், உடனே அட்ட சத்திகளும், ஒருங்கே மலைகளை அளவற்றனவாகப் பெயர்த் தெறிந்தனர். அவைகளையும் வெகு எளிதாக வாட்படையினாலேயே வெட்டியழித்தனன். இதன் பின்னர் மஹிமா சத்தியானவள் அவன் றோண்மீது குதித்து அவன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கியெடுத்து மறைந்தனள். அங்ஙனம் மறைந்தவள் "பலாத்சிக்ஷேபதம் கட்கம் தஸ்யதைத்யஸ்ய மஸ்தகே" அவ்வாளினாலவன் றலையிலோங்கி வெட்டினாள் அவ்வெட்டினாலவன் றலையுடையா

மல் அவ்வா [illegible] துண்டுகளாக ஒடிந்து விழுந்தது. இதுகண்ட [illegible] கையில் வில்லேந்தி மழைபென வம்புகளை வி [illegible] டசித்திகளை "ததோ தேவாயுயுதி ரேபதிதாஸ் [illegible] க்ஷ" என்றபடி மூர்ச்சிதராக்கிக் கீழே தள்ளி [illegible]. அவர்களும் ஒரு முகூர்த்தநேரம் மயங்கிக்கிடந்து பி [illegible] தெளிவுற்றெழுந்து விநாயகப் பெருமானையடைந்து [illegible] நடந்தவைகளை யுரைத்து நின்றனர். இவர்கள் தோற்று வந்ததனைக்கண்ட புத்திதேவி பெருமானை வணங்கி விடையருள்க அவ்வசுரனுடன் யான் சென்று பொருகின்றேனென்றனர். அதற்கு விநாயகப் பெருமான் திருவுளமிசைந்து நல்லாடையொன்றைச் சன்மானமாகவளித்துச் செல்கவென்று விடுத்தனர். அவரும் பெருமானை வணங்கித் தேவாந்தகனைக் குறித்துப் போர்க்கள மெய்தினரெய்தி மூவுலகமு நடுங்கு மாறட்டகாசஞ் செய்து உக்கிரரூபியாக நின்றனர். உடனே அவர் முகத்தினின்றும் "ஜடிலா விகிர்தாஸ்யாச ஜகத்பக்ஷண லாலஸா விசாலாப்யாந்து நேத்ராப்யாம், த்யஜந்தீஜ்வால ஸஞ்சயான்," என்றபடி சடை யுடையவளும், வேறுபட்ட முகமுடையவளும், உலகினை யுண்ணும் விருப்பமுடையவளும், அகன்ற கண்களை யுடையவளும். சுவாலைக் கூட்டத்தாலசுர சைனியங்களை யெரிக்கின்றவளுமாக வொருசத்திதோன்றினள் தோன்றி அசுரர்களுடன் போர்புரியச் சென்றனள். இவள் வருகையைக்கண்ட வசுரரிற்பலர் மயங்கி விழுந்தனர். இவளதிச் செயலினைக்கண்ட தேவாந்தகன் அஸ்திர வருஷம் பொழிய வாரம்பித்தனன். அதுகண்ட வப்புத்தி

சத்தி தனது வாயை யாவெனத்திறந்து அவன் விடுமம்புக ளனைத்தையும் தாமரை நூல்போல எளிதாக விழுங்கிவந் தனள். தேவாந்தகன் தனதம்புருத் தூணியிலிருந்த அம் பனைத்தும் ஒழிந்து வெறுங்கையனாகினான். உடனே இச் சத்தியெழுந்தவன் சேனைகள் முற்றிலுமெடுத்து விழுங்கித் தேவாந்தகனையும் எடுத்து விழுங்கச்சென்ற சமயத்தி லவன்பயந்து நானாதிசையிலுமோடிக் கடைசியில் சுவர்க் கத்தினைக்குறித்து விரைந்து செல்லுங்காலத்திலவன் சிகை யைப் பிடித்திழுத்து நீயென் வயிற்றினுள் சுகமாகவிரென "ததஃ சிகாய்ஸ மாக்ரம்ய த்ருத்வா தம் ப்ராட்சிபத் பகே" என்றபடி வாயிலிட்டு விழுங்கி புத்திதேவியை யடைந்த னள். புத்திதேவியா ரவளுடன் விநாயகப் பெருமானை யடைந்து நடந்தனவற்றைக் கூறினார்கள். இவர்கள் விநா யகப் பெருமானை யடைதற்கு முன்னரே தேவாந்தகன் ஒரு அணுவுருத்தாங்கி அச்சத்தியினின்றும் வெளிப்பட்டு வெட்கத்தினால் கவிழ்ந்த தலையுடன் தன்னகரினை யடைந் தானதனை விநாயகப்பெருமா னிச்சத்திகளிட முரைத்த வுடன் அசுரரை விழுங்கிய சத்தி என் வயிற்றுளசுரரனை வருமுறங்கு கின்றனர். யானுறங்கு தற்கொரு நல்லிடங் காட்ட வேண்டுமென்று கேட்டனள். அதற்கு விநாயகப் பெருமான் நீ உறங்குதற்கிடங் காட்டுகின்றேமென்த் தமது திருவாயைத் திறந்துகாட்டி அதற்குட் புகக்கூறின ரவளு மவ்வாறே வாயின்வழி அவர் திருவயிற்றிற்சென்று மாதா வின்தொடையில் " ஸுஷ்வாப பரமப்ரீதாமா துரங்கேய தார்ப்பகஃ", குழந்தை தூங்குமாறுபோலத் தூங்கினார்.

இதுநிற்க இங்குநின்றும் அணுருபியாகி மறைந்து சென்ற தேவாந்தகன் தனது தந்தையைக்கண்டு நடந்தன வற்றையுரைத்து அகோர மந்திரோபதேசம் பெற்று பெற்றமுறைப்படி ஜபித்துத் தருப்பித்து ஹோமநடத்திப் பிராமண போசனஞ் செய்வித்து அதனாற்கிடைத்த பரிய குதிரைமீதேறி வாள் சூல முதலிய தாங்கி ரணகளமடைந்து எதிர்த்த அணிமாதி சித்திகளையும் அவர் சைனியங்களையுந் தோற்கச்செய்து தன்னை நாடிவந்த விநாயகப் பெருமானை யெதிர்த்துச் சிங்கவாகனமேறி நின்ற ஓ சிறுவ! காசிபனும் அதிதியும் கண்ணீர் விட்டழும் வண்ணம் இங்கேன் வந்தனை? நீ விரைந்து சென்று நின் மாதாவின்மடையிலிருந்து பாலுண்டு மகிழுவாயாக என்னுடன் பொருதற்கு நின்னாலாகாது என்று, பலகூறினன். அது கேட்ட பெருமான் ஒரு சிறு தீப்பொறி யானது உலகினையழிக்கு மாற்றலெய்துவதனை நீ கேட்டதில்லையோ வெறுமொழியிற் பயனொன்றுமில்லை நின்னாலாமாகிற் போர் புரிதி யென்றன ரதுகேட்ட வசுரன் கடுங்கோபங்கொண்டு கர்ச்சித்து மாயப்போர் புரிவானெண்ணி வில்லில் மந்திர ஜபத்துடனொரு கஜாஸ்திரத்தை வைத்து விடுத்தனன். வின்னாணியினின்றும் விலகிய வவ்வம்பு அநேகமாயிரம் யானையின் கும்புகளாகிப் பூத சேனைகளை நாசஞ் செய்யத்தொடங்கியது. அதுகண்டபெருமான் ஒரு சிங்காஸ்திரம் விடுத்தன ரதுவேகத்தினை யுடைய அனேகமாயிரஞ் சிங்கவுருவந் தாங்கி யானைப் படைகளை யழித்தொழித்தது. பின்ன ரசுரன் சார்ங்தூலாஸ்திரம் விடுத்துச்

சிங்கங்களையழித்து கந்தர்வாஸ்திரத்தால் கிருத்தகீத வாத்தியங்களையும் நித்திராஸ்திரத்தால் நித்திரையையும் உண்டாக்கி யனுப்பினு னிவ்விரண்டாலும் கணேசசைனியங்கள் நித்திரையை யடைந்தன. அதுகண்ட தேவாந்தகன் அப்போர்களத்திலேயே ஒரு முக்கோண குண்டமமைத்து ஒருகுளமுண்டாக்கி யதனிற்குளித்துப் பிரம்மாஸனமமைத்து அசுர ரத்த மாமிசங்களா லொருயாகஞ் செய்தனன். அத்னியினின்றும் ஒருபயங்கரமான பெண்ணுருவந்தோன்றி யென்னாலாக வேண்டுவதென்னை? நீயளித்த மாமிச ரத்தங்களால் திருப்தி யடைந்தேன் என்றனள். அதுகேட்ட தேவாந்தகன் அவளைச்செவ்வனே பூசித்துப் பூதசேனைகளை விழுங்குமாறு வேண்டினன். அவளு மதற் கிசைந்து நின்றனள். இம்மொழிகளைப் குறிப்பாலறிந்த காசிராசன் விநாயகப்பெருமானை வணங்கி நடந்தவைகளை விண்ணப்பஞ்செய்ய விநாயகப்பெருமா னொரு கண்டாஸ்திரத்தினைப் பிரயோகஞ் செய்தனர் அதுபேரோசைகாட்டி யனைவரையு நித்திரையினின்று மெழுப்பியது. பின்னர் ஒரு விகங்காஸ்திரப்பிரயோகஞ் செய்தனரது அநேகம்பறவை யுருவந்தாங்கி அசுர சைனியங்களைக் கொத்தி விழுங்கியது. அதுகண்ட தேவாந்தகன் கட்காஸ்திரப்பிரயோகஞ் செய்தனன். அதுபல்லாயிரந் தீமயமான கட்கங்களாகி அட்டசித்தி சைனியங்க ளனைத்தையும் அழித்தது. இதனை விநாயகப்பெருமான் கண்டு வச்சிராஸ்திரம் விடுத்து கட்காஸ்திரத்தை யழித்தனர். அவ்வச்சிரப்படை கட்காஸ்திரத்தை யழித்ததுமன்றி அசுர

சைனியங்களையும் பெண்ணுருவினையும் பின்றொடர்ந்தழித்தது. உடனே அசுரன் ருத்திராஸ்திரத்தை யபிமந்திரித்து விடுத்தனன். அது பிரளயாக்கினிபோன்ற வக்கினியைக் கக்கிக்கொண்டு அனைத்துலகங்களையு நடுங்கச்செய்தது. அப்பொழுது விநாயகப் பெருமானுடைய சைநியங்கள் மிகவு நடுக்க முற்றன. இங்ஙன மெவரும் பயமுறுமாறு வந்த பாணத்தினின்றுங் கோரரூபியான ஒரு புருஷன் றோன்றி வச்சிராஸ்திரத்தினைப் புசித்தொழித்தனன். ஒழித்து விநாயகப் பெருமானைக் கொல்லுமா றவரருகில் விரைந்து வந்தனன். இங்ஙனம் வராநின்றவனது கோர நிலைமைக் கண்டு பெருமானொரு வச்சிராஸ்திரத்தினை யபிமந்திரித்து விடுத்தனர். அதினின்று மொரு மகாபுருஷன் தோன்றி முன்வந்த வஸ்திரபுருஷனோடு ஆகாயத்தில் நின்று போர்புரிந்தனன். இருவரும் ஒருவரையொருவர் வெல்லவேண்டு மென்னு மபிப்பிராய முடையவர்களாகிப் போர்புரிந்தார்கள். அங்ஙனம் போர்புரிந்தோர் அதிவிரைவாகக் காணப்படாமல் மறைந்தொழிந்தனர்.

இதுகண்ட வசுரன் மற்றோரம்பினை யபிமந்திரித்து விடுத்தனன். அது அநேகமான அம்புகளை மழைபோல வருஷித்துக்கொண்டு வருதலும் அட்டசத்தியாகியர் நடுக்கமுற்றனர். அவர்களைத் தேவாந்தகனுங் குத்தியுமுதைத்துங் கீழேதள்ளினன். தள்ளி விநாயகப்பெருமானையடுத்துப்பலவகை யுத்தங்களைச் செய்தனன். பெருமான் "சரஞ்சகமலம் பாசாங்குசம் சசது கரை:" அம்பு சமலம்

பாசாங்குச மென்னு நான்காயுதங்களை யுடையவரா யவைகளால் அவனைப் பன்முறையடித்து மவனுடலம் வச்சிரசமான மானதாக விளங்குதலைக்கண்ட பெருமான் ஆச்சரியமடைந்து தூம்ராட்சனைக்கொன்ற வாயுதமுதலி யிவைகளாலு மவனை வதைக்கக் கருதியும் எவையாலுமவன் சாகாமல் வன்மையுடையவனாக நின்று போர்புரித லும் பெருமான் மேலுமேலும் பலபாணங்களை விடுத்து அவனை யழிக்கமுயன்று போர்புரிந்தனர். அவனும் இவருடன் சமானயுத்தம் புரிந்து நின்றனன்.

அப்பொழுது ரௌத்ரகேது வென்பான் மாயா வல்லமைத்தால் தேவமாதாவான அதிதியைப்போல ஒரு மாயரூபமமைத்து மற்றொருவனை யவளை நிர்ப்பந்திக்கு மாறமைத்துக் கணேசப்பெருமா னெதிரேகொண்டு வருதலும் பெருமானிஃதுண்மையாக விருக்குமா? என்று தம்முளா லோசனை செய்யுஞ் சமயத்தில், தேவாந்தகாசுரனவ்விடத்திலெய்திப் பலவகையாக விகழ்ந்து கூறுதலும் அசரீரி மெல்லெனப் பெருமானே! அவை யசுரமாயைகள் இவைகள் உண்மையன்றும் சிவபெருமானளித்த வரத்தின்றிறத்தினைக் கருதியிவனைக் கொல்லுகவென்றது.

அதுகேட்ட பெருமான் "ஸ்மிர்த்துவாசதத் வரம் சம்புதத்தம் தஸ்மை துராத்மனே உஷத்காலம் விநா ஸர்வ சஸ்த்ராஸ்தாரணி வ்ருதாத்வயி", தம்முளத்தில் சிவபெருமானளித்த வரத்தினை நினைத்து இவன் உஷத்காலத்திலன்றி யெவ்வித அஸ்திர சஸ்திரங்களாலும் அழி

யானென்று கருதிக் காலயிலவனுடன் போர்புரிவதற்குக் கஜானனரூபியாக எழுந்தருளி நின்றனர். அதனை அவன் கண்டு "த்ருஷ்டுவா தேவாந்தகோரூபம் விபர்யசவிஸஸ்மரே அர்த்தம் நரசரீரம் கிம்அர்த்தம் கஜஸமம்பரம்;" என்னே யிதுபாதி மனிதவுருவம் பாதி யானையுருவம் எனப்பீதியும் ஆச்சரியமுங் கொண்டவனாகி எதிரேவந்தான். வந்தவனைப் பெருமான் ஒரு சிறுவனைப் பிடிக்குமாறு பிடித்துத் தொடைமீது வைத்து பத்மாஸன மாகவிருந்து அவனைப்பார்த்து பெற்ற வரத்தினை நினைத்துப் பாரென்று கூறி அவனை இரண்டு கரங்களா லெடுத்தாட்டித் தங்கொம்பி லொன்றினை யொடித்து "அஹனத்தேன தந்தேன மஸ்தகேதம் ஸுராந்தகம் ஜகர்ச்ச சம்ஹாரா வைகர்ச்சயன்விதி சோதசம் சாலயன் பிருதிவிம் ஸர்வாம் பாதாலான் யகிலானிச தைத்யதேஹகதம் ஜோதிஸ்தம் விவேசவிநாயகம்" என்றபடி அக்கொம்பினாலவன் மண்டையிற்குத்தி யவனைக்கொன்றருளினர். அவன் மரணகாலத்திலுண்டான பேரொலியால் மூவுலகும் நடுங்கின. அவனுடலிலிருந்து ஒரு ஜோதியானது தோன்றி விநாயகப்பெருமான் திருமேனியிலடங்கி மறைந்தது.

இதனை இடையிடையே காட்டப்பட்ட விநாயகபுராண வசனங்களாலுணர்க.

கணசங்கார பராக்கிரமம்.

இணரெரியாடு மீசனிடத்தினு மெரிபொன் றுத்திப்
பணவரவல்குற் செவ்வாய்ப் பார்ப்பதி யிடத்துமன்பு
தணவறவுடைய செல்வ தறுகண ஞனபொல்லாக்
கணனுயிர்காற்று வைவேற் கரதலத் தமலபோற்றி.

(இ-ள்.) பலகிளைகளாக விரிகின்ற வூழித்தீயினை யரங்கமாகக்கொண்டு நடனம்புரிகின்ற சிவபெருமானிடத்தும் புடமிட்டபொன்போலும் விளங்கும் புள்ளிகளையுடைய படத்தோடுங்கூடின வல்குலினையும் செந்நிறம் வாய்ந்த வாயினையும் உடைய உமாதேவியாரிடத்தும் நீங்காத வன்பினையுடைய செல்வனே! அஞ்சாமையினையுடைய கொடியகணனென்னும் அசுரனுயிரை அழித்த கூரிய வேற்படையேந்திய திருக்கரத்தினையுடைய அமலனே நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

பிரம்மதேவனது வீரியமொருதடாக நீரிற்கலந்திருத்தலையறியாது பானஞ்செய்த குணவதியின் கருப்பத்தின் வழி அபிசித்தென் பானுக்குப் புத்திரனாகப் பிறந்து கணனெனு நாமகரணஞ் செய்யப்பெற்று வீறிவளர்ந்து

கஜாசங்காரம் LITH^o BY P.N.N

சிவபெருமானைக் குறித் துக்கிரமான தவஞ் செய்தவரிடத்திற் பல வரங்களைப் பெற்று தேவராதிய வனைவரையும் வென்றனைத் துலகங்களையு மடிப்படுத்தி அனேக காலம் அரசுபுரிந்து இறுதி நாளில் முனிவர்களை உபத்திரவப் படுத்த அன்னோரிற் சிறந்த கபிலமுனிவர் விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்க அவர் அம்முனிவ ராச்சிரமத்தில் ஆன்மார்த்த மூர்த்தியாயெழுந்தருளி இருந்து அபயாஸ்தமளித்து எழுந்தருளி இருத்தலையுணர்ந்த கணன் சேனைகளோடு வந்து போர்புரிய விநாயகப் பெருமானுடைய சத்திகளனேகம் படைவீரரையுண்டாக்கி யனுப்ப வவர்கள் கணசைநியங்களுடன் போர்புரியக் கணன் விநாயகப்பெருமானோடு போர்புரியப் பெருமான் கடுங்கோபங் கொண்டு தமது பரசாயுதத்தினாலவன் றலையைவெட்டி யவன் சைனியங்களை யழித்துத் தேவர் முனிவர்களாதியருக்கின்ப மளித்து நின்றனரென்ப. இதன் விரிவினை பார்க்கவ புராணத்துட் காண்க.

கிரௌஞ்ச மூஷிகபந்தன

பராக்கிரமம்.

கெடல்மிகுத் தூழிநாளிற் கீழொடுமேலாய்ப் பொங்கிக்
கடல்மிகுத் தொலிப்பதென்னக் கனவொலி காட்டிநாளு
மிடல்மிகுத் துறுவர்தம்மை மெலித்தல்செய் கிரௌஞ்சன்றன்
னுடலினை வாட்டிக்காத்த வொருத்தலி னடியிற்றாழ்வாம்.

(இ-ள்.) அழியுஞ்செயலதிகரித்துப் பிரளயகாலத்தில் கீழுமேலுமாகப் பொங்கிச் சமுத்திரமானது மிகுந்தார வாரிப்பதுபோல மிகுந்த கர்ச்சனைசெய்து வன்மை மிக்கு முனிவர்களை வருத்திய கிரவுஞ்சனென்பவனது உடலினை வாட்டிப் பாசத்தாற்கட்டி வாகனமாக்கி யருளிய யானை முகப்பெருமானது திருவடிகளை வணங்குவோமாக. எ-று.

இதன் விவரம்.

ஆதித் தியாதிய தேவர்களும் சித்தஸாத் தியாதிய தேவயோகிகளும் நெருங்கி யிருபுறமுமிருக்கவும் மேனகை திலோத்தமை யாதியர் நடிக்கவும் கந்தருவாதியர் கானம் பாடவும் சாம்பூனதமென்னு முயர்ந்த தங்கத்தாலான சிங்காதனத்தில் இந்திரன் கொலுவிருக்குங் காலத்தில்

க்ரவுஞ்சமூஷிகபந்தனம்

அவ்விந்திரனுடைய சபைக்குச் சடைமுடி ருத்திராக்ஷம் விபூதி முதலியவைகளை யுடையவராய் வாமதேவரென்னு முனிவர் வந்தசமயத்தில் கிரௌஞ்ச னென்னுமொரு கந்தருவன் அவரதாற்றலினை மதியாமற் பரிகாசத் தொனி காட்டி அவமதித்தனன். அதுகண்ட வாமதேவயோகி மகா கோபமுடையவராகி அடா! நீ என்னை அவமதித்தமையால் துஷ்ட ஜந்துவான ஆகுவாகக்கடவை என்று சபித்தனர். இச்சாப மொழியைக்கேட்டு நடுங்கிய கந்தருவன் அம் முனிவரைவணங்கி அறியாது செய்தகுற்றத்தினை மன்னித் தல் வேண்டும். என்றடி பணிந்திரந்தவுடன் மனமிரங்கிய வாமதேவர் நினக்கினி உய்வில்லையாயினும் விநாயகப் பெரு மானால் நற்கதி பெறுவையென்று கூறினர். உடனே யவன் பெரிய வாகுவினுருவெய்திச் சுவர்க்கத்தி னின்றும் பரா சரமுனி வராச்சிரமத்தி னருகிலொரு மலைபோல விழுந்து அவ்வாசிர மத்தினைப் பாழ்படுத்துதலைக் கண்ட பராசர முனிவர் தம்மிடத்தில் வரேணிய குமாரராக வெழுந்தருளி யிருந்த விநாயகப் பெருமானிடம் ஆகுவின் கொடுமை யைக்கூற வவர் எவராலும் வெல்லுதற்கரிய அவ்வாகு வைத் தமது பாசத்தாற் பிணித்து நிறுத்தி நின்னை மெச்சினேன் உனக் கென்ன வரம் வேண்டு மென்று கேட்க வதற்கக்கொடியோன் எனக்கு நீயென்ன வரம ளிப்பது உனக்கு யான் வரமளிக்கின்றேன் கேளென்றன

னதுகேட்ட பெருமான் தவறுதமொழி யுடையையாகி லெனக்கு வாகனமாக விருக்க வரந்தருதி யென்றவுட னகங்காரத்தால் மதித்திருக்குமவன் அவ்வாறே யாகுக வென்னப் பெருமான் அவன் செருக்கினை யடக்குதற் கவன் முதுகிற் பாய்ந்தேறி அதிக கனங் காட்டுதலும் அவன் அசையமாட்டாதவனாய் நனிவருந்தி ஐயனே! யான் சுமக்கத்தக்க கனமாகவிருக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றே னென்றான். பெருமானும் அவன் சுமக்கதக்க லகுவுருவமாக எழுந்தருளி யிருந் தனர்.

இதனை

"புராசக்ர சபாமத்யே க்ரௌஞ்சோ கந்தர்வசத்தம:
வாமதேவ முனிம்ஸோதத் வாரவான் ப்ரபதாஹனத்
ஸசசாபகந்தர்வ மூஷகத்வம் பவிஷ்யதி
கல்பயிஷ்யதி வாஹத்வேத் வாமாக்ரம்ய குணேச்வர:
அஹம்தேவாஹனம் ஜாதோலகு பூதோபவப்ரபோ."

என்பனவாதிய கணேச புராண வசனங்களா லுணர்க.

யமதாடன பராக்கிரமம்.

நந்தகங் கரத்திலேந்து நாரணன் முளரிமேய
வந்தணன் விபுதர் கோமா ளுதியர்தமக்கு மேலாய்ச்
சந்தத மிருக்குமீசன் றனி மகனென்ளுதுற்ற
வந்தகற் செற்றவாதி மயூரனை யகத்துள்வைப்பாம்.

(இ-ள்.) பாஞ்சசன்னிய மென்னுஞ் சங்கத்தினை யகங் கையிற்றுங்குகின்ற நாராயண மூர்த்திக்கும், கமலாசன னுன பிரமனுக்கும், தேவராசனுன விந்திரன் முதலான வருக்கும் மேலோனுய் எக்காலத்து மீசனதொப்பற்ற மகனென்னுது எதிர்த்துவந்த் யமனை யுதைத்ருளிய ஆதியான மயூர நாதனென்னும் விநாயகப் பெருமானை உள்ளத்துள் வைத்துத் துதிப்போமாக. எ-று.

இதன் விவரம்.

உமாசுதராகி மயூரேசனென்னுந் திருநாமந்தாங்கிக் கணேசப் பெருமான் பாலலீலை செய்திருந்த காலத்தி லொருதினம் அநேகம் பார்ப்பனச் சிறுவர்களுடன் ஒரு தபோவனத்தை யடைந்து ஒரு தீர்த்தக்கரையி லவரனை வரையும் இருக்கச்செய்து தான் தனியே சென்று பக்கு வமுள்ள சிலமுனிவருக்கு மெஞ்ஞானேபதேசம் புரிந்த வராய் நெடுநாழிகை இருந்தசமயத்தில் விரைவாக வந்த ஒருகொடும்புலியால் மறைச்சிறுவரனைவரு நடுங்

இப்பல திசைகளிலு மோடி இளைத்துக் கடைசியாக வனை வருமொரு சோலையை யடைந்து அனைவருந் தென்றிசைநோக்கிக் கானீட்டினராய்ச் சயனித்திருந்தனர். அங்ஙனஞ் சயனித்திருத் தலைக்கண்ட தென்றிசைக் கிறைவனான யமனென்பவன் தனது தூதர்களைப் பார்த்து தூதர்களே! நம்மை மதியாது நந்திசைநோக்கிக் கானீட்டிக் கிடக்கிற விச்சிறுவர்களை அவர்களுக்குத் தெரியாம லெடுத்து நமது நகரத்தில் சேருங்க ளென்று தம்பாசம் வீசி யவர்களை யுடலுடன் கட்டி யமலோகத்துக்குக் கொண்டு சென்றான். வெகுநேரங்கழித்து முனிவர்களுக் குபதேசித்து யொழித்துச் சிறுவர்களைத் தேடிக்கொண்டு அங்குமிங்குமாக உலாவி எங்குங் காணாமையால் எங்குப் போயிருப்பார்களெனக் கவலையுடன் ஆலோசனை செய்து நிற்கின்ற சமயத்தில் முனிவர்கள் எய்தி எங்கள் சிறுவர்கள் உன்னுடன் வந்தார்கள் அவர்கள் இன்னம் வீடுவந்து சேர்ந்தவர்களல்லர் உன்னுடனும் அவர்களைக்காணோம் எங்கள் மக்களையின்றி நாங்கள் உயிர்வாழோமென அழுதுரைத்தார்கள். உடனே பெருமான் சிறுவர்களிருக்குமிடத்தை யுணர்ந்து தமது மயில் வாகனத்திலேறி யமலோகமடைந்து யமனைக் கண்டு நீ என்னுடனிருந்த பார்ப்பனச் சிறுவர்களை விடுகின்றாயா வென்னவென்றவுடனெமன் கடுங்கோபங்கொண்டு அனைவருயிரையும் வாங்குமென்னை. எதிர்த்த வுன்றிறத்தையிதோ காட்டுகின்றேனென்று கடாவிலேறித்தனது பாசம் வீசி ஆக்கிரமித்து வருதலும் இறைவன் றமது காலைத்தூக்கி யெட்டியோருதை கொடுத்தனர். உதைபட்டு

யமனும் கடாவும் அனேகமுறை சுழன்று சுழன்று பூமியில்விழுந்து என்பு முரிந்து கருவமடங்கி மரியாதை யுடன் இருகரங்களைக் குவித்துப் பலமுறை துதித்து பார்ப்பனச் சிறுவர்களை விட்டுவிடுவதாக வுரைத்து மன்னிப்புக்கேட்டுக் கொண்டனன். உடனே பெருமானும் தமது மயிற்பரியிவர்ந்து திரும்பினர். யமனும் பார்ப்பனச் சிறுவர்களை முன்னர் அவர்கள் கிடந் துறங்கிய சோலையிற் கிடத்திச் சென்றனன். விநாயகப் பெருமானவர்கள் எதிரே தோன்றி யவர்களை யுணர்த்தி யுடனழைத்துச் சென்றனர்.

இதனை

ததோமுநிஸுதாபேமுஃக்ரமதம்தக்வமயூராட்:
அதிக்ராந்தாத்ருமதலேஸுச்சாயேப்ராஸ்வபம்ஸ்ததா
அனேனயாஸயதிபதாத்ர க்ஷயாமஸ்தத்பதாம்புஜம்
பாதௌதட்சிணதஸ்தேஷாம்த்ருஷ்டாசுக்ரோத பானுஜஃ
பத்வாதான்ஸ்தலம்யாதோமயூரேசததோகதம்
நாபச்யத்தத்தரிடபாலாவிஸ்மயம்பரமபயயௌ
க்வாஸ்மாகம்பாலகாதேவப்ராதர்நீதாஸஸ்வாயாகிலா
விநாநதர்நோகமிஷ்யந்தீப்ராணாஸ்த்வய்யாதுஜ
எவமுக்தவாமயூரேசோயமஸ்கந்தம்ருரோஹஸஃ
பாதயாமாஸமஹிஷாத்பபாதோபரிதக்ஷணாத்
பராக்ரமம்தஸ்யபுத்வாபத்தாஞ்சலிபுடோயமஃ

என்பனவாதிய கணேசபுராண வசனங்களா லுணர்க.

அனலாசுர சங்கார பராக்கிரமம்.

இனலினைத்தேவர் முனிவரென்றுரைக்கு மின்னுயிர்க்குழாத்தினுக் குதவிடத், தினலினைப் புரிந்தகொடியனைக்காலன் சிறுவனைப்பெரு மலையென்ன, மனலினை யுடைய படையனையார்க்கு மாற்றனைச் சீற்றனைமதுகை, யனலனையெடுத்து விழுங்கியவெந்தை யமலனை விமலனைப்பணிவாம்

(இ-ள்.) துன்பமென்பதனைத் தேவர்கள் முனிவர்க ளென்றுரைக்கு மினியவுயிர்க் கூட்டத்துக் களித்து அ வர்களை வாரிவிழுங்கித் திரிந்த கொடியவனை யமன் கு மாரனைப் பெரியமலைபோலும் பொருந்திய உடலினரான அசுரசைனியங்களை யுடையவனை அனைவர்க்கும் பகைவ னாக வுள்ளவனைக் கோபமே வடிவயானவனை வன்மை வாய்ந்த வனலாசுரனென்று பெயருள்ளவனை எடுத்து விழுங்கிய வமலனும் விமலனுமான விநாயகப்பெருமானை வணங்குவாம். எ-று.

இதன் விவரம்.

தேவர்கள் முதலியவர்களால் நிறையப்பெற்ற சபை யில் நடனம் புரிந்த அரம்பையரில் திலோத்தமையின் மேலாடை நழுவக்கண்டு மோகங்கொண்ட யமனானவன் மோகந்தாளாமல் விடுத்த சுக்கிலத்தி லொரு கோர ரூப முள்ள அசுரன்பிறந்து அனலாசுரனென்ற பெயரெய்தி உடனே பேருருவினனாகி எதிரிற் கிடைத்தாரை யெல்லாம் எடுத்து விழுங்குந் தொழிலுண்டயனாய் முனிவர். தேவர்

அனலாசூரசம்மாரம்

முதலியவர்கட் கிடுக்கண் புரிந்துவந்தனன். இவனைக்கண்டவரெல்லாம் இவன் வாய்க்கிரையாக வேண்டியவர்களானார்கள் இவ்வாறிவன் வெகுகாலமாக அசுரர் கூட்டத்துக்குத் தலைவனாகி அநேகர்களை பக்ஷணம் செய்ததையால் தேவர் முனிவர் முதலிய அனைவருநடுங்கி இக்கொடிய வாபத்தினின்றும் எவ்வாறு தப்பித்துக்கொள்ளப் போகின்றோமென வருந்தி இக்கொடிய வாபத்தினின்றும் நம்மை நீக்கத்தக்கவர் விநாயகப்பெருமானே யென்று கருதி அவரைத் துதித்தார்கள்.

அவர்கள் துதிக்கிரங்கிய பெருமானொரு அந்தணச் சிறுவனுருவமாக அவர்களெதிரே தோன்றி அஞ்சாதீர் அனலாஸுரன் வன்மையை யடக்கி நும்மைக் காப்பேனென்று கூறுகின்ற சமயத்தி லனலாசுரனும் பேராரவாரத்துடன் அவ்விடத்துக்கு வந்தான் வந்தவனைக் கண்டு யாவரும் அஞ்சி ஓடவழி தேடுங்காலத்திற் பெருமானொரு பேருருவங்கொண்டு கொடியவசுரனை அகஸ்தியர் கடலைக் குடித்தாங்கெடுத்து விழுங்கி முன்னுருவாகி அனைவருங் காணநின்றனர். அதுகண்டதேவர் முனிவராதியர் மகிழ்ச்சியடைந்தார்கள். இதனை

சந்தப்பொதிய வரைமுனிவன்றனக்குத் தரங்கக்கடல்போன்று
மந்தமதிய மிலைத்தசடையழகற் கலைவாய் விடம்போன்றும்
வந்தவனலாசுரன் றனக்குவல்லையடங்கக் கரத்தெடுத்து
முந்தைமறையுமறியாத முதல்வன்பவளவாய் மடுத்தான்.

என்பது முதலிய விநாயக புராணத் திருவிருத்தங்களாலுணர்க.

சிந்து சங்கார பராக்கிரமம்.

நந்துவை யனலினென்ன நறுந்தொடையமர ரெல்லாம்
வெந்துவை திறத்திலன்னார் வெறுக்கையை யிறுக்கித்திய
செந்துவை யுறுக்கியென்னச் சிறையிடைப் படுத்தபொல்லாச்
சிந்துவை யழித்தவெந்தை திருவடிமுடிமேல் வைப்பாம்.

(இ-ள்) நீதிவாய்ப் பட்டிறப்பாயென்று நறிய கற்பக மாலையிணையுடைய தேவரெல்லாம் உள்ளம் வெந்து வையும் வண்ணம் அவர்கள் செல்வங்களைக் கைப்படுத்துக் கொடிய புலிமுதலியவற்றை நிர்ப்பந்தமாக வடைக்கு மாறு சிறையிட்டுவைத்த பொல்லாத சிந்துவென்பவனை யழித்த வெந்தையான கணேசப்பெருமானது திருவடி மலர்களை முடிமிசைவைப்பாம். எ-று.

இதன் விவரம்.

மைதிலதேயத்திற் கண்டகி நகரத்திலிருந்த சக்கிர பாணியென்னு மரசன் மனைவி யுக்கிரை யென்பவள் சூரிய சங்கமத்தாற் பெற்றமகன் செந்நிறமும் முக்கண்ணும் சூலமும் சடையுமுடைய கோர வுருவமாகப்பிறந்து சிந்து வென்று நாமகரணஞ் செய்யப் பெற்று சுக்கிரனு லசுர மாயைகளைத்தேர்ந்து சிவபெருமானைக்குறித்துத் தவஞ்

செய்து அனேகவரங்களைப் பெற்று அசுரர் கூட்டத்துடன் கலந்து அனைத்துலகங்களையு மடிப்படுத்தித் தேவர்களைச் சிறைப்படுத்திக் கண்டகி நகரத்திலிருந்து கொடுங்கோ லரசாட்சியை வெகுகாலம் புரிந்துவந்தனன்.

இவன் கொடுமையால் யாகந் தவம் பூசை முதலியன செவ்வனே நடைபெறாது தொலைந்தன. தேவராதியரனைவரும் அவன் எப்பொழுது மரணமடைவா னுலகமெப்பொழுது சுகமுறுமென வெதிர்பார்த்திருந்தனர். இவன் ஆயுண்முடிவிற்குப் பதினாறு வருடங்களுக்கு முன்னரே தேவராதியர் தவத்தால் விநாயகப்பெருமான் உமாதேவியின் தவப்புதல்வராகி மயூரேசரென நாமம் தாங்கி ஆறு திருக்கரங்களும் மூன்று திருமுகங்களு முடையவராக எழுந்தருளி இருந்து பாலலீலையிலேயே அனேகங் கொடியவசுரர்களை வதைத்துப் பதினாறுவது திருவயதான பின்னர் சிந்துவை யினிச் சங்கரித்துத் தேவர்களைச் சிறையினின்றும் விடுவிக்கவேண்டு மென்று கருதி உமாகாந்தன் முதலியவர்களுட னாலோசித்து ஒரு திவ்விய விமானத்திலேறி முனிவர்கணங்கள் முதலியவர்களுடன் சிந்துவின் நகரத்தின் சமீபத்திலிறங்கி நந்திதேவரை யழைத்து நந்தியே! சிந்துவிற் கிவ்வுலகு வாழ்வு வேண்டுமானாற் தேவர்களைச் சிறையினின்றும் விடுத்து நன்னீதியுடன் அரசுசெலுத்தச் சொல்லை இல்லையேல் எம்மால் மரணமுறுவது திண்ணம் என்றுரைத் தவனபிப்பிராயத்தினை யறிந்துவருக வென்று தூதாகவனுப்ப, நந்திதேவன் சென்று 'கணேசப்பெருமானுரைத்த வைகளை

யுரைத்ததற்கு நேற்றுப்பிறந்த சிறுவனே யென்னைக் கொல்லுவோனென்று பலகூறி நீதிக்கிணங்காது போன மையில் நந்திதேவர் மீட்டெய்தி யவன் அபிப்பிராயங் களைக் கூறுதலும் பெருமான் கடுங்கோபத்துடன் பூதப்ப டைகள்புடைசூழ மயில்வாகன மிவர்ந்து செல்லுங்கால் நந்திதேவர் பெருமானை வணங்கி புட்பதந்தாதி கணநாதர் களுடன் யான்சென்று பொருகின்றேன் விடைதருதல் வேண்டுமென்னலும் அவ்வாறே செய்கவென்று பெருமா னுரைத்தருள நந்திதேவர் ஏழுகோடிப் பூதசேனைகளுடன் சென்று கண்டகி நகரியையடைந்து அறைகூவுதலும் பத் துக்கோடி யசுரர்கள் போர்க்கோலங் கொண்டிவர்களுட னெதிர்த்துப் போர் புரிந்தனர். இங்ஙனமிட்ட சண்டை யில் அசுரரிற் சிலர் தலை யுடைந்தவர்களும், கால் கைகள் ஒடிந்தவர்களும் தொடைகளொடிந்தவர்களும், இறந்து பட்டாருமாயினர். இதுகண்ட வவுணர்பலர் சிந்துவினிடஞ் சென்று கூறுதலும் அவன் கோபானலத்தால் திசைகளை யெல்லாம் தகிக்குந் திறமுடையவனாய் ஒரு பெருங்குதிரை மீதேறி விரைந்தெய்தினன்.

இவனுடன் வந்த வசுரவீரர்கள் அனேக விதமான போர்புரிந்துப் பூதப்படைகளை வருத்துதலும் நந்தி கடுங் கோபத்துடன் பொருதவ் வசுர வீரர்களை யழித்தலும் மித்திரன் கௌஸ்துபனென்னுங் கொடிய வசுரர்கள் பூத சைனியங்களின் நடுவிற் புகுந்து பெரும்போர் புரிதலைக் கண்ட வீரபத்திரர் குமரக் கடவுளென்பவர்கள் அவ்விரு

வருடனும் நெடுநேரம் பொருது அவ் விருவரையுங் கொன்றனர்.

இதுகண்ட சிந்து கடுங்கோபத்துடன் பெரும்போர் புரிந்து அனைவரையும் பின்னிடச்செய்து விநாயகப் பெருமானுட னெதிர்த்து சிறுவனே! சிங்கம்போன்ற வென்னுடன் நரிபோன்ற நீ போர்புரிவதி லென்னபயன் மாதாவின் மடியிற் சென்றிருந்து பால்குடித்துச் சந்தோஷிப்பாயாக வென்று பகர்ந்தவுடனே பெருமானவனைப் பார்த்துச் சூரியனிடம் பெற்ற வர கருவத்தா லிவ்வாறு பேசுகின்ற நின்னை இதோ ஒரு கணத்தி லழிக்கின்றே னென்று போர் புரிந்த சமயத்திலவன் ஆச்சரியகரமான அனேகம் மாயை வித்தைகளைச் செய்யக்கண்டு புன்னகையுடன் அவன் மாயைகளையெல்லா மழித்துக் கடைசியாகத் தமது பரசாயுத்தினு லவனைக்கொன்று தேவர் சிறையை நீக்கி நீதியை நிலை நாட்டினர்.

இதனை

ஹயாரூடவிந்து தைத்யக்ரோத ஹர்ஷஸமன்விதः
அம்ருதே நிஸ்ருதேதைத்யா வாதாஹத இவத்ரும:
பபாதஸ ஹாபூமௌவஜ்ரா ஹத இவாசலः

என்பன வாதிய கணேச புராண வசனங்களா லுணர்க.

சிந்தூராசுரசங்கார பராக்கிரமம்.

தேவரை முனிவர்தம்மைச் சித்தரை யரம்பையென்னு
மாவரைக் குயத்தார்தம்மை மாற்றல ரென்னச்சீறிக்
காவரை யுலகந்தன்னைக் கைப்படுத் தாண்டபொல்லாத்
தீவனை சிந்தூரற்காய் சிந்துரானன்றுள் போற்றி.

(இ-ள்.) தேவர்களையும் முனிவர்களையும் சித்தரையும் அரம்பைய ரென்றுரைக்கின்ற சிறந்த மலையனைய தனங்களையுடைய வர்களையும் பகைவரைப்போல சீறி சோலை சூழ்ந்த வுலகத்தினைத் தன்கைவசப்படுத்தி யாண்ட பொல்லாத தீயினை யொத்த சிந்தூராசுரனைக் கொன்றருளிய யானைமுக விநாயகப்பெருமானது திருவடிகட்கு நமஸ்காரம். எ-று.

இதன் விவரம்.

பிரமனது கோட்டா வியிலுண்டாகிப் பிரமனளித்த வர கருவத்தா லெவரையு மதியாதவனுகிச் சகலதேவர்களையு மிகவும் வருத்தி அசுரர்களுடன் வெகுகாலம் வாழ்ந்திருந்தான். இவன் கொடுமையால் வருந்திய தேவராதியர் செய்த தவத்துக்கிரங்கி உமாதேவியாரின் வழி கஜானன மூர்த்தியாக அவதரித்துப் பராசர முனிவரின் ஆச்சிரமத்திலவர் திருக்குமாரரென உலகங் கூறும் வண்ணம் எழுந்தருளி, இருந்தகாலத்து தேவர் முனிவராதியரை

யுபத்திரவஞ் செய்த மஹா துஷ்டனான சிந்தூரன் அசுர சைனியங்களுட னங்கெய்தி மிகுந்த வுபத்திரவஞ் செய்தவுடனே முனிவர்களின் வேண்டுகோளால் விநாயகப்பெருமான் சிந்தூரன் சைனியங்க ளனைத்தையும் நாசஞ் செய்தவுடன் சிந்தூரன் விநாயகப் பெருமானை யடைந்து ஹே சிறுவ! உன்னைப்பார்க்கும் பொழுதே யெனக்கு வெட்கமுண்டாகின்றது எனது கால்களைப் பெயர்த்துவைப்பேனாயின் பாதாளமேழு நடுங்கும் எனது கைகளை யுயர்த்துவேனாயின் மேலண்டங்கள் நடுங்கும் அத்தகைய வென்னாற் தேவராதிய ரென்னபாடு படுகின்றார்கள் பார்; மிகவுஞ் சிறியவுன்னுடன் யான்போர் புரிவதென்றால் வெட்கமான விஷயம் நீ போய் நின்மாதாவின் தனபானம் செய்து சுகமாகத் தூங்குவாயானால் நலமாக விருக்கும் என்று பரிகாசமாகக் கூறுதலும் பெருமா னவனைப் பார்த்து இவ்வாறு கூறினர்.

ஹே சிந்தூர! பிரமனளித்துள்ள வரத்தின் கருவத்தினாலிவ்வாறு கூறுகின்றனை நான் சிவசுதன் யுகங்கள் தோறும் யுகங்கள்தோறும் யுகங்கள்தோறும் துஷ்டர்களை சங்கரிக்கும் வுண்ணமே யிந்தவுருவத்துட னிருக்கின்றேன் நினைத்த நினைத்த ரூபங்களை யுடையவனென்று நீ யறியாய் இதோ நின்பொருட்டுப் பேருருவந்தாங்கு கின்றேனென்று மிகவும் பெரியதும் பயங்கரமானது மான ஒருருவத்துடன் நின்று சிந்தூரனை ஒரு சிறிய வசளைக் கனிபோல வெடுத்து இருகரங்களாற் கசக்கிச் சோரியைப் பிழிந்துத் தமது திருநுதலிற் சிந்தூரதிலதம் போலவணிந்து ஆஸ்தி

தோல் முதலியவைகளைத் தூரத்திலெறிந்தனர் இதுகண்ட தேவராதிய வனைவரும் மகிழ்ச்சியுற்றுப் புட்பவருஷம் பொழிந்து பெருமானைத் துதித்தார்கள்.

இதனை

மமர்த்தவிந்து ரந்தம் ஸகராப்யாம் பலவத்தரம்
ததஸ்ததணரு ஜாங்கானி விலிலம் பாருணேனஸ
ததவிந்தூர வதனஃ சிந்தூரப்ரிய ஏவச

என்பன வாதிய கணேச புராண வசனங்களா லுணர்க.

ஏரம்பன் வீரமெனி லெத்தனையோ கோடியவை
ஆரம்பஞ் செய்துசொனு லவ்விதியு நேரம்பின்
இல்லையெனி லல்லாம லெய்தான் புகழெனி
லில்லைமுடி வன்னதற்கென் றெண்.

எங்குமுறும்பரனே யேழை யடிநாயேன்
இங்குன் பராக்கிரம மென்பவற்றை எங்குணர்வேன்
ஓர்ந்த வரைக்கு முரைத்தே னுலவை யொன்றே
டார்ந்தவிறை யேயென்னை யாள்.

பொலிக மறையுட்புகலும் பொருள்கள்
பொலிக வடியர் புகழ்.

விநாயக பராக்கிரம முற்றிற்று.

கணபதி துணை.

விநாயக மான்மியசார அட்டவணை.

உபாசனா காண்டம். பக்கம்.

க - வது.	சோமகாந்தன் முத்தி பெற்றது ...	2
உ - வது.	வேதவியாசர் வரம் பெற்றது ...	5
ங - வது.	தக்ஷப்பிரஜாபதி துன்பும் நீங்கப்பெற்றது ...	8
ச - வது.	பிரமதேவன் வரம் பெற்றது ...	9
ரு - வது.	கணேசர் பிரமன் புத்திரிகளைத் திருமணஞ் செய்தருளியது ...	11
சு - வது.	விண்டு மதுகைடவர் மர்த்தனமாக உபாசித்தது ...	13
எ - வது.	வல்லாளன் உபாசித்தது ...	15
அ - வது.	சக்கனெனும் அரசகுமாரன் உபாசித்தது ...	17
கூ - வது	வீமன் உபாசித்தது ...	20
க0-வது.	உருக்குமாங்கதன் உபாசித்தது ...	22
கக-வது.	இந்திரன் சாபம் நீங்கினதற்கு வந்து உபாசித்தது ...	24
கஉ-வது.	கிருச்சமதன் உபாசித்தது ...	26
கங-வது.	பலியெனுந் திரிபுரன் உபாசித்தது ...	29
கச-வது.	தேவர்கள் உபாசித்தது ...	31
கரு-வது.	விமலர் உபாசித்தது ...	32
கசு-வது.	உமையம்மை உபாசித்தது ...	34
கஎ-வது.	கர்த்தமன் உபாசித்தது ...	37
கஅ-வது.	நளன் உபாசித்தது ...	39
ககூ-வது.	இந்துமதியும் சந்திராங்கதனு முபாசித்தது ...	41
உ0-வது.	சண்முகர் உபாசித்தது ...	43
உக-வது.	மன்மதன் உபாசித்தது ...	45
உஉ-வது	உருக்குமணிதேவி உபாசித்தது ...	47
உங-வது.	பிரத்தியும்னன் உபாசித்தது ...	50
உச-வது.	ஆதிசேடன் உபாசித்தது ...	52
உரு-வது.	புருசுண்டி உபாசித்தது ...	54
உசு-வது	கிருதவீரியன் உபாசித்தது ...	56
உஎ-வது.	கார்த்தவீரியன் உபாசித்தது ...	59

சரித்திர அட்டவணை.

		பக்கம்.
௨௮-வது	அங்காரகன் உபாசித்தது	... 62
௨௯-வது.	சந்திரன் உபாசித்தது	... 64
௩௦-வது.	தூர்வை மகத்துவம்	... 66
௩௧-வது.	தூர்வை யர்ச்சனை	... 69
௩௨-வது.	ஜனகன் உபாசித்தது	... 72
௩௩-வது.	தூர்வை யாசகம்	... 75
௩௪-வது.	தூர்வை தலையேற்றல்	... 76
௩௫-வது.	வன்னி மகத்துவம்	... 79
௩௬-	விண்டு இரண்ணிய கசிபனைச் சங்கரிக்க உபாசித்தது	... 83
௩௭-வது.	விண்டு வாமனராய் உபாசித்தது	... 85
௩௮-வது.	கீர்த்தியெனும் இராஜபத்னி உபாசித்தது	... 88
௩௯-வது.	வன்னி மந்தார உற்பத்தி	... 91
௪௦-வது.	வன்னியர்ச்சனை மகிமை	... 94
௪௧-வது.	க்ஷிப்ரப்பிரசாதன் உபாசித்தது	... 96
௪௨-வது	புலைச்சிதெய்வவுருப்பெற்றுபரலோகமடைந்தது	... 98
௪௩-வது.	சூரசேனன்உபாசித்தது	... 100
௪௪-வது.	மாபாவியானவணிகன்தெய்வ விமானத்தேறினது	102
௪௫-வது.	பரசுராமன் உபாசித்தது	... 105
௪௬-வது.	இராவணன் உபாசித்தது	... 108
௪௭-வது.	இந்திரன் நந்தன வனந்தழைய உபாசித்தது	... 111
௪௮-வது.	அகத்தியர் உபாசித்தது	... 113
௪௯-வது.	காசிபர் முதலாயினோர் உபாசித்தது	... 115

லீலா காண்டம்.

	பக்கம்.		பக்கம்.
1. வக்ரதுண்டர்	... 118	8. கணபதி	139
2. சிந்தாமணி விநாயகர்	120	9. மகவாகவந்தமயூரேசர்	143
3. விக்கினராஜர்	123	10. தூமகேது	151
4. பாலசந்திரர்	126	11. உடெண்டிவிநாயகர்	155
5. கஜானனர்	129	12. துண்டிராஜர்	159
6. மல்லாலரெனவந்தமயூ	133	13. மகோற்கடர்	163
7. கணேசர்	137	14. வல்லபைகணேசர்	177

சாற்றுக்கவிகள்.

இது.

ஸ்ரீ திருவோத்தூரி லெழுந்தருளியிருக்கும் ஞானசூரியரான

ஸ்ரீமத். சிவஞான சுவாமிகளியற்றியது.

எழுசீர்க்கழிலெடிலடியாசிரியவிருத்தம்.

திருந்தருள் வடிவப் புருசுண்டி முதலாஞ் சிறப்பினர் பணிக யானனத்துப், பெருந்தகை வீர முரைக்கு நூலொன்றிப் பேருல குறவெளி விடுத்தான், மருந்தன நகையார் நடம்புரிபூவை முத்துச் சாமிப்பெயர் முதல்வ, னருந்தவத் துதித்தராசெனு மியற்பே ரண்ணல் வேளாண் குலத்தரசே.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்.

பூவை. கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

ஓமெனுந் தாரக வுட்பொரு ளுளுந்
தாமெனு முண்மை தாரணி தேர்வான்
கிரண மெண்ணில கிளைத்தா லென்னப்
பிரணவ வுருக்கொடு பிறங்கும் பெம்மான்
சீதர னாதி தேவரு முனிவரும்
பூதலத் தோரும் பொலிவி னேத்திட
விக்கின மவர்பால் விரவா வண்ணம்
பக்கம் வைகிப் பாது காக்கு
மத்து விதப்பரி பூரண வமலன்
மெத்திய ஞான விமல விநாயக
னின்னவன் மகிமை யெழிற்கத் தியமாய்
மன்னி விளங்கு மாண்மி யந்தன்னிற்
சொற்பிழை பொருட்பிழை துதைந்து கிடக்கக்
கற்பவர் களிப்பான் கனிவிற் களைந்து
தராதலத் துற்ற தக்கவர் வியக்கப்
பராக்கிர மத்துடன் பரிவினீந்தா

னிலக்கண விலக்கிய விருந்தமிழ்க் கடலைக்
கலக்க மறவே காதலித் துண்டு
நாவல ராகு நற்பயி ரோங்கக்
காவிய மழைபொழி காமரு கொண்டல்
படர்வே தாகமம் பரந்து வழங்கும்
வடமொழி தன்னிலும் வல்லவன் வல்லவன்
ஒண்ணுதற் கனிவா யுமையவள் பாகன்
கண்ணுதற் பெருமான் கழலிணை தாழ்ந்து
சித்திமேசர் தெய்வ பத்தி முழுமுதல்
முத்தமி ழுணர்ந்த மூதறி வாளன்
கற்க விரும்புவார் கருத்தினுக் குவந்து
நற்பொரு ணூல்பல் நயந்துரை செய்தோ
னனிதரு பண்பி லனந்தனை நிகர்த்தோன்
குனிதரு பொறையிற் குவலய மனையோன்
வண்மை யுடையான் மதிநல முடையான்
நுண்மையுடையா னேன்மை யுடையான்
மலிநல முடையான் மாணுரு வுடையான்
பொலிசால் புடையான் புண்ணிய முடையான்
தேனுறழ் தமிழிற் றினகரன் போன்றலாற்
பானு கவிப்பெயர் பரிவிற் பூண்டோ
னின்ன கவிஞ னினிதாய்ந் தளித்த
வன்ன நூலினை யச்சிட் டுதவினன்
புரந்தரன் போற்றப் புயநோய் போக்கி
வரம்பல வருளிய வயித்திய நாதன்
கோவில் கொண்டு குலவி வாழும்
பூவினிற் பொலிதரு பூவை நகரான்
புலவர் தம்பாற் பொன்மழை பொழியு
நலமிகு பழன நண்ணிய மரபின
னுத்தம குணங்க ளொருங்கு திரண்ட
முத்துச் சாமி முதிர்றவத் துதித்தோ
னரவணி பெருமா னடியவர் சரித்திரஞ்
சிரவணஞ் செய்யுஞ் சீல முடையான்
சிவனடி யார்களைச் சிவமென வுன்னி
யவரடி பராவு மன்பு மிக்கா
னிராசியிற் செல்வ மென்றூங் குவிக்கு
மிராசெனப் பெயர்கொ ளிணையில் வள்ளலே.

NO. 1.

பிருகு மகாமுனிவர்.

LITHO. MEENAKSHIAMNIAH PRESS MYLAPORE. 1907.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

விநாயகமான்மிய ஸாரமென்னும்

விநாயக பராக்கிரமம்.

உபாசனா காண்டம்.

காப்பு.

கற்பகமாய்வேண்டுதொண்டர்க்கருள்
சுரக்குமுபாசனாகாண்டந்தன்னைச்
சொற்பொருளாய்ந்தெடுத்தோதநெஞ்சினும்
வாக்கினுநாளுந்துணையாநிற்கு
மற்புதமாமுகவேகதந்தபிரசன்ன
விநாயகனுமெங்கோன்
பொற்பதமோர்பாலனுக்குமுன்னின்று
முறைவெளிசெய்பொலிவிற்றானே.

கணபதி துணை.

முதலாவது

சோமகாந்தன் முத்திபெற்றது.

ஆசிரிய விருத்தம்.

அமுதர்விழைதகுதேவநகர்சோமகாந்தனெனு
மரசன்றொல்வினையினடர்நோய்க்
காற்றகிலனுய்நகரொரீஇத்தேவியொடு
செல்கானத்தடுக்கப்பிருகுவின்
சமுகமவர்கரகநீர்தூவத்தொடர்ந்து
முன்சார்பிரமசாயையொருவத்
தகைமிகும்பிருகுநாமத்தடப்புனல்படிந்
தேளவிற்றணந்துதொழுநோய்
விமலவம்மாதவனுணர்த்துங்கணபத்ய
மெய்ச்சரிதம்விமரிசித்து
மேதகுங்குருபாதபூசனையுளுற்று
நாண்மேவுதெய்வதயானமேற்
றமர்மைந்தனகரத்தர்மந்திரர்கடழுவ
வத்தனிவிநாயகர்தம்பதஞ்
சார்ந்துசாரூபமவ்வேந்துமற்றையர்கள்
சாமீபமும்பெற்றனரரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

சௌராஷ்டிர நாட்டைச்சார்ந்த தேவநகரமெனும் பட்டணத்தில் சோமகாந்தனென்னும் இராஜன் சுதன்மை

LITHO. MEENAKSHIAMMAH. PRESS. MYLAPORE. 1907.

யென்னு மனைவியுடன்கூடி ஏமகண்டனென்னும் பிள்ளையைப்பெற்று அரசாண்டுவரும்போது பூர்வவினையாற் சம்பவித்த தொழுநோய்க் காற்றாதவனாய்த் தன்து குமாரனுக்குப் பட்டந்தரித்துவிட்டு தக்கபெரியோர்களா லந்நோய் தவிர்ந்து சுகிக்கலாமெனு மாவலான் மனைவியோடுந் தன்னிரண்டு மந்திரிகளோடும் வனத்திற் சென்று பிருகுமுனிவராச்சிரமத்தண்டையிற் றங்கி நிற்கையி லம்முனிவர் குமாரனான சிவநனென்பவனா லவர் முன்விடப்பெற்று அவரைக் கண்டுவணங்கின சமயத்தில் அம்முனிவ ரவ்வரசனை நோக்கி நீ முற்பிறப்பில் விந்தகிரிக்கடுத்த கொல்லநகரத்தில் சித்ரூபனென்னும் வைசியனுக்கும் சுலோசனை யென்பவளுக்கும் காமந்தனென்னும் பெயருடன்பிறந்து குடும்பினி யென்பவளை மணந்து ஏழுபிள்ளைகளையும் ஐந்து பெண்களையும் பெற்றுவாழ்கையில் தாய்தந்தையர் இறந்துபோகப் பின்னர் வேசியர் உலோலனாய்ப் பொருளையழித்து வறிஞனாகி பஞ்சமாபாதகமுஞ்செய்து ஓர் வேதியனைக் கொன்று அப் பிரமஹத்தி பற்ற வருந்தி அப்பாதகப் பொருளைக் கொண்டு விநாயகராலயம் புதுக்கின நல்வினையால் அரசனாகப்பிறந்து இதுவரையி லின்பமனுபவித்து மற்றத் தீவினையால் இந்நோயை யனுபவிக்கின்றனை யென்று சொல்லக் கேட்டதில் சற்றும் அரசன் நம்பிக்கை கொள்ளாதிருந்த அபசாரத்தால் தேகமெங்கும் வலியன்பக்ஷிகளாற் கொத்

தப்பட்டு அதனுன் மிகவும்வருந்தி யம்முனிவரைப் பணிய அவர் மனதிரங்கி விநாயகமந்திர மபிமந்திரித்த கமண்டல ஜலத்தை அரசன்மேற் புரோக்ஷித்தவுடன் அவனைப் பிடித்திருந்த பிரமஹத்திமுதலிய பாதகங்கள் நீங்கப் பின்பவர் விநாயகமான்மிய முபதேசிக்கும் பொருட்டு ஆக்கியாபித்தவாறே அவன் அவ்வாச்சிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யச் சங்கற்பமோதின மாத்திரத்திற் றொழுநோயும் நீங்கப்பெற்று அப்பிருகுமுனிவர் அப்புராண முழுவதுஞ்சொல்ல பக்திபூர்வகமாய் சிரவணஞ் செய்து மேல் ஓர் வருடகாலம் அக்குருவைப் பூஜைசெய்து வந்ததனுல் பரிசுத்தனுகி கணேசர்கிருபையால் தேவகணங்கள்விமானங்கொணர்ந்தழைக்க அச்சோமகாந்தன் பிருகு முனிவரைப்பணிந்து விடைபெற்றுத் தேவியோடு மமைச்சர்களோடுந் தனது நகரத்தைச் சார்ந்து அங்குள்ளவமைச்சர் நகரத்தாரோடு புத்திரனையுமழைப்பித்து தன் வரலாற்றைக்கூறலும் அதைக்கேட்டவுடன் அவர்கள் பிரிவாற்றுமையால் வருந்தி பிரார்த்தித்தவாறே யத்தேவகணங்கள் காசியில் சத்தாவரணத் தமர்ந்திருக்கும் ஐம்பத்தாறு விநாயகமூர்த்தங்களின் றிருநாமங்களை சூக்ஷ்ம மார்க்கமா யவர்கட் குபதேசித்துப் புனிதர்களாகச் செய்தருளி அவ்விமானத் தேற்றுவித்து விநாயகலோகத்திற் சேர்த்தனர் அவ்விடத்தில் அரசன் விநாயக சாரூபமும் மற்றையர்கள் விநாயக சாமீப்பியமும் பெற்றனர்.

கணபதி துணை.

இரண்டாவது

வேதவியாசர் வரம்பெற்றது.

திகழாரணங்கையறவாகமோகன்
னூற்றிறத்தவசமாயழுங்குந்
தீயொழுக்கந்தவிர்ந்துலகெலாமுய்
தரத்திருமால்பராசமுனிவன்
மகிழ்மைந்தனுய்வியாதனெனவுதித்தொப்பில்
வதரியில்வசித்துச்சிதறிடு
மாமறையொருங்குமுறைசெய்தபின்பி
யானைமுகவள்ளறனைவழிபடானுய்ப்

புகழ்புராணங்கட்மையுஞ்சொலப்புகு
மெல்லைபுலனெரீஇம்திமயங்கப்
போதனுலக்காரணந்தெளிந்தோர்பெரும்
புனிதவன்மதின்முநான்கியாண்
டிகபரங்களுமருள்சடாக்கரமனுச்
செபித்தின்றவமியற்றவெந்தை
யினிதின்வழங்கருட்சார்பாலவற்றை
நிறைவேற்றி யிசைபெற்றனனரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

முன்னொரு காலத்தில் உலகங்களிலுள்ள ஜனங்கள் செய்த பிராரத்த கன்ம சம்பந்தத்தினால் வேதங்களைத்

துந் தடுமாறிப்போய்ப் பாவங்களுக்கேதுவாக மோகசாஸ் திரங்களிற் பட்டுத் தங்கள் தங்கள் மனதிற்றோன்றின வித மாக நடந்துவருவதைக் குறித்து விஷ்ணுவானவர் பிரம தேவனோடு கைலைமலைக்குச் சென்று சிவசன்னிதானத்தில் தன்னெண்ணத்தை விண்ணப்பஞ் செய்துகொள்ள அவற் றைத் திருவுளத்தேற்ற பரமசிவம் விண்டுவே ! உமது கலை களிலொன்றைக்கொண்டு பூமியின்கணவதரித்து சிதறிக் கிடக்கும் வேதங்களனைத்தையுஞ் சேர்த்து நான்கு வகைப் படுத்தி இருடியர்கட்குப் போதித்துப் புனிதர்களாக்கக்கட வை அவற்றினை யுணரப்பெறாத அபக்குவிகளுக்கு எம் மிடத்துணர்ந்த நந்திதேவன் ஸனற்குமாரமுனிவருக்குப தேசித்திருக்கும் புராணங்களை யவரிடத்தில்கேட்டுணர்ந்து சகலரையும் ஓதச்செய்து அறிவை விளக்குவிக்கக் கட வையெனக் கட்டளையிடப்பெற்று மீண்ட அவ்விஷ்ணுவா னவர் பின்னொருநாள் பனிபெய்யும் பொழுதுபராசரமுனி வர் ஓடமேறிச் செல்கையில் அதனையோட்டு மச்சகந்தியை யோசனைகந்தியாக்கிப் புணர்ந்த வக்காலத்தில் அவள் கர்ப் பத்தில் தண்டகமண்டலத் துடனுதித்து வதரிகாச்சிரம மென்னும் ஸ்தானத்தில் வசித்திருந்ததால் வாதராயண ரென்றும், வேதத்தை யொருவரிடத்தும் ஓதாதுணர்ந்து நான்குகூறுகப் பிரித்ததால் வேதவியாசரென்றும் பெயர் பெற்று சிவாக்கினையின்படி ஸனற்குமாரரிடத்தில் ஓதியு

ணர்ந்த புராணங்களை சுலோகமாகச் சொல்லப்புகுந்து மனந்தடுமாறிப் பின்பு பிரமனையடுத்து வினவினதற்கு முன் சிவபிரான் விநாயகரைத் துதியாமற் சென்றதா லவர்தேர் முறிந்ததென்ற தறியாய்போலும் அவரை நீருந் துதியாம லாரம்பித்தவாற்றாலன்றோ! இத்தகைய தவறுமக்கும் நேர்ந்ததாதலா லினியாவது சுமுகாயநமவென ஆதியாயிருக்கின்ற சோடசநாமங்களை * பிரணவத்தோ டுச்சரித்து நீரெடுத்தகாரியத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கடவீரென்று கூறி ஏகாக்ஷரமந்திரத்தை யுபதேசித்து கணேசர் திருவிளையாடல்களையும், அவர் திருவருளைப்பெற்றோர்கள் வரலாற்றையுஞ் சொல்லினர் அவராக்யாபித்தவாறே வியாசரும் வனத்திற்சென்று பன்னிரண்டு வருடந் தவஞ்செய்யக் கணேசப்பிரான் பிரத்தியக்ஷமாகவும் தரிசித்து, வேண்டும் வரங்களைப்பெற்று பின்னுந் தமக்குக்காட்சிகொடுத்த அவ்விடத்தில் ஆலயம்புதுக்கி, கணேசமூர்த்த ஸ்தாபனஞ் செய்து பூஜித்து, பதினெண்புராணங்களையும் வழுவின்றி நிறைவேற்றினர்.

---

* ஓம் ஸுமுகாயநம:	ஓம் ஏகதந்தாயநம:	ஓம் கபிலாயநம:
ஓம் கஜகர்ணிகாயநம:	ஓம் லம்போதராயநம:	ஓம் விகடாயநம:
ஓம் விக்நராஜாயநம:	ஓம் விநாயகாயநம:	ஓம் தூமகேதவேநம:
ஓம் கணாத்யக்ஷாயநம:	ஓம் பாலசந்தராயநம:	ஓம் வக்ரதுண்டாயநம:
ஓம் சூர்ப்பகர்ணாயநம:	ஓம் ஹேரம்பாயநம:	ஓம் ஸ்கந்தபூர்வஜாயநம:

ஓம் மஹாகணாதிபதயேநம:

கணபதி துணை.

மூன்றாவது

தக்ஷப்ரஜாபதி துன்ப நீங்கியது.

சலமலிந்தவிர்வேணியிறையவிப்பாக
முன் றருவதிலையெனவிகழ்ந்த
தக்கன்மகமதுசிதைந்தணிகொணவமணி
முடித்தலைமாறினதுமுதலிடர்
பலவுழந்தலமரறவிர்த்தியெனமுற்கலர்
பதமலர்வணங்கவருளாற்
பழவினைதவிர்ப்பதும்பிணிதீர்ப்பதுஞ்
சுகம்பாலிப்பதுங்களைகணு
யுலகதனிலுல்வகைப்பொருளையுதவுவதும்
வரமோவாதளிப்பதுவுமா
முயர்விநாயகமான்மியத்தையன்போட
முனியுரைசெயக்கேட்டமலனும்
நலனுறுஞ்சிவனருட்குரிமைபெற்ற
வலங்கணண்ணுதவளமையுற்று
நாளுமகிழ்வோடெண்ணவிதமவன்
சாரூபநற்பதத்தெய்தினனரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

பூர்வம் பிரமாவின் புத்திரனான தக்கன் என்பவன் சிவ

பிராணை மதியாது தொடங்கினயாகம் அம்மாஹாதேவர் நெற்றிவிழியினின் றுதித்த வீரபத்திரமூர்த்தியா லழிவுற்ற துமுதற் பலவிதங்களினு நேர்ந்துழந்த துன்பம் நீங்க அத் தக்கன் முற்கலமுனிவரையடுத்து அவராலுபதேசிக்கப் பெற்ற விநாயகமகத்வத்தை விசேடபத்திமையாற் கேட்டு வந்த பலனுற் சிவபெருமான் கிருபைக்குப் பாத்திரனுகித் தனது சிரமையாவுந்தவிர்ந்து அந்தத்திற் சாரூபபத மடைந்தனன்.

கணபதி துணை.

நான்காவது

பிரமதேவன் வரம்பெற்றது.

இத்தரையிலத்தியெழில்வத்திரத்திறையை
முனமேத்தாவயன்படைத்த
வெல்லாமெணியவகையெய்தாதேவிகார
கோரத்துருவியைந்துதித்து
மெத்தவுந்தனைநெருங்கிப்பிடித்திட்டடித்
தீர்த்தவண்வெருவநேர்ந்த
விழுமந்தவிர்த்தியென்றேசாக்கரத்தை
யுனிவேண்டவவ்விமலன்வேதா?

பத்திமைக்கெளியனாய்வெளிவந்தளித்த
சீர்ப்பாட்டின்படிக்குமும்மைப்
படியேத்தவவனூறூஉஞ்சித்திபுத்திகளைப்
பணிந்துகுறையோதவவரும்
புத்திரிகளாயமர்ந்தருளிடக்கொண்டுதன்
பொருவிலாத்தொழின்மல்கவே
போற்றியிடையூறென்றிலாமன்மகிழ்மிகவும்
பொருந்திடவிருந்தனனரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

பிரமன் வக்கிரதுண்ட மூர்த்தியாகிய கணபதியை வழிபடாமற் சிருஷ்டி கிர்த்தியத்தைத்தொடங்கலுந் தானினைத்தபடி ஆன்மாக்களுண்டாகாமல் விகாரவுருவங்களையுடைய கோர பைசாசங்களாகவுதித்துத் தன்னையே யடிக்கவும் பிடிக்கவுமான பலதுன்பங்கள்செய்து பிரதிகூலமாக முடிய அச்சமுற்றுப் பின்பு ஏகாக்ஷரமந்திரத்தை ஜபிக்கையி லக்கடவுளருள்சுரந்து தமது சத்திகளை யுபாசிக்குப்படி அனுக்கிரகித்தபிரகாரம் ஸித்தி புத்திகளென்னுங் கிரியாசத்தி ஞானசத்தியையுந் தியானித்தலும் பிரசன்னமானவுடன் அவ்விருவர்களையும் வணங்கிச் சிருஷ்டியி லிடையூறென்றும் வாராதிருக்கும் நிமித்தந் தமக்குப் புத்திரிகளாகவமர்ந்தருளும்படி பிரார்த்தித்தவாறே வரங்களை நல்கி அவர்களவ்விடத் தமர்ந்தருளப் பின்பு பிரமன்தொடங்கின கிர்த்தியங்கள்யாவும் இனிதி னிறைவேறலாயின.

கணபதி துணை.

ஐந்தாவது

கணேசர் பிரமன் புத்திரியர்களைத் திருமணஞ் செய்தருளியது.

உன்னுமின்னிசைமகதிமுனிவனோர்நாட்
கயிலையுற்றோர்கஜானனருள
முவப்பவயன்மகளிரெழினல்லிலக்கண
முற்றுரைத்திச்சைசெய்தேகலும்
பின்னர்ஞானக்கிரியைசத்திகடமக்குப்
பிதாவானவிதியுமோர்ந்து
பெருமகிழ்வொடிறைவருமையிசைவுகொண்டே
ரம்பர்பெய்கழற்சமுகமுற்றென்
இன்னல மடைந்தையரை வேட்டருள்க வென்று
குறையேற்பவவ் வாறமரரோ
டிலகுமவனுலகெய்திமறைவழிமயங்கா
திவ்வுலகங்களீடேறவே
பொன்னிறொளிர்சித்திபுத்தியர்தம்மைமன்றற்
புரிந்தவர்களோடுவெள்ளிப்
பொருப்பினோர்சார்மணித்தீபமுட்புக்குயிர்கள்
போகமுறவுற்றனரரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

கமலமலர் வாசியாகிய பிரமதேவன் முன்னந் தியானிக்கப் பிரசன்னமாகியதுபோதிற் பிரார்த்தித்தவிதமே புத்திரிக ளென வமர்ந்தருளின சித்திபுத்தியெனுஞ்சத்திகள் கன்னிகைகளாக விருத்தலால் அவர்கட்குத் தந்தையெனுங் கடமைக்கிசையவிவாஹஞ்செய்விக்கவிரும்பித்தன்னெண்ணத்தைமுன்னதாக நாரதமுனிவரால் பிரணவ சொரூபராகிய கணராயர்திருவுள முவப்ப விண்ணப்பிக்கப்பண்ணி, பின்பு அதுபொருட்டாகவே தானுங்கைலைக்குச் சென்று சிவபெருமான் உமாதேவியார்அநுஞைபாற் கணேசரிடஞ்சார்ந்து சன்னிதியில் நமஸ்கரித்து நின்று உலகத்திலான்மாக்கள் பரிபாகமடைதற்கு இன்றியமையாதது சிருஷ்டியாதலால் அது விருத்திக்குக் காரணமாம் ஆண்பெண் புணர்ச்சிக் கேதுவாதல்முதலிய நிமித்தங்களுண்டாகவேண்டுமென்னு நோக்கத்தோடு மிகவும் பிரார்த்தித்து தனது கருத்தை விண்ணப்பஞ்செய்து கொண்டதற்கு அதனை யப்பெருமானுருந் திருவுளத்தேற்று அம்மையப்பருடன் தேவ இருடிகணங்கள் சூழ்வர ஈராயிர மருப்புடைய அயிராவதத்தின் மீதாரோகணித்து அப்பிரமனுடைய சத்தியலோகத்து மனோவதியென்னும் நகரத்தணைந்து பிரம புத்திரிகளாகிய அவ்வுபய சத்திகளையுந் திருமணஞ் செய்தருளிப் பிரமதேவன் வேண்டின வரங்களையும் அநுக்கிரகித்தருளினர்.

கணபதி துணை.

ஆறுவது

விண்டு, மதுகைடவர்மர்த்தனமாக உபாசித்தது.

மைந்துற்றசேடசயனன்றன்றுணைச்
செவிமலத்துவருமதுகைடவர்
மண்விண்டலங்களேயதைத்தலேத்தலின்
வெரீஇவானவரயற்குரைப்பத்
தந்தவற்கவனேதவரிசென்றுபோர்செய்து
தளர்வுற்றகன்றுகயிலே
சார்ந்துகாந்தருவனுயாழிசைபயின்றறன்
றழையன்பொடருளுமனுவைச்
சிந்தித்துசதவற்சரத்தளவருந்தவஞ்
செய்திடக்கருணேகூர்ந்து
தேவதேவன்கணுதிபன்வந்தளித்ததொரு
திவ்யவரமுற்றுமீண்டு
வந்தவிருதகுவருறைதருவிடஞ்சென்று
கூஉய்வன்போருடற்றியவர்தம்
வண்முடிகளேச்சக்கரப்படையினு
லொக்கமாய்த்திசைபாப்பினுனே.

இதன் சரித்திர சங்கிரகம்.

பூர்வஜன்மத்தில்பிரமனிடத்திற் பெற்றவரத்தால் ஒப்பற்ற பராக்கிரம சாலிகளாய் மதுவெனவும் கைடவனென வும் க்ஷீராப்திசயனனான விஷ்ணுவின் செவிகளி னின்றும் உதித்த விரண்டசுரர்கள் மானிடர் தேவர்முதலான வுயிர் களை யெல்லாம் வருந்தும்படி இமிசைசெய்து பிரமனையும் பற்றச்செல்கையில் அவரஞ்சி வேற்றுவடிவா யொளித்துச் சென்றுமுறையிட அதுகேட்ட விஷ்ணுமூர்த்தி அவ்வசு ரர்களோடு நெடுநாள் யுத்தஞ்செய்தும் வெல்வதற்குக் கூடாமல் காந்தர்வ வடிவங்கொண்டு கைலையை யடைந்து யாழேந்தி வாசித்ததற்கு உவந்து சிவபிரான் திருவாய் மலர்ந்த சடக்ஷரமனுவை நூறுவருட வரையில் விசேட அன்போடு தியானஞ் செய்துவரலும் வக்கிர துண்ட விநா யகமூர்த்தி பிரசன்னமாய் தம்மை முன் துதியாமற் போர் முந்தின தாலன்றோ இக்குறைவு நேர்ந்ததெனக்கூறிப் பின் பவ்வசுரரை வெல்லத்தக்க சக்தியனுக்கிரகிக்க அவ்வரத் தைக்கைக்கொண்டு அத்தபவனத்திற்கு ஸித்தி க்ஷேத்திர மென நாமஞ்சாற்றி ஸித்தி கணபதியென்றோர் மூர்த்த மமைத்து அதற்காலய பிரதிஷ்டையுஞ்செய்து அக்கட வுளைத் தான் அர்ச்சித்து பின்பு அவ்விரண்ட சுரர்களோ டெதிர்த்துப் போர்செய்து சக்கிராயுதத்தா லவர்களைக்கண் டித்து வெற்றியடைந்தனர்.

கணபதி துணை.

ஏழாவது

வல்லாள னுபாசித்தது.

சுத்தமுறுவணிகரிற்கலியாணனருள்சுதன்
ஞேமில்வல்லாளனென்பான்
றேழரொடுநாளுமோர்சோலைநடுகேலைத்
தும்பிமுகநம்பியெனவே
வைத்தருச்சிக்குநாளோர்நாளினத்த
மயமட்டுமவண்வைகமற்றை
மகிழ்சிறர்குரவர்சென்றவனச்ச
ஞெடுகூறவந்துட்சினந்துகடவி

அத்தனருண்மூர்த்தத்தைமகவைவை
தேயடித்தங்கோர்மரத்திறுக்கி
யகலவவன்மிகவோலமிட்டழஉமொல்லை
வந்தவ்விடர்தவிர்த்ததுமுதல்
நித்தவல்லாளகணபதிநாமமூர்த்தமாய்
நிலவவவணினிதமர்ந்த
நிமலனைப்பூசித்திருந்துசாயுச்சிய
நெடும்பதமடைந்தானரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

சிந்துதேசத்திற் பல்லியெனும் பட்டினத்தில் வசிக்

கும் வைசியகுலதிலகனான கல்யாணனுக்கு மவன் மனைவி யான இந்துமதிக்கு முதித்த வல்லாளன் அதி சிறுபருவத் திலோர் தோப்பிற் றன்வயதிற் கிணையான சிறுவர்களுடன் பிரதிதினமுஞ் சிற்றிற் புனைந்து விளையாடுபவர் போலக் கோயில் சமைத்து அதிலோர்கல்லை விநாயகராக வமைத்து அன்போடும் ஆராதித்து வருகையில் ஓர்நாள் தனது தோ ழர்கள் காலைமுதல் மாலைப்போதளவுந் தத்தம் வீட்டிற்குப் போகாதுடனிருந்துவிட்டதன்மே லவர்களுடைய தாய்தந் தையர்க ளொருமித்துவந்து முறையிடக்கண்ட அவ்வல் லாளன்பிதா மிகவுங் கோபித்துவந்து அம்மூர்த்தத்தை யெடுத்தெறிந்தும் பலவாக அச்சிறுவனை வைததன்றியு முதி ரங் காணவடித்தோர்மரத்திற் கட்டிவிட்டுப்போகவும் அத னால்நேர்ந்த மனமெலிவாலவன் பிதாவைக் குருடு செவிடு ஊமையாகவுந் தொழுநோயால் வருந்தவுமாகச் சபித்து பின்பு விநாயகக் கடவுளைநோக்கி யோலமிட் டழுகையி லோர் பிராமணச் சிறுவராய் வந்து அவனுக்குற்றிருந்த சிரமையைத் தவிர்த்து வேண்டின வரங்களையும் அப்போ தே யளித்ததன்றியு மவன் வேண்டுகோளின்படி பலராலும் வல்லாள கணபதியெனத் துதிக்கத்தக்க ஓர் விக்கிரக ரூப மாய்த் திருவுருக்கொண்டவ ணமர்ந்தருளினர் இவ்வற்பு தங்கட்குக் காரணனான வல்லாளன் பின்னரும் பக்தி விசேடனா யம்மூர்த்தத்தையும் நெடுநாள் பூஜித்துவந்தக் கணேச மூர்த்தியினது சாயுஜ்யபதவியை யடைந்தனன்.

கணபதி துணை.

எட்டாவது

தக்கனெனும் அரசகுமாரன் உபாசித்தது.

தனைவெறுத்திடுதெந்தைதன்னகர்தணந்
தயற்றலமுற்றியாசகித்து
தாயுடனமர்ந்தவதிபாலகோமகனுன
தக்கனேர்வருமுற்கல
முனிவர்மேனிப்படிந்திடுகொற்றின்வாடையான்
முப்புலக்குறைகடொழுநோய்
முற்றத்தவிர்ந்தவனுதவுங்கணேசமனு
முன்னியாங்கோராலயத்
தினிதமர்கணேசரையிறைஞ்சலிற்குஞ்
சரமெடுத்துசந்திரசேனனு
மேந்தலரசுக்குரியனுகவரியணையிடை
யிருத்தமேலீன்றெடுத்த
ஜனகனும்வந்தெய்தவீரசேனன்புதல்வி
தனைமணஞ்செய்துநாளுந்
தாழாதசெல்வநற்புகழோடுதிருவரு
டழைப்பவாழ்ந்தனன் மகிழ்ந்தே.

இதன் சரித்திர சங்கிரகம்.

கர்நாடக தேயத்துப் பானுநகரத்தில் அரசாண்ட

வல்லவராஜன் கமலையெனுமனைவியோடு வாழுநாளில் குருடு, செவிடு, ஊமையாய்த் தொழுநோயுடன் பிறந்த ஏகபுத்திரனாகிய தக்கன் சிறுபிள்ளையாய்ப் பன்னிரண்டு வயதளவும் வருந்தும்படி நேர்ந்த அந்நோய் தவிரத்தக்கதாக வேண்டிய அவுஷதமுயற்சிதேடியும் அனுகூலப் படாமையாயிருந்த தனற் பிதா மனம்வெறுத்து அப்பிள்ளையையும் மனைவியையும் அரண்மனையி னின்றகற்றிவிட அவ்விருவரும் வெளிப்பட்டுப் பூறத்தலத்தில் யாசகஜீவனஞ் செய்து கொண்டிருக்கையில் அச்சிறுவன் (பூர்வஜன்மத்தில் இந்துமதியெனு மனைவியாற் செய்த விசேட புண்யத்தாலுங் குமாரனாகிய வல்லாளன் கணேசபத்தியால் மேலான கதியடைந்த மகிமையினாலுஞ்) செல்லு மார்க்கத்தில் எதிர்ப்பட்ட முற்கலமுனிவரது திருமேனியிற்படிந்த காற்றின் வாடையால் தொழுநோய்த்துன்பம் நீங்கலாகி வாய் பேசவும், செவிகேட்கவும், கண்தெரியவு மாகப்பெற்று புனிதனையங்குநின்றப்புறஞ் செல்கையில் சந்தித்தவோர் மறையவரால் விநாயகர் அஷ்டாக்ஷரமந்திரம் விதியொடுணர்த்தப்பெற்று அம்மஹாமந்திரத்தை ஜபிக்கையில், அக்கடவுள், முந்தி கஜானனராயும், பின்னர் முற்கலமுனிவர் திருவுருக்கொண்டுந் தரிசனந்தந்து கட்டளையிட்டபடி அருளுருவான அம்முற்கல முனிவரையடுத்து ஏகாக்ஷரமந்திரத்தை முறையுடனுபதேசிக்கப் பெற்று கணேசமூர்த்தி

யாலயத்திற் சென்று அம்மனுவைப் பன்னிரண்டு வருடவ ரையில் ஜபித்துப் பின்பு விதிப்படி திருமஞ்சனமாட்டித் தூ பத்தீபநைவேத்தியத்துடன் பூஜித்துவந்த விருபத்தோரா நாளிரவில்கண்ட சொப்பனப்படியே மறுதினத்தில் (கவுண் டின்னிய நகரத்ததிபனுன சந்திரசேன ராஜன் மனைவி யெனுஞ்சுலபை தனதுநாதன் காலகதியடைந்துவிட்டதன் மேலவ்வாதிபத்தியத்தை நடாத்தற்கான வொருவனை நிய மிக்க ஆக்கியாபித்த பிரகாரம் மந்திரிகளால் விடுக்கவந்த) ககன மெனும்பட்டத்தியானை யோர்சிறந்த பொற்றாமரை மாலையை அத்தக்கன் கழுத்திற்புனைந்து பிடரியின்மீதாகத் தூக்கிவைத்துக்கொண்டு தன்னகர்செல்ல அங்கு மகுடா பிஷேகஞ் செய்யப்பெற்று அவ்வரசுரிமைபூண்டு ஷை சுல பையோடு தன்தாயுமனங்களிக்க அரசாட்சி செலுத்தி வருகின்றநாளில் இவையனைத்துங் கேள்வியாய்ப் பிதாவா கிய வல்லவராஜனும் வந்துகூடி மகிழ்வுற்றிருக்கையில், வீரசேனராஜன் தனக்கு விநாயகக்கடவுள் சொப்பனஞ் சாதித்தவிதமே யவனுடைய குமாரத்தியை விவாஹஞ்செய் து கொடுக்கப்பெற்று அவ்வரசியுடன் சரசசல்லாபனுய்ப் புத்திரசம்பத்தும் பெற்று நெடுநாள் வாழ்ந்திருந்தனன்.

கணபதி துணை.

ஒன்பதாவது

வீமனுபாசித்தது.

அணிதருகவுண்டின்யநகர்வீமராசன்
　　மகவுதுபெற்றிலாக்குறைவிஞ
லரசினைவெறுத்துநாயகியொடுதவஞ்செய
　　வடைந்தகானிற்கண்படு
மிணையில்விசுவாமித்திரப்புங்கவன்
　　பதமிறைஞ்சவாசீர்வதித்தாங்
கினிதுதவமனுவைமுன்றக்கனுற்பூசித்
　　திலங்குசனிதியில்ஜெபித்தக்
கணபதிபிரசன்னமாகவந்தருள்
　　வரத்தாற்கவின்பெருகுசொர்ண
காந்தியினுருக்குமாங்கதனெனவோர்
　　புதல்வனைக்கனிவினீன்றவனல்வயதில்
மணிமுடிதரித்துக்களித்துமேன்மூன்
　　னவன்மலரடிப்பத்திநிலையின்
மாருதிருந்துசீவாந்தத்தினித்தமாம்
　　வண்பதமுமன்னினனரோ

இதன்சரித்திர சங்கிரகம்.

விதர்ப்ப தேசத்தைச்சார்ந்த கவுண்டின்ய நகரத்ததிப
னான வீமராஜன் புத்திரப்பேறில்லையெனு மனத்தளர்ச்சி

யினால் இராஜ்ய பாரத்தை வெறுத்துத் தனது நாயகியான சாருகாசினியுடன் காட்டிற்சென்று விசுவாமித்திர முனிவனைக் கண்டுவணங்க அவர் அப்புத்திரப் பேறுண்டாகும்படி ஆசீர்வதித்து உங்கள் குலதெய்வமான விநாயகனைப் பூசிக்காமற் கைவிட்டதினா லிக்குறைநேர்ந்ததென்று சொல்லி ஏகாக்ஷரமந்திரத்தை யுபதேசித்தருளப் பெற்றுத் தன்னகரை யடைந்து முன் தக்கனாற் பூஜிக்கப்பட் டிருந்த விநாயகரை ஷை மந்திரமுறையுடனாராதித்து வருகையில் அக்கடவுள் பிரசன்னமாகி யருளினவரத்தால் சொர்ண காந்தியாக உருக்குமாங்கதனென்றோர் புத்திரனைப்பெற்று அவனுக்குப் பருவம் வந்தவுடன் அளவில்லாத சம்பிரமமாய்த் தனது குலகுரு முன்னிலையில் முடிதரித்து அரசாட்சியைக்கொடுத்து நமதுபுயச்சுமையொழிந்ததென்று மனமகிழ்ந்து சதாகாலமுங் கணேசமூர்த்தியை யாராதித்துத் தான்பரமார்த்த நிலையினின்று அந்தியநாளில் கணேசருலகில் மேலானபதவியை யடைந்தனன்.

கணபதி துணை.

பத்தாவது

உருக்குமாங்கத னுபாசித்தது.

நுண்மையோடேகாக்கரமனுப்பிதாவாற்
கலைகணுவல்கபிலராற்றெளிந்து
நோக்கமுடனரசோச்சுருக்குமாங்கத
வேந்தனுழைவருங்கானகத்துள்
நண்ணிவேட்டஞ்செய்துமீள்கையிற்
கவிமுனிவனுயகியவனைநாடி
நனிமருவவேண்டவங்கொவ்வாமை
யாலவள்நவில்சூளினலடர்ந்த
வெண்மையுறுகுட்டத்துமெலியுநாண்
மகதிமுனிமேவியன்போடுரைத்த
விதமாய்க்கதம்பநகரெய்திச்சிந்தாமணி
விநாயகர்ப்போற்றிகுண்டத்
தெண்ணீர்ப்படிந்தநோயன்றித்தொல்வினைகளுந்
தீர்ந்துதெய்வதமானமேற்
செகமெலாங்கண்டதிசயிக்கவக்கடவுட்
டிருந்துலகடைந்தானரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

உருக்குமாங்கதனென்னும் அரசகுமாரன் கபிலமுனிவர்க்குத்தொண்டுபுரிந்து சகலகலைத்தேர்ச்சியும் பிதாவான

வீமராஜனால் விநாயகமூர்த்தியி னேகாக்ஷர மந்திரோப தேசமும் பெற்றுப் பருவம்வந்தபின்பு மகுடாபிஷேகஞ யரசாளுகையில் ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்றபோது அவ்விடத்தில் கவிமுனிவர் மனைவியாகிய முகுந்தையென்பவள் அவனது பேரழகினைக்கண்டு மோகித்துப் பலாத்காரமாக மேல்விழுந்தணைப நெருங்குகையி லதற்கஞ்சினவனா யவ்விடத்தைவிட்டுத் திரும்புகையில் அவள்கோபித்து வெண்குட்டமுண்டாகச் சபித்ததன்மேல் உருக்குமாங்கதன் மிகவுந்துயரத்தழுந்திப் பசிதாகமிளைப் புடனேராலவிருக்ஷத்தின்கீ ழன்றிராத்திரிமுழுதும் வருந்திமறுநாளுதயத்தில் அங்குவந்த நாரதமுனிவர் திருவுளம் பற்றினபிரகாரம் கதம்ப நகரத்திருக்குங் கணேச குண்டத்தையடைந்து அதில் ஸ்நானஞ்செய் தெழுந்தவுடன் அச்சாபப்பிணியோடு சகலவினைகளும் விலகப்பெற்று அவ்வரசன் மிகவுமனமகிழ்வாகி யதுபோதில் தனக்கானவாளை யெல்லாம் நினைத்தோர் தருப்பைபயை முடிந்து அதனையும் ஸ்நானஞ்செய்வித்துக் கரைமீதேறி சிந்தாமணிவிநாயகரை பூஜித்து அவண்வந்த விமானத்தூர்ந்து அதைக்கொணர்ந்த தேவகணத்தலைவரிசைவாற் றன்னகரடைந்து மாதாபிதாக்கள் சுற்றத்தினர்க்கு மந்த ஸ்நானபலனிற் சிறிதுதத்தஞ் செய்து அவர்களும் புனிதர்களாயுடன்வர விமானரூடனாய்க் கணேசர் சாலோகபதமு மடையப்பெற்றனன்.

கணபதி துணை.

பதினோராவது

இந்திரன் சாபம் நீங்கினதற்கு வந்து உபாசித்தது.

கருதமுடியாமையலாகியகலிகைதனைக்
கரவிற்புணர்ந்தமகவான்
கடுசாபமுற்றபின்பஃதுணர்பிரகற்பதி
கௌதமனிடத்தணைந்து
பெரிதேத்திவேண்டியப்புனிதனிடை
செவியாற்பெறாஉமனுவைவாசவற்குப்
பிரியப்பெருக்கினுபதேசித்தவெல்லையிற்
பெண்குறிகளாய்மெய்யெலாம்
பரவிநின்றவைகண்களாகலுமகிழ்ந்தவன்
பாங்காய்க்கதம்பவனமுட்
பத்தியினமைத்தசிந்தாமணிவிநாயகர்ப்
பதமேத்திநெடுநோட்டவம்
புரிகையிற்பிரத்தியக்ஷமாய்பல்வரமுதவி
யதுபோலப்பரம்பொருளவண்
போந்தோரெவர்க்குமாகென்றருள்செயப்
பெறாஉப்பொன்னுலகமெய்தினனே

இதன் சரித்திர சங்கிரகம்.

தேவேந்திரன் நாரதமுனிவனால் அகலிகை விசேஷ

சுந்தர முடைய ளெனக்கேள்வியுற்று அதிகாமாந்த கார ளுய்க் கௌதமர்வடிவங்கொண்டு அம்முனிவர் ஸ்நானஞ் செய்ய வெளியிற் சென்றசமயத்திற் பன்னகசாலையுள் நுழைந்து அவர்க்கினிய பாரியையாகிய அகலிகையுடன் கூடிக்குலாவிய பின்னர் அவள் அவனது மாறுபாடுணர்ந்து பலநிஷ்டூர வார்த்தைகள்கூறி வருந்தி நிற்கையில் ஆச்சிரம மடைந்தமுனிபுங்கவன் அங்குநிகழ்ந்த செய்திகளையறிந்து கோபித்து அவளைச்சிலையுருவாகவும் பதுங்கி நின்று பூனை யுருக்கொண்டு வெளிப்பட்டுச் செல்லும் அவ்விந்திரனைக் கண்டுதடுத்து உடல்முழுவதும் பெண்குறிகளாகவுஞ்சபித் திட்டபோது அவன்மிகுதியு மன்னொந்து நாணமிக்கானு யோர்மடுவிற் தாமரைநாளத்துளொடுங்கி யொளித்திருக்கை யில் இதுகாரணத்தைப் பலரறியவெடுத்துரைத்த நாரதனோ டுங் தேவகணங்களுஞ் சூழப் பிரகஸ்பதி கௌதம ராச்சிரம மடைந்து மிகவு மவரைத்துதிசெய்து பிரார்த்திக்க அம் முனிவரும்வந்து தமது சாபத்தால் இந்திரனுக்கு நேர்ந்த புன்மைக்குறிகள் மாறத்தக்கதாகவிநாயக சடாக்ஷரமந்தி ரத்தை யங்குபதேசிக்கப்பெற்று மீண்ட அப்பிரகஸ்பதியும் இந்திரனைத்தேடிவந்து அவனைக்கண்டு அம்மனுவை யுப தேசித்தவுடன் அவன் தேகமெங்குமாகவிருந்த அக்குறி கள்யாவும் நேத்திரங்களாகமாற அதை இந்திரன்கண்டு மகிழ்ந்து கதம்பவனத்தடாகக்கரையில் ஓராலயமமைத்து

அதில் சிந்தாமணி விநாயகரென வோர்மூர்த்தப்பிரதிஷ்டைசெய்து அச்சடாக்ஷரமனுவை ஆயிரவருடவரையில் ஜெபித்துவருகையில் கருணாநிதியான விநாயகக்கடவுள் பிரத்தியக்ஷமாகி வேண்டின் வரங்களேயும், அதுபோதவன் பிரார்த்தித்தவிதம் அவ்விடம்வந்து தரிசிப்பவர்கள் உபாசிப்பவர்கட்குஞ் சகலநலன்களு முண்டாகத் திருவாக்கும், வழங்கப்பெற்று அமராவதியை யடைந்தனன்.

கணபதி துணை.

பன்னிரண்டாவது

கிருச்சமதனுபாசித்தது.

உசிதமாயொருதலேக்காமத்தினலமரூஉ
மொருபோகிகவிமுனியிலா
ளோங்கெழின்முகுந்தைவிழைவேந்துரு
வினவளேமருவலுமுதிகிருச்சமதனல்
லிசைகல்வியொடுகணனுந்துவா மனுவு
மவ்விருடியான்முற்றுணர்ந்தே
யியல்கலேத்துறைவல்லவுறுவர்கூட்டத்தி
லத்திரிமுனிவனெடுவோதிட

வசையாயவன்சீறிநீயறவன்மைந்தனலை
யெனவெள்கிவந்தன்னையை
வரலாறுகேட்டுச்சபித்துமேலசரீரி
வாய்மையாலகமகிழ்ந்து
சுசியாருமாதவர்களமரர்தொழுதேவல்செய்
தொல்வேள்விநற்குரவனுய்த்
துன்னுந்தவத்திறுற்றலைமைபெற்று
னருட்டும்பிமுகனருளினன்றே

இதன் சரித்திர சங்கிரகம்.

முற்கூறின கவிமகாமுனிவர் தேவியாகிய முகுந்தை யென்பவள் தனது கருத்தின் வர்றிணங்காதகன்ற அதிசுந்தரனை உருக்குமாங்கதராஜன்மேலுற்ற விரகதாபமாறாதவளாய் நிற்கையில் நெடுநாளவளை யணையவெண்ணி வருந்தியிருந்த இந்திரன் அவ்வரசனைப்போ லுருவங்கொண்டு அவளுடன் சரசசல்லாபமாய்க் கூடியனுபவித்துப்போக அதே கருப்பமாயுதித்த கிருச்சமதனென்னும் புத்திரனை யவள்நாதனாகிய கவிமுனிவர் தமதுகுமாரனாகவேயெண்ணி வளர்த்து சகலகல்வியுஞ் சொல்வித்து கணநாதவாமந்திரோபதேசமுஞ் செய்தானபின்னர் அம்மந்திர வுபாசனா முயிற்சியால் அதிசாமார்த்தியனா யிருக்கையில் ஒருநாள் மகருஷிகணங்கள் கூடி சாஸ்திரப்பிரசங்கம் நடத்துஞ் சபைக்குச்சென்று அக்கூட்டத்துள் அத்திரிமுனிவரை

வாதில்வெல்ல அவர்கோபித்து நீ முனிபுத்திரனல்லை உருக்குமாங்கதராஜன் புத்திரனென இகழ்ந்துரைக்கக் கேட்டு கோபித்துத் தன்தாயிடஞ் சென்று அதன்வரலாற்றை விசாரிக்கையில் அவள்நடந்தவற்றைச் சொல்ல அவளைச் சினந்து காட்டிலந்தைமரமாகச் சபித்து மனவருத்த முற்றிருக்கையில் அசரீரிவாக்கால் இந்திர புத்திரனென்றறிவிக்கமகிழ்ந்து பின்னர் புட்பகவனத்தில் பதினையாயிர வருடங் கணேசந்துவாமந்திரத்தை யுச்சரித்து அரியதவஞ் செய்து பெற்றவரத்தின் வண்ணம் சகல முனிவர்களுந் தேவர்களுந் தன்னைத் தொழுதெழுந்தேவல் செய்யத்தக்க மாட்சிமையோடும் யாகாதிகட் கெல்லாம் உபாத்தியாகி முன்தான்வரம்பெற்ற விடத்திலோ ராலயமமைத்து அதில் வரதகணபதி யென்றோர் மூர்த்தப்பிரதிஷ்டை செய்து துதித்திருந்து சிவஞானசொருபனுயினன்.

கணபதி துணை.

பதின்மூன்றுவது

பலியெனுந் திரிபுரனுபாசித்தது.

சிறுமைதெறுயோகக்கிருச்சமதமுனிவிழி
திறப்பவப்பார்வைவந்த
திடவவுணனும்பலியத்தந்தையாரிடந்
தேர்மனுவினைச்செபித்துப்
பெறுபுட்பகாவனத்தேரம்பமூர்த்தியருளான்
மும்மையுலகில்ப்ரபலம்
பெருகுவேந்தரைவென்றுமுப்புரத்தரையீன்று
பிரசண்டராமவர்களா
லுறைநகரொடெண்ணுமிடமெங்குமூர்ந்
துற்றுயிர்களொழிசெய்தயன்மா
லோடிந்திராதியர்கலங்கிப்பதுங்கிட
வுடன்றுகைப்பற்றுமவர்கட்
செறிபதங்களையெலாம்புத்திரர்களாளவே
திரிபுரனெனும்பெயரொடு
சிங்காரமிக்கவங்காளமாநகரிற்சிறப்பின்
வாழ்ந்தனன்மகிழ்ந்தே

இதன் சரித்திர சங்கிரகம்.

சிவயோகஞ்செய்து கொண்டிருந்த கிருச்சமத முனிவர்பார்வையினின்றுமுதித்த பலியெனுமவுணன் பிதா

விடத்தில் கணேசர்திவ்ய மந்திரோபதேசம் பெற்று அக் கடவுளைநோக்கிப் பதினையாயிரவருடம் அரியதவஞ்செய்து வரப்பிரசாதங்களை யடைந்து புஷ்பகவனத்தில் ஓராலய முண்டாக்கி யதிற்கணேச மூர்த்தப் பிரதிஷ்டைசெய்தா ராதித் திருந்த சின்னாட்பின் பூதலத்தும் பாதலத்து முள்ள அரசர்களைவென்று பின்னர் சொர்க்கலோகஞ் சென்று இந்திரனை வென்று அவன் சிம்மாதனமேறி யர சாண்டிருந்தபின் கணேசரிடத்திற்பெற்ற வரத்தின்படி சுவர்த்தி, சுப்பிலம், சுக்கிலமெனும் சுவர்ண, இரஜித, அய மயமா யளவற்ற அற்புத சம்பத்துக்களுடன் அகஸ்மீக மாகத்தோன்றின மூன்றுபுரங்களையுந் தன்மனதாலுதித்த வச்சிரதமிஷ்டிரன் வீமகாயன் காளகூடனென மூன்று புத்திரர்களைக் கொண்டரசாளச் செய்வித்தனன் அவர்கள் அப்புரங்களோடெவ் வெவ்விடங்களிற் செல்லநினைத்தா லும் அவ்வவ்விடங்களுக் கெழும்பி யவற்றினடிக்கீ ழகப்ப டுமுலகங்களெல்லா மழியத்தக்கதாகத்திரிந்துலவுவார்கள் அதுநிற்க பலியென்பவன் பின்னு மனத்தால் சண்டன் பிரசண்டனென இரண்டுபுத்திரர்களை யுண்டாக்கிப்பயந்து கரந்தகன்ற பிரமனது சத்தியலோகத்தையும் விண்டுவின் வைகுண்டத்தையும் அவர்கள் ஆளவிதித்துப் பின்போர் மனைவியிடத்திற் கூடிப்பெற்ற மதனென்பவனால் சகலலோ கங்களினுந் தனதாணையைச் செலுத்திவரவுந் தான் வங்கா ளமெனுநகரத்தில் சர்வாதிகாரப்பிரதனாய் திரிபுரனென் றோர் உபநாமமுடனெடுங்காலம் வாழ்ந்திருந்தனன்.

கணபதி துணை.

பதினான்காவது

தேவர்களுய்ச்சித்தது.

தழைதருஞ்சொர்க்கமத்தியபாதலத்தையுந்
தாங்கியடலாற்றிரிபுரன்
றனதாணையுட்படுத்தக்கண்டமாலயன்
சதமகனுமிமயவரையின்
முழைதனிலொளிக்கநேர்ந்ததையெண்ணி
யமரர்கணமுற்றுபுகலிடமிலாராய்
முகம்வாடிநொந்தயரவந்தன்ரதனுதவ
முதுமனுவையுன்னிநோற்க
வழைசெய்க்கிரங்கிவருமனையினீண்டிய
சச்சிதானந்தவமலமூர்த்தி
யற்புதனெழிற்றந்திமுகவண்ணலருள்
வழியினக்கைலையெந்தைமேருக்
குழைவுறத்தலையளிவழங்குபேரருளிற்
கொடுந்துயர்ப்பரவைநீந்திக்
கூறும்பகைதணந்துசின்ஞளினிற்றம்
பதங்கூடிவாழ்ந்தனர்களன்றே

இதன் சரித்திர சங்கிரகம்.

முற்கூறின பலியெனு மவுணன் திரிலோகங்களையுங் கைப்பற்றினதன்மேல் இந்திரனுடன் பிரமவிஷ்ணுக்களும்

இமயமலைச் சாரலிலொளிக்கத் தேவகணங்கள் யாவருமவனால் மிருதியுமலைப் புண்டவர்களாய் அம்மலைச்சாரலிற்கூடி மனச்சஞ்சலத்துடன் வருந்திநிற்கையில் நாரதமுனிவரவண் வந்தனுக்கிரகித்த அஷ்டாக்ஷரமந்திரத்தை அத்தேவர்கள் முற்றமைப்படி ஜபித்து, உபாசித்து வருகையில்கருணாநிதியான விநாயகக்கடவுள் பிரத்தியக்ஷமாகி யவர்கள்வேண்டும் வரங்களை வழங்கினபின்னர் கயிலாய பதியிடத்தும்அத்தேவர்கள் தங்களாபத்து நீங்கலாக வரம்பெற்று சிலகாலத்தில் பூர்வரீதியாய்த் தத்தம்பதங்களை யடைந்து சுகிக்கப்பெற்றனர்.

கணபதி துணை.

பதினைந்தாவது

விமலருபாசித்தது.

துதிகலாதரனெனப்பலிமுனைங்கைப்பிரான்
றேன்றியாசித்தமூர்த்தத்
தூமணிமுயற்சியினெய்தாமையாலனிகமொடு
சூழ்ந்தவவுணன்கையலையம்
பதிநாடிவரவிமலரவனுற்றலோர்ந்
திறும்படியுன்னியோகுமுயலப்
பலநாதனுமமலகணநாதனப்பரன்
பங்கயமுகத்தினைந்து

வதனமொடுதோன்றியோர்மந்திரந்
தரவமரர்மாண்புறச்செய்வைதீக
வையமிசையுமைசகிதமாய்ப்பூததேவ
கணமருவவாரோகணித்தாங்
கெதிரடற்றிரிபுரனருஞ்சமரெலாம்போக்கி
யெந்தையருண்மனுவையோதி
யேவுகுலத்தழித்தெவ்வுலகுமுன்
போலவின்புறவிசைத்தாரரோ

இதன் சரித்திர சங்கிரகம்.

கணேசமூர்த்தியானவர் தம்மை வழிப்பட்டு நின்ற தேவர்களிடத் திரக்கமுற்றுப் பலியென்னுமசுரனிடத்திற் கலாதரனென்னும் பெயருடன் பிராமணவடிங்கொண்டு தேவியரோடுசென்று அவனைக்கண்டு உருத்திரமூர்த்திகளிடத் திருக்குஞ் சிந்தாமணி விநாயகரை தருவித்துத் தரவேண்டுமென்று அவனுயிர்க் கிறுதியாக சங்கற்பித்து மீண்டபின்பவன் அதைக் கேட்டனுப்பியு முதவாமையாயிற்றெனக்கோபித்து யுத்தசன்னத்தனுய்ச்சைனியத்துடன் கைலையை நெருங்குகையில் அத்திரிபுரனைச் சங்கரித்தற்காக உருத்திரமூர்த்திகள் திருவுளங் கொண்டு தியானயோகத்தினின்று பிரார்த்தித்தவுடன் விநாயகரும் ஐந்துமுகங்களும் பத்துகைகளு முடையவராயவர் திருமுகத்தினின்றுங் கணேசரெனத் தோன்றிப் பீஜாக்ஷரத்தோடு கூடியமஹாமந்திரத்தை யுபதேசிக்கப்பெற்றவிமலரும் பூதகணங்கள்

தேவகணங்கள் புடைசூழச் சந்திரசூரியர்களை சக்ரங்களாக வுடையவைதீகத்தேரி லுமாதேவிசமேதரா யாரோகணித்து முப்புர்த்தினு மூன்றுருக் கொண்டெதிர்த்துக் ககனபாதல மெங்குமுலாவிப் போர்செய்த அப்பலியென்னுந்திரிபுர னோடு மூன்றுபுரத்தையுந்தமது முத்தலைச்சூலத்தாற் சாம்ப ராக்கி வெற்றியடையப்பெற்று அதுபோதழிந்தவுலகங்களை யதாப்பிரகாரமமைத்தருளின பின்னர் பூதகணங்களுடன் கயிலாயமடைந்து அடியவர்கட்கெல்லாம் அருள்வழங்கி நின்ற சிவபெருமானுக்கு விண்டுமுதலிய தேவர்களெல் லாம் மிகவுமகிழ்வாகத் திருவிழாநடாத்தித் துதித்து விடை பெற்றுத் தங்கள் தங்கள் பதவிகளைச் சேர்ந்தார்கள்.

கணபதி துணை.

பதினாறுவது

உமையம்மை யுபாசித்தது.

திக்கெலாம்பரவரனைமதியாதுதக்கன்
சொற்றீமொழிக்காற்றுதவன்
றிருமகளெனுந்தேகம்விட்டிமயமகளாய்ச்
செப்ரித்தம்மைவெனையுறவே

மிக்கபலநோன்புசெய்தாவணியின்முற்பக்க
முற்றுஞ்சதுர்த்திவிரதம்
விதிவழியனுட்டிப்பவேண்டிவன்மீகமண்
விழைவிற்கொணர்ந்துகண்ட
வக்கிரத்தெழிறுண்டநாதனுக்கபிடேக
மாதிமலிவித்துமலர்தூய்
மதுரமானைவேதனந்தூபதீபம்வழங்கி
யேத்திக்கங்கைமுன்
முக்கண்முதல்வன்றனைமணந்திடவரங்
கொண்டம்முதல்விதன்வேட்கைவண்ண
முற்றமகிழ்வாய்ப்பரமனொடுகயிலைதன்னின்
முயங்கிவாழ்ந்தனளென்பவே.

இதன் சரித்திர சங்கிரகம்.

பிரம குமாரனும் வேதவல்லிநாயகனுமான தக்கன் புரிந்த வரிய தவத்தினால் உமாதேவியார் புத்திரியாய் தாட்சாயணியெனத் திருவவதாரஞ்செய்து மஹாதேவரைத் திருமணம் புரிந்திருக்குங் காலத்தில் அத்தக்கன் மருகராகிய பரமசிவத்தை நிந்தித்த தன்மேல் அம்மை திருவுளத்திற் சகிக்கப்படாத சினங்கொண்டு அவனால் வளர்க்கப்பட்ட தமது சரீரத்தை வைக்கக்கூடாதென்று யோகாக்கினியால் தேகத்தைவிடுத்து பர்வதராஜன் புத்திரியாகத் தோன்றி வளர்கின்ற நாளில், கங்கையைச்சிவபெருமான் கலியாணஞ் செய்துகொள்வ தன்முன்னர் தம்மை மணந்திட வேண்டுமெனத் திருவுளத்திற் கொண்டகருத்தைப்பிதாவாகிய பரு

வதராஜனுக்கறிவித்து இதனை நிறைவேற்றத்தக்க விரதம் யா தென்று வினவலும் அவர்மனமகிழ்ந்து ஆவணிமாதம் பூர்வ பக்ஷத்தில் வருகின்ற விநாயக சதுர்த்தி விரதமா மென்று அதை சாங்கமாகச் சொல்லக்கேட்டுப் பார்வதியாரும் தெய் வகங்கையிலாடிப் பூசைக்குவேண்டு முபகரணங்களைச் சேக ரித்துவைத்துக்கொண்டு அலங்கரித்திருந்த பூஜா மண்டப மடைந்து விபூதி யுருத்திராக்ஷ கண்டிகையணிந்து சிரசாதி பாதம்வரையில் நியாசஞ்செய்து ஆசமனம்புரிந்து பிராணா யாமத்திலிருந்து பூதசுத்தி முதலானவைகளை நடாத்திச்சங் கற்பங்கூறிச்சந்தனவேதிகையிட்டுஅதிற்பரப்பிய தண்டுலத் தின்மீதாகச்சொர்னவஸ்திர மொன்றைவிரித்து அதன்மீது இழைசுற்றிச் சலம்பூரித்த பொற்கும்பத்திற் திவ்வியமான தளிர்களையும் இரத்தினங்களையும் பெய்ததனை ஸ்தாபித்து சந்தனபுஷ்பாதிகளைத் தரித்து மந்தராக்ஷதைகளாற் பூசித் தானவுடன் சொர்னத்தினலமைத்த கணேச மூர்த்தியை எந்திரத்தின்மீதும்பிருதுவியினலமைத்தமூர்த்தியை வேதி கையின்மீதுமாக எழுந்தருளச்செய்து திவ்விய தீர்த்தம் கந்தம், புஷ்பம், பலமுதலான வற்றைக்கொண் டபிஷேக மாட்டி அலங்காரம் அர்ச்சனை நைவேத்தியம் தூபதீப முதலான ஷோடசோப சாரமுஞ் செய்து ஓமாதிகளை நடாத்தி விதியுடனோர் மாதமளவும் ஊனுறக்கங்களைநீத்து மூலமந்திரம் ஏகாக்ஷரமந்திரம், சடாக்ஷர மந்திரங்களாற்

பூஜித்து சியசாதமந்திரத்தாற் கற்பூர நீராஞ்சனஞ் செய்து வலம் வந்து அனந்தவித தானங்களும் வழங்கி அவ்விரத பூர்த்திசெய்த சின்னுளில் விநாயகமூர்த்தியின் பேரருளால் அவ்வுமாதேவியார் தமது மனோரதபலன் ஸித்தியாகப் பெற்றனர்.

கணபதி துணை.

பதினேழாவது

கர்த்தமனுபாசித்தது.

இங்கிதமிகுங்கர்த்தமன் றன்முன்வினை
மூலமெய்துபிருகுவைவின்வ
வேந்தனீமிடிமிகும்வணிகனுயின்ன
லாற்ரு துயிர்விடச்செல்கானிற்
றங்குசௌபரிமுனிவரற்காண
வவனருட்டனிமனுவுபாசித்துநற்
சதுர்த்தியத்தவனுனாத்திமொற்றினேற்கு
நாட்டந்திமாமுகவனருளாற்
பொங்குசெல்வம்பெருகிவாழ்ந்தனேயவ்
வண்ணமிப்போதுமணிமுடியரசனுய்ப்
போந்தனேயெனப்பெரிதவ்விரதத்திறத்தைப்
புகன்றிடவுணர்ந்ததமுதன்

மங்களாகரமாகவருடங்தோறுமம்
மன்னவன்விதிவழாமன்
மா்நோன்புசெய்துகாலாந்தத்திற்
கடவுண்மலரடியின்வைகினனே.

இதன் சரித்திர சங்கிரகம்.

கர்த்தமனென்னுமரசன் தன்னிடத்திற்கு வந்தபிருகு முனிவரைவணங்கி யுபசரித்தானபின் தான் செல்வம் போகமுதலானவைகளைப் பெற்றகாரணம் வினவ, அதற்கப்பிருகுமுனிவர் பூர்வசன்மத்தில் நீசொற்பபாக்கியவானய் வைசியகுலத்திலுதித்துக் குலதர்மத்தைக் கைவிட்டதற்காகச் சுற்றத்தார் தூஷித்திடற்காற்றமல் மனத்தளர்ச்சியா யுயிரை யொழிப்பானகக் காட்டிற்சென்ற விடத்தில் சௌபரிமுனிவரைச்சந்தித்து உனதுமனக்குறைகள் யாவையுங் கூறலும் அதுகேட்டம்முனிவர் கணேசமந்திரத்தை யுபதேசித்து விநாயகசதுர்த்தி தினத்தில் அவ்விரதத்தைக்கூடவிருந்து விதியுடன் முடிப்பித்தனராக அவ்விரதமகிமையினல் அகண்டைசுவரியம்பெற்று வாழ்ந்திருந்து இச்சனனத்திலும் அச்சேஷபலனை யனுபவிக்கின்றனை யாதலா லதனை யனுஷ்டித்து வரக்கடவை யென்றுகூறித் தம திருப்பிடஞ் சென்றனர் பின்பவ்வரசன் அவ்வாறே வருடந்தோறும் அவ்விரதத்தை யனுஷ்டித்துவந்து அந்திய காலத்தில் கணேசமூர்த்தி யனுக்கிரகத்தாற் பேரின்ப முத்தியுமடைந்தனன்.

கணபதி துணை.

பதினெட்டாவது

நளனுபாசித்தது.

பல்லோர்க்கிதஞ்செய்நளன்வந்தகோதமனை
விரதப்பிரபலம்வினவமேன்முற்
படுஜென்மம்நீகௌடவேந்தாகிவாழுநாட்
பகர்கௌசிகன்சொற்படி
நல்லசீர்மைத்தானதும்பயன்றனை
விளைவினல்குவதுமாக்கண்டல
னவைசாபநீத்ததுமூவர்க்குமுத்தொழிலை
நாட்டினதுமுறுகணிடையூ
றல்லதீர்ப்பதுமாம்விநாயகசதுர்த்தி
நோன்பதனையன்போடென்று
மனுட்டித்துமுடிவில்சீருற்றுவாழ்ந்திம்மையினு
மரசர் மன்னுயினையெனச்
சொல்லலுமவன்மிகமகிழ்ந்தநாண்முதலாத்
தொடங்கிமேலொப்பின்ஞான
சுகபோகமார்ந்துலகெலாநனிபுரந்திசை
துலங்கிடவிருந்தனனரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

நிடதநாட்டிலுள்ள விந்தமெனு நகரத்தில் நளராஜன் அகண்ட மண்டலாதிபதியாய் பத்மாஸ்தனென்ற வமைச்

சனேடுஞ் செங்கோல்செலுத்தித்தமயந்தியெனும் அரசியை மணந்து வாழ்ந்திருக்கின்றநாளில் அவண் வந்த கௌதம முனிவரை வணங்கி கிர்தார்த்தனாகத்தக்க வோர் விரதத்தைத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென் றவன் பிரார்த்தித்ததன்மேல் முற்சனனத்தில் நீ கௌட தேசத்திற் கரசனாய்ச்சதுரங்கசேனைகளுடன் சத்ருருக்களை ஜயிக்கச்சென்றபோது ஓர்வனத்திற்கண்ட கௌசிகமுனிவரால் உபதேசிக்கப்பெற்ற விநாயகசதுர்த்தி விரதத்தை அவர் சமுகத்திற்றானே யனுட்டித்துச் சகலதிக்விஜயமும் சம்பத்தும் பெற்று வாழ்ந்திருந்து அப்புண்ணிய விசேடத்தால் இச்சனனத்திலும் அவ்வகையே யனுபவித்து வருகின்றனை யாதலால் அவ்விரதமே கிருதார்த்த மானதாகும் அதனை யனுட்டித்து வருவாயென்றம் முனிவராக்கியா பித்தவாறே அநுமுத லச்சக்கரவர்த்தி வருடந்தோறு மதனை யனுட்டித்துவந்து காலாந்தரத்தில் மேலான பதவியடைந்தனன்.

கணபதி துணை.

பத்தொன்பதாவது.

இந்துமதியும் சந்திராங்கதனும்

உபாசித்தது.

முடிமன்னனுஞ்சந்திராங்கதன்வன
வேட்டைமுயல்போதினேரரக்கி
முடுகவஞ்சிப்பாய்ந்தமடுவொடுநாக
கன்னியர்மோகமாய்ப்பாதலத்
திடநாதன்மாய்ந்ததாய்மார்கல்ய
விச்சின்னமெய்திந்துமதிதுயரமுற்
றீராறுவருடமாம்பின்மகதிமுனிவன்
வந்தினிதருண்மனுவையுன்னி
யடர்சதுர்த்தியினேன்பனுட்டித்துவரு
நாளிலவனையங்குறுவித்தலா
லாவதென்னெனவந்தவரிவையரிரங்கி
மற்றத்தடக்கரைகொணர்ந்து
விடவரண்மனையடைந்தகமகிழ்ந்திடு
பினவ்விரதத்தின்மகிமையோர்ந்த
வேந்துமாராதித்துத்தம்பதிகளாயொக்க
மேவினர்கணித்யபதமே.

இதன் சரித்திர சங்கிரகம்.

மாளவதேசத்தைச்சார்ந்த கன்னநகரத்தில் வுமகாந்த

ராஜன் புத்திரனான சந்திராங்கதன் அரசுசெய் திருக்குங் காலையிற் ஓர்நாள் காட்டிற்சென்று வேட்டையாடி மீள்கையில் அவனெதிர்த்த இராக்கதர்களைச் சங்கரித்திட்டது கண்டு வந்தெதிர்த்த வோர் அரக்கியுடன் போர்செய் திருக்கையில் தனது கரத்தையவள் பற்றும்படி நெருங்கின தன் மேல் வலியிழந்தவனு யடுத்த மடுவிற் பாய்ந்தவளவில் அங்கு நீராடவந்திருந்த் நாகலோக ஸ்திரீகள் அவ்வழகனைக் கண்டு தங்களிருப்பிடத்திற் கழைத்துக்கொண்டு போய்ச் சேர்த்து திவ்யாமுத முதலாயூட்ட வுண் டிருக்கையில் அவன் ஏகபத்தினி விரதனுதலால் அம்மாதர்கள் பிரார்த்தித்தவாறு ஓர் தினமேனும் புணர்தற்கிணங்காமல் மறுத்தும் அவர்கள் தங்கள் காதன்மிகுதியால் உபசாரமாகவே யவ்விடத்தில் நிறுத்தப்பட்டிருக்கையில் இந்துமதி யென்னும் அவ்வரசன் மனைவி வேட்டைக்கு உடன்சென்ற பரிசனர்களால் நாயகனிறந்துவிட்டதாய்க் கேள்வியுற்று மாங்கல்ய விச்சின்னஞ்செய்து பன்னிரண்டு வருடமாய் மிகவுந்துக்கித்திருக்கையில் அவண் வந்த நாரதமுனிவரைப் பணிந்து அவரிடத்தில் தன்குறையைச்சொல்ல அதுகேட்டம் முனிவரனுக்கிரகித்த கணபதி மஹாமந்திரத்தை முறையோடு சதுர்த்தினத்தி லுபாசித்துவருகையில் கணேசமூர்த்தி கிருபையால் அந்நாகலோக ஸ்திரீகள் மனதிலிரக்க முண்டாகி முன்தாங்கள் சந்தித்தமடுக்கரையில் அச்சந்திராங்க

தனைக் கொணர்ந்து விட்டவுடன் அவ்வரசன் தன்னக ரடைந்து மனைவியுடன் கலந்திருக்கையில் அவள் மேற்படி விரதத்தாலடைந்த அனுகூல முணர்ந்த மகிழ்ந்து அது முதலவனுமதை யிடைவிடாமல் அனுட்டித்திருந்து அந் தத்தில் அத்தம்பதிகள் பேரின்பவீடடைந்தனர்.

கணபதி துணை.

இருபதாவது

சண்முகருபாசித்தது.

கட்டழகனுமாரனுற்பரமன்யோகங்
கலைந்துமையொடும்புணர்ந்து
கலிதமாமொப்பில்சுக்கிலமதைப்பருகி
யக்கனலாற்றிடாதுதகவன்
விட்டிடச்சரவணத்தாரன்மதியமையும்
விசாகத்துதித்தந்த
வேள்கண்ணைநதியின்புடைப்பெருவனத்
தேத்திவிழைவரமுமயிலூர்தியு
மிட்டமாய்ப்பெற்றவத்தலமயூரேசமா
மின்பெயரொடோங்கவதனு
டிலக்ககணபதிபூசையாற்றிமேற்றந்தையா
ரினிதுதவுமெஃகமேந்தித்

துட்டனாகியதாருகாசுரன்படைமாய
நகர்சூழ்கிரவுஞ்சவெற்பும்
தூளியாகப்பொருதழித்துமீண்டனன்
மலர்கடேஉயமரர்நனிவாழ்த்தவே.

இதன் சரித்திர சங்கிரகம்.

தேவேந்திரனு லாளப்பட்டிருந்த ஆயிரத்தெட்டண்டங்களையுங்கவர்ந்து தன்னொருகுடை நீழலின்கீழிருத்தித் தேவர்களை யெல்லாஞ் சிறையிலிட் டனந்தகாலமாக வலைத்ததாருகாசுரனுதியரையொழிக்கவெண்ணி இந்திரன்பிரமன் விஷ்ணுமுதலான வர்கள் மன்மதனைக்கொண்டு யோகநிலையைத்தவிர்த்தபின்னர் மஹாதேவர் உமாதேவியரைமணந்தவரோடுங் கூடியருளிய வீரியத்தை யுண்ட அக்கினிதேவன் அதன்வெப்பத்தை யாற்றாது இமோற்கிரிச்சாரலுக் கோடியங்கிருக்கின்ற கங்கையாற்றில் சரவணங்களால் வளர்ந்துமூடப்பட்டிருக்கின்றவோர் பொய்கையிலதனை விடுத்தபின்னர் அதுகுழந்தையாகி நக்ஷத்திர ஸ்திரீகள் பால்கொடுத்து வரப்பதுமப்பாய லிற்றவழ்ந்து அவண்வந்தம்மையப் பார்களன் பாகவெடுத்துக் கைலையை யடைந்தபின்னர் உமாதேவிமடிமீதும் பரமன் தோண்மீதினுமாக வளர்ந்தருளின சண்முகக்கடவுள் அமரர் வேண்டுகோளால் அவ்வவுணனுதியரை வெல்லுதற்காகக் கிருஷ்ணநதி வடபாரிசத்திலோர் வனத்தில் விநாயகக்கடவுளை மனதிற் றியானித்து

சடாக்ஷர மந்திரத்தை முறையுடனுபாசித்துப் பலவரங்க ளோடவர் மயில்வாகனத்தையுந் தரப்பெற்று அவ்விடம் மயூரேசமெனுந் தலமாக ஆலயமமைத்து அதனுள் இலக்க விநாயகரெனவோர் மூர்த்தப்பிரதிஷ்டை செய்தாராதித்து மீண்டு கைலையையடைந்து சிவபெருமானிடத்தும் வேல் முதலிய பலவாயுதமும்பெற் றவ்வசுராதியரோ டெதிர்த்து அவர்களைச் சங்கரித்து வெற்றியடைந்தனர்.

கணபதி துணை.

இருபத்தொன்றாவது

மன்மதனுபாசித்தது.

தெளித்தமெய்யிறைநுதற்றீக்கோட்படே
உவனங்காமதன்சீர்மெய்பெறவே
தேவதேவற்போற்றவவரருள்கணேச
மனுசிந்தித்துநோற்கயிலுளங்
களித்திடத்தோன்றிமால்கண்ணனாய்
வருநாள்கவின்றநின்முன்னைமேனி
கைபெறுதியென்றருளியெந்தைகணபதி
செலக்காமன்மயூரத்தலத்

தொளித்தழைபளிக்காலயத்தொடு
மகோற்கடருயர்வடிவுகண்டருச்சித்
தோவாததொண்டுபுரிநாளின்மன
மிக்குவப்பவெம்மானருளினல்
அளித்தொகுதிசேர்மலர்க்கணையேந்து
முன்னையுருவங்ஙனேபெற்றுநடுவெ
ணுதபல்லுயிர்க்கனுராகபோகங்க
ளாக்கரசுமூக்கினனே.

இதன் சரித்திர சங்கிரகம்.

திருமால் மருகியாகிய இரதிதேவியானவள் நுதல்விழி யாற்சாம்பரான தனது நாயகனைக்குறித்துப் பிரலாபித்த பின் தனக்குப் புகலிடம்பிறிதின்றிச்சரணுகவடைந்து, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து விழிகளில் நீர்த்தாரையைப் பெருக்கி யோர் புறமாகநின்று பலவாகத்துதித்து மாங்கல்யபிச்சையருள வேண்டுமென்னவிரந்துகேட்கப் பெருமானும் திருவுளம்வைத்தவனை யங்ஙனெழுப்பி அவளுக்குமாத்திர முருவமாகவு மற்றைபர்க்கெல்லா மருவமாகவு மருள்செய் யப்பெற்ற சமயத்தில் அவ்வனங்கன் அக்கண்ணுதலைப் பணிந்து துதித்து யாவரிடத்துந்தான் முன்போலவுருவாய் விளங்கும்படி யருளவேண்மென்று பிரார்த்தித்தற்கிரங்கி யவ்வகை விநாயகமூர்த்தியாற் பெறுகென்று அவரது ஏகாக்ஷரமனுவை முறமையுடனுபதேசிக்கப் பெற்று மயூ

ரத்தலத்தையடைந்து ஆயிரவருடமளவு மதைஜபித்துத் தவம்புரிய அவண் ஐங்கரக்கடவுள் பிரசன்ன மாகலும் தரிசித்துப்பணிந்து நின்றுதன தெண்ணத்தை விண்ணப் பஞ்செய்து கொள்ளச்சுவாமி கருமவனை நோக்கி விஷ்ணு வானவர் கண்ணனாகவவதரிக்குங் காலத்தில் நீயவ்வண்மே யுருக்கொண்டுதிப்பாயென்று அனுக்கிரகிக்கப்பெற்றபின்பு அவ்விடத்தில் பளிங்கினு லாலயஞ்சமைத்து மகோற்கட விநாயகரென்றோர் மூர்த்தத்தை ஸ்தாபித்து இடைவிடா மல் பக்திபூர்வகனய்ப் பூஜித்துவருகையில் அக்கடவுட்பெ ருங்கருணையால் அந்தசன்மத்திற்றனே இடையில் நின்ற நெடுங்காலமளவு முன்போலவே சர்வலோகங்களினும் நிஜ வுருவுடன் தனதாக்கினையைச் செலுத்தி இரதிதேவியுட னினிது வாழ்ந்திருந்தனன்.

கணபதி துணை.

இருபத்திரண்டாவது

உருக்குமணிதேவியுபாசித்தது.

இரிதலறவுலகோம்பமால்கண்ணனய
நாளெழில்சித்தசன்றேன்றலை

யினிதுதித்தருமையின்வளர்ந்துபிரத்தியும
னெனவெவனுயோங்குநாளில்
விரிவிபுநருலகினுறுமிரதியைச்சம்பரன்
விழைவிற்கவர்ந்துசெல்லும்
வேலையவனுழுவிவீழ்வேலையின்விழுங்கி
னவமீனையத்தகுவனிடையே
தரவலைஞர்சேதிக்கமகவினிற்கண்ட
வன்றுன்வளர்ப்பதுநாரதன்
சாற்றவம்மாற்புதல்வனேகிநெடுநா
ளவனுடன்சமர்புரிந்துநிற்க
அரியதாயாமுருக்குமணிசேய்க்காணுத
லந்தேசதுர்த்திநோன்பை
யாற்றவாருநாளிலவுணனைச்செற்
றடைந்தானமாதொடுபெதியினே

இதன் சரித்திர சங்கிரகம்.

திருமால் கண்ணனாகவும் மஹாலட்சுமி உருக்குமணி தேவியாகவும் அவதாரஞ்செய்தகாலத்தில் பிரத்தியுமன்ன னெனப்பெயர் கொண்டு சுந்தரவுருவத்துடன் மன்மதன் அவர்களுக்குப் புத்திரனாகவுதித்துச் சகல சாஸ்திரங்களை யும் ஆராய்ந்துணர்ந்து மஹா பராக்கிரமனென்றியாவரும் புகழும்படி யௌவனப்பருவனாயிருக்குங்காலத்தில் இரதி தேவி தேவருலகில் தனித்திருக்கின்ற செய்தி யறிந்து

சம்பரனெனும் அசுரன் போயெடுத்து வருகையில் அவள் நழுவிக்கடலின்வீழ்தலும் அக்கடலிலோர்பெரிய மச்சமானது அவளை விழுங்கிவிட பின்பவனக்கடலி லிறங்கித் தன்திறத்தி லானமட்டும் அதனைக் கலக்கிச்சோதித்து எவ்விடத்துங்காணுதவனாகிப் பதியைச்சேர்ந்த சின்னாள்கழித்தபின்னர் அங்கெடுத்துவிழுங்கின மச்சத்தைப் பிடித்தவலைஞர்கள் அவ்வசுரனுக்குக்கொடுக்க அவனம்மீனத்தை சேதிக்கும்போது அதன் வயிற்றிலோர் பெண்மக விருக்கக்கண்டு அதை தனக்கோர் குமாரத்தியாகப்பாராட்டி வளர்த்துவருகின்றானென நாரதரால்சொல்லக்கேட்டு அப்பிரத்தியும்னன் அவனிடஞ்சென்றெதிர்த்து வெகுநாள்வரையிற் போர்புரிந்து கொண்டிருக்கையில் குமாரன்வரக்காணமல் நெடிதுவருந்தி நின்றதாயாகிய உருக்குமணிதேவி யங்குவந்த நாரதராற்பெற்ற கணேசமந்திரத்தை விநாயகசதுர்த்திதினத்தில் விரதானுஷ்டையாய் விதியுடன்ஜபித்து வருகையில் ஆருவதுதினத்தில் அவ்விரதபலத்தால் அப்பிரத்தியும்னன் அச்சம்பராசுரனைச் சங்கரித்து இரதிதேவியுடன் பதியில்வந்து சேர்ந்தனன்.

கணபதி துணை.

இருபத்துமூன்றுவது

பிரத்தியும்னன் உபாசித்தது.

கச்சையுணிவாணுசுரன்புதல்வியான
வுஷைகனவினிற்பேரழகனைக்
கண்டேவுபாங்கியானித்திரையொடெய்த்
தவக்காளையாமனிருத்தனே
டிச்சைமிகவேயவள்கரவிற்புணர்ந்திட
விருஞ்சூலதுற்றதோர்ந்த
விகலவுணனவனைச்சிறைப்படுத்திட
நேடியீன்றவப்பிரத்தியும்னன்
மெச்சுமூவுலகெங்கணுங்காண்கிலா
துளமெலிந்தபின்றுதிசதுர்த்தி
விரதமதனுட்டித்துவருநாட்கணே
சரருண்மேவவக்கண்ணனுர்சென்
றச்சமறுவாணனைப்பொருதுவெங்
கண்டபின்பனிருத்தனம்மங்கையோ
டணிநகரடைந்தின்பமளவளாய்
வாழ்ந்தனனருந்தவத்தீரறிமினே.

இதன் சரித்திர சங்கிரகம்.

பிரத்தியும்னன் குமாரனான அனிருத்தனது காளைப்
பருவத்தினையும் பேரழகினையும் கனவிற்கண்ட வாணுசுரன்

குமாரியாகிய உஷையென்பவள் சித்திரரேகை யெனும் தனதுயிர்ப் பாங்கியைக்கொண்டு அவன் நித்திரைசெய்யுஞ் சமயத்தில் மாயையாற்றருவித்துச் சிலநாள் இரகசியமாகத் தன்னிருப்பிடத்தில் வைத்துக்கொண்டு அவனுடன் சரச சல்லாபமாகக் கூடிக்கலந்திருக்கையில் அவளுக்குச் சூலுண் டான துணர்ந்து அவ்வசுரன் அவ்வனிருத்தனை யருஞ் சிறையில் வைத்திட்டிருக்கையில் எங்குந்தேடிக் காணமல் பிதாவான பிரத்தியும்னன் அளவற்ற துக்கசாகரத்தின் மூழ்கி வருந்துகையில் அதனையவன் தாயாகிய உருக்குமணி தேவிகண்டு என்னருமைப்புத்திரனே நீமுன்னர் சம்பரா சுரனேடு யுத்தஞ்செய்யச் சென்றபோது நெடுநாள்வராமலி ருந்த நிமித்தம் யான்மிக்க வருத்தத்தை யடைந்து நீ விரைவில்வந்து சேருமாறு கணேசமூர்த்தியின்சதுர்த்தியை யனுட்டித்துன்னை வரப்பெற்றேனெனச் சொல்லக்கேட்டவ னுமவ் விநாயகக்கடவுள் விரதத்தைமுறையுடன னுட்டிக்க அவ்விரத நாண்முடியு முன்னமதன் பல விசேடத்தால் நாரதராலச் செய்தியுணர்ந்த பிதாமகனை ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி ஆக்கிரகித்துச்சென்று சகல தேயத்தரசர்களுந் தன்னைப் புணியும்படி அக்கினி மதிலைக்கொண் டரசியற்று கின்ற அவ்வவுணனே டெதிர்த்து அனேக நாள்வரையிற் பிரபல யுத்தஞ்செய்துவென்று அச்சிறுவனைச் சிறையி னின்றும் விடுவிக்க அவன் அக்கன்னிகையுடன் தன்னக ரிற்சேர்ந்து சுகமாய் வாழ்ந்தனன்.

கணபதிதுணை.

இருபத்துநான்காவது

ஆதிசேடன்உபாசித்தது.

வியன்மிகுங்கைலாசபதிமுடியிருத்தலி
னவ்வித்தகர்தாள்வணங்கும்
விபுதர்முனிவரினுமேலோனையெணிய
வனந்தனைவீழ்த்திநிலமோதலு
மயர்வாய்ப்பணங்கிழிந்தனுருநீஇயொரு
மகதிமுனியுதவுமனுவைநோற்க
வந்தவண்பிரசன்னமாங்கணேசர்க்கு
தரவனைபந்தமாகியவனு
ஙியலொரீஇப்பிரவாளநகரத்திலாலய
மொடெங்கையருண்மேனியுங்கண்
டினியவபிடேகார்ச்சனைதிசின்னாள்
செய்திருந்தடைவின்முற்பணித்த
நியமனப்படியாதிசேகரத்தைந்தலை
நிலமேந்தவோராயிர
நிலவுபந்திச்சுடிகையுடனினிதமர்ந்தன
னிகரிலிசையோங்கமாதோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

ஸ்ரீகைலாயத்திற் பார்வதி சஹிதராய் சாம்பமூர்த்தி
சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது தேவர்கள் முனிவர்கள்

முதலியோர் வந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து பிரார்த்தித்துக் கொண்டிருக்கையில் ஜடாமகுடத் திருந்த சேடன் இவ்வகை மகிமைபெற்ற சிவபெருமான் றிருமுடியி லிருக்கின்றோ மல்லவாவென்று அகங்கரித் தெண்ணினவளவில் பரமசிவத்தாற் றண்ணென்றிழுத்து நிலத்தின் மோதப்பட்டவனோர் சிரமாயிரம் பிளவாகி உலகத்தைத் தாங்குகின்றவலியும் தவங்களாற் கிடைத்த மகத்வங்களு மிழந்து மிகவுந்துன்புற்றுத் தான்முன்போல சிவபிரான் சார்புறுமுபாயத்தைக் கருதி ஒன்றுந்தோற்ருது சுவாசமற்றவனாயிருக்கையில் அவண்வந்த நாரதமுனிவரா லனுக்கிரகிக்கப்பட்ட சடாக்ஷர மந்திரத்தை ஜெபித்து சதுர்த்தி விரதத்தையனுட்டித்து வருகையில் விநாயகமூர்த்தி பிரசன்னமாகி சிவபெருமான் ஜடாபாரத்தி லேந்து சிரங்களோடமர்ந்திருக்கவும், பிளந்த பிளவாயிரமும் ஆயிரம் சிரங்களாகி முன்போலவே பூமியைத்தாங்கி யிருக்கவும், அதுபோதிருந்த வோர் சிரசுடன் தமக்கு தரவந்தனமாக விருக்கவும், அனுக்கிரகிக்க அவ்விதமே தனதோரம்சங்கொண்டு விநாயகக்கடவுளிடத்தமர்ந்து மற்ற அம்சங்களோடு பிரவாள நகரத்தில் ஓராலயஞ்சமைத்து விநாயக மூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து பரிமள திரவியங்களா லபிஷேகித்துத் திவ்வியபுட்பங்களா லர்ச்சனைசெய்து ஆராதித்துப் பெற்றவரத்தினல் சிவபெருமான் திருமுடியில் முன்போல வசிக்கவும் உலகினைத்தாங்கவும் பெற்றகமகிழ்ந் திருந்தனன்.

கணபதிதுணை.

இருபத்தைந்தாவது

புருசுண்டிபுபாசித்தது.

மும்மதக்களிறெனத்திரியும்வெஞ்சின
வேடன்மொய்வாள்கொடாறலைப்போன்
முற்கலரருட்பார்வையானற்குணம்
பெற்றுமுன்பணியவவரிரங்கிச்
செம்மையின்விதித்தவாறவனேருலர்ந்த
கொம்பிற்குக்கணேசரதுசீர்
திருந்துநாமஸ்மரணையொடுநீர்விடத்
தளிர்த்திட்டதுதெளிந்தமுனிவர்ப்
பெம்மான்கமண்டலத்தறலாற்பவித்திரம்
பெற்றெழிற்புருவநாப்பட்
பெரும்புழைக்கையுறீஇப்புருசுண்டி
யென்னவோர்பெயருலகின்வாய்ந்தவரரு
ளம்மனுவையோதிநற்றவமியற்றிட
வைங்கரத்தையனமலமாம்வே
தாகமத்திறமருளிமுப்பொருண்முடிபு
சொலவருண்முத்தனுயினனல்.

இதன் சரித்திர சங்கிரகம்.

தண்டகவனத்தைச்சார்ந்த நந்துரமென்னும் நகரத்திற்குச் சமீபமான வேடச்சேரியில் வசிக்கும் விப்பிரத

னென்னும் வேடன் ஓர்நாள் அதற்கடுத்த வனமார்க்கமாக வந்த முற்கலமுனிவரைக் கண்டவுடன் தன்வழக்கப்படி விரைந்தெழுந்து வாளாற்றுணிக்கச் சமீபிக்கையில் அவ ருற்றுநோக்கின வளவில் நல்லறிவு திக்கப்பெற்று உடனே கீழ்வீழ்ந்து அவர்பாதங்களைப் பற்றிவிடா திருந்தனனுக அவனிடத்திலவர்க் கிரக்கமுண்டாகி முந்தியவன் மனே வுறுதியை யறியவேண்டி கணேசமூர்த்தி நாமத்தை மாத்தி ரம் அவனுக்குபதேசித்து ஒருலர்ந்த கொம்பைநட்டு அது தளிர்க்கின்ற பரியந்தம் நீர்விட்டு அம்மனுவைத் தியானித் துவருதியென்று அவர்சென்றபின்பு அவ்வாறே ஆயிரவரு டவரையி லதற்கு நீரைவிட்டு ஜபித்துவர அதுதளிர்த்துப் பூத்திருப்பதை மேற்படி முனிவர் மீண்டவண்வந்து கண்டு வியந்து தமதுகமண்டல நீரைமந்திரித்து அவன்மேற்றா வினவுடன் அவன் அதுகாறுஞ்செய்த பாபங்களெல்லாம் விமோசனமாகப் பட்டவன் புருவமத்தியிற் றுதிக்கையு முண்டாகக்கண்டு வியந்தவுடனே கணேசரது ஏகாக்ஷர மந்திரோபதேசஞ்செய்து ஓர் கற்பம்வாழக்கடவை யென் றன்புட னாசிர்வாதஞ்செய்து அவண் தளிர்த்த மரமும் கற்பக விருக்ஷ மாகவென்று சொல்லிப் போனபின்னர் புருவநடுவில் சுண்டந்தாங்கி நின்றகாரணத்தாற் புருசுண்டி யெனும் பெயராயவன்மேலு மோராயிரவருட வரையில் அவ்வேகாக்ஷர மந்திரத்தை யிடைவிடாமல் ஜபித்து வந்த

தன்மேற் பிரசன்ன மான விநாயகக் கடவுள் பரிபூரண கடாக்ஷம் பாலித்து அவனருகமர்ந்து வேதாகம ரகசியங் களையும், சரியை, கிரியை, யோக, ஞானத் திறத்தினையும் தீர்க்கமாய்த் தெளிய உபதேசித்தளிருனர் அது முதல் கணேச மூர்த்தியின் சாரூபத்தைப் பெற்றவம் முனிவன் ஜீவன் முத்தனாயினன்.

அன்றியு மப்புருசுண்டிமுனிவன் சங்கட சதுர்த்தி விரதத்தை விதிப்படி யனுட்டித்து முற்றின பலனைக் கணேசமூர்த்தியின் திருக்கரத்தில் தத்தஞ்செய்து நரகத் தில் வீழ்த்தப்பட்டிருந்த தனது பிதிர்களையும் புண்ணிய லோகத்திற் சேர்ப்பித்தனன்.

கணபதிதுணை.

இருபத்தாறுவது

கிருதவீரியனுபாசித்தது.

தமமிலின்பருண்மதலைவேண்டிக்கிர்தவீரியன்
றவமுனுற்றிடுகையிலவன்
றந்தைபிரமர்ச்சார்ந்தறிந்தெழுதி
கனவினிற்றந்தபுத்தகரியமமாய்

விமரிசித்தியன் மாசிமதியபரபக்கஞ்
சதுர்த்திமேவியபௌமனுள்
வெண்ணிலவுதித்தபின்னிபமுகத்
தெந்தையைமெய்யன்டின்மஞ்சனுதி
சுமனசமொடருகினலர்ச்சனை
நைவேத்தியந்தூபதீபாதிமுற்றிச்
சோமபூசனையாற்றியந்தணர்க்குண்டி
முதல்சொற்றானமும்வழங்கி
யமைதியினனுட்டிக்குநாளேங்கரேச
னருளாற்கார்த்தவீரியற்பெற்
றுக்கமுற்றண்ணலாரருளினுக்கணியனு
யன்பின்வாழ்ந்தனன்மகிழ்ந்தே.

இதன் சரித்திர சங்கிரகம்.

சையாத்திரிசாரலிற் கருகாகவிளங்குமோர் பட்டணத் தரசனுன கிருதவீரியன் புத்திரப் பேறுவேண்டி வனத்திற் றவஞ் செய்கையில் பிதிர்தேவனு யிருக்குமவன் தந்தை நாரதராலறிந்தவது செய்தியைக் குறித்துப் பிரமனிடஞ் சென்றுவணங்கி வினவின தன்மேல் அக்கிருதவீரியன் பூர்வ ஜென்மத்தில் அரசவம்சத்தில் சாமனென வுதித்துக் கணேசனெனுமோர் புத்திரனேடு வாழ்கையில், நிகரற்ற துன்பமும் வறுமையும் நேர்ந்து ஒருநாளவன் பசிக்கொடு மையால் வழிதடுத்துப் பன்னிரண்டு பிராமணர்களைக்கொன் று அவர்கள் பொருள்களைக் கவர்ந்துகொண்டு வீட்டிற்குப் போயன்று சங்கட சதுர்த்தி தினமாகையால் முன்னுட் டொடங்கி யன்னமில்லாம லிறந்திருக்கக்கண்ட, தன்பிள்ளை

விநாயகலோகத்திற்சேர அவ்விசேஷ தினத்தில்மூன்றுதரங் கணேசா கணேசாவென வவன்பெயரைக் கூவி யழைத்த மகிமையினால் உடனேயிறந்த அந்தச் சாமன் உனக்குப் புத்ர ஞயுதித்து அரசுரிமையை யிப்போதடைந்தனன் ஆதலால் அப்பிரமஹத்தி யொழியுமாறு மாசிமாத அபர பக்ஷத்திற் செவ்வாய்க்கிழமை கூடின சதுர்த்தியில் அவ்விரதத்தைத் தொடங்கி கணேச மூர்த்தியின் பாதபத்மங்களை மனதி லிருத்தி யேகாக்ஷர ஷடாக்ஷர மந்திரமொடு திருநாம மந் திரத்தையுந் தியானித்து அன்னபானுதிகளை நீத்து சந்தி ரோதயமானவுடன் விநாயக மூர்த்தியை யெழுந்தருளச் செய்து பூஜை முடித்தபின் சந்திரனுக்கும் அர்ச்சனையை நடாத்தி வேதியர்கட்கு அறுசுவையுண்டி யளித்து அன்றி ராமுழுதும் நித்திரை தவிர்த்து அக்கடவுளின் சரித்திரங் களைக்கேட்டுவந்து இவ்வகையோர்வருடவரையில் சதுர்த்தி தோறும் பூஜித்தால் புத்திரப் பேறுண்டாகுமென்று அவ் விரதத்தின் சகலமகத்துவமும் பிரமனுற்கூறக் கேட்டபடி யே யோர்புத்தகமாக வெழுதித் தனது புத்திரன் கனவிற் சென்று அதைவாசிக்கும் விதிகளைத் தெரிவித்து அவன் கையில் அப்புத்தகத்தைக் கொடுத்துச் சென்ற பின்னர் அவனவ்விதமே அவ்விரததினம் வரக்கண்டு ஆரம்பித்து தன்குல குருவாகிய அத்திரிமுனிவர் முன்னிலையில் கும்ப முடன் கணேசமூர்த்த முதலாக விதிப்படி யமைப்பித்து ஆராதித்து புத்திரப்பேறடையப் பெற்றனன்.

கணபதிதுணை.

இருபத்தேழாவது

கார்த்தவீரியனுபாசித்தது.

நிற்காரமாய்க்கரசரணமிலாதுதி
கார்த்தவீரியன்குறைகணீங்க
நிகரிறத்தாத்திரயமுனிவனருள்வழி
வனங்நேர்ந்துறுதியொடுசெய்தவத்
திற்காங்குபிரசன்னமாங்கணேசரை
யவனெழுந்தன்பொடஞ்சலித்த்ற்
கேலாமையான்மனத்துட்டுதிக்கக்
காலிரண்டஸ்தமாயிரமுமாய்
விற்காட்டுமைஞ்ஞூறுபாணமோடியாவரினு
மிக்கவலிமையுமருள்செய
விழைந்துநிலயமொடுபிரவாளகணபதி
கண்டுமெய்யன்பொடேத்திமீண்டு
சொற்காதிபனுமுண்ணடுங்கமண்டலவேந்தர்
தொழுதிறைசெலுத்தமேலாஞ்
சுகோச்சசக்கரவர்த்தியென்னவெங்கணு
மிசைதுலங்கிவாழ்ந்தனனென்பவே.

இதன் சரித்திர சங்கிரகம்.

கணேசப் பிரசாதத்தினு லுதித்த, புத்திர னுக்குக் காலுங்கையு மின்றி முடமா யிருக்கக் கண்ட சுகந்தை

யெனுந்தாய் வருந்துவதறிந்து அவள் காந்தனை கிருத வீரியராஜன் வந்துபார்த்து வருந்தினபின் விநாயகர் விரத பலத்தினாலுண்டான இப்புத்திரனுடற் குறையை யக்கட வுளே விலக்கியருளுவ ரென்றுசொல்லி அவளுடையமன தைத்தேற்றி அக்குழந்தைக்குக் கார்த்த வீரியனென்ன நா மகரணஞ்சாற்றி வளர்த்துவருகையில் அக்குமாரனுக்குப் பன்னிரண்டு வயதானபின்பு அங்குவந்த தத்தாத்திரய முனிவரை கிருதவீரியராஜன் பணிந்து தனது புத்திரனுடற் குறையை விண்ணப்பஞ் செய்ய அதற்கவரிரக்க முடன் அப்புதல்வனை வருவித்துத் தீக்ஷைசெய்து ஏகாக்ஷரமந்தி ரத்தையுபதேசித்துச் சென்றபின் கார்த்தவீரியன் வனத் திற்சென்று அம்மனுவைத்தியானித்து அன்னபானாதிகளை யுநீத்துப் பன்னிரண்டு வருடவரையி லருந்தவசெய்கையில் அடுத்தவோர் தடாகத்தினிடமாக விநாயகமூர்த்தி பிரத்தி யக்ஷமாகலும் அவனெழுந்து வணங்கக் கூடாமையான் மனத்தாலனந்த முறைவணங்கி நிற்கையில் அவனுக்கிரண்டு கால்களையும், ஆயிரங்கைகளையும், அதற்கேற்ற வலிமை யையும், ஐஞ்ஞூறுபாணங்களையு மனுக்கிரகிக்க அப்போ தங்குவந்திருந்த பிரமன் முதலியோர்களாலும் ஆசீர்வதிக் கப்பெற்றவனு யக்கடவுளைப் பேருவகையுடன் றுதித்துப் பவளவொளியோடு தனக்குக் காக்ஷிகொடுத்த அவ்விடத் தில் பொன்னாலுமணிகளாலு மோராலயமமைத்து பவளத் தினாற்செய்த கணேசமூர்த்தியை யதிற்ரூபித்துப் பூசித்து மீண்டு தனதுநகரமடைந்த பின்னர் (வரம்பில் காக்ஷி, வரம் பிலின்பம், வரம்பிலாற்றலோடும், சராசரத்தினும் சர்வஞ்

ஞுத்துவமும், பொருந்த மேற்படிதத்தாத்திரய மகாமுனி வரால்கிருபைகூர்ந்தனுக் கிரகிக்கப்பெற்று ஓர்கற்பகாலவரையில்) உலகமுழுவதும் தனதாஞ்ஞை செல்லச் செலுத்தித் தேவர்களெல்லா மேவல்கேட்கச் சக்கரவர்த்தியாய் சுகித்தரசாண்டனன்.

மேற்கூறின மூர்த்தமும் வனமும் பிரவாள விநாயகர் பிரவாளவன மென்னும் பெயராய் வழங்கிவருகின்றன.

பின்பொருகாலத்தில் ஆதிசேடன் பூபாரந்தாங்க மாட்டாதவனுய் அப்பிரவாள கணேசமூர்த்தியையடுத்து அன்போடுபாசித்து வேண்டின வரங்களைப்பெற்று அவ்வனத்தின்கண் தரணீதரமென வோர்நகரமுண்டாக்கி யதில் தரணீதரவிநாயக ரெனமற்ளுேர் கணபதிமூர்த்தப் பிரதிட்டையுஞ் செய்தனன்.

அவ்விநாயகரை இராவணன்பூஜித்து இலங்காதிபத்தியமும், பாண்டவர்கள் பூசித்துத் துரியோதனுதிகளை ஜயித்தரசாட்சியும், பெற்றனர்.

( ) இக்குறியினுள்ளாக விளம்பினவைகள் பிரம்மாண்ட புராணசம்ஹிதையில் சக்ரவர்த்திகள் வம்சாவளியிற் கூறப்பட்டிருப்பன.

கணபதிதுணை.

இருபத்தெட்டாவது.

அங்காரகனுபாசித்தது.

இலையமில்பரத்வாசனருமதைநதிக்கரையி
னெய்துழியொர்மைவிழியின
ளெழின்மதிமுகங்குசங்கண்கவரவிரக
மேலிட்டவன்விடுசுக்கிலம்
நிலையுறநிலத்தினதுமகவாகவேகண்ட
நிலமகள்வளர்த்தெடுத்தந்
நிருமலமுனிக்குநல்கிடவவருமன்பு
மிகநேர்ந்துபலகலைகளுதவித்
தலைமைபெறுமேரம்பன்மனுவளிக்கப்
பூசுதனுமதைச்சார்ந்துநோற்றுத்
தகைகொளங்காரகப்பெயரொடுங்
கோணிலைதனைப்பெற்றுமேற்றனுமத்
துலவுவாரந்தொகுசதுர்த்தியிலிறைஞ்சு
நர்க்குறுசங்கடங்கடவிர
வும்பன்முகவண்ணல்பாலவ்வரமு
மேற்றமர்ந்தான்விண்டலத்துவந்தே.

இதன் சரித்திர சங்கிரகம்.

விநாயகபத்தரான பரத்துவாசரிஷியானவர் நருமதை
நதிதீர்த்தில் ஸ்நானஞ்செய்யச் சென்றபோது அவனோர்

மிகவுஞ்சுந்தர முள்ள ஸ்திரீயைப்பார்த்தகாலத்தில் மன நாட்டங்கொண்ட வுடனே கலிதமாகிப்பூமியிற் சிதறின வீரியமோர் சிறுமகவாகலும் அங்கதைக்கண்ட பூமிதேவி யெடுத்துவளர்த்து அம்முனிவரிடஞ் சேர்த்தபின்னர் அவ ராலன்பாக வளர்க்கப்பட்டு அங்காரகனென நாமகரணஞ் சாற்றி உபநயனாதிகளைச்செய்து வேதாகமங்களைக்கற்பித்து கணேச மந்திரத்தையு மனுட்டிக்கு முறமையோ டுபதே சித்தானவுடன் அச்சிறுவன் ஆயிரவருடவரையிற் றவஞ் செய்கையில் அதற்கிரங்கியானை வதனமும் துதிக்கையும் தசபுஜங்களுடன் பிரசன்னமான கணேசமூர்த்தியால் தே வர்களோடுகூடி யமுதுண்ணத்தக்க வுறவும் கோள்களோ டொன்றாக வதியும்பேறும், மங்களனென்னு நாமமும், அந்நாமவாரஞ்சேர்ந்து அபரபக்ஷத்தில் வருகின்ற சதுர்த் தி ஏனையசதுர்த்திகளைவிட சிறந்ததா யனுட்டிப்போர்க்கு சர்வ சங்கடங்களும் நீங்கவும், அவ்விரததினம் சங்க டசதுர்த்தியெனும் பெயராய் வழங்கவும், அனுக்கிரகிக்கப் பெற்றபின்னர் அந்நிலமகன் ஆலயஞ்சமைத்துச் சிந்தாமணி விநாயகரென்றோர் மூர்த்தப்பிரதிட்டை செய்து பூசித்து வருநாளில் அக்கடவுட் பேரருளால் வந்தவிமானத்தில் ஆரோகணித்து உம்பருலகஞ் சேர்ந்தமுதுண்டு நவக்கிரக் கங்களி லொருவனாகப்பெற்றனன். அவ்வங் காரகனும் மூர்த்தியை அவந்திமா நகரமேற்புறத்தில் பிரதிட்டை செய்து பூஜித்தது காமதமென்னுந் தலமாயவ்விடத்தில் அதுமுதல் யோகிகள் சித்தர்கள் முதலாயினோரும் வந்துபா சிக்க விருக்கின்றது.

கணபதிதுணை.

இருபத்தொன்பதாவது

சந்திரனுபாசித்தது.

அற்புதத்திசைமகதிமுனிதருங்கனியை
முனருங்கைலையமலனயனை
யார்க்கிருநரக்கடவதென வறுமுகற்
கெனவளிப்பவதுகண்டுசீறுங்
கற்பகக்களிறடிமலர்பணிந்தையவிக்
காழ்பிழைபொறுத்தியென்னக்
கருணைசெய்தோதுகண்டுள்ளமதியத்தி
ஞெளிகழலமேற்கண்டோர்சுகந்
துற்பலமுறக்கொடுஞ்சூளுரைத்திடலுந்
துணுக்குற்றவ்வனுமெம்மான்
றுணையடிபணிந்துகுறையேற்பவருள்
கூர்ந்தவன்றன்பங்கடொலையநாலாம்
விற்பொலிதினத்திறைவழிபடு
பிணவனையுமேதினியில்பூஜிக்கவும்
விழைபலன்பெறவுமவனோர்கலையை
முடியின்மிலைந்தருள்புரிந்தானரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

கைலாயத்திற் சிவபெருமான் கணேசர் முருகவேளுடன் திருவோலக் கத்திலெழுந்தருளி யிருக்கையில் நாரத

முனிவர்வந்து பணிந்து சந்நிதிக்கெதிராக வைத்த வோர் கனியை மருங்கினுற்ற விருவரில்யாவர்க்குக் கொடுப்பதென் றவர் வினவப் பிரமன் இளையபிள்ளையார்க்'கெனக் குறித்து ரைத்தவாறே யவர்க்கப்பழத்தைக் கொடுத்து விட்டபின் னர் அது காரணமாகக் கணேசமூர்த்தி கோபங்கொண்ட ருளலும் பிரமன் அஃதறிந்து கணபதிசந்நிதிக்குத் தேவக ணங்களுடன் சென்று தான்செய்த அபசாரத்தை மன்னித் தருள்கெனத் துதித்துவணங்க அவனுக் கருள்புரியுஞ் சம யத்தில் சிறிதவமதிப்பாக நகைசெய்த சந்திரனை வெகுண்டு நீ யுலகிற் பிரகாசமின்றி மறைவுபட்டு உனதுருவத்தைக் கண்டவர்களு மிடருழக்கக் கடவரென்று சபித்தருள அப்போது இந்திரன் விண்மண்ணுலகத்தார்க் கமுதஞ்சு ரத்தலும், பயிரைவளர்த்தலுஞ், சந்திரனுக்குரிய கடமை யா யிருப்பதால் அவன் பிழையை க்ஷமித்து, நேர்ந்தசா பம் நீங்கலாக வருள்கவென்று அப் பிரணவசொரூபரை மிக வுந் துதிசெய்ய அதற்கிரங்கி ஆவணிமாதம் பூர்வபக்ஷத்தில் வருகின்ற சதுர்த்தியில் மாத்திரம் ஒருவரும் பாராதிருக் கவும் மற்றையநாட்களில் முன்போலவே யவனைக் காணலா குமெனப் பரிகார வாக்கருளப்பெற்று மீண்ட இந்திரன் அச்சந்திரனுக்கு அக்கடவுளது சடாக்ஷர மந்திரத்தை யுபதேசிக்க அவனும் கங்காநதியருகில் சர்வசித்தி நகரத்தில் இருபத்திரண்டு வருடவரையில் அம்மனுவை யுபாசித்திருக்

கையில் விநாயகக்கடவுள் அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி சங்கடங்களை நீக்கிக்கொள்ள வேண்டினோ ரனுட்டிக்கும் அங்காரக சதுர்த்திதோறும் நீ யுதயமாகின்ற சமயத்தில் நம்மை பூசை செய்தவுடன் உன்னையும் அர்ச்சித்துத் துதி செய்யத் தக்கதாக உனதோர்கலையை நமது முடிமீதணிவோமென்றனுக்கிரகிக்க அவ்வாறே அவன் அவ்விடத்தோர் கோயிலமைத்து அதிற் பாலசந்திர விநாயகரென மூர்த்தபிரதிஷ்டை செய்து சிறந்த பூசனைகளையியற்றி யக்கடவுண் முடியிலோ ரணியாகவும் தனது மண்டலத்தில் பழையபடியே பரிசுத்தபிரகாசனாகவும் அமர்ந்துவிளங்கினன்.

கணபதிதுணை.

முப்பதாவது

தூர்வைமகத்துவம்.

சைவவேதியஞனமதுசூதனன்
முனந்தன்னைப்பழித்தசுலபன்
றனொருதவன்மனைபுலைச்சியாகச்
சொல்த்தையலவனைச்சாமதாய்

வைவுற்றவாறுதித்துழவன்வண்ணான்
புலைச்சேரியிடமாய்வதியுநாண்
மழையடைவினலவையொருங்குசேர்ந்
தைங்கரன்மந்திரத்தார்ப்பவுறுவர்
நைவுறவடிக்கவலமாகவோடினது
மவிலங்கின்வாய்நாரிகைப்புல்
நழுவவதனைக்காற்றெழுப்பலின்
விநாயகர்நன்முடிதனைச்சார்ந்ததும்
கைவிட்டவூணுமந்நாட்சதுர்த்தியதாற்
கருத்திசைச்சபரியாயக்
கடவுணட்டருளினன்மூவரும்பெறலருங்
கதியடைந்தனர்களன்றே.

இதன் சரித்திர சங்கிரகம்.

அவந்தியெனும் பட்டணத்தில் சுபத்திராதேவிநாதனான் சுலபனென்னும் வேந்தன் அரசியற்றுநாளில் சிவபத்தியிற் சிறந்து மிகவுந் தரித்திரனைப் பிச்சைக்குவந்த மதுசூதனனென்னும் வேதியனைக்கண்டு அவ்வரசனவமதிப்பாக நகைக்க அவ்வேதியன் கோபித்தரசனை யெருதாகச்சபிக்க அதற்கவ் வரசன்றேவி அவ்வேதியனைக் கழுதையாகவும் அவ்வேதியன் அவ்வரசியைப் புலைச்சியாகவு மொருவர்க்கொருவர் சபித்தவாறே, அரசன் உழவனிடத்திலும், வேதியன் வண்ணானிடத்திலும், இராஜபத்தினி புலைச்சேரியிலுமாக வுதித்திருக்குநாளில் அம்மூன்று பிராணிகளும் மிகுந்த மழையடைவால் அவ்வூர்க்கடுத்த விநாயகராலயச்

சார்ப்பர்கச் சந்திததை ஒன்றினை யொன்றுதைத்ததாலு முட்டினதாலு முண்டான வமலைக்காற்றுது, அன்று விநாயக சதுர்த்தியாதலால் சந்தியாபூசை நிறைவேற்றி ஜபஞ்செய்திருந்த முனிவர்கள் ஆலயப்புறம்பாக அடித்துத் துரத்தியும் மழைத்தடையால் அவைகள் அக்கோயிற் பிராகாரத்துட்சுற்றிவருகையில் அவ்வெருதுங்கழுதையும் அப்புலைச்சியின் சுமையினின்றும் பிடுங்கி வாயிற் குதட்டுகையிற் சிந்தினபுல்லும் அவள்கையிற் கொண்டிருந்த புல்லுங் காற்றினாலெழும்பி யச்சன்னிதிக் கடவுட்டிருமேனியிற் சாத்தப்படவும் அதுகண்டு அவ்வாராதியர்கள் விழுப்பு நேர்ந்துவிட்டதென்று அக்கடவுளுக்குக் கும்பாபிஷேகஞ் செய்தனர். முன்காற்றினாற்படிந்த மூன்றுபுற்களும் பின்னாக நேர்ந்த வபிஷேகமும் அப்பிராணிகள் செய்ததாகவும், பிராகாரத்துள் வெருண்டுசுற்றியோடினது வலம் வந்ததாகவும், ஆகாரமில்லாதிருந்தது உபவாசமாகவும், ஒப்புக்கொண்ட அக்கடவுளது பெருங்கருணையால் அச்சதுர்த்தி தினத்தில் உயிரிழந்த அம்மூன்று பிராணிகளுந் தேவவுருவம் வாய்ந்து விமானாரூடம்பெற்றுப் புண்ணியலோகமடைந்தன.

கணபதிதுணை.

முப்பத்தொன்றாவது

தூர்வையர்ச்சனை.

இலிகுசத்தியறிலோத்தமைகுசத்தெழி
　　ஞடுமியமனெகிழவிடுவீரிய
மிந்நிலத்திடைவிழுந்தளவிலனலாசுர
　　னெனத்தோன்றிமண்விண்ணுயிர்
நலிதரவலைப்பவிண்டாதிசுராஞ்சி
　　யந்நாட்கணுதிபனையேத்த
நற்பிரமசாரியாய்வந்தபயநல்கிடுபு
　　நண்ணுமவ்வவுணன்றனை
யலகிலாதோங்கிபவுருக்கொடோர்
　　கவளமாயாங்கெடுத்துண்ணவனல
மண்டத்துயிர்த்தொகைகளாற்றுதுமெலிதல்
　　கண்டரனுதியோராற்றிடும்
பலவாமிதோபசாரத்தினுந்தணியாது
　　பழமறையளந்தமுனிவர்
பத்திசெய்தறுகின்முற்றிடமெர்ச்சனைக்
　　கெந்தைபாலசந்திரனனதே.

இதன் சரித்திர சங்கிரகம்.

யமதருமராஜன் தனது கொலுச்சபையில் தேவர் முனிவர் கணஞ்சூழ வீற்றிருக்கையில், நாட்டியஞ் செய்து

கொண்டிருந்த திலோத்தமை மேல்வஸ்திரம் நழுவிவெளிப் பட்ட அவள் கொங்கையிலாவண்ணியத்தைக் கண்டவுடன் அக்காலனுக்கு மனஞ்சலனமாகி அச்சபையினின்று நீங்கி அந்தப்புரத்தைநோக்கிச் செல்கையில் மேலிட்டகாமத்தால் வெளிப்பட்டவீரியம் பூமியில்வீழ்ந்து வடவானலத்திற்கொப்பான கொடுமையோடு கலப்பையைப் போன்றவெளுத்த கோரைப்பற்களும் நீண்டுமுறுகிச் சிவந்திருக்கின்ற முகமயிர்களும் சிவந்தகண்களும் யாவருங்கண்டஞ்சத்தக்க அகோர சொரூபத்துடன் அனலாசுரனென்றுதித்து மண்ணுலகிலுள்ள ஜீவர்களையெல்லாம் புசித்து விண்ணுலகையும் அழிக்கநெருங்குகையில் அஃதுணர்ந்து மனந்தளர்ந்த தேவேந்திரன் தேவகணங்களுடன் திருமாலிடஞ்சார்ந்து முறையிட்டதன்மேல் அப்பரந்தாமன் கணேசமூர்த்தியைத் தியானித்துப் பலமுறை துதிசெய்ய அதுபோதில் சர்வ ஜீவகோடிகட்கும் புகலிடமாயுந் தாரகப்பிரமமாகவும் விளங்குமக்கடவுள் பிராமணப் பிரமசாரியாய்ப் பிரத்தியக்ஷமாகி அவர்கட் கபயாஸ்தந் தந்து அவண்வந்த அவ்வசுரனை நிஜவுருவங்கொண்டு தமதுகரத்தி லடங்கும்படியாக வெடுத்தோர்கவளமாய் விழுங்கி யகட்டினுளடக்க அவ்வெப்பம் தேவர்கள் முதலாகச் சராசரங்களினும் பீடிக்கப்பட்டு மிகவுந் துயருழந்தாற்றகிலராய் நிற்கையில், அப்பகவன் திவ்வியமேனி குளிரத்தக்கதாகச் சந்திரன் அமுத

தாரைகளால் அபிஷேகித்தும், பிரமன் வேண்டுகையாற் சித்தி புத்திகளுந் தமது குளிர்ந்த வவயவங்களை யவர்திருமேனியி லொற்றியும், மஹாவிஷ்ணுவும் தாமரைமலர்களை யேந்திநிற்கத் தாமே வாங்கி யொற்றியும், வருணன் சீதளநீரைக்கொண் டபிஷகித்தும், சிவபிரான் தமது திருமேனியிலணிந்த வாதிசேடனையெடுத்துத் தரித்தும் அவ்வெப்பம் நீங்காதிருக்கையில் அதுகண்ட நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் அவ்வேதார்த்தனை பத்திமையாகத்துதிசெய்து அவரவர்கள் தனித்தனியாக இருபத்தோ ரறுகுகளைக் கொண்டு சிரசுமுதற் பாதமளவுஞ்சாத்த அதனால் அவ்வனல் குளிர்ந்ததன்மேல் விண்டு முதலியோ ரடைந்திருந்த வெப்பங்களும் நீங்கி யாவரும் வேதாகமங்களால் துதித்தார்கள், தேவர்கள் புஷ்பவருடஞ் சொரிந்தார்கள், திரிலோகங்களுந் தழைத்து மகிழ்சியடைந்தன இப்பால் விநாயக மூர்த்தி அம்முனிவர்களைப்பார்த்து அன்பர்களே! நமது திருமேனியிலிருந்த வெப்பம் நீங்களர்ச்சித்த அறுகினால் நீங்கினபடியால் எமக்குச் செய்யப்பட்ட உபசாரங்கள் பலவாயினும் அறுகுகொண்டு பூஜிப்பதே முக்கியபிரீதியாமெனத் திருவாய்மலர்ந்து அவ்வவர்கள் விழைந்தவரங்களைத்தந்து தமது திருவுருவத்தைக் கரந்திட்டனர் அப்போது அவ்விடத்தில்தேவர் ரிஷிகள் முதலானவர்கள்கூடி ஓராலயஞ்சமைத்து அதிற்கணேச மூர்த்தப்பிரதிட்டை

செய்து காலன்விரியத்துதித்த அனலாசுரனை விழுங்கின காரணத்தால் காலானலப்பிரசமரென்றும், அக்கினியுமஞ் சத்தக்க வசுரனைவிழுங்கி சந்திரனையொப்ப வெல்லாவுயிர் கட்குங் குளிர்ச்சிதந்தமையால் பாலசந்திரரென்றும், திரு நாமமிட்டு அபிஷேகமுடித்து அறுகினைச்சாத்தி அது முதல் அவ்வறுகினையே சிரேஷ்டமாகக் கொண்டு அவர்க ளெல்லோரும் அர்ச்சித்துவந்தனர்.

கணபதிதுணை.

முப்பத்திரண்டாவது

ஜனகனுபாசித்தது.

இஞ்சறிவிஞெருஜனகனுன்பரமெனச்
சொலக்கேட்டநாரதனுமேகிக்
கேடிலேரம்பர்சனதியின்மகதியைத்
தடவிகீர்த்தித்தபின்விநயமாய்
விஞ்சவரசன்கருத்தோதலுந்தொழுநோய்
மிகுஞ்சிறியவேதியோனய்
மேவிவெம்பசிதணியவமுதுகேட்டளவின்றி
மிசையவவன்மாட்டாமையா

யஞ்சவேநீகோலோபிரமமென்றேசி
மீண்டயன்மனையமர்ந்துபலவா
மற்புதங்காட்டவவனீண்டிகழுழ்ந்து
வேண்டற்கருள்சுரந்தவமலன்
பஞ்சக்கரத்தடைவின்முப்பொருட்டிறமும்
பகர்ந்திடவுணர்ந்துமிதுலைப்
பதிபுரந்தொருஜீவன்முத்தனுய்வாழ்ந்த
சீர்பகர்வதெவனேவுலகினே.

இதன் சரித்திர சங்கிரகம்.

மிதுலாபுரியில் ஜனகராஜன்தானே பரமென்னும் எண்ணமுடையவனு யரசியற்றுநாளில், அங்கு நாரதமுனிவர் வர அவர்க்கு வழிபாடு செய்யாதிருந்தானுக, அதற்கவர் உன்து நன்னடைக்கான செல்வம் கடவுள் அளித்தருள்வரன, கடவுள் தானல்லது வேறே தெனச்சொல்ல, அது கேட்ட நாரதமுனிவரும் கடவுளுண்டென்பதை நீ நாணங் கொள்ள உன்னெதிரிற்றுனே காண்பாயென்று அவணீங்கி கவுண்டின்யமுனிவர் ஆச்சிரமஞ் சேர்ந்து அவர்பூஜிக்கின்ற கணேசர் சன்னிதியடைந்து, அக்கடவுட் டிருவுளங்களிகூர நரம்புகளைத்தடவி யாழிசை கூட்டிப்பாடித் துதித்த பின், ஜனகன், தேவரீர் பரத்துவமாவது நினையாமல், அகம் பிரம மென்றுமதித்துப் பெரியோர்களை மதியாதிருக்கின்றுனென விண்ணப்பஞ் செய்து சென்றனர், பின்னர் கணே

சரும் தொழுநோய்கொண்ட வோரந்தணராக அவனிடஞ் சென்று பசிதணிய வமுதுபடைக்க வேண்டுமென, அவ்வரசனும் அவனுற்கூடிய வணவுகளைபடைத்தும் சற்றும் பசி தணிந்திலராகக்கூற, அதுகேட்டு அக்குறைவை யினி நீக்கத் தக்கவரிடத் தெழுந்தருளலா மென்றரசன்கூற, பசியைநீக்க வல்லபமில்லாத நீயோ பிரமமென்று கோபித்து அவ்விடம்விட்டு நீங்கிப்போனவுடன் ஜனகராஜன் பலவற்புதங்கள் நடக்கக்கண்டு ஆச்சரியமடைந்து, வந்தவர், கடவுளாமென நிச்சயித்து அக்கணமே விரைந்தெழுந்துபோய் திரிசிரனெனும் பிராமணன் கிரகத்திலிருக்கக் கண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து எனதறியாமையால் அகம் பிரமமென்று கர்வப்பட்ட குற்றத்தை க்ஷமித்து, இனித்தேவரீர் நின்மலஞானத்தையடியேன் தெளியுமாறனுக் கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கக் கணேசர் அவன் சித்தபரிபாகத்தையறிந்து, மீட்டும் ஜெனன மெடாதவிதமாய் ஆகமவிதிப்படி தீக்ஷைசெய்து, ஞானபோதத்தைச்சாங்கியமாயவனுக் குபதேசித்தருளலும், ஜனகராஜன் அவ்வுபதேசமார்க்கத்தினின்று நிஷ்டைகூடி யாவருமெஞ்ஞானியென்று சொல்லும்படியாக உலகில் நெடுங்காலவரையில் அரசாட்சியுஞ் செய்துகொண்டு ஜீவன் முக்தனுயிருந்தனன்.

கணபதி துணை.

முப்பத்துமூன்றுவது

தூர்வையர்ச்சகம்.

தளர்வறத்திரிசிரன்மனையிலான்மார்ந்தமாய்த்
தமதுமூர்த்தத்தைநிறுவி
சந்ததம்பூசித்துவந்தமெய்யன்பினாற்
றயைமிகுந்திடுகணேசன்
கிளர்விப்ரனாய்வந்துபசிதணித்திடுயெனக்
கெழூஉம்பத்தியோடமறையோன்
கீர்த்தித்துநிற்கையில்விரோசனையெனுஉ
மவன்கேண்மைமிகுதேவியிற்றை
யுளபடிக்கெங்குந்திரிந்துங்கிடைத்த
தொன்றின்றெனினுமெழுந்தாயிவ
னுதயமாராதித்துமிக்கதோரறுகுண்
டெனக்கொணர்ந்துதவவேற்றுப்
புளகிதத்தொடுகிருதகுளபாளிதத்
தினப்புன்னுகர்ந்தளவில்செல்வம்
பூண்டுபின்பதமருவநிஜசொருபனாகி
யப்புனிதர்கட்கருளினனால்.

இதன் சரித்திர சங்கிரகம்.

மிதுலாபுரியில் திரிசிரனென்னு மோரேழைப் பிராம ணன் கணபதி மூர்த்தத்தை யாத்மார்த்தமாக வைத்துப்

பூசித்திருக்கு நாளில், அவன்வீட்டிற்குக் கணேசர் தொழு நோய்கொண்ட வோரந்தணராகவர, கண்ட அவ்வேதியன் எதிர்கொண்டுவந்து சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து உபசரித்துநிற்க. தாம் பசியாக வந்ததாய்க்கூறலும் அதுகேட்டவ் வந்தணன்றேவியான விரோசனை யாசகஞ் செய்தும் இன்றையதினமெங்கு மொன்றுங் கிடையாமலிருக்கின்றது, ஆயினுங் கணேச மூர்த்தியைப் பூஜித்து மீதியானவோரறுகு மாத்திர மிருக்கின்றதென்ன, அதுவே நமக்குமேலானதென்றதன்மேல், அப்பிராமணோத்தமியன் புடனதைக் கொண்டுவந்தளிக்க, தமது திருக்கரத்தினால் வாங்கி வாய்மடுத்து மென்று தின்றேப்பமிட்ட வெல்லையில் நிஜசொரூபத்துடன் அக்கடவுள் பிரத்தியக்ஷமாகி நிகரற்ற பாக்கியங்களும் தமது திருவடிப் பேறுமுண்டாக அவர்கட்கனுக்கிரகித்தனர்.

கணபதிதுணை.

முப்பத்துநான்காவது

தூர்வைதுஸயேற்றல்.

முதிர்நண் பனுங்கவுண்டினியமுனிவனை
நோக்கிமுந்தொரறுகாற்றிரிசிரன்

முழுச்செல்வனாகநிதமயுததூர்வார்ச்சனையின்
முற்றுமிடிபெற்றதென்னென்
றெதிர்வினவுதேவியங்கையிலோரறுகினை
யெடுத்தீந்திவ்விடையிந்திர
னிடைசென்றுபொன்கொணர்தியெனவேகி
யவனிசைவினெழில்குபேரற்சார்ந்தவண்
கதிர்செய்பொற்குவைபலநிரப்பிடுநிறைக்
கறுகுதட்டெழக்காண்கிலானய்க்
காதலியொடவனேறுபின்பயனெடிந்திரன்
கார்வணன்கண்ணுதற்கோன்
சதிரொடத்துலையினேறியுமவிதமுற
வதிசயித்தமாதவனிடம்போய்ச்
சகலருமவற்புகழ்ந்தமரர்வளனுதவித்
தத்தம்பதமடைந்தாரரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

தாபரமென்னும் நகரைச்சார்ந்ததோர் சோலையிற் றவஞ்செய்பவரும் தமதாச்சிரமத்தில் கணேசமூர்த்தியை பிரதிட்டை செய்து பிரதிதினம் பதினாயிரம் அறுகினைக் கொண்டர்ச்சனை செய்பவருமான கவுண்டின்ய முனிவரை ஆசிரியையென்னுமவர்பத்தினியார் மிதுலாபுரியந்தணனுக் கோர் தூர்வையால் அகண்ட பாக்கியமுதவின கடவுள் அவனினும் விசேடமாயத் தூர்வை கொண்டர்ச்சித்தும் நமக்கவ்வா றளியாதிருப்பதேனென வினவலும் அதுகேட் டம்முனிபுங்கவர் புன்னகைகொண்டு தூர்வையின் மகிமை யை பலருமுணர்ந்து பவித்திர ராகும்படி தாமர்ச்சித்த வற்

றுளோர் தூர்வையை யெடுத்து இதனை இந்திரனிடத்திற் றந்து அவன் றருமதனிடைக்கான பொன்னைக் கொண்டு வாவென்று கொடுத்தனுப்ப, அதனையேந்திச் சொர்க்கத்திற் சென்று அவ்வாசவனோடுரைத்தவுடன் பத்திமை மிக்கானு மவ்விருஷிபத்தினியை மிகவும் பூஜித்து சிலதூதுவருடன் கூட்டிக் குபேரனிடத்திற்கனுப்ப, அவ்வளகேசன்பணிந்து அவ்வறுகினையோர் துலையிலிட்டு அதனிடைக்குத் தன்பா லுள்ள பொற்குவையோடு தன்னகரத்துள்ள பொருள்களை யுமிட்டுந் துலையொவ்வாமல் மனைவியுடன்தானு மத்துலை யிலேறியும் அத்தூர்வைத்தட்டெழாமையாக, அவ்வற்புதத் தைக் கேள்வியுற்று ஆங்கடைந்த இந்திரனும் அவ்வாறே தன்னகரத்துள்ள பொருள்களையுமிட்டு இந்திராணியுடன் அவனும் துலையிலேறியும் அஃதவ்வாறாகவே கண்டு அவன் தியானித்தழைக்க வந்த திரிமூர்த்திகளுந் தம்பதிசமேத ராய் தத்தம்பரிஜனங்களோடு அத்தட்டி லாரோகணித்தும் அத்தூர்வைத் தட்டு நிலைத்தாடிருக்கக் கண்டதற்பின், அக் கவுண்டின்ய முனிவரிடத்திற் கனைவருமாகச் சென்று அவர்தவத்தின் மகிமையையும் அறுகின் பெருமையையும் புகழ்ந்து, அத்தூர்வையை யணியும் விநாயகமூர்த்தி பத் தர்களில் நீரே சிரேஷ்டனுமெனத் திரிமூர்த்திகளுங்கொண் டாடி அவர்க்குக் கற்பகவிருக்ஷம் காமதேனுமுதலிய வெல் லா மேவல்செய்யத் தக்கதாக அமைத்ததுடன் தங்கள் தங் கள் சுயேச்சையா யனந்தவரங்களையு மனுக் கிரகித்துச் சென்றனர்.

கணபதிதுணை.

முப்பத்தைந்தாவது

வன்னிமகத்துவம்.

கண்டகர்களானசாம்பன்சொறுற்புத்தியுங்
காவலனமைச்சனென்னக்
கடைப்படுநெறிக்கொடுவிதற்பநாடாண்டு
வருகால்வேட்டையாடிமீண்டோர்
தண்டலையினமர்வரதகணபதிநிகேதனஞ்
சார்ந்துகனிநைவேதனஞ்
சமர்ப்பித்துமேற்பத்திசெய்தேகுபின்
சிறுடனிலிறந்தெமயாதனை
யெண்டவிர்விதத்தனுபவித்தபின்வனசர
னிராக்கதனெனச்சனித்தே
யிகலியொருவனையொருவன்னிதுரந்
தெதிரினேர்ந்தேறுசமிமரமதிர்தரற்
கொண்டளமிரண்டதன்கீழ்ப்பொலி
வுறூஉம்விநாயகருபயவடியின்மேவ
வுவப்பொடர்ச்சித்தவாறுயவர்க்கெந்தை
யினிதுதவினன்சாலோகமே.

இதன் சரித்திர சங்கிரகம்.

விதற்பதேசாதிபதியான புண்ணியகீர்த்தியெனு மதி
சன் வேதாகமங்ளில் வல்லவனுகியும், தன்ணியகொடையை

யுடையவனாகியும், அளவற்றயாகங்களை முடித்தவனாகியும், சத்துருக்களை நாசஞ்செய்து நாட்டிய வெற்றிக்கொடியை யுடையவனாகியு மிருந்தனன். அவன் மதனாவதியெனும் நாயகியுடன் வாழ்ந்தரசாண்டு புத்திரப்பேறில்லாமல் வாழ் நாள் முடிவெய்தி அரசியும் அவனுமரணஞ் செய்ததன்மேல் அமைச்சர் அவ்வரசன் ஞாதியானதுத் திரிடராஜன் மனைவி சோரத்துவமா யோர் வலைஞனுடன் கூடிபெற்ற குமார சாம்பனை அரசனாகவைத்ததன்மேல் அவன் கள்ளுண்டல், உயிர்க் கொலைசெய்தல், பரஸ்திரீகளைப் புணர்தல், பிறர் பொருளைக் கவர்தல், முதலிய பாதகங்களைச் செய்து செங்கோன்மையிற் றவறித்தன் தீயவொழுக்கத்திற் கிணங் காத அமைச்சர்களைச் சிறையிலிட்டுத் தனக்கிணங்கி நடந்த துற்புத்தி யெனு மந்திரி முன்னிலையில் சர்வாதிகாரமும் நடத்தி வருகையில், ஓர்நாளம் மந்திரியுடன் சென்று வேட்டையாடி மீள்கையில் வசிஷ்டராற் பிரதிஷ்டை செய் யப்பட்டதாயும், தசரதராஜன் தசாக்ஷரமந்திரத்தை யுப தேசிக்கப் புத்திர பேறருளினதாயும், விளங்கும் வரதகண பதி சன்னிதானத்துள் நுழைந்து அவண் பூஜித்துக் கொண்டிருக்கும் அன்பர்களைக்கண்டு தானுமந்திரியுமாக காட்டிற் பறித்துவந்த காய்கனிகளை விளையாட்டா யக் கணேசமூர்த்திக் கெதிரேவைத்து நிவேதித்துப் பிரதக்ஷ ணஞ்செய்து நகரிற்சேர்ந்த சின்னாட்பின்னரிறந்து அனந்த

விதமான யமதண்டனைக் குள்ளாக வருந்தி யனுபவித்து நின்ற பாபசேடத்தினால் அவ்விருவர்களு மொருவர்க்கொருவர் சத்துருத்துவ மான வகையாய்ப் பக்ஷி, மிருகமுதலான பலவகைப்பட்ட ஜனன மெடுத்து, கடையில் அவர்களி லொருவன் விதர்ப்பத்தைச் சார்ந்த ஆதேய நகரில் வீமனெனும் வேடனாகி தீமையேயன்றி நன்மை யென்பதைச் சிறிது மறியாதவனாய் எந்நாளும் வழிபோக்கர்களை யெல்லாமடக்கிப் பொருள்பறித்தும் மிருகங்களை யலறக்கொன்று அவைகளை விலைக்குமாறியும், வாழ்ந்து வருகின்ற நாளையில் அவ்வூர்த் திருவிழாவிற்கு வந்து திரும்பின பிராமணர்களை வழிமறித்துப் பொருள்களைப் பறித்துக்கொண்டு கொலை செய்த வுடன் மற்றொருவன் அவ்வந்தணரைக் கொன்ற பிரமஹத்தி அவனைப் பிடித்ததுபோல கொலையி லவனினுஞ் சிறந்தவனாகியும் வலுவில் மதயானையை யொத்தவனாகியும், நிறத்தில் பொன்மைகலந்த மேனியையுடைய இராக்கதனாய் மானைத்தொடர்ந்து செல்லும் வேங்கையைப் போல வந்து அவ்வேடனைத் துரத்த அதுகண்டு அவனஞ்சி யோர் வன்னிமரத் தேறுகையில் அவ்விசையாலுதிர்ந்த வோரிலை யதனிடத் தெழுந்தருளி யிருந்த வாமன விநாயகமூர்த்தி திருவடியிலும் பின்றொடர்ந்தேறின அரக்கனாலுதிர்ந்த மற்றோரிலை யவர் முடியிலுமாகவீழ அவ்விருவர்களு மொருவரோடொருவர் இறுகப் பிணித்துக் கொண்டு, நிலத்தில்

வீழ்ந் திறந்தவுடன் வன்னிப் பத்திரத்தாற் றம்மை யர்ச்சித்த தாகப் பாவித்த கணேசர்த் திருவருளால் அவர்கள் விமானு ரூடராய் விநாயக சாலோ கமடைந்தனர்.

இதனால் விநாயகக் கடவுளைப் பூஜித்தற்குப் பலவகை பூஜா திரவியங்க ளிருந்தபோதிலும் அறுகே சிரேஷ்டமெனவும், அவ்வறுககப்படாத காலத்தில், வன்னி மந்தாரமாமெனவும், அவற்றுள் வன்னியையன்றிப் பூசித்தால் அப்பூஜை பயன்படாதெனவும் குறித்தன.

ஆதியிலரசனு யிருந்தபோது ஓர்நாள் மந்திரியுடன் வரதகணபதி கோயிலை வலம்வந்த புண்ணியம் இச்சென்மத்திலவர்களை வன்னிமரத்தேற்றுவித்துச் சிவபதமடைதற்கேதுவாக்கின.

கணபதிதுணை.

முப்பத்தாறுவது

விண்டு இரணிய கசிபவனைச்

சங்கரிக்க உபாசித்தது.

மாதவத்தவிரணியகசிபனிருதிணையானு
மரணமில்லாதவிதமாய்
வறம்பெற்றவிறுமாப்பினுன்மறையொழுக்கம்
வழீஇக்கோனடாஅத்துநாளிற்
பூதலத்தவன்மாளவன்னிழலில்
விண்டுபுகர்முகத்திறையைநீஇப்
பூஜைசெய்தவனருளினிரணியாக்கனை
முன்பொடித்தசிரதினும்விஞ்ச
வோதெழின்மாலைநேரத்தெழுத்
தூணினிடையுக்ரமிகுநரசிங்கமா
யுதித்தவசுரன்றனைப்பற்றிவாயிற்
கண்மடிமீதிட்டொளிர்கையுகி
ரேதியாற்கீறிப்பிளந்துதிரமோர்
திவலையேனும்வெளிசிந்திடாமல்
லிகலுடன்வாயாலுறிந்துமாய்த்தன
னமரரேத்திமலர்மழைபொழியவே.

இதன் சரித்திர சங்கிரகம்.

காசிபமுனிவர்ப்பத்தினியரிருவரில் அதிதியென்பவள்

தனது புத்திரராளாகிய இந்திரன் முதலிய தேவர்கட்குதவியாக விஷ்ணுதனக்குப் புத்திரனாய் வரவேண்டுமென்று அரியதவங்களைச் செய்து கொண்டிருக்கையில், அதனையவள்மாற்றாளான திதியென்பவளறிந்து திரிலோகங்களையுங் காக்கவல்லதிறமும் தேவர்களினுஞ் சிறந்த மேன்மையுமுடைய புத்திரர்களைத்தானும் பெறுதற்கு யோசித்து அந்திவேளையில் தனது நாதனைமருவி இரண்ணியகசிபன் இரண்ணியாக்கனென விரண்டு புத்திரர்களைப்பெற, அவரில் இரண்ணியகசிபன் தவஞ்செய்து தனக்கு மரணமுண்டாகாதிருத்தன் முதலிய வரங்களைப்பெற்று வேதவொழுக்கத்தினைக்கடந்து திரிலோகங்களையும் அரசாண்டிருக்குநாளில் அவ்வவுணனைச் சங்கரிக்க வெண்ணங் கொண்ட விஷ்ணு, வானவர் பூமியின்க ணெழுந்தருளி யோர்வன்னி விருக்ஷத்தடியில் விநாயகரைப் பிரதிட்டைசெய்து பூஜைபுரிந்து சடாக்ஷரமந்திரத்தை ஜபித்துத் தவஞ்செய்து வருகையில் கணேசமூர்த்தி பிரத்தியக்ஷமாக வந்தளித்த வரபலத்தால் (வராகாவதாரங்கொண்டு இரண்ணியாக்ஷனை முன்னமிதித்துக்கொன்றவிதமே) இரண்ணியகசிபனையும் நரசிங்கமாய் நகப்படை கொண்டுகிழித்துச் சங்கரித்து உதிரபானஞ் செய்து தேவர்கள் குறைமுடித்தார்.

விண்டுவால் வன்னிவிருக்ஷத்தடியில் பூஜிக்கப்பெற்றதாலும் அவ்விண்டுவுக்கு வரங்களை யளித்தமையானும்

விண்டு விநாயகர், வன்னிவிநாயகரெனவும் வழங்குகின்றன.

மேற்கூறின இரண்ணிய கசிபன் இரண்ணியாக்ஷன் இவர்கள் சம்மாரம் முன்னடந்தது, பின்னடந்தது முன்னெனவுமாக சிலதேச இதிகாசங்களில் வித்தியாசமாகக் கூறப்பட்டிருப்பது, கற்பபேதத்தால் வந்தது.

கணபதிதுணை.

முப்பத்தேழாவது

விண்டு வாமனராயுபாசித்தது.

இரணியாக்கன்பேரனுயுமினனுலொர்
முடியேய்ந்திடுவிரோசனன்ற
னினியபுதல்வனுமானவரசாளுமாவலி
யிணையிறேவேந்த்ரபோகம்
பொருண்மையாய்வேட்டசுவமேத
மூன்றுறழுமுப்பான்மூன்றினளவுபுரியும்
போதுணர்ந்தலமரீஇக்குறையோது
வாசவன்புன்கண்டவிர்க்குமாறு
தருணவெழில்வாமனனெனுவதிதி
மாதவந்தளிலவதரித்தநெடுமால்
தாமுனம்பூஜித்தசமிவிநாயகர்சனிதி
சார்ந்தேத்தியுறுவரத்தான்

முரணியலுமசுரர்கோன்பாலேற்ற
பூதானமூவடிதனக்குமண்விண்
முற்றுமீரடியாயளந்தோரடிக்கவன்
முடிவைத்துபிலமுய்த்ததே.

இதன் சரித்திர சங்கிரகம்.

இரண்ணியாக்கன்பேரனுன மாவலியென்பவன்(சூரியனிடத்திற்றவத்தாற் பெற்றசொர்ண கிரீடந்தரித்து இரண்ணியகசிபனுக்குப் பின்னர் அரசாண்டிருந்த தனது பிதாவான விரோசனன் காலமடைந்தபின்பு) மனுநீதிதவருது செங்கோல்செலுத்தி வருகையில், ஞாதியாகிய தேவேந்திரனையொப்ப சதக்கிருது முடிக்கிற் போக பாக்கியங்களை யனுபவிக்கலாகுமெனச் சுக்கிரனுற் சொல்லக்கேட்டு அவ்வாறே தொண்ணூற்றென்பது யாகமும் நிறைவேற்ற, அதை இந்திரனறிந்து மனங்கலங்கி வைகுண்டபதியாகிய விஷ்ணுவை வணங்கி முறையிட்டுக் கொண்டதன்மேல், அதற்கவர் நேர்ந்து அக்குறையை முடிக்கவேண்டி தம்மைப் புத்திரனுகப் பெறத்தவஞ் செய்திருந்த அதிதிவயிற்றில் சதுர்ப்புஜங்களும் காயாம்பூநிறமுடன் வாமனரா யவதரித்து வளர்ந்து பிதாவால் விநாயகர் சடாக்ஷரமந்திரோபதேசம் பெற்று விதர்ப்பதேசத்தைச்சார்ந்த ஆதேயநகரத்தில்முன் தம்மாற் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த வன்னி விநாயகரையடைந்து ஓர்வருடபரியந்தம் உபாசித்துவருகையில்,

கஜமுகராய் தசாஸ்தம்விளங்க மயில்வாகனத்தின் மேற் கணேசர் பிரசன்னமாகி வேண்டினவரங்களைத்தரப் பெற்று மீண்டு. நூறுவதஸ்வமேத யாகத்தை செய்துக்கொண்டி ருக்கும் அம்மாவலியிடஞ் சென்று தவஞ் செய்தற்கென் றிரந்து மூன்றடிநிலம் தானமாக வழங்கப்பெற்று, திரிவிக் கிரமராய் விஸ்வரூபங்கொண்டு விண்ணையு மண்ணையு மீரடி யாகவளந்து மற்றோரடிக்கு அம்மாவலி சிரசிற் தமதுபா தத்தை வைத்து அவன் பாதாள லோகத்திற் செல்லும் படி யழுத்தி இந்திரன்குறையை முடித்தனர்.

விண்டு வன்னிவிருக்ஷத்தடியில் விநாயகரை பிரதிஷ் டைசெய்து பூஜித்ததால் வன்னிவிநாயகர் விண்டு விநாயக ரெனவும், பின்னர் அம்மூர்த்தியிடம் வாமனராகச் சென்று பூஜித்ததால் வாமனவிநாயகரெனவும் வழங்குகின்றன.

கணபதிதுணை.

முப்பத்தெட்டாவது

கீர்த்தியெனும் இராஜபத்னி உபாசித்தது.

துணர்விரி தருங்குழற்கீர்த்தியெனுமரசி
தன்சுகமேன்மைதாழமன்னன்
றுனுமிலையநாயகிவசத்தனுனது
மவள்சுபுத்திரப்பேறுற்றது
முணர்புதன்றளர்வொருவுவான்கணேசர்ச்
சனிதியுற்றறுகினர்ச்சிப்பவஃ
தோர்தினங்கிடையாதுவன்னியாற்
பூசித்துளத்தயர்வுறக்கனவின்வந்
திணர்முடியிலங்கவேற்றனமஞ்சன்
மாதராயென்றவணலருள்வரத்தா
லிதமாகநாதனொடுமெருவிவாழ்நாளி
லரிதீன்றவெழின்மைந்தன்மாளப்
புணர்நஞ்சரூபமாற்றுளூட்டமுன்
சமிப்பூசித்தபலனைச்சேய்கைப்
பொருந்தவன்போடுதெத்தஞ்செயத்
துயிலகன்றேன்போலெழுந்ததம்மா.

இதன் சரித்திர சங்கிரகம்.

விண்ணுலகத்தினரு மதிக்கத்தக்க மண்ணுலகத்தில்

எண்ணற்ற தருமங்களையுந் தானங்களையுமிடை விடாதி யற்றி வறியோர்களுக்கெல்லாம் வரையாது கொடுத்துப் பகையாயினரையும் பணிப்பிக்கவல்ல பராக்கிரமத்தோடு சகலநற்குணங்களினுஞ் சிறந்தவனாய் மநுநீதி தவறாமற் செங்கோற்செலுத்தி மகாகீர்த்திமானாயிருந்த பிரிய விரத னென்னுமரசன் கீர்த்தி பிரபை யென்னு மனைவியரிருவ ருடன் வாழ்நாளில் அரசன் மூத்தாளையொறுத்து இளை யாளிடத்திற்றானே கேவலம் பிரியம்வைத்துப் பதுமநாப னென்றோர் புத்திரனைப்பெற்று அவன்பருவமுற்றகாலத்தி லவனுக்குப் பாஞ்சாலன் குமாரியை விவாகஞ் செய்வித்து சிறப்போடுங்கூடியிருக்கும்போது ஓர்நாள் மூத்தாளை இளை யாள் திரணமாகமதித்து நிரேதுவாய்க் காலாலுதைக்க அம்மூத்தாள் நாயகன் தன்பக்ஷத்தில் சார்வதா நிஷ்பிரியனா யிருப்பதையும், கண்ணிற் கெதிராக நடந்த அக்கிரமத் தைக்குறித் தவன் கேளாதிருந்து விட்டதையும், யோசித்து மனவருத்தமாற்றாது உயிரையொழிக்குமாறு துணிந்தவ ளா யரண்மனையைவிட்டு வெளிப்படுஞ்சமயத்தில் சந்தித்த புரோகிதன் அவ்வரசி மனோ வியாகுலத்தையறிந்து பல தேறுதலையான வார்த்தைகளைச் சொல்லி முடித்தபின் கணேசரைப் பூசிக்கில் சர்வாபீஷ்டமும் ஸித்தியாமென்று அக்கடவுளை யர்ச்சிக்கு முறைமையையுஞ் சொல்லக்கேட்டு மனந்தேறி அவ்வாறே ஸ்நானமுடித்து மந்தார விருக்ஷத்

தடிபி விராஜிப்ற கணேசர்க்கு அபிஷேகஞ் செய்து அறுகினன் மந்திரமுறையாக அர்ச்சித்து வருநாளில் ஓர் நாள் அஃதகப்படாமல் வன்னிப்பத்திரத்தால் அர்ச்சிக்க நேர்ந்ததன்மேல் அதுகுறைநீங்குமாறு அன்றுணவு தவிர்த்தவளாயிரவில் நித்திரை செய்திருக்கையில் அவள்கனவில் கணேசரெழுந்தருளி நீ வன்னியாற்செய்த அர்ச்சனையை யாமேற்றுக் கொண்டனம் அது நமது முடிமீதிருக்கின்றதுபார், இனியக்கவலையை யொழித்து விடென்று கூறி புத்திரப்பேறு முதலான வரமருளின தன்றியும் இனி பிறக்கு மப்புத்திரனுக்கு நேரிடவிருக்கு மிடையூறும் அது நீங்கத்தக்க ஹேதுவுமனுக்கிரகித்துக் கரந்தருளினவுடனே கண்விழித்து மனமகிழ்வாக மறுநாளுதயத்தினும் தன்னியமப்படி அக்கடவுளைப் பூசித்துத்துதித்துத்தன திருக்கையைச் சேர்ந்த சின்னாட்பின் மாற்றாட்கு வெப்பநோ யுண்டாகக் கண்டவரசன் அவளைவெறுத்து அக்கீர்த்தி யிடத்தில் அன்போடளவளாவு காலையில் ஓர்புத்திரன் பிறக்க அவனுக்கு க்ஷிப்ரப்பிரசாதனென நாமகரணஞ் சாற்றி வளர்த்துவருங்கால் நான்காம்வயதில் அப்பிள்ளைக்கு மாற்றாளா லூட்டின விஷந்தலைக்கேறி மூர்ச்சித்ததுகண்டு அரசன் வருந்துகையில் பட்டத்தரசியாகிய கீர்த்தியானவள் விநாயக்கடவுள் வாக்கியத்தை நினைந்து மைந்தனை யெடுத்துக்கொண்டு கிருச்சமதமுனிவ ராச்சிரமத்திற்குச் செல்

னும்போது மார்க்க மத்தியில் புத்திரனுக் குயிர்மோசம் நேர்ந்ததாகக்கண்டு அவணின்று பிரலாபித் திருக்கையில் ஞானநோக்கினு லவையாவுமுணர்ந்த கிருச்சமதமுனிவர வணடைதலும் உடனே எழுந்து பணிந்த அவ்வரசியின் மனதையவர்தேற்றி கணேசமூர்த்தியை யவளோர் நாள் வன்னிப் பத்திரத்தால் பூஜைசெய்தபலனை அப்புத்திரன் கையில் தத்தஞ்செய்விக்கலும் அக்கணமே உயிர்பெற்றெ ழுந்த புத்திரனுடன் தானுமவரைவணங்கி விடைபெற்று மனமகிழ்வுடன் தனது நகரை யடைந்தனள்.

இஃது எல்லாப்பத்திரங்களைவிட வன்னிப் பத்திரத் தில் கணேசமூர்த்திக்கு அதிக விழைவுண்டான காரணம் வினவின உமையவட்கு சிவபிரான் திருவுளம் பற்றினது.

கணபதிதுணை.

முப்பத்தொன்பதாவது

வன்னிமந்தார வுற்பத்தி.

பிராமணர்களானவவுரவசௌனகப்
பெரியர்பேசுமகள்சீடனென்னப்

பேர்கொள்சமிமந்தாரனெனுமெவ
　　னவதுவாள்பெருவனத்தேகவெதிரே
வராநின்றபுருசுண்டிகரதொந்தி
　　நோக்கியேவறுநகைசெயச்சூளினல்
வன்னிமந்தாரமரமாகவவர்கட்குரிய
　　மாதவர்கணெடிதீநோற்றுப்
பராவவருள்கூர்ந்தைங்கரப்பிரானவர்
　　முனம்பரிவினிற்பிரசன்னமாய்ப்
பல்சிறப்போடுமெத்தம்பதிகளும்
　　மரப்பரிசாயிருந்தெய்திட
விராவவற்றின்றழைநன்மலர்கொடர்ச்
　　சிப்பவர்வினைத்தொடரொலாந்தவிர்த்து
வேண்டுவரமருள்வமென்றோதியந்நீழலின்
　　விருப்பினெடமர்ந்தானரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

நந்திகோத்திரமுனி புத்திரனுயும் சுமேதை யென்ப வள் நாதனுமான அரவமுனிவருடைய ஏகபுத்திரியாகிய சமியென்பவளை, தவுமியமுனிவர்ப் புத்திரனும் சௌனக ரிஷி சிஷியனுமான மந்தாரனுக்கு, விவாஹஞ் செய்துக் கொடுத்த சின்னுட்பின்பு அவர் மனைவியை யழைத்துக் கொண்டு தன்பிதா வாச்சிரமத்தை நாடிவனத்திற் செல் கையில் துதிக்கையுடன் தொந்திவயிற்றையு முடையவரா யெதிராகவந்த புருசுண்டிமுனிவரை நோக்கி யிருவருமாக நகைக்க அம்முனிவர்கண்டு சினங்கொண்டு மந்தாரனை

மந்தாரவிருக்ஷமும் சமியென்பவளை வன்னிவிருக்ஷமுமாக சபிக்க, இவ்வரலாற்றையுணர்ந்த மந்தாரனுடைய குருவும் சமியின்பிதாவும் அத்தம்பதிகள் பொருட்டாகக் கணேசரைநோக்கி பன்னிரண்டுவருடந் தவஞ்செய்கையில் கணேசர் பிரத்தியக்ஷமாகி அவர்களம்மரமாகவே யிருந்து சகல சிறப்புகளை யெய்துமாறு அப்பத்திரபுஷ்பங்கொண்டு தம்மை வழிபடுவோர்க்குச் சகலதுன்பங்களையும் நீக்கி இஷ்டகாமிய ஸித்திகளையளித்தருள் வதாய்த் திருவாய்மலர்ந்து அவ்வுபயவிருக்ஷ நீழலின்கணெழுந்தருளினர்.

அது முதலறுகில் லாக்குறையை மந்தாரமலர் நிரப்புவதாலும், அறுகுமந்தாரமு மில்லாக்குறையை வன்னிபத்திரம் நிரப்புவதாலும், யாகாக்கினி அவ்வன்னியில் சார்வதாவாசமாயிருத்தலானும், உலகின்கணுள்ள வெல்லாப் பத்திரங்களினும் வன்னிப்பத்திரம் விசேடமெனச் சிவபிரானுமுடிமேற் சூட்டினர் ஆதலால் வன்னியென்று வாக்கானுரைத்தாலும், அதை நினைத்தாலும், வலம் வந்தாலும், தரிசித்தாலும், தொழுதாலும், தவம் தானத்தினும் சிறந்த பல னுண்டாகு மென்பதனால், அறுகு, மந்தாரை, வன்னி, இம்மூன்று மொன்றற்கொன்று குறையாத தன்மையனவாம்.

இஃது வன்னிமான்மியத்தை வினவின கீர்த்தியெனும் அரசிக்கு, கிருச்சமதமுனிவர்கட் டுரைத்தது.

கணபதி துணை.

நாற்பதாவது

வன்னியர்ச்சுவண மகிமை.

இரதமிகுமறையோதுநான்முகன்
முன்னோர்மகமெந்தையைங்கரனையேத்தா
திமையவருடன்முயலவில்லத்திருத்து
சாவித்ரியோர்ந்தவணீண்டியே
வரதவான்சுரரெலாநீர்வடிவமா
கென்வழுத்துருளான்வருந்த
வந்தவர்கடேவிமார்வக்ரதுண்டரை
மிகவும்வாழ்த்திப்பணிந்தேற்றுமோர்
சரதமுறுபயனின்மையாய்மனந்தளர்
உறுந்ததிதன்னிலெழில்கொள்வன்னித்
தளமொடர்ச்சிக்கும்வகையசரீரிகூற
வவர்தாமுமவ்வாறுஞற்றக்
கரதலாமலகமெனவன்பருக்கருள்
செயுங்கருணையானருளினவர்முன்
னவின்றவடிவுற்றபினுபாசித்த
வேள்வியைக்கமலனுமுடித்தனனரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

பிரமன் றன்மனைவியரிருவருள் காயத்திரிதேவியை மாத்திர மழைத்துக்கொண்டு சையாத்திரிசாரலிற் சென்று

வேள்வியைச் செய்கையில் வீட்டிலிருத்தநின்ற சாவித்திரி தேவி யதுசெய்தியறிந்து யாகசாலையை யுண்டந்து தனது நாயகன்தன்னை நீக்கிநடத்துங் காரியத்திற்கு எவ்வாறுடன் பட்டனரெனக் கோபித்து அவண்வந்திருந்த திருமால் இந்திரன் முதலானவர்களை ஜலவுருவாகச் சபிக்க அதுகண்டு பிரமன்வருந்தித் துதித்த சமயத்தில் பிரத்தியக்ஷமான சிவபெருமானால் அவ்விடையூறுகள் கணேசரை முதலில் வழிபடாமையால் நேர்ந்ததெனத் தி[illegible]வுளம் பற்றத் தெளிந்து அவண் தத்தங்காதலர்கட் குற்ற விபத்தை யுணர்ந்து வந்து வருந்திநின்ற அத்தேவர்களின் தேவிமார்கள் மனந்தேறப் பிரமன் கூறினவிதமே யவர்களும் கருநாடதேயத்தில் மந்தாரமர நீழலில் முன்னொரு காலத்தில் அரக்கர்குறும்பினை யடக்குமாறு விஷ்ணுவினால் ஸ்தாபித்து பூஜிக்கப்பட்டிருக்கும் வக்கிரதுண்ட விநாயகரை நெடுநாள்வரையில் துதித்தும் பூசித்தும் அருட்கிடனாகாமையாய்ப் பின்ன ராகாயத்தெழுந்த அசரீரிவாக்கின் பிரகாரம் வன்னிப்பத்திரத்தால் அர்ச்சித்ததற்குவந்து பிரத்தியக்ஷமான கணேசர் பேரருளால் அச்சாபம் நிவிர்த்தியாகப்பட்டெழுந்த இந்திரன்முதலான தேவர்களியாவரும் மற்றோர் மந்தாரத்தடியில் ஏரம்பவிநாயகரெனப் பிரதிட்டைசெய்து அவ்வன்னிப்பத்திரத்தா லர்ச்சித்துச் சகல நன்மைகளு மடைந்தனர். அதுகண்டு பிரமனும் தனது

வாசஸ் தானத்தில் மந்தார விருக்ஷத்தை யுண்டாக்கி யதனடியிற் கணேசரை ஸ்தாபித்து தனதுபய தேவிய ருடன் பன்னிரண்டு வருடவரையில் வன்னிப் பத்திரங் கொண்டு அர்ச்சித்து வந்தாலத்தால் மேற்படி யாகத்தை மீட்டுந்தொடங்கி நிறைவேற்றி மகிழ்ந்தனன்.

இதுவும்—கீர்த்தி யெனும் இராஜபத்தினிக்கு கிருச்ச மத முனிவர் திருவுளங் கூர்ந்துரைத்தது.

கணபதிதுணை.

நாற்பத்தொன்றுவது

க்ஷிப்ரப்பிரசாதனுபாசித்தது.

தயாகரமிகுங்கிருச்சமதமுனிசொற்
படித்தகவுடனணைந்தகாசித்
தலத்தினிற்கோமகன்கிப்ரப்பிரசாதன்
சதுர்த்தியிற்கங்கையாடி
கியாமாதிமுற்றிநற்றுண்டிராஜர்ச்
சனிதிநேர்ந்துநிலவுதயப்பரம்
நிகரின்மஞ்ஞனமாடையணிகலனி
வேதனநிறைவன்னியிறுகார்ச்சனே

ஜயேச்சையினடாத்தியம்முனியுதவு
மனுவர்ற்றுதிப்பவிறைவர்தெர்நலனுந்
துன்னநாமம்பரசுபாணியென்றிட்டோர்
சுடர்க்குலிசமுதவவவனம்
மயேசரைவணங்கிமீண்டுக்கன்னபுரியில்
வருடத்தொவொன்றுய்சகத்திர
மகமுடித்தரசாண்டிருந்து
காலாந்தத்தின்மருவினன்பரமபதமே.

இதன் சரித்திர சங்கிரகம்.

கீர்த்தியெனும் இராஜபத்தினி கிருச்சமத முனிவரை வணங்கி தனதுகுமாரனாகிய க்ஷிப்ரப்பிரசாதனுக்கு விசேஷ பிரயோசனத்தை விரைவிற்றருவதாயும் ஜெபித்தற் கெளிதாயு மிராநின்ற வோர் கணேச மந்திரத்தை யனுக்கிரகிக்கும்படி விண்ணப்பஞ் செய்துக் கொண்டதன்மேல் அம் முனிவரு மனக்கனிவாய் நாலெழுத்து மந்திரத்தை முறைப்படியவனுக் குபதேசித்து ஆக்கியாபித்தவாறே அவனும் தன்தாயுடன் விசேடமகிமை வாய்ந்த காசிஸ்தலமடைந்து மாசிமாத அபரபக்ஷ சதுர்த்தி தினத்தில் துண்டி விநாயகரை விதிப்படிபூசித்து அம்மனுவைஜெபித்து அறுகு வன்னி மந்தாரத்தால் அர்ச்சிக்கையில் கணேசர் பிரத்தியக்ஷமாகி அக்கிப்ரப்பிரசாதன் எக்காலத்தும் ஓரிடையூறில் வருந்தாமல் தீர்க்காயுள் கல்வி செல்வ முதலானவைகளைப் பெற்று அரசாண்ட பின்னர் தமதுபதஞ்சேரத்தக்கதாக வரமும்,

திரிபுவனமு மஞ்சத்தக்க வஜ்ராயுதத்தினையு மளித்து, பர சுபாணியெனவோர்நாமமு நல்கப் பெற்றபின் தன்னகர டைந்து பிதாவால் அரசுரிமை பெற்று இரத்தினத்தினால் விநாயகமூர்த்தியின் திருவுருவஞ் சமைத்து அதைத் தமது கண்டத்தில் தாரணஞ் செய்துகொண்டு வருடத் திற்கொன் றாக ஆயிரமகத்தையு முற்றினவனாய் சுகித்து வாழ்ந்திருந்த பின்தெய்வவிமானமேற் கணேசர்ச்சாரூபபதமடைந்தனன்.

கணபதிதுணை.

நாற்பத்திரண்டாவது

புலச்சி தெய்வவுருப்பெற்று

பரலோகமடைந்தது.

பதித்தொளிருமணிமகுடசித்திர
நரேந்திரன்பாரிசுந்தரிகணவனைப்
பரவுருடவிச்சையான்மாய்த்ததிபர்
தண்டனைப்பட்டிறந்தெமபுரத்தும்
விதித்தநிரயத்துளாழ்ந்தப்பாற்
புலைச்சியாய்மேதினியில்வந்தமுதலாய்
வேண்டியோர்புணியமுஞ்செய்
திலாளாயும்வியன்சங்கடச்சதுர்த்தி

துதித்தநோன்பினர்நிவேதித்துண்டு
வீசிலையினிற்றன்னுசேடந்நுகர்ந்தத்
தூயோர்பராவியகணேசநாமஞ்
செவித்தோய்ந்துபுனிதையளாகியே
கதித்தப்பியவணின்றவிந்திரவிமான
மவள்கண்ணோக்கின்விண்ணேறிடக்
கவின்றேவகணமுய்த்தவூர்திமேன்மகிழ்
வாய்க்கணேசபதமுற்றனளரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

பூர்வஜன்மத்தில் வங்காளதேயத்தரசனான சாரங்கதரன்குமாரியாகிய சுந்தரியென்பவள் தன்னியற்பெயர்க்கேற்பவனப்பிற்சிறந்து இசைவல்லபமுமுடையவளாய் சித்திரனென்னும் இராஜனை மணந்துவாழுநாளில் புருஷன்காவற்குளடங்காமல் தன்னை விழைந்தோரை யெல்லாம் தானும் விழைந்து கடைமுறையில் பரபுருஷ விருப்பத்தால் தன்புருஷனை நித்திரையில் வாளான்மாய்த்து அரசனுக்கினையால் சேதிக்கப்பட்டிறந்து யமபுரத்திலும் அருநரகங்களை யனுபவித்து மறுஜனனத்தில் புலைச்சியாய்ப் பிறந்தது முதலோர் புண்ணியமுஞ் செய்தறியாளாயிருந்தும், விநாயகசதுர்த்தி தினத்தில் அவ்விரதம் அனுஷ்டித்தவர்கள் கணேசருக்கு நிவேதித்த பதார்த்தங்களில் தாங்கள் புசித்துத் தெருவிலெறிந்த விலையிற்கிடைத்த சேடத்தைப் புஜித்தானவுடன் அவர்கள் துதிசெய்க்கேட்டு அவளும்

கணபதியென்றவ் விசேஷதினத்தில் முக்காற்கூறின தன் மேல் விநாயகக்கடவுள் கிருபையால் தெய்வவுருப் பெற்று அவண்வந்த விமானத்தாரோகணித்து அக்கடவுட் சாலோகபதவியை யடைந்தனள்.

இங்ஙனம் முன்னிட்டோர் திருட்டி தோஷத்தினால் கதிதப்பி நிலத்திறங்கின இந்திரவிமானம், தெய்வவுருப் பெற்றுச் சென்ற மேற்படிபுலைச்சி நோக்கால் உடனே ஆகாயமார்க்கத் தெழும்பிச்சென்ற தென்பதனால், விநாயக சதுர்த்தி தினப் பெருமையையும், அதையனுஷ்டிக்கும் விரதசீலர் பலவிசேடத்தையும், உலகில் யாவராலும் அளவிட்டுரைத்தற் கரிதேயாம்.

கணபதிதுணை.

நாற்பத்துமூன்றுவது

சூரசேனனுபாசித்தது.

தடக்கடுங்கதிதாழ்ந்திறங்கிடுவிமான
மதுதனிலுற்றதேவேந்திரன்
சதுர்த்திநோன்பதன்மான்மியஞ்சொலக்
கேட்டமெற்றதுதன்னையன்பினேற்றாழ்

பட்டக்கணேசர்ப்பதங்குறுகுசற்சனர்
தமைப்பார்த்துமகிழ்வுறுசகஸ்திர
பதியரசனெனுமெழிற்சூரசேனன்
மாகம்தியபரபக்கமதனிற்
றுடக்கமாய்க்குசவாரம்விரவுசங்கட
சதுர்த்தியெனுநோன்பைச்சுகநயந்
துனவசிட்டாதிமுனிவரர்கள்கற்பித்த
வாதுரிசறவனுட்டிக்குநாள்
இடர்த்தெறூஉமெம்பிரானருளுக்
கிலக்கனுயெய்தியவிமானமிசையே
யினத்தர்பரிசனர்கள்சாலோகத்
திருக்கவேந்தெய்தினன்சாயுஜ்யமே.

இதன் சரித்திர சங்கிரகம்.

மத்தியதேயத்தைச் சார்ந்த சகத்திரபுரிக் கரசனான சூரசேனராஜன் புண்ணியசீலையெனும் நாயகியுடன் வாழ்ந்து அரசுசெய்து வருநாளில் விமானரூடனாய் பூலோகத்திற்கு வந்துமீளும் தேவேந்திரனைச் சந்தித்து அவனால் கணேசரதுவிரத மகிமையினையும், மானிடர் தேவர்முதலாயதை யனுஷ்டித்துப் பேறடைந்த வரலாற்றினையும், சொல்லக்கேட்டவுடன், கணேசருலகத்திற்குச் செல்லும் புண்ணியான்மாக்களையும் அவர்களாரோகணித்த விமானத்தையுந் தரிசித்து பிரம்மானந்தமாகி வசிஷ்டமுனிவர் முன்னிலையில் மாசிமாத அபரபக்ஷ அங்காரகவாரத்தில் நேர்ந்த சங்கட சதுர்த்தி விரதத்தை வேதாகம்முறைப்படி யன்பா

யனுட்டித்துக் கணேசமூர்த்தியைப் பூஜித்து அதுமுதலாய் மாதமாதம் சதுர்த்திதோறு மிடைவிடாம லாராதித்து வருகையில், அக்கடவுள்கிருபையால் வந்த விமானத்தில், தன்பிரிவிற்காற்றாராய் வருந்திநின்ற சுற்றத்தார், நகரத்தார், பரிசனங்களுட னேரோகணித்து அவர்களனைவரும் கணேசர்ச் சாலோகத்தமர, அரசன்சாயுச்சிய பதத்தடைந்தனன்.

கணபதிதுணை.

நாற்பத்துநான்காவது

மாபாவியானவணிகன்

தெய்வவிமானத்தேறினது.

மெய்யுற்றமறையவர்குலத்துவரு
புதனிலாய்விரவுசாவித்ரியோடு
மேவிவாழ்நாட்பரத்தையர்கமனனாகி
மயன்மிக்குதாய்தந்தைமனையைக்
கையலுத்திடவடித்தவர்களைக்கொன்
றேய்ந்தகனகமணிகலனெடுஞ்செல்
கானின்முனிபத்தினிசுலபைகைப்
பற்றக்கறுத்தவவள்சூரினேர்ந்த

வெய்யதொழுநோயாலிறந்தெமபுரத்தும்
வெகுவிதமனுபவித்தும்வினை
விடாதிப்பர்குலம்வந்துமாபாவியாய
யர்புவிறுங்கணேசரருளால்
வையம்வந்தேறுமோர்வேந்தனொடு
முறையிடவமன்னவனிரங்கிவானோர்
மாகணத்தவரைவேண்டுறவவர்க
ளுய்வுசெய்தார்வள்ளன்மந்திரத்தே.

இதன் சரித்திர சங்கிரகம்.

பூர்வஜென்மத்தில் கௌடதேயத்தில் வேதியனான தவசீலனுக்கும் அவர்மனைவி ஜானகிக்கும் புத்திரனுயுதித்த புதனென்பவன், வனப்பிற்சிறந்த சாவித்திரியென்பவளை மணந்து, வாழுநாளில், பரத்தையர் மையலிற்சிக்கி வீட்டிற்கும் வாராமையினால், அவனைத் தேடிச்சென்று கண்டழைத்தவார்த்திகப் பிதாவை தாலடியிலறைந்தும், வீட்டிற் சென்றபின்னும், புத்திகூறின தாயைத்தடியா லடித்தும், பிரிவாற்றாமையால், வரக்கண்டவுட னின்மொழி கூறினக் மனைவியை விழவுதைத்தும், இவ்வாறம் மூவரையுங் கொன்று மண்ணின்கீழ்ப் புதைத்துவிட்டு, வீட்டிலிருந்த ஸ்திதிகளியாவையு மெடுத்துக்கொண்டு, அரசனறிந்தால் உயிர்க்கானி வருமென்று அப்போதே பரத்தையுடன் தானுங்காட்டிற் செல்கையில், அங்கோர் தாலவன முனிவரென்பவர் ஸ்நானஞ் செய்யச் சென்ற சமயத்தில், அவ

ராச்சிரமத்துள் நுழைந்து, சுலபையெனு மவ்விருஷி பத்தி னிகரத்தைப், பற்றினதன்மேல், அப்பதிவிரதை சினந்து சபித்தவாறே, நேர்ந்த பெருவியாதியோடு, அவிடம்விட்டு நீங்கி வெளியில் வந்தவுடன் கண்ட வப்பரத்தை யருவருப் பினளா யவனைவிட்டுச் சென்றனளாக பின்னர் அங்கு பாதுகாப்பாரில்லா மலிறந்து யமபுரமடைந்து சகல நரகங் களினும் நெடுநாள்மிகவும் வருந்தி யனுபவித்து நின்ற பாபசாப சேடத்தினுல் மாபாவியாய்க்குட்ட நோயுடன் வணிககுலத்திற் பிறந்து துன்பமனுபவிக்கு நாளில் அந் நகரத்தரசனுன சூரசேனன் சங்கடசதுர்த்தி விரதத்தை யாராதித்து கணேசர் கிருபையால் வந்த விமானத்தில் பலருடன் ஆரோகணிக்கும்போது அப்பாதக வணிகனு மேறினதன்மேல் அது பூமியைவிட் டெழாமை கண்டு அவனை நீக்கிவிடுவதாக ஆலோசிக்கையி லவனஃதுணர்ந்து பிரலாபிப்பதைக்கேட்டு அவ்வரச னிரங்கி பிரார்த்தித்ததற் குத்தேவகணங்கள் கிர்பாநோக்கம்பரப்பி யவ்வணிகன் செவி யில் மூன்றுதரம், கணபதி யெனுந்திருநாம மந்திரத்தை, யுபதேசித்தவுடன், அவனும், புன்மைத்தேக நீங்கி, தெய்வ சரீரம்பெற்று, சுத்தபவித்திரனு யவ்விமானத்தின் மேற் கணேச சாலோக மடைந்தனன்.

கணபதிதுணை.

நாற்பத்தைந்தாவது

பரசிராமனுபாசித்தது.

நன்றாகவாச்ரமந்தனிலிரேணுகைப்ராண
நாதனுஞ்சமதக்னியா
னடத்தியவிருந்துண்டமைத்தகடவுட்
பசுவைநனிகவரவெணிமுயன்ற
தன்றாற்பர்யத்தமாதவனுமதைபற்றிடுந்
தாக்குமுதவாமையின்மேற்
சலங்கொண்டகார்த்தவீரியனும்
பினோர்நாட்டணித்தவத்தம்பதிகளைக்
கொன்றானதோர்ந்துவருமைந்தனுரிமைக்
கடன்குறைவறுத்துக்கைலைவாழ்
குருவருண்மனுவினைமயூரேசமதனிற்
குறித்துனுற்றிடுதவத்திற்
கன்றார்வமொடுகஜானனவரதனுதவு
படையாற்பரசிராமனாகி
யம்மன்னனைப்பொடித்தினமுஞ்
சிரஞ்சீவியாயிருக்கின்றனனரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

பொழில்களாலும் பொய்கைகளாலுஞ் சூழப்பட்டிருக்கின்ற சையவரைச் சாரலில், தவஞ்செய்து கொண்டி

ருந்த இரேணுகாதேவி நாதனான ஜமதக்கினி முனிவர்க்கு (விஷ்ணு, பிருகுமுனி சாபத்தால்) இராமனெனும்நாமனாய் புத்திரனாகவுதித்து, தனதுதாய்தந்தையரிடத்தில் இவனின் மிக்கா ரொருவருமில்லையென்று சொல்லும்படி மெய்யன் புவைத்து சகலமுனிவர்களுங் கொண்டாடத்தக்க அவர் கட்குப் பணிசெய் திருக்கையில், ஓர்நாளவன், நைமிசாரண் யத்திற்குச் சென்று அங்குள்ள முனிவருடன் சின்னாள் வசித்திருக்கையில், அரசர்களெல்லாங் கொண்டாடத்தக்க பராக்கிரமத்தோடு, உலகமுழுவதையுந்தனது ஆக்கியாசக் கரத்துளடக்கி, அடங்காரையெல்லாம், ஐஞ்ஞூறுபாணங்க ளால் விசும்பேற்றி, இந்திரனுங்கண்டு நடுங்கும்படியாகவும் கவிவாணர்க ளெல்லாம் புகழும்படியாகவும். அளவற்ற போகங்களோடும், தேவர்களெல்லாம் ஏவல்கேள்க்கும்படி அரசாண்டிருந்த, கார்த்தவீரியன் பல படைகளோடும், பரிஜனங்களோடுஞ் சென்று, வேட்டையாடி மீண்டு, ஜம தக்கினி முனிவராச்சிரமத்திற்கு வரலும், கண்ட அம்முனி வரவனுடன் சிலநேரம் சம்பாஷணைஞ் செய்திருந்தபின், காமதேனுவைத் தியானித்தழைத்து அதைப்பூசித்து அவ னுக்கும் அவனுடன் வந்தவர்கட்கும் அறுசுவையுண்டி யளித்து பசரிக்கும்படி பிரார்த்திக்க, அக்காமதேனுவும் அவ்வாறுநடத்த, யாவரு முண்டுகளித்திருக்கும் சமயத்தில் அவ்வரசன், அக்காமதேனுவைக் கொண்டுபோகு மாறு

அம்முனிவரைக் கேட்டதற்கவரிணங் காமையின்மேல், பலாற்காரமாயவ்வகை முடிப்பதற்கதனை நெருங்கலும், அதுகண்டத் தெய்வப்பசு மிகவும் சினந்தெதிர்த்து, அவர்களை முறிந்தோடச் செய்து விட்டுச்சென்றது, பின்டது காரணமாகவே வயிரங்கொண்டிருந்த அக்கார்த்தவீரியன், சிலநாட்பின், பவ்விடஞ்சென்று, தவஞ்செய்துக் கொண்டிருந்த அவ்விருடியை யோர்பாணத்தான் மாய்த்து விடலும், அதுகண்டாற்றுமன் மனநொந்துவைத, அவர் பத்தினியார்மீதினும் இருபத்தோரம்புகளையேவி, உயிர்சோர்ந்து விழச்செய்தவன் தன்னகர்க்குச்சென்றபின், நைமிசவனத்தினின்றும் வந்த இராமனுடைவள், குற்றுயிருட னிருந்து நடந்ததனைத்து முணர்த்தி உயிரைவிட்டனளாக, குமாரனுன் இராமன் மிகவுமனம் வருந்தினவனுகி யம்மாதா பிதாவிற்குரிய கடமையை, தத்தாத்திரய முனிவரைக் கொண்டு முடித்தபின் போர்நாள் நினைத்த வுடன் தெய்வ வுருக்கொண்டு வந்த தன்றாய் வாக்கியப் பிரகாரம் கைலாய வரையை யடைந்து பலமுறை வணங்கி துதி செய்ததற்கிரங்கி காட்சிதந்த பரமசிவத்தால் சடாக்ஷர மந்திரத்தை யுபதேசிக்கப்பெற்று மயூரத்தலத் தெழுந்தருளி கணேசர் திருவடியைப்பூஜித்து அம்மனுவை யுச்சரித்து அரியதவங்களைச்செய்ய பிரசன்னமான வக்கடவுளால் சத்துருகண்டகனென்னமாறுத வலிமையும் பரசாயுதமும் பரசிராம

னென்னுந் திருநாமமுடன் சிரஞ்சீவிப்பதமு மளிக்கப் பெற்றவனாய் மீண்டு தன்பழம்பகையாகிய கார்த்தவீரிய னையும் அவன் வம்சபரம்பரை யோரையும் அறக்களைந்து மற்றுமெதிர்த்த வரசர்களையும் சங்கரித்து அவர்களரசாட் சியை யந்தணர்கட்கு வழங்கி அதுமுதல் யோகசமாதிய னாய் வசித்திருக்கின்றனன்.

கணபதிதுணை.

நாற்பத்தாறுவது

இராவணனுபாசித்தது.

இலங்கைநகரெக்காலுமழியாமனிலை
பெற்றிடக்கைலைதனின்மாதவ
மியற்றியவிராவணனுமேசரானல்கிடு
மிலிங்கமவணிறுவவெணிக்கைத்
தலங்கொடுநடந்தேகுபோதஃதுணர்ந்தச்
சதக்கிருதுநெஞ்சமஞ்சித்
சாற்றுமுறையேற்றோர்வேதியனாய்க்
கணேசர்வருணனையேவியெதிர்சார்தலும்
நிலந்தொடவொணாதென்னவேண்டிக்
கரத்துய்த்தநிருதனீர்க்கேகிவருமு

ணிமலன்முக்காற்கூவியச்சிவக்குறியை
மண்ணிடவ்வனுநேர்ந்துநொந்து
பலங்கொண்டமட்டிழுத்தேலாமையா
லுருத்தப்பகவனெடுப்பகைத்துப்
படாப்பாடுபெட்டபின்பெரிதேத்தி
மலரடிபணிந்துபதிபுக்கினனல்.

இதன் சரித்திர சங்கிரகம்.

இலங்கைக்கரசனாகிய இராவணன், எல்லா வுலகங்களு மழியுங்காலத்தினு மிலங்காபுரி யழியாதிருக்கத்தக்க வரம் பெறவேண்டிக் கைலையங்கிரிக்குச் சென்று அரியதவஞ் செய்ய சிவபெருமான் பிரத்தியட்சமாகி அவன் வேண்டின வண்ணமெய்த வோர்சிவலிங்கங் கொடுத்தருளி இதை மார்க்கமத்தியில், பூமியின் கண்வைக்கப்படா தென்றும், வைத்தாற்நிலத்தூ டழுந்தி விடுமென்றும், வாகனத் தேறாது கொண்டுபோ யிலங்கையிற் பிரதிஷ்டை செய்து பூசித்து வரக்கடவை யென்றும், கட்டளை யிட்டருளப் பெற்றுமீண்டு அச்சிவலிங்கத்தைக் கரத்திலேந்திச் செல் கின்ற காலையில் அதை இந்திரனறிந்தினித் தேவகணங்க ளுக்கு இடருழக்க நேருமென் றலமரலுற்று, மிகவும் பிரார்த்தித்ததற்கு இரக்கமுற்ற கணேசர், அவ்விராவணன் ஜலோபாதையால், சகிக்கக் கூடாமல் வருந்தத்தக்கதாக, வருணனைக்கொண்டு அவன் வயிற்றில் நீரைச்சுரப்பித்து, தாமோர் பிராமணப்பிள்ளை வடிவங்கொண் டவனுக்கெதி

ராகவர, கண்ட இராவணனவ் விலிங்கத்தைதான் ஜலஸ்பா சத்திற்குப் போய்வருமளவும், வைத்திருக்கும்படி வேண் டிக்கொள்ள அதற்கியைந்ததனைத் தமது திருக்கரத்தேந் தும்போ தவனுடன் கூறினபடியே முக்கால வனைக்கூவி நிலத்தில் வைத்துவிட விரைந்தோடி வந்த இராவணன் தன்னாற் கூடினமட்டும் இருபது கைகளாலும் தூக்கியும் தூக்கப் படாமல் மண்ணைத் தோண்டியும் அஃதூடுருவி நிற்கக்கண்டு மனவருத்தமுற்று மீட்டுந் தனதுபூரணவலி யுடன் கரங்களாற்பாச்சி யிழுத்ததற்கு அச்சிவ லிங்கம் கைக்குவராமற் பசுவின்காதுபோற் குழைந்து பிரகாசித்த தால் அவன் கோபங்கொண்டு அப்பிராமணப்பிள்ளை சிரமீ திற்குட்ட உடனே அவ்வடிவமாறி தமது சொருபத்தைக் கொண்டு இவனைத் துதிக்கரத் திலெடுத்து அண்டமுகட் டிற் படவீசியும் திருவடிகளால் பாதலத்தழுந்தும் படியாக வும் என்புகணெரிபட நிலத்தில் வீழவுமாகத் தள்ளுகை யில் அவன் சகிக்கக்கூடாமல் உயிர்ப்பிச்சை நல்குதியெ னப் பலவாறோல மிட்டுத் துதிசெய்த தன்மேல், திருவுள மிரங்கி நிலத்தில் விட்டபின்னர் அவ்வவுணேசன் திவ்ய புஷ்பங்களால் திருவடிகளையர்ச்சித்து, வேதாகமங்களால் துதித்து, தன்தலையிற் குட்டிக்கொண்டு பணிந்து அக்கட வுளால் பலவரங்களையும் பெற்றிலங்கைப் பதியையடைந் தின் புற்றிருந்தனன்.

இராவணன் தனதிருபதுகரங்களைப் பாய்ச்சி யிழுக்கையில் அச்சிவலிங்கம் பசுவின்காதுபோற் குழைந்து பிரகாசித்த காரணத்தால் அத்தலம் கோகர்ணமெனவும், வலியுடன் பற்றியிழுத்ததற் கச்சிவலிங்கம் பேர்க்கப் படாமற்போனதை நோக்கி மஹாபலமுள்ளதென வியந்துரைத்த அவ்வரக்கன் வாக்கின்படியே மாபலலிங்கமெனவும், அத்தல மூர்த்தநாமம் வழங்குகின்றன.

கணபதிதுணை.

நாற்பத்தேழாவது

இந்திரன் நந்தனவனந்தனையடைய உபாசித்தது.

சையுருப்புகழ்சூரபன்மனது
கொடுமையைசசகியாதுசொற்கந்தனைத்
தவிர்த்தமகவான்புலோமசையுடன்
சீகாழிசார்ந்தினிதமைத்தகாவி
னைவுருதமலனைநன்மலர்கொண்
டருச்சித்துவருநாளின்மாரியின்றி
நனிவாடமனமேங்கியசரீரிவாக்கின்
மகிழ்நணிநாரதன்சொல்வண்ண

மையிராவன்பினங்கரனையினிதேத்த
வவ்வள்ளலருள்கூர்ந்துகைலை
மரூஉநதியையரனல்கிடக்கொள்குறு
முனிகாண்டமிசையொர்வாயசமதாகி
கையாலவறவனேச்சக்கவிழ்த்திடு
நீர்கவின்சையகிரியினின்றுங்
காவிரியெனச்சென்றநந்தனந்தழைவுறக்
காணுவான்போற்பாய்ந்ததே.

இதன் சரித்திர சங்கிரகம்.

சூரபன்மன் கொடுமையால் விண்ணுலகத்தை விட்டு இந்தி ராணியுடன் சீர்காழிப்பதியை யடைந்து அவ்விடத் தோர் நந்தனவனம் வைத்து அதில் நின்றும் பத்திர புஷ்பங்களைக்கொண்டு சிவபெருமானை இந்திரனர்ச்சித்து வரு நாளில் மழையில்லாமல் அந்நந்தனவனம் வாடக்கண்டு தன் மனம்வாடி நிற்குஞ் சமயத்தில் நதிவந்து நந்தனவனத் திற் பாயுமென்றோர் அசரீரிவாக்குண்டாக அதனுன் மன மகிழ்வுற்றவனுகி யங்குவந்தநாரதர் சொற்படியே இந்திரன் கணேசரைப் பிரார்த்திக்க அவரும் பிரத்தியக்ஷமாகி அவன் வேண்டுகோளின்படி சையகிரிச் சாரலிற்சென்று அவண் தங்கிநின்ற அகத்தியர் (காவிரிநதியைச் சிவபெருமானிடத் துப் பெற்றடைத்திருந்த) கமண்டலத்தின் மீது காகவடிவங் கொண்டேற அதுகண்டம்முனிவர் கையாலோட்டின சம யத்தில் உதைந்தெழுந்த காலாற் கவிழ்த்திட்ட நீரோடி

இந்திரனது நந்தனவனத்தில் பிரவாகம்போலப் பர்விப் பாயப் பெற்றனவாம்.

கணபதிதுணை.

நாற்பத்தெட்டாவது

அகத்திய ருபாசித்தது.

விநோதமிகுசையவரையிற்கும்பமுனி
கமண்டலமதன்மேற்காகமாய்
மேவிக்கவிழ்த்திடுகேணேசரவ்வுருவொரீஇ
வேதியனெனத்தோற்றலு
முனீசன்வெகுண்டுகுட்டத்தொடர
வதுபோதவன்முழங்காற்றளரவே
முதியபுவனமதெங்குமோடியபினெழில்
வேழமுகனுனெனக்காட்டலும்
அனுதநாதாவெனறியாமைப்பொறுத்
தருடியென்றன்புமச்சமுமிகுத்
தையனேயிலக்காக்குவித்தவங்குலி
கொடுதனவிர்முடியிற்குட்டிக்கொள
வனோதயலன்வழங்கிடுமெந்தை
திருவுள்மகிழ்ந்தமாதவனேற்றவா

மலயத்துமுதவவிரிநீர்குண்டிகைப்
பெய்துமாறிலருள்செய்தானரோ.

இதன் சரித்திர சங்கிரகம்.

அருமையா யகத்தியமுனிவர் கைலேயிற்பெற்ற காவிரி நதியைக் கொண்டிருந்த கமண்டலத்தைக் கவிழ்த்த வுடன் கணேசர் அக்காகவுருமாறிப் பிராமணப் பிள்ளை வடிவங் கொண் டவரெதிரேயுலாவ அகத்தியர் கண்டு சினந்து அவரைக்குட்டு மாறுதொடா அம் முனிவருள்ளமுங் கால்களுந் தளர்வெய்த உலகமெல்லாஞ்சுற்றி யோட்டங் காட்டின பின்னர் யானை முகத்துடன் பிரத்தியட்சமாகலும் அதுகண்டு முன்குட்டுதற் கோங்கின கரத்தாற் றமது சிரத்திற்றுமே குட்டிக்கொண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து பலவாகத்துதிசெய்த அன்பிற்கு கணேசர் மிகவும் கிருபைசுரந்து அம்முனிவன் வேண்டின வகையே பொதியமலேயில் சிவபிரானை யபிடேகிக்குமாறு அவண் பரவியோடுகின்ற அக்காவிரிஜலத்தைத் தமது கரத்தாலள்ளி யக்கமண்டலத்தில் வழியும்படியாக விடுத்துக் கொடுத்த தன்றியும் அளவற்ற வரங்களையும் நல்கலும் அவரதைப் பெற்றகக்களிப்பாகிப் பொதியமடைந்தனர்.

கணபதி துணை.

நாற்பத்தொன்பதாவது

காசிபர் முதலாயினோருபாசித்தது.

ஏற்கும்பிதாமகன்பரிவாலுணர்த்திடு
மேகாக்கரத்தையுன்னி
யீண்டிடுகணேசரால்வேண்டுவரமெய்து
காசிபன்மருவுமீரெழுவராஞ்
சேற்கணுயகியர்கர்ப்பத்துதித்திடும்
மக்கடேவர்முதலோர்க்கவனவிற்
சீர்மல்கெழுவகைமனுவினைக்கணித்
தவணவர்கள்செய்தவத்திற்குவந்து
மேற்கொள்பல்வாகனஞ்சொருபமொடு
முன்னின்றுவேண்டினவரங்களருள்பின்
விதிபீடரத்தவகைதிருவுருக்கண்
டுபாசித்ததுமெய்யன்பினோடு
நாற்கதியுமெளிதின்வழங்குமான்மிய
மிகுமுநான்குநாமங்களாலங்
நமதனைப்போற்றிதத்தம்பதத்தவரவர்க
ணண்ணினரிதம்பெருகவே.

இதன் சரித்திர சங்கிரகம்.

பிரமன் மனத்திலுதித்த புதல்வரெழுவரு ளொருவ
ரும் அறிவு ஒழுக்கமுதலிய மேன்மையிற் சிறந்தவருமான

காசிபர் பிதாவா லுபதேசிக்கப்பெற்றஏகாட்சர மந்திரத்தை ஜெபித்து ஆயிரவருடவரையில் தபஞ்செய்து பிரத்தியட்சமான கணேசரிடத்தில் உயிர்த்தொகைகளை சிருஷ்டிசெய்வதற்கும் மற்றக்கடவுளே தனக்கு கசியபந்தரெனப் பேர்கொண்டு புத்திரனுய் வரும்படியாகவும் வரம் அருளப்பெற்றுத் தமதுபத்தினிகள் பதினல்வரோடுங்கூடி யாச்சிரமத்தில் சுகித்திருக்கையில் அவர்கள் கர்ப்பத்தினிடமாக தேவர் முதலிய அளவற்ற சராசரங்களு முற்பத்தியாயின.

அத்தேவர்கண் முதலியயாவரும் ஒன்று நான்கு ஐந்து எட்டு பன்னிரண்டு பதினறு பத்தொன்பதெனும் அக்ஷரங்களையுடைய விநாயகமூர்த்தி மந்திரங்களை தங்கள் பிதாவா லுபதேசிக்கப் பெற்று அவ்வவர்களும் வேறுவேறுகத் தியானித்து ஆயிரவருடம் தவஞ்செய்யும்போது அவரவர்கள் பாவனைப்படி வந்து தரிசனைகொடுத்த கணேசமூர்த்தியால் சம்பத்து அதிகாரம் செல்வம் வாகனமுதலியனவும் வேண்டின வரங்களையும் தரத்திற்குத் தக்கபடியருளப் பெற்றனர்கள்.

உபாசனுகாண்டம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

விநாயகமான்மிய ஸாரமென்னும்

விநாயக பராக்கிரமம்.

இலீலாகாண்டம்.

அகிலமெலாந்தனக்குள்ளாயவற்றினுட்
டானுகநின்றங்களவில்கற்பத்
திகறருமவ்விடர்நீங்கியுயிர்த்தொகைகள்
வாழவெளியெளிதெழுந்து
மகிழவரும்பிரணவகுஞ்சரமா
லீலாகாண்டமான்மியத்தைப்
பகர்வதற்கப்பரம்பொருட்டாணற்
றுணையாய்நாவிதம்பயக்குந்தானே.

வக்கிர துண்டர்.

உலகமுழுவதுநிலையவாக்கறிதி
சங்காரமோங்கக்குணப்பகுதியி
னுற்றவயனரியுருத்திரர்தொழிற்
பெறவருளினுயர்வாலேபுவனேயோடு
மிலகுதிரிபுரையெனுஞ்சத்திகளே
நல்கிமேலியாவுமாம்பேருருக்கொண
டேற்றவம்மூவரையகட்டிவிட்டவண்
மேவுமெண்ணிலாவண்டகோடி
மலிசராசரவர்க்கமுதலியவுறுந்
தொழின்மரபவர்த்தேற்றுவித்தே
வார்செவிபுழைக்கைவழியாகவெளியுய்த்
தருண்மாண்புடைக்கருணையனேயாம்
அலகிலாற்புதவகண்டாகண்ட
சச்சிதானந்த ஷாட்குண்யசர்வா
தாரவக்கிரதுண்ட மூர்த்தியா
யலரிநடுவமர்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

முன்னொரு பிரமப்பிரளயமான பின் யதாப்பிரகார முலகையுண்டாக்க பரப்பிரமமாகிய வக்கிரதுண்ட விநாயகர் திருவுளங் கூர்ந்து தமது திரிகுணங்களினால் பிரமன் விண்டு, உருத்திரன், என திரிமூர்த்திகளேயும் படைத்தருளினர், பின்பம் மூவரும் தம்மைப்படைத்த முதலேயறிய

NO.3.

வேண்டித் தவஞ்செய்ய அவர்கண்முன் கோடி சூரியப்பிர காசமான திருவுருவமும் துதிக்கையும் நீண்டு வளர்ந்திருக் கின்ற தந்தங்களும் பாலலோசனமும் மஹா சுந்தரமுடன் விளங்குமோர் வேழமுகமும் பிறையணிந்த நவரத்தின கிரீடம், குண்டலம், புஜகவசம், சரப்பளிபதக்கம், பேரணிச் சிலம்பு, முதலாகிய ஆபரணங்களும், வாள், கேடகம், வேல், வில், இவைகளை யேந்திய நான்கு திவ்வியாஸ்தங்களும் திருமார்பிற் கொன்றைமாலையும் உபய திருவடியுமாக சிங்க வாகனரூடராய் வக்கிரதுண்ட மூர்த்தி பிரசன்னமாகி சிருஷ்டி, திதி, சங்கார மென்னு முத்தொழில்களை நடாத்தி வரக் கட்டளையிட்டு, அத்தொழில்களை யியற்றுந் திறத்தை யுணர்த்துமாறு தாம் விசுவரூபங்கொண்டு துதிக்கைப் புழைவழியாக அம்மூவரையுஞ் செல்ல விடுத்து தமது கருப்பத்துள்ள வகிலாண்ட சர்ாசரகோடிகளையும், கிர்த் திய மூர்த்திகளையும், பிரத்தியக்ஷமாகக் காட்டித் தெளி வித்து விண்டு உருத்திரனிவர்களைத் திருச்செவி வழியாக வும் பிரமனை துதிக்கைவழியாகவும் வெளியில் விட்டு அக் கிர்த்திய வித்தியாம் பொருட்டு மூன்றுசத்திகளையு மவர் கட்குத் தந்தருளினர்.

சிந்தாமணி விநாயகர்.

அமிழ்தைநிகர்தருமொழியிலாளொடபி
சித்தரசனுன்றதவமகவினுக்கா
யயர்வனத்தயன்விந்துவளைதடப்புன
லுண்டவரசியீன்றிடுகெணன்வளர்ந்
துமைபதிவரத்தின்முவ்வுலகாளு
நாடன்னிலுழைவேட்டமாடிமீண்டங்
குறுகானில்கபிலமுனிதெய்வமணியா
லமைத்திடுவிருந்துண்டவனதைக்
கமவலிமையாற்கவர்ந்தேகமுனிநொந்து
செய்கணன்மகந்தோன்றியடரக்
கணனைமழுவாற்செற்றுகபிலரார்ச்சனை
யொடுங்கண்டத்தமணியேற்றதாற்
றிமிரபந்தந்தவிர்த்திடுகபிலநாம
மொடுசெல்வமெல்லாமளிக்குஞ்
சீர்கொள்சிந்தாமணிவிநாயகரு
மாயுலகிறிகழ்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

தமிழ் வளநாட்டதிபனுன அபிசித்தெனு மரசன் புத்திரப் பேறுவேண்டி வைசம்பாயன முனிவரா லுபதேசிக்கப்பெற்ற பஞ்சாக்ஷர மந்திரத்தை பத்தியோடு தியானித்து தவஞ்செய்து வருகையில், (அதற்கு முன்னர் அவ்வனத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த பிரமன் ஓர் நாள்,

NO. 4.

தன்மனைவி சரசுவதி தேவியின்மேன் மையல் கொள்ள அதனால் வீரியம் சிதறி விரவின தடாக நீரை) அவ்வரசன் மனைவியாகிய குணவதி தாகமிகுதியாலருந்த அதுவே கருப் பமாய் நகரமடைந்த பின்புதித்த க்ணனென்பவன் மஹா பராக்கிரம சாலியாய் வளர்ந்து பரமசிவத்தை நோக்கிந் தவஞ்செய்து அகண்ட வரப் பிரசாதியாய் விஷ்ணுவும், பிரமனும் நடுங்கத் திரிபுவனங்களையும் வென்று ஏகசக்கி ரேசுவரனு யரசாக்ஷி நடாத்திவருகையில் ஓர்நாள் வேட் டையாடி மீண்டு அயர்வுயிர்ப் பானுய்தங்கிய அவ்வனத்திற் கபில முனிவரைக்கண்டு சம்பாஷித்து அவரால் திருப்தியா யிடவுண்ட அவ்விருந்து சிந்தாமணியா லமைத்திட்டது கண்டு வியந்து அவாமிகுதியாலதனைக் கேட்டதன் மேல் அஃது விண்டுவி னிடத்திற்பெற்ற இந்திரனால் தனக் கரு மையாகக் கிடைத்த வரலாற்றினைக்கூறி அம்முனிவ ரதற் கொவ்வாமையாய் மறுத்துரைத்தவுடன் சற்றும் யோசியா மல் அதனைப் பலவற்காரமாய்க் கவர்ந்து சென்றபின் மிகவு மவர் மனம்வருந்தி யவனுயிர்க் கிறுதியாம்படி செய்தவேள் வியினின்றும் இரத்தினகிரீடம் குண்டலம் தோளணி முத் துவட முதலிய ஆபரணங்களோடு, தேசார்ந்து வனப் பெய்தி யிருக்கின்ற திருவுருவமும் வேழமுகமும், கருணை பொழிகின்ற திரிநேத்திரங்களும் மோதகம், தாமரைமலர், மழுவாயுதம், பூமாலை. இவற்றை ஏந்தின நான்கு திருக்கரங் களும் அடியார்க ளிதயகமலத்தி லுலாவுஞ் சேவடி களும் சித்தி, புத்தி, சமேதமாக சிங்கவாகன ரூடராய் விநாயக மூர்த்தி எழுந்தருளினதுகண்டு அம்முனிவரவரை மகிழ்

வாக வோராதனத்திருத்திப் பூசித்திருக்கையில், அன்றிர வில் துற்கனவுகண்ட கணராஜன் உடனே எழுந்து சேனு சமேதனுய் அக்கபிலமுனிவ ராச்சிரமத்தை நெருங்கின சமயத்தில் சித்திதேவியரால் சிருட்டிக்கப்பட்டபூதப்படை களும் அரசன்படைகளு மொன்றோடொன் றெதிர்த்துப் போர்செய்கையில் அச்சித்தி தேவியார் திருவருளால்வந்த இலக்கனென்னு மோர்மகா வீரன் அச்சத்துரு தளத்தை நாசஞ்செய்து அந்த கணனுடைய புத்திரர்களான சூல பாணி, சுலபனிருவரையும்கைப்பிடியாகப்பிடித்துச்சென்று சுவாமி யிடமாகச்சேர்க்க அச்செய்தியறிந்த கணராஜன் அவ்வாச்சிரமத்தை யணுகி யங்கெழுந்தருளியிருந்த கணே சரது நெற்றி புஜம் பாதங்களிற் பாணப்பிரயோகஞ்செய்ய அதுபொருட்டா யக்கடவு ளாதனம் விட்டெழாமல் திரு நோக்கஞ் சாத்தற்கெழுந்த மழுவாயுதத்தா லவன் யடிந் தனனுக, மறுநாள் அவன் பிதாவான அபிசித்தரசன்வந்து பிரார்த்தித்தவாறு அவன் பௌத்திரர்களை விடுத்து அவ் வரசனுல் தந்த சிந்தாமணியை கபிலமுனிவர் பிரார்த்தித்த வாறே விநாயகமூர்த்தி தரித்தருளினர்.

சிந்தாமணியைத் தரித்தருளினதாற் சிந்தாமணி விநா யகரெனவும், கபிலராற் பூசிக்கப்பட்டதனுற் கபில விநா யகரெனவும்; மலர்ந்த திருமுகத்தோ டெழுந்தருளின தாற் சுமுகரெனவும், திருநாமங்கள் வழங்கலாயின.

NO. 5.

விக்கினராஜவிநாயகர்.

விக்கினராஜர்.

ஆரணத்துறைநாடிபோகிபதநச்சியாற்
றபிநந்தனன்வேள்வியை
யடற்காலரூபியிந்திரனேவலாற்
சென்றழித்துவேறுலகிலிடர்செய்
காரணத்தால்வரேணியன்மனைவிபுட்
கைகனிலினீன்றிட்டமகவைக்
கணத்தினின்மறைத்தவண்சேயாய்
விளங்கவக்கங்குலிற்கண்டுவெருவி
வாரணமுகத்ததென்றோர்மடுக்கரை
வைக்கவந்தெடுத்திடுபோர்சுவ
மாமுனிவளர்க்குநாட்கிரவுஞ்ச
னுருவாய்வரவூர்ந்துகூற்றின்மேலா
மாரணனெனச்சொலவ்விக்னனை
யடக்கியருளினவாற்றினவனுமமு
மரீஇவிக்னராஜரென்றுலகெலா
மினிதேத்தவருபிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

ஏமவதியெனு நகரத்ததிபனுன அபிநந்தன மஹாரா ஜன் சுவர்க்காதி போகங்களைநாடி யாகம், நடத்திவருவதை நாரதரானுணர்ந்து மனக்கலக்கமுற்ற இந்திரன் அதை

யழிக்கும்படி காலரூபியெனும் விக்கினனையேவ அவன் சென்று அவ்வரசன் செய்கின்ற வேள்விமட்டில் விடாமல் உலகெங்கணும் உலாவி ஆங்காங்கு நடாத்தும் தலைவருடன் வேள்விகளை யழித்துவருங்கால் அவன் கொடுமைக்காற்றாது தேவர்முதலானோர் வேண்டுதலால் கணேசர் அரிய தவங்களைச் செய்தவரேண்ய ராஜனுக்குப் பிராணநாயகி யெனும் புஷ்பகையீன்ற புத்திரனை தட்சணமே மறைத்து வேழமுகத்துடனோர் குழந்தையாக வெழுந்தருளலும் அது கண்டதாயும் தந்தையும் வெருவினர்களா யாக்கியாபித்த வா றேவலாளர் தோளிலேந்தி மார்போடணைத்தன் றிரவிற்றானே யந்நகர்க்கடுத்த மடுக்கரையிற் றழையின்மீதே கிடத்திச் சென்றபின்பு அங்கு பிராதசந்தியை நடத்தவந்த பார்சுவமுனிவர் அத்தெய்வீகக் குழவியைக்கண்டு அகமகிழ்வா யெடுத்து வீரியவற்சலையெனுந் தமது தேவிகையிற் கொடுக்க ஏந்தின அவ்வுத்தமியுங் கொங்கைகளிற் சுரந்த பாலூட்டி யன்போடு வளர்க்க வளர்ந்து வருநாளில் சவுபரி முனிவர் பத்தினியாகிய மனோமயையைக் கிரவுஞ்சனென்னுங் காந்தருவராஜன் கண்டுமோகித்து வந்து கரத்தைப் பற்றி நிற்குஞ்சமயத்தில் ஸ்நானமாடி ஆச்சிரம மடைந்த அம்முனிவர் சினந்து அவனை மூடிகமாகச்சபிக்க அவனும் அவ்வாறே மூடிகமாகி உலகமெங்குந்திரிந்து கடையிற் குழந்தை கணேசர் வீற்றிருந்தருளும் பார்சுவமுனி யாச்சிரமத்திற் பிரவேசித்து வேதிகைக்குண்ட முதலானவைகளைத் தோண்டிப் பறிக்கக்கண்டு அம்மூடிகத்தைப் பாசத்தைவீசிப்பற்றி யூர்தியாகக் கொண்டருளினர். அவன் சின்

ளில் வந்த இந்திராதி தேவமுனிகணங்களுக்கு பிரகா சத்திருமேனியும் மிகவும் சுந்தரமான வேழமுகமும் நீண்ட துதிக்கரமும் பாசம் அங்குசம் தாமரை மழு இவைகளை யேந்திய சதுர்ப்புஜங்களும் நுதல்விழியும் இரத்தினகிரீடம் குண்டலம் வாகுவலயமணிந்து மார்பிற் சர்வாபரணமும் தாமரைபோன்ற உபயதிருவடியும் விளங்கத் தரிசனந்தந்த வுடன் அவர்களும் பணிந்து பலவாறேத்தித் தங்களுக்குற்ற விடுக்கண் சகிக்க முடியாமையை விண்ணப்பஞ் செய்து கொண்டதன்மேல் கிருபைசுரந்து உடனே தமது மூடிக மீதூர்ந்து ஆகாயத்தை யளாவிய ஜடைமுடியும் கடைவா யிற் கோரைப்பற்களும் பார்க்கபயங்கரமான ஏனைய வடி வங்களுடன் மஹாபராக்கிரமமுயுலவும் விக்கினனை நாடிச் சென்று தமதங்குசத்தை யேவி யவனைத் தருவித்தவுடன் அவன் பற்பலவிதமான ஜாலங்களாற்றொடுத்த போரனைத்து மொழித்து ஓர்வேலெடுத்தேவ அதுகண்டவனஞ்சிச் சரண் புக அவனுக்கிரங்கி சர்ச்சனுளிடத்தணுகா திருக்கக் கட்ட ளையிட்டு அவனை விட்டு உடன் வந்திருந்த தேவ ரிஷிகணங் கட்கருள்வழங்கி மேற்குறித்த தமது தாயர் தந்தையர்க் கும் வேண்டினவரங்களை நல்கி சிவபுரத்திருக்குந் தம துலகை யடைந்தனர்.

விக்கினன் கடவுட்டிரு நாமத்தோடு தன் பெயரு மொன்றி வழங்கும்படி பிரார்த்தித்தவாற்றால் விக்கினராஜ விநாயகரெனத் திருநாமம் வழங்கலாயது.

பாலசந்திரர்.

இதமுறநடித்திடுதிலோத்தமைதன்
முலைகாணவெழிஞடியிச்சைபூண்டங்
கிளைநமன்விடுத்தசுக்கிலமதிலுதித்த
வவ்வெறுழ்கோரவனலாசுரன்
பதுமன்படைத்தவகிலத்துள்ள
வுயிர்களைப்பற்றிப்புசித்தமரர்வாழ்
பதநாடிவருதலோர்ந்தவணிரிந்
தண்டரோர்பாற்குழீஇப்பெரிதேத்துமத்
ததிபிரமசாரியாய்வந்தஞ்சலுதவ
வங்கட்டகுவனுறலுமவனைத்
தமதுமெயுருக்கொண்டெடுத்துள்
விழுங்கமேற்றணல்மேனியெங்கும்வீச
வதுபொருதகிலமதழுங்கசுர
ருபசாரமாற்ருதுமுனிவரறு
காற்குளிர்மையாய்ப்பாலசந்த்ர
ஞமங்கொண்டருட்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

ஓர்தினம் இயமதருமராஜன் நிறைந்தகொலுச் சபையில் வீற்றிருக்கையில் நாட்டியஞ் செய்திருந்த திலோத்தமைக்கு மேல் வஸ்திரம் நழுவி வெளித்தோன்றின அவள்

NO. 6.

பாலசந்திர விநாயகர்.

கொங்கைகளின் சுந்தரத்தைக்கண்டு அவன்மனம் காமத்தாலுருகி கலிதமான வீரியத்துதித்து திரிலோகங்களையும் வருத்தின அனலாசுரனுக்கஞ்சி விஷ்ணு முதலிய தேவர்கள் பிரார்த்திக்க அவர்கட்கிரங்கி மான்றோல்முடிந்த பூணூல் மார்பிற்றுலங்கப் பிராமண குலத்திற் பிறந்த பிரமசாரியைப்போலக் கணேசரெதிரில் வரக்கண்டு அத்தேவர்கள் சாஷ்டாங்கமாகப்பணிந்து தங்கள் துன்பத்தை விண்ணப்பஞ்செய்ய அதற் கஞ்சாதீர்களென்று அபயாஸ்தம் தந்து நிற்குஞ் சமயத்தில் கண்டோர் பயந் தோடும்படியாயவண் வந்த அவ்வசுரன் முன்பாக கத்தி கேடகம் வேல் வில் இவைகளைத்தாங்கிய சதுர்ப்புஜங்களும் தேசார்ந்த திருமேனியும் துதிக்கை பொருந்தும் வேழமுகமும் நுதல் விழியும் உபய திருவடியும் கிரீடகுண்டலம் தோளணி முத்துமாலை முதலிய சர்வபூஷணமும் திருமார்பிற் கொன்றைமாலையுடன் பொலிவுறாஉம் தமது நிஜவுருவங் கொண்டருகிற்சென்று அவனைத் துதிக்கரத்தினு லெடுத்தோர் கவளமாய் விழுங்கியதனு லக்கடவுட்டிருமேனியி லுண்டான வெப்பம் சராசரங்களையும் பீடித்து நிற்கையில் அதனைத் திரிமூர்த்திகளாலுந் தணிக்கத் தணியாது நாற்பத் தெண்ணுயிர முனிவர்கள்செய்த அறுகார்ச்சனையாற் றணிந்த பின்னர் அவரவர்கள் விழைந்தவரங்களை நல்கி தமது திருவுருவத்தைக் கரந்தருளினர்.

காலன் வீரியத்துதித்த அனலாசுரனை விழுங்கிய காரணத்தால் காலானலப் பிரசமரென்றும், பால வயதுடன் வந்து எல்லா வுயிர்கட்கும் வருத்தி நின்ற வெப்பம் நீங்க சந்திரனைப்போலக் குளிர்ச்சி தந்தமையால் பால சந்திரரென்றும், திருநாமம் வழங்கலாயின.

NO.7.

கஜானனர்.

ஈடிலாநான்முகன்கொட்டாவி
வருசிந்துராசுரற்கிஞ்சியிமையோ
ரேத்தவுமையம்மைகருவுற்றவவுணன்
சதியினெய்துசிரமின்றிவெளிவந்
தாடலேறழகரர்ச்சனைபுரி
மயேசனமரசர்கோன்யானைத்தலை
யங்கேற்றுவிகடரென்றணிகயிலை
தன்னிலரியாதனத்தமரர்சூழப்
பீடுபெறவீற்றிருந்துழிவலிதினிற்
போர்க்கெதிர்ந்தவப்பிரபலவசுரன்
பெற்றுளவரத்தின்முடிபாய்ந்து
வான்றுருவுமோர்பேருருக்கொண்டுவெண்டா
ரேடவிழ்கடுக்கைக்கியற்படவவற்
பற்றயின்றேய்வையிற்குழைத்தங்
கெழினுதற்சிந்துரமதாயணி
கஜானனரெனும்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

முன்னொருகாலத்தில் பிரமதேவன் கொட்டாவிவிட அதினின்றுந் தோன்றின வோரசுரன் புத்திரனெனு முரிமையால் தனக்குப்பெயரும் இடமும் நியமிக்கும்படி கேட்க அவ்வாறே சிந்துரனெனும் பெயராய் மூவுலகத்து ளிச்சித்த விடங்களி லிருக்கவும் எதிர்த்தவர்களை கையார்த்

றழுவினவளவி லிவர்ளிறக்கவுமான பலவரங்களைப் பிரமன் கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு பூலோகத்திற்கு வந்த பின் தவமின்றிக் கிடைத்ததால் ஐயங்கொண்டு சோதிப்பானாகப் பிரமனை யடைந்து தழுவச்செல்ல அதை பிரமன் கண்டு கோபித்து விநாயகரால்வனழியத் தக்கதாகச் சபித்துக்கரந்து விஷ்ணுவிடத்தில் தன் குறைசொல்லி நிற்கையில் அச்சிந்துரன் அவ்விஷ்ணுவைத் தேடிவந்து யுத்தத்திற்கழைக்க அவர் இதவார்த்தையாடி உருத்திர மூர்த்தியிடஞ் செல்லும்படிசொல்ல அவனும் அவ்வகையே கைலையைநோக்கிச் சென்று அங்கு உருத்திர மூர்த்திகள் யோக நிலையிலிருந்தனராக அவர் தேவியாரைகண்டு காமுற்றெடுக்க எண்ணங்கொண்டு நெருங்க அதையறிந்தவர் முறையிட உருத்திர மூர்த்திகளும் யோகம்விட்டெழுந்து அவனெதிர்செல்லச் சிந்துரன் அவரைத்தழுவ நெருங்கும்போது கணேச ரவ்விருவ ரிடையிலோரந்தணராய்த் தோன்றி நின்று தமது மழுவை நடுவேநாட்டி அவ்விருவரையு நோக்கி மல்லயுத்தஞ் செய்வதை விட்டு வேறுயுத்தஞ் செய்மின்களெனச்சொல்ல அவ்வாறே யவ்விருவரும் யுத்தஞ்செய்யுங்கால் சிந்துரன் மீறி முன்போற்றழுவப் போகையில் அவனைப்போக வொட்டாது மழுதடுக்க அதுபோதில் உருத்திர மூர்த்திகளோடு யுத்தஞ் செய்யலாகாதென்று விநாயகராகிய அந்தணரும் அச்சுறுத்த அதுகேட்டவனஞ்சியகன்ற பின்னர் உமாதேவி யவ்வந்தணரைப் பார்த்து நீராரென அவர் தமது திருவுருக்காட்டி இனிசிந்துரனை யழிக்கும்படி குமாரனாக உமது திருவயிற்றுவருவோமென்

றருளிப்போயினர் பின்பு பிரமன் முதலியோர் சிந்துரன் செய்யுங்கொடுமைக் காற்றாராய்க் கணேச மூர்த்தியைப் பிரார்த்திக்கத் தாம் கஜானனராயவதரித்துச் சிந்துரனைக் கொல்வதாக அவர்களுக்குத் திருவாக்கருளி உமாதேவி யார் திருவயிற்றில் கருவாகப் பிரவேசித்து வளர்ந்து வரு நாளில் அவரக்கருவாலுண்டாகிய வெப்பந்தணிய பூமியில் பரியலி என்னும் வனத்தில் உருத்திர மூர்த்திகளோடு சென்று அவணமைத்த இரத்தின மண்டபத்தில் வசித் திருக்கும்நாளில் மயேசுரனென்னு மோரரசன் சிவபக்தியி லும் நீதியிலும் சிறந்தவனு யரசுபுரியுங்காலத்தில் பிரகஸ் பதி தேவர் அங்குவரக்கண்டு அவ்வரசனவரை வணங்கி நிற்க அதற்கவர்மகிழ்ந்து உன்றலே தேவர்முனிவர் முதலிய யாவராலும் வணங்கப்படுவதாக வென்றாசீர்வதித்துச்சென் றனர் பின்பொருநாள் அவ்வரசன் தன்னகரை விட்டுசேனை களோடு செல்ல அங்கு நாரதர் எதிராகவரக்கண்டு அவன் வந்தனைவழி பாடுசெய்யாமையைக்குறித்தவர் சபித்தவாறே யானைக்குழாத்துள் கஜமுகாசுரனென அவனுதித்திருக் கையில் ஓர்நாள் அம்மண்ட பத்தைக் கோட்டினால் அவன் முட்டியெடுத்து நிலத்தில் விழத்தள்ளலும் அம்மையஞ்ச உருத்திரமூர்த்திகள் சூலத்தாலவன் தலையைத்துணிக்க அப்போது அவன் சிவாயநமவென்று சொல்லி நிலத்தில் வீழ்ந்தது கண்டவரிரங்கி அவனுக்கு சாரூபபதமளித்து அதுமுதலாய் கிருத்திவாசரெனஅவன் தோலையரையி னுடுத்தி சிரசைவைத்து பூஜித்துவந்தனர் அதுநிற்க அச்சிந் துரன்எல்லாவுலகங்களையும்அகப்படுத்தித் தனக்கெதிரில்லை

யென அகங்கரித்திருக்கும் நாளில் அசரீரியால் தனக் கிறுதிசெய்ய கணேசர் உமாதேவியார் திருவயிற்றில்வளர்வ தாகச்சொல்லக்கேட்டு அங்குசென்றவர் சுழுத்தியிலிருக் குந்தருணமறிந்து வாயுவடிவாயுண் ணுழைந்து அக்கருவின் சிரஞ்சக்கொய்து விந்தமலைக்கப்பித்த நருமதை நதிதீரத்தில் வைத்துச்சென்றனன் பின்னர் அக்கரு சிரமிழந்தும் அவ் வாறே வளர்ந்துவர உமாதேவியாரும் பத்துத்திங்களு நிரம்பி கைலைக்குச் சென்றனராக அங்கு கணேசர் பஞ்ச முகத்தோடும் சித்திபுத்தி ஸமேதரா யுமையம்மையார்க்கு தரிசனைகொடுத்து நாமுமக்குப் புத்திரராயினோ மென் றுரைத்தருளி மறைந்தவுடன் மஹாதேவியார் மயங்க அங் கே சிரசில்லாததோர் குழந்தைபிறந்திருக்கக்கண்டு அம்மை வருந்திநிற்க உருத்திர மூர்த்திகளை மற்றைத்தேவர்களும் வந்துகண்டு கவலைமிக்காராகி அவர்கள் காணவேண்டி ஓரா சனத்தின் மீதமர்த்தினவுடன் அக்குழவி தமது சிரமிழந்த காரணத்தைக்கூறி உருத்திரமூர்த்திகளாற் பூசித்திருந்த யானைத்தலையை தாமேவரச்செய்து தமது திவ்விய வுட லோடு சேர்த்தருளி கஜானனராயெழுந்தருளி யிருக்கும் சமயத்தில் வந்தமர்க்கழைத்த அவ்வசுரனை விஸ்வரூபங் கொண்டு துதிக்கரத்தாலெடுத்து சாந்தாகக் குழைத்துத் தமது மத்தகத்திற் பரிமளிக்கப்பூசித் தேவர்க ளிடுக்கண் தொலைத்தருளினர்.

NO 8.

மல்லாலரெனவந்த மயூரேசர்.

உரியநான்மறையைக்கவர்ந்து
    கமலாசுரனெளித்தபின்பிரமனுறுக
ணொழிப்பமல்லாலனெனும்வேதி
    யோனுய்ச்சுருதியோதிப்பலுமானுக்கரால்
விரவுமெண்டிசையினுளமுனிவர்களி
    கொளவேவிரித்திடவுணர்ந்தவவுணன்
வெம்போர்க்குவரவேறுருக்கொண்டு
    வேள்வியெழுவிறன்மஞ்ஞையூர்ந்துசென்று
பாவையினடர்ந்தசேனையைப்புத்தி
    தேவியமைபாரிடக்கணமாய்த்தன்மேற்
பன்மாயவமருடற்றவுணர்கோனைக்
    கழுமுளாற்றுண்டுபடவீழ்த்தியத்
திரிசந்தியாங்களத்தயனிடக்கவிழ்
    கமண்டலநாமநதிதீரமாத்
திருந்துமணிநிலயமிடைமாயூர
    நாதராய்த்திகழ்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

முன்னொரு கற்பத்தில் பரமசிவம் திருவாய்மலர்ந்த ருளிய வேதாகமபுராணங்களைப் பிரமதேவன் புத்தகங்க ளாக வெழுதி நிதமுமவற்றை யர்ச்சித்துவருகையில் தேவர் களும் அசுரர்களு மொருவரை யொருவர்பகைத்து நெடுங்

காலம் போர்செய்தபின் தேவர்கள் வேதமந்திரங்களைப் படைகளாக்கி யவற்றை பிரமாஸ் திரத்தோடுங்கூட்டிப் பிரயோகிக்க அதனால் அசுரர்கள் பயந்து சங்காசுரனிடத் தில் தங்களைத்தேவர்கள் வென்றிடச் சாதினதையும் மற்ற வர்கள் முயற்சித்த தந்திரத்தையுங்கூறி முறையிடலும் அவன் தம்பியாகிய கமலாசுரனைக்கொண்டு அவ்வேதபுத்த கங்களைக் களவாயெடுத்து வரச்செய்து கடற்கு ளொளித் துவைத்தனன் யோகந்தெளிந்த பிரமன் புஸ்தகங்களைக் காணாமல் மனவருத்தமுற்று விஷ்ணுவிடம் சென்று அவர் யோகநித்திரை யிலிருப்பதுகண்டு மீண்டு கைலாயத்தில் சிவபெருமான் சன்னிதானத்தையடைந்து தன் குறைக ளைச்சொல்லி முறையிட்டதன்மேல் அவர் உன்வேதபுத்த கத்தை விண்டு சிலகாலத்திற்குள் தருவித் துதவுவரென்று சொல்லக்கேட்டு பிரமனாற்று தழுது நிற்க அதுகண்ட பெருமானும் திருவுளமிரங்கி ஆக்கியாபித்த பிரகாரம் பிரமன் கணேசமூர்த்தி ஏகாக்ஷரமனுவைப் பத்தியோடும் உபாசித்துவருகையில் அக்கடவுள் பிரசன்னமாகி அஞ்சலி தந்தனுக்கிரகித்து அப்பொழுதே மல்லாலரென்னும் பெய ரையுடைய அந்தணராகி அளவற்றமாணுக்கர்கள் புடை சூழ நிர்மித்த வேதப் புஸ்தகத்தோடு சுந்தராச்சிரம மடைந்து அங்குள்ள முனிவர்கூட்டங்களுக்கு அனுக்கிர கித்து அவற்றைப் பரவச்செய்துவருகையில் அஃதுணர்ந்த

கமலாசுரன் யுத்தத்திற்குவர சுவாமிகளும் சதுரங்கசேனை களையும்படைத்து மல்லாலராயிருந்த அவ்வுருவத்தினின்று மாறிப் பத்துதிருக்கரங்களும் பருத்து நீண்டதிருமேனி யோடும் யுத்தத்திற்கெழுந்தருள அன்றைய யுத்தத்தில் கமலாசுரன் ஆற்றுதோடி மறுநாள்வர சுவாமிகள் சுந்த ராச்சிரமமுனிவர்கள் வேள்வியிலுதித்த மயின் மீதாரோ கணித்து மயூரேசராய் போர்க்கெழுந்தருளுகையில் புத்தி தேவியார் தாம் யுத்தத்திற்குச் செல்வதாக சுவாமியிடத் தில் அனுக்ஞைபெற்று அகண்டசேனைகளையும் ஐம்பத்தா றுயிரம் படைத்தலைவர்களையும் படைத்தனுப்ப அவர்க ளவ்வசுரனோடு யுத்தஞ்செய்து பின்னிடலும் அதுகண்ட அத்தேவியார் மேலும் அளவற்ற சேனைகளோடு இலாப னெனுமோர் மஹாவீரனையும் சிருட்டித்தனுப்ப அவனும் சென்று அவ்வவுண சேனைகளோடு ஆறுநாள்வரையி லிரவு பகலாப் பெரும்போர்செய்து அவர்களை யொழித்து கமலா சுரனையும் அயர் வுறத்தக்கதாக வாட்டினபின்னர் அவ்வ வுணன் இலாபனுடைய சேனைகளை மோகனுஸ்திரத்தால் மூர்ச்சிக்கச்செய்து மறைந்துவிடலும் அப்போது இலாபன் கணேசரைப்பிரார்த்தித்து தன்சேனைகளை எழுப்பிக்கொண் டு சுவாமிகளிடஞ்சேர்ந்து பலவரங்களைப் பெற்றவனிருக்க மயூரேசரும் அவ்வவுணனோடெதிர்த்து யுத்தஞ்செய்கை யில் இலாபனுல் அவ்வசுரனேறி யிருந்த குதிரையைக்

கொன்று பார்தசாரியர்க்க கமலாசுரன் மாயவித்தையினுல் தனதுருபுத்தை மறைத்து ஆகாயத்தெழும்பி யகோரமான போரிடும்போது பெருமானும் தமதுகையிலிருந்த பாசத்தை ஏவி அவனை நேரில் தருவித்து சில புத்திகளைக்கூற அவ்னதனைக் கேளாது சுவாமிகள் மீதோர் தண்டாயுதத்தை ஏவ அத்தண்டத்தைப் பெருமானும் கரத்தாற்பற்றி அவ்வசுரன் மார்பு பிளக்கத் தாக்கினதன்மேல் உதிரப்பெருக்கெடுத்து அதில்நின்றும் அனந்த அசுரர்களுதித்து யுத்தஞ்செய்ய அதுகண்ட இலாபனும் சித்திபுத்தி தேவியர்களைப் பிரார்த்திக்க அவர்களங்ஙனே படைத்தனுப்பின ஒன்பதுகோடி பூதவீரர்களும் இரண களத்திற்கு வந்து அங்கிருந்த அசுரவீரர்களையும் சேனைகளையும் கமலாசுரனுதிரத்தையும் வகையறவிழுங்கி யுண்டபின் கமலாசுரன் கண்டு தெய்வப்படைகளாற் போரிட மயூரேசரும் அவ்வவுணனைத் தமது சூலத்தை ஏவி மூன்று துண்டமாக வீழ்த்தியருளினர் அந்த யுத்தகளம் திரிசந்திக்ஷேத்திரமெனவழங்கலாயின.

அது தினத்தில் மயூரேசரைப் பிரமன் பூஜிக்கையில் வைத்த கமண்டலம் கவிழ்ந்தநீரோடிக் கமண்டலநதியெனும்பெயராய் வழங்குகின்றது அந்நதிதீரத்தில் பிரமனுற்சுமைத்த ஆலயத்துள் மயூரேசர் மூலட்டானத்தெழுந்தருளினது கண்டு சிவபெருமான் விஷ்ணுமுதலிய சமஸ்த தேவர்களும் அவ்வாலயத்து ளினிதமர்ந்தருளினர்.

கணேசர்.

கணேசர்.

ஊற்றமார்தவபலத்தாற்பலியெனுந்
திரிபுரனும்பர் துயருறவாட்டலா
லுற்றபதம்விட்டவர்களிமயத்தினெடு
நாளொளித்திடருழந்துமிகவும்
போற்றியைங்கரவருளெனக்கலாதர
ராய்ப்பொருந்துதானவனேருறீஇப்
புரிசடையர்பூஜிக்குமணிமூர்த்தமதை
யவன்பொன்றுசூழ்ச்சியின்வேண்டலாய்ச்
சாற்றவங்கவனும்வெம்போர்செயக்
கைலையைச்சாரவதுகண்டபரமன்
றனியோகுபுரியவவர்நுதல்வந்தோர்
மனுவினைத்தழையன்பினேடுணர்த்தி
யாற்றல்சாலவ்வவுணனனிகத்
தொடுழல்புரமுமட்டருளுவித்துவானே
ரவலங்களைந்தைமுகமருவும்
கணேசராயவிர்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

திரிபுரனெனும் பலியவுணனுக்கஞ்சிய தேவர்கள்கூடி நெடுநாள் பிரார்த்தித்ததன்மேல் பிறையணிந்த சொர்ண கிரீடமும் நவரத்ன குண்டலமும் புஜகவசமும் அரைஞா ணும் மருப்பிற் சுற்றியிருக்கின்ற துதிக்கையும் பாசம்

அங்குசம் மழு தாமரைப்பூ வென்னு மிவைகளைத் தரித்திருக்கின்ற நான்கு திருக்கரமும் பேரொளிவீசும் திருமேனியுமான கோலத்துடன் அவர்கட்குப் பிரத்தியக்ஷமாகி அபயஹஸ்தம்தந்து மீண்ட விநாயகக்கடவுள் அவ்வசுரனிடத்தில் தேவி சமேதராய் பிராமண வடிவங்கொண்டு கலாதரரெனும் பெயருடன் சென்று அவனை வஞ்சகமாகப்புகழ்ந்து சிவனிடத் திருக்கும் சிந்தாமணி விநாயகரை யழைப்பித்துத் தரவேண்டுமென்று யாசித்து அவ்வாறே செய்விப்பதா யவனால் வாக்குத்தத்தம் வாங்கிக் கொண்டெழுந்தருள உடனே யவ்வவுணன் அதுபொருட்டாய்க் கயிலையைநோக்கி யுத்தத்திற்குச் செல்ல அதனை யுணர்ந்த சிவபெருமான் தியானிக்க அவரது திருமுகத்தினின்றும் ஐந்து முகங்களும் பத்துக்கைகளு முடையவராகி முத்துமாலைகளும் இரத்தின பரணங்களும் விளங்க கணேசரெனத் தோன்றி அப்பலி யசுரனை சங்கரிக்கும் உபாயமுதலியன அனுக்கிரகித்து அங்கெதிராகத்துதித்து நின்ற விஷ்ணு முதலியோர்க்கும் வேண்டும் வரங்களை நல்கி தமது திருவுருவத்தைக் கரந்தருளினர்.

கணபதி

கணபதி.

எழின்மிகுங்கைலையுய்யானத்தொர்
மண்டபத்திறைவியொடுமீசனோர்நா
ளெய்தியச்சுவரினுறுமேழ்கோடி
மனுவுளங்கேற்றமார்குடிலைநாப்ப
ணுழுவலாய்ப்பிடியும்பல்புணர்பாவனையை
யவர்களுய்த்தநோக்காலெழின்மிகு
மொருவேழமுகமுடனுதித்துக்கணங்
கட்கெலாந்தலைமையாகியும்பர்
தொழுதேற்றிடற்கருள்சுரந்தவர்களி
னலறத்தோன்முகாசுரன்மார்பிறத்
துணிநுனிமருப்பேவுபின்னுமாகுரு
வொடத்துன்னலன்மன்னவூர்ந்து
பழியுற்றமாயவற்கரவுருவகற்றி
யொளிர்பரிசன்யபீடவெள்ளிப்
பருப்பதமுதற்கோபுரத்தருகமர்ந்த
கணபதிபிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

ஒரு காலத்தில் இந்திரனோடு போருக்குச்சென்ற அசுரேந்திரன் தோற்றோடிவந்து மானம்வருத்த அதனாலவனை வெல்லும் பொருட்டோர் சூக்ஷியைநினைத்து விபுதையெனும் அசுரகன்னிகையை மரகதமுனிவரிடத்திற் சென்று

அவரை வனுவினலேந்தோர் பிள்ளையைப்பெற்று வரும்படி யனுப்ப, அவளுமவ்வாறே யம்முனிவரிடம் போய்த் தன் னழகைக்காட்டி யவரைமயங்கச் செய்வித்து யானையுருக் கொண் டிருவரும் புணர அப்பொழுது யானைமுகத்தோடும் கஜமுகாசுரனென்பவன் பிறந்தான் அவன் பரமசிவனை நோக்கித்தவஞ்செய்து இறவாவரம் பெற்று மூவுலகத்தினும் தன்னாணை செல்லவும் தேவர்களெல்லாம் தன்னேவல்கேட் கவும் அரசுசெலுத்தி வருநாளில் தேவர்களை தன்னிடத் திற்கு வருந்தோறும் முக்காலும் தங்கள் தலையிற் குட்டிக் கொண்டு இரண்டு கைகளாலு மிரண்டு செவிகளையு மாறிப் பிடித்து குந்தியெழுந் திருக்கும்படியாகவும் விதிக்க அவ் வந்தனத்தையும் நடத்திவருந் தேவர்கள் ஒருநாள் அத் துன்பத்தைச் சகியாதவர்களாய்க்கயிலாயத்திற்குச்சென்று சிவபெருமான் சன்னிதானத்தில் முறையிட அதற்கிரங்கி அக்கஜமுகனைச் சங்கரிப்பிப்பமென அனுக்கிரகித் தனுப் பிவிட்ட பின்னர் ஓர்நாள் அக்கயிலைச்சாரலி லிருக்கும் உய் யானத்திற்கு பார்வதியாருடன் சென்று அதின் மத்தியி லிருக்கும் ஓர் மண்டபத்தில் திருவோலக்கம் எழுந்தருளி யிருக்கும் போது அவிடத்திய சுவர்த்தலத்தி லெழுதி யிருந்த மந்திர வடிவங்களான சித்திரங்களுள் பிரணவாகர மாக விருந்த ஆண்யானை பெண்யானை வடிவத்தோடும் புணர்ச்சிசெய்திருக்கும் பாவனையாக வெழுதி யிருப்பதை

உமாதேவியார் பார்க்கச் சிவபெருமானும் பார்த்தருள அதனிடத்தினின்றும் யானை முகத்தோடும் விநாயக மூர்த்தி திருவவதாரஞ்செய்து மாதாபிதாக்களை வந்து வணங்க அக்குமாரனை எடுத்து மடிமீதிருத்தி எல்லாக் கணங்களுக்கும் தலைமை பெற்றிருந்து கிருபை வழங்குக அதனால் யாவரும் கணபதியென்று சொல்லுக எவ்வகைப்பட்ட கருமங்களினும் யாவரும் உன்னை முன்னதாக வணங்குக கஜமுகாசுரனை சங்கரித்து தேவர்களைக் காத்தருள்க என்று திருவாய்மலர்ந்து அவணீங்கிக் கயிலாயத்திற்குச் சென்று முகவாய்தலில் அமர்த்தினது முதலாங்கெழுந்தருளியிருக்குங்காலையில் தேவர்கள் வந்து வணங்கி தங்கள் துயரத்தை நீக்கியருள வேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்றலும் சிவபெருமான் கட்டளைப்படி பூதகணங்களுடன் அசலனென்னும் பூதசேனாதிபதி தோளின்மீ தாரோகணித்து மதங்க நகரஞ்சென்று அவண் வந்தெதிர்த்த கஜமுகாசுரன் வில்லைக் கதாயுதத்தாற் கண்டித்து சேனைகளையெல்லாம் மழுவாயுதத்தாற் சாம்பராக்கினபின் அவன் பெற்றிருக்கும் வரத்தையோசித்து தமது வலக்கோட்டின் முனையை யொடித்தேவலும் அதனால் அவன்மார்பு பிளக்கப்பட்டு மேருகிரி யடியோடே பெயர்ந்து விழுந்ததுபோல நிலத்தில் வீழ்ந்தபின்னர் அக்கஜமுகாசுரன் மலைக்கு நிகரானமேவார் பெருச்சாளிவடிவங்கொண்டு யுத்தத்திற்குவர சுவாமிகளும்

ஒடித்த கொம்பினையோ ராயுதமாகத் தமது திருக்கரத்தி லேந்தி அம்மூடிகத்தை அசைவறப்பிடித்து முதுகிலாரோ கணித்தருளினர். அந்த யுத்தகளத்தில் கணபதி மூர்த்தியும் சிவபெருமானது இருபத்தைந்து மூர்த்தங்களு ளொன்றாகிய சிவலிங்கப்பிரதிஷ்டை" செய்து பூஜித்தனர் அது தான் கணபதீச்சுரமெனப்படும் பின் கணேசப்பெருமான் ஆகுவாகனாரூடராய் தேவகணம் பூதகணங்கள் சூழ வடதிசையினைநோக்கி எழுந்தருளி வருகையில் முன்னொருபகலில் சிவபெருமானும் உமாதேவி யாரும் விஷ்ணுவைச் சான்றாகவைத்து கருவிச் சூதாடுகையில் பெருமான் தோற்கவும் பிராட்டி தோற்றதாக விஷ்ணுகூற அம்மை யதற்கு சினந்து சபித்ததுமுதல் அங்ஙனம் குருட்டுமலைப்பாம்பாக ஓராலமரப்பொந்திலிருந்த விண்டுவானவர் அவ்வடிவத்தினின்று நீங்கிப் பழயபடி தெய்வரூபம்பெற்றுக் கணபதி மூர்த்திக்கெதிர்சென்றுநமஸ்கரித்துப்பலவாகத்துதிசெய்த தற்குவந்து கணபதி மூர்த்தி வேண்டினவரங்களை யவர்க்கு வழங்கித்தம்மோடழைத்துக்கொண்டு கயிலாயத்திற்கெழுந்தருள அவ்விடத்தில் தேவர்கள் மகிழ்ந்து கஜமுகாசுரனுக்குத் தாங்கள் முன்னடப்பித்து வந்த தோப்புகரணம் குட்டிக் கொள்ளுதலெனும் வந்தனங்களைச்செய்ய அதற்கு சுவாமிகளும் கருணைசெய்து வேண்டும் வரங்களை நல்கி இவ்வாறு யாவர்செய்யினும் அவர்களுக்குத் தமதனுக்கிரகம் பாலிப்பாமெனத்திருவாய் மலர்ந்தருளினர்.

மகவாகுவுத்த-மயேசர.

மகவாகவந்தமயூரேசர்.

ஏலவார்குழலம்மைதிரிசந்தியென்
நிலங்கிடுகேத்திரத்தமர்ந்தா
றிரண்டாண்டுதவமுஞற்றிடவெண்ணு
கோலத்தினின்பமகவாய்வந்தவள்
பாலூட்டவுண்டதிவிசித்ரவிளையாடல்
பலபுனவச்சிறுவொடாடிப்
பணிகாற்கியர்க்குறுதியுரைசெய்து
காசிபர்பரிந்தவரநல்கிநெடிதாய்
மாலுநான்முகனோடுமிந்திரன்
றன்னையும்வன்சிறையிலிட்டசிந்து
மாநகரடைந்தவன்படையைக்
கணங்களான்மாட்டிவெம்பரசுவீசி
கோலமாரவன்மார்பிடந்தநாள்
வினுதையருள்குழகார்மயூரமூர்ந்த
கொள்கையின்மயூரேசரெனவுலகு
வாழ்த்தக்குலாம்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

மைதல தேயத்தைச்சார்ந்த கண்டக நகரத்தரசனான சக்கிரபாணி யென்பவன் மனைவியாகிய உக்கிரை யென்பவளோடு கூடிவாழ்க்கையில் பிறந்தபிள்ளைகள்யாவும் ஒன்றேனும் ஜீவித்திராமல் உடனுக்குடனே இறந்துவிடுவதை யோசித்து மனவருத்தமுற்றிருக்கையில் அவண் வந்த

சௌனகரிஷியை வணங்கித் தனது குறைகளை முறை யிட லும் அதுகேட்டம் முனிவர் சூரியனுடைய விரதத்தை யோர்மாதவரையி னுபாசிக்கும்படி அதற்குரிய விதியையுங் கூறிற் திருமந்திரங்களையு முபதேசிக்க அவ்வாறே யத்தம் பதிக ளனுட்டித்து வருகையில் சூரிய பகவான் இருபத் தொன்பதாநாள் அவ்வரசனுருக்கொண் டவ்வரசியைப் புணர அவள்வயிற்றினின்றும் முக்கண்ணும் சிவந்த ஜடை யும் சக்கரமும் சூலமுங் கொண்டோர் புத்திர னுதித்து சிந்துவென்னும் பெயராய் வளர்கையில் அவன் இளம் பரு வத்திற்றனே அசாத்திய மான கருமங்களை யெல்லாஞ் செய்யக்கண்ட சுக்கிரனால் வேண்டும் வரங்களைப் பெறத் தக்கதான மேலான மந்திரங்களை யுபதேசிக்கப் பெற்று பரமசிவனை நோக்கி இரண்டாயிர வருட மரியதவத்தைச் செய்ததன்மேல் கயிலாசபதி பிரத்தியக்ஷமாகி விஷ்ணு முதலிய தேவர்களெல்லாம் வணங்கவும் மூன்றுலகத்தினு மவனரசு செலுத்தவும் வரங்கொடுத் தெழுந்தருளினர் பின்பு சிந்துவானவன் மூன்றுலகத்தையும் வென்று தேவர் களைச் சிறையிலிட்டு உற்கையென்பவளை மணந்து தர்மன் அதர்மனெனு மிரண்டு பிள்ளைகளைப்பெற்றுக்கொடுங்கோல் செலுத்தி வருநாளில் சிறையிலகைப்பட்டு வருந்து கின்ற தேவர்கள் பிரகற்பதி கூறினவிதமாகக் கணேசரைத் தியா னித்துப் பிரார்த்திக்கக்கணேசரும் அவ்வவர்கள் மனத்தின்

கண் தரிசனந்தந்து உமாதேவியாரிடத்திற் றிருவவதாரஞ் செய்தந்த சிந்து வென்பவனை சங்கரிப்பதாகத் திருவாய் மலர்ந்து கரந்தருளினர் அதைக்கேட்ட தேவர்களெல்லாம் களிப்படைந்தார்கள். அந்த தருணத்தில் திரிசந்தி க்ஷேத்திரவாசிகளாகிய கௌதமர் முதலிய முனிவர்கள் அச்சிந்துவிற்குப் பயந்து வேற்றுருக்கொண்டு சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்ய சுவாமிகள் மஹாதேவியாரோடு மெழுந்தருளி தரிசனைகொடுத் தருளலும் உடனே யம்முனிவர்கள் கர்த்தனை வணங்கிசிந்துவைச் சங்கரிக்கவும் அதுவரையில் தங்களிடத்தி லெழுந்தருளி யிருக்கவுமாக விண்ணப்பிக்க பெருமானுமிரங்கி யவ்வாறே யவ்விடத் தமைத்ததோர் இரத்தினமண்டபத்தி லெழுந்தருளி யோகநிலையிலிருக்கையில் பிராட்டிகண்டு சந்தேகங் கொண்டவராய் தம்பெருமானை நோக்கி தேவரீர் யோகநிலைக்கு இலக்கியப் பொருளாவார் யாவரென் றுவினுவபெருமான்கேட்டு பெண்ணே இனிதேவர்களுடைய சிறையை நீக்கும் பொருட்டு உம்மிடத்திற் புத்திரனுகத் திருவவதாரஞ் செய்தருளப் போகின்ற பிரணவப் பொருளாகிய கணபதிகளே நமதிலக்கியப்பொருள் அங்குற்றிய நீரும் தரிசிக்கவேண்டில் நம்முறையைக் கடைப்பிடித்து வழிபடுவீராகவென்று ஏகாக்கரத்தை யுபதேசித்தருள அம்மையு மவ்வாறே யன்போடுபாசிக்கையில் கணேசரும் பிரசன்னமாய் தரிசனைகொடுத்

தருளி தாமவர்க்குத் திருக்குமாரராக வந்தருளுவதாய்
திருவாய்மலர்ந்து மறைந்தருளினர் பின்பு விநாயகசதுர்த்தி
வரக்கண்டு அம்மையாரும் அன்போடு விடாப்பற்றினராய்
மிருத்திகையினுற் சமைத்து பூஜித்த மூர்த்தத்தி னின்றும்
சோமவாரம் விசாகநக்ஷத்திரம் சிங்கவோரையுங் கூடிய
சுபமுகூர்த்தத்தில் கணேசப்பிரான் ஜோதிவடிவமா யெழுந்
தருள அம்மை தரிசிக்க வங்காற்றுதவராக அங்ஙனே விஸ்
வரூபங் கொண்டருள பிராட்டிகண் டஞ்சி பிரார்த்தித்த
வண்ணமே மூன்று திருக்கண்களும் ஆறுதிருக் கரங்களும்
முத்துமாலையைத் தரித்தமார்பும் தவளத் திருமேனியும்
விளங்க பாலமூர்த்தமா யெழுந்தருளலும் அது போதில்
உமாதேவியும் களித்தெடுத்து மடிமீதிருத்தி திருமுலைப்
பால் கொடுத்தருள நிவேதனங் கொண்டருளி கௌதம
ராதியர்கள் வந்திக்க விருக்கையில் ஆங்காங்கு பலமுனிவர்
களும் மரீசிமுனிவரா லுபதேசிக்கப்பெற்ற கணபதி கவச
மஹா மந்திர தியானத்தாற் றுன்பம் நீங்கி சுகித்திருந்த
னர். ஓர்நாள் உமாதேவியார் சிவபூஜை செய்கையில் பால்
உண்ணுமாறு கேட்டருள அவர்மறுத்தாராக அங்ஙனே
யவரதுபாவனமூர்த்தி வடிவமாக நின்று அஞ்சுவித்தனுக்
கிரகித்தும் முனிவர்கள் தவச்சாலைதோறுந் திரிந்து அம்
முனி பத்தினியரஞ்சப் பல சிறுகுறும்புகளைச் செய்தருளி
யவர்களர்ச்சனை யேற்றும் விஸ்வகர்மன் காணிக்கை

யாக சன்னிதிக்கண் வைத்த பாசம் அங்குசம் பரசு தாமரையைத்தரித்தருளியும் காற்கியமுனிவர்க்கு ஞானோப தேசம் செய்தும் காசிபர் அதிதிக் கனுக்கிரகித்தும் வினதை பயந்த முட்டையை நகத்தினாற் கீறிவெளிவந்த மயின்மீ தாரோகணித்து மயூரேசரெனுநாமம்பெற்றும் அவ்வினதை பிரார்த்தித்தபடி அவள் புத்திரர்களைச் சிறைமீட்டதன்றி யும், திருவவதாரதினத்திற் றன்னகரத்திலுண்டான உற் பாதங்களைக் கண்டஞ்சிய சிந்துராஜன் அம்மூலத்தை யறியவேண்டி யனுப்பின தூதர்கள் திரிபுவனங்களினுஞ் சென்று நாடியும் யாதொன்றுந் தோற்றாதவர்களாகிக் கடை முறை திரிசந்திக்ஷேத்திரத்தில் வந்து, பெருமான் திருவவ தார வைபவங்களையும் மகிமைகளையும் கண்டும் கேட்டு முணர்ந்தவளவில் அவர்கள் அற்புதமு மச்சமுமடைந்து ஓடோடி தங்களரசனுக்குத் தெரிவிக்க அவன் கவலை கொண்டு மயங்குகையில் அவனே யுன்னைக் கொல்வா னென்று அசரீரி கூறக் கேட்டஞ்சி இப்பகையை இச்சிறு போதே களையவேண்டுமென் றெண்ணங்கொண்ட சிந்து ராஜனால் (அப்பால விநாயகர் ஜனித்தது முதற் பத்தாம் வயதளவினும்) ஏவின அசுரர்கள் யாவரையும் மீளவிடா மல் பார்வையாலும் நெட்டுயிர்ப்பாலும் திருவடியாலும் திருக்கைகளாலும் படைகளாலும் இன்னும் பலவாற்றா னும் சங்கரித்தருளியும், மற்றவ் வசுரர்களான் மாய்ந்த

தமது தோழர்களாகிய முனிச்சிறுர்களைமீட்டு முயிர்ப்பித்த ருளியும் இவ்வாறு பெருமானடாத்திவரும் அனந்தலீலா விநோதத் திருவிளை யாடல்களை அதுவரையிற் சற்றும் தெரிந்துக் கொள்ளாதவனு யேக்கமுற்றிருந்து சிந்துவான வன் முடிவில்னுப்பி காதறைமூக்கறையாகப் பட்டுமீண்ட ஊர்த்த கஜனுடைய முறையையும் அவனை யவமானப்படுத் தினதையும் கண்டு மிகவும் கோபமேலிட்டவனு யப்பொழு தே பன்னிரண் டக்குரோணி சேனைகளுடன் கமலாசுரனை ஏவ அவனையும் அச்சேனைகளையும் சூலத்தான் மாய்த்தரு ளக்கண்ட சிந்துராஜன் சூரியன் சந்திரன் அக்கினி வரு ணன் வ்ாயுமுதலிய உலகப்ாலர்களைத் தத்தந் தொழின் முறை செலுத்தாமற்றடுக்க பெருமானவற்றைத் தாமே தமதருளாற் செலுத்தி பின் பூதப்படைகளுடன் சுப்பிர மணியராதி பதினேழுபடை வீரர்களோடு முனிச்சிறுர்க ளும் புடைசூழ இரதாரூடராய்ப் போர்க்கோலங் கொண்டு கண்டக நகரத்தைநோக்கிச் செல்கையில் வழியிடையி லெதிர்த்த இலக்ஷம் அசுரர்களையுங் கொன்று சிந்துவினி டத்தில் ஒற்றுக நந்தியை ஏவ அவர்சென்று கூறியபுத்தி யைக் கேளாமற் கோபிக்க அதுபோதத்திருநந்தி அவனையு மவன்சபையையும் நெட்டுயிர்ப்பாலுரப்பி யலைத் தருளி மீள பின்னர் பூதமன்னவனுன புட்பதந்தனுல் கோட்டை யையும் அதற்குக்காவலாக விருந்த நாற்பதுகோடி வீரர்

களையும் அதப்படுத்திவித்த தன்மேல் அச்சிந்துராஜன் பதினலாயிர வெள்ளம் சேனைகளுடன் வெளிப்பட்டு போர்க்குவர பெருமானும் தமது படைவீரரையும் சேனை களையும் அவன்படைமீதில் வகுத்துச்செலுத்தி தாம் மயூ ராரூடராய் சிந்துவோடெதிர்த்து மூன்றுநாள் பரியந்தம் முதற்பெரும் போராற்றி சேனைமுற்றுந் தொலைத்து அவன்கிரீடத்தைத் தகர்த்து செவிகள் சின்னபின்னபடக் கொய்ததன்மேல் அவன்நாணமும் துன்பமு மேலிட்ட வனாய் முக்காடிட்டுக்கொண்டு தன்னகரிற்சென்று துக்க மயக்கமுற் றிருக்கும்போது அவனையுத்தத்திற்கு வரச் செய்விக்கும் நோக்காயேவின பிருங்கிமுனிவரால் அவன் நகரம் கோட்டை அரண்மனை முதலியவற்றை யழித்து அவன்மனைவி சிகையை யவன்காண வறுத்து அவனோடு போரிட்டு மகுடம்கீழ் வீழவுதைத்து மீளச்செய்வித்தபின் மறுநாள் அச்சிந்துவானவன் தனியனாய்ப் போர்க்குவந்து தன்னுடன் பிறந்த சக்கரப்படை சூலப்படையைப் பெரு மான்மீ தேவ அவற்றைப் பெருமான் பரசாயுதத்தாற் றகர்த்து அவனை சங்கரித்தருளினர் பின்பு வீரபத்திரர் அவனாற் சிறைபட்டிருந்த தேவர்களை விடுவித்து சன்னிதிக் கண்ணேவிட அவர்கட் கனுக்கிரகித்தருளி இதுசெய்தி யுணர்ந்து சிந்துவின் பிதாவான சக்கிரபாணிராஜன் சன்னி தியையடைந்து அபராதத்தை மன்னிக்கும்படி பலவாகத்

துதித்தான் பின்பிரார்த்தித்தவாறு அகண்டநகரத்தை யடைந்து அவனர்சனையை ஏற்று மீண்டு திரிசந்திக்ஷேத்திர மடைந்த சின்னாட்பின் தமது மயூரத்தை முருகக்கடவுளுக்கு நல்கி முனிச்சிறார்களுடன் தமதுலகுக்கெழுந்தருளி அவ்விடத்தில் ஆன்மகோடிகளுக்குப் பேரருள் வழங்கியிருந்தனர்.

தூமகேது.

தூமகேது.

ஐயுறுநுண்ணிடைசுமுதைசெய்தவத்திற்கு
மகவருளவைங்கரராகிவந்
தவள்வயிற்றச்சுதனைசெலவுய்ப்பவக்
கருவினழிவென்றவம்பரச்சொல்
வெய்யதூமாசுரனுணர்ந்தவரசியை
யிரவில்வீட்டவேவினவவுணரம்
மெல்லியறஞ்தனொடுதுயில்போத
மஞ்சத்தைவிபினத்திடலும்விழித்துக்
கையைப்பிசைந்தோலமிடுப்புசூழ்
கொலைஞரைக்காதிதேறுதலோதியோர்
கவின்குழவியாய்சுமுதைமடியுற்று
முலையுணக்கண்டவசுரர்கோன்சமர்
செய்யவரவனிகத்தொடொழிய
வாய்த்தூமந்திரப்பியச்சேரலானைச்
செற்றருட்மேகேதுப்பெயர்
படைத்துவளர்சீர்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

விந்தியதேசத்தைச் சார்ந்த மகிபாதினி நகரத்தில், செங்கோற் செலுத்தியிருந்த தூமாசுரன் சகல நற்குணங் களோடுங் கூடியசிவபக்தியிற் சிறந்தவனு யிருக்கையில் அவனைக்காணும்படி பிருகுமுனிவர்வர அவரை யவ்வரச

னுபசரித்தான பின்னர் தாழ்வாகவுரைக்கும் அசுரகணத்தில் ஜனித்ததுணர தனது பூர்வவரலாற்றை விசாரிக்க அதற்கம்முனிவர் முன்விகுதியென்னு மரசனுய்ப் பிறந்து அச்சுவமேதயாகம் தொண்ணூற்றென்பது முடித்து நூரு வதுமேவள்வி தொடங்குகையில் அஃதறிந்து மனக்கலக்க முற்ற இந்திரன் புணர்ப்பினுல் நாரதமுனிவர் சிவஜன்மனெனும் விருத்தவேதியனுக அவ்வரசனிடஞ்சென்றவன் மனைவியைக் கேட்க கொடாத காரணத்தால் அவனையரக்கனுகச் சபித்ததன்றியும் அம்மகத்தையு மழித்துச்செல்ல அச்சாபசேடத்தாலிப்போ தசுரனுகப் பிறந்தனை யென்று சொல்லிப்போயினர். சிலநாட்பின் அந்நகரத்தை யடுத்து வசித்திருந்த மாதவராஜன் நெடுநாள் புத்திரப் பேறில்லாமையால் மனம் வருந்தி மனைவியான சுமுதையை வெறுத்துக்கூற அவளதற்காற்ருது காட்டிற்சென்று விஷ்ணுவை நோக்கித் தவஞ்செய்கையில் அவ்விஷ்ணு வடிவாய் விநாயகரெழுந்தருளி தாமேபுத்திரராக வருவதா யனுக்கிரகித்து மறைந்தருள அவள்மீண்டு தன்பதியை யடைந்து களிப்போடும் கருப்ப முற்றுவாழ்கையில் அத்தூமாசுரன் காலவேற்றுமையினுல் பரராஜர்கள்மீது வெளிக்கொண்டு போர்க்குச் செல்கையில் அசரீரி நீ செங்கோன்முறைமைக் குத்தவருக நடப்பதால் உன்னைக்கொல்ல சுமுதைவயிற்றில் விஷ்ணு வோர்பிள்ளையாக வளர்கின்ருரென்றுகூறக் கேட்டஞ்சி மீண்டபின் மந்திரிகள் புணர்ப்பினுல் அக்கருவோடதன்ருய் தந்தையரையு மழிக்கும்படி வித்துருமனெனும் சேனைத்தலைவனை ஏவ அவன் ஐஞ்ஞூறு வீரரோ

டும் சென்று அரண்மனையில் மாதவன் சுமுதை யெனு மிருவரும் நித்திரை செய்கையில் மஞ்சத்தோடெடுத்துச் சென்றோர் வனத்திலிட அவனுணர்ந்தெழுந்து கடவுளை பிரார்த்திக்க அவரருளால் தெய்வப்படைவீரர்கள் தோன் றிஅவ்வைஞ்ஞூற்றுவரை யழிக்க அதுகண்டஞ்சியோடின அச்சேனைத்தலைவன் தூமனுக்கவ் வரலாற்றை யுணர்த்த அவனவனைச்சீறி உடைவாளான் மாய்த்து வேறுசிலரை பதிவிருந்து பிரசவித்தவுடன் அச்சிசுவைக் கொல்லும்படி ஏவ அவர்களு மவ்வாறே சென்று பதிவிருக்கையில் ஓர் நாள் அச்சுமுதை கவலைகெட, விநாயகமூர்த்தி பாலசந்திர ரென்னு நாமதேயத்தோடு ஓர் குழந்தை வடிவமாகத் தோன்றி யவர்களச்சத்தை யொழித்துசுமுதையை நோக்கி நீ முன் தவஞ்செய்கையில் விஷ்ணுவாக வந்த யாமே பின் ஐஞ்ஞூற்றுவரைத் தொலைப்பித்தோம் இப்போதுன் வயிற் றிற் கருவாகி யிருக்கும் விஷ்ணு பிள்ளையாகப்பிறந்தவுடன் அதைக்கொல்லும்படி தூமனேவலாற் சிலரிவிடத்தில்வந்து பதிவிருக்கின்றார்களாதலால் அவ்வபாயத்தைத் தடுக்கவும் உங்கள் கலிதீர்க்கவும் நாமுன் பிள்ளையாக வந்தோமென்று கூறி தமதுண்மையைத் தெரிவித்தருள அதுகேட்ட வுடன் சுமுதை பேரானந்தத்தோடு மக்குழந்தையை வாழ்த்தி எடுத்து தனது கொங்கையி னின்றும் சுரந்த பாலை யூட்டி மடிமீது வைத்திருக்கையில் அவ்வற்புதத்தை யங்கு பதி

விருந்தவர்கள் கண்டு விரைந்தோடி. தூமனுக்குத்தெரிவிக்க அவனுமப்பொழுதே நால்வகைப்படை யோடும் போர் குறித்து அவ்வனத்திற்கு வந்து சுமுதை மடிமீதிருக்கும் அத்தெய்வக்குழவிமீது பாணங்களைச் சொரிய அதுகண்ட தாய் தந்தையர்கள் மனம்வருந்த அவர்களை யஞ்சலி ரென்று திடங்கூறி குழந்தைப் பெருமானாரும் தமது திரு வாய் மலர்ந் தாவலிக்க அதினின்றும் கொண்டல் கொண் டலா யெழும்பி எங்குமிருள் மயமாக மூடிக்கொண்ட புகைப்படலத்தால் தூமனு மவன் படைகளும் பாதலத்துள் வீழ்ந்தக்கணமே யழிந்தனர் அதனல் பாலசந்திர மூர்த்தி யாகிய பிள்ளைப்பெருமானும் தூமகேது வென்னு நாமரா யாவராலும் துதிக்கப்பட்டு மாதவன் சுமுதைக்குப் பேர ருள்வழங்கி தமது திருவுருவத்தைக் கரந்தருளினர்.

பின்ன ரம்மாதவராஜனும் சுமுதையும் தூமகேதுப் பெருமான் கட்டளைப்படி அந்த தூமனது நகரமாகிய மகி பாதினியையடைந்து அரசு செலுத்தி கர்ப்பூத்திருந்த முகுந்தனைப் பெற்று பெருங்களி கூர்ந்து நெடுநாள் வாழ்ந்திருந்து அப்புத்திரனுக்கு மகுடாபிஷேகமுதலாகச் செய்துமுடித்து அத்தம்பதிகள் மீளாக்கதியடைந்தனர்.

உடேண்டி விநாயகர்

உடுண்டி விநாயகர்.

ஒளிர்மணிமுடித்துராசீதனரன்பா
　　லென்றுமுலைவறும்வரமதுற்றிவ்
வுலகெலாந்தன்னொருகுடைக்
　　கீழதாக்கிமாலாதியும்பரையலைத்து
நளிர்புனற்றண்காசிமேவியிறை
　　கேதாரநண்ணிவாழ்நாளினம்மை
நன்னுதலினின்றைமாமுகராயுதித்
　　தைம்பதோடைந்தினனுருக்கொண்
டெளிதினடர்படையெலாம்நூறி
　　விச்சுவவுருவினைத்தலானைக்கழற்கீ
ழிட்டுடுண்டிப்பெயர்வகித்ததா
　　அன்றயன்வரத்தீசனேர்கற்பத்தினவ்
வளமைபெறுமவிமுத்தம்விட்டுமந்தர
　　மடையவாழ்திவோதாதன்வீடு
மருவநகரானமரவெழிறுண்டி
　　ராஜராய்வருபிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

கைவர்த்த மென்னுந் தேசத்தில் சிறந்திருந்த பன்மக மென்னும் பட்டணத்தில் பிரமசுரனென்னுமோ ரசுரனிருந் தான் அவன் பரமசிவனைநோக்கித் தவஞ்செய்து யாவர் முடியிற்றன் கையை வைத்தாலு மவர்கள் சாம்பராகும்படி

வரத்தைப்பெற்று அதைச் சோதிக்க சுவாமிகளையே தொடச் செல்லுகையில் சுவாமிகள் புன்னகை செய்து கரந் தருளினர். அவரை அவனுலகெங்கும் தேடிக்கொண்டிருக்கக்கண்ட விஷ்ணுவானவர் அதிரூபசௌந்தரிய மோகினிப் பெண்ணுயெதிர்வர அப்பிரமசுரன்கண்டு மோகங்கொண்டு தொடர்ந் திங்கிதவார்த்தை கூறி தனதுகாமநோயைத் தீர்க்கும்படி பிரார்த்திக்க விஷ்ணுவாகிய மோகினிப் பெண் அதற்கொருவாறரிதி லிணங்கினவரைப்போற் காட்டி என்னேடொத்துப் பரதநாடகஞ் செய்வையாகி லுன்னைக் கூடுவேனென அதற்கவனிசைந்து ஆடத்தொடங்கினுனாக அத்ததியில்ம் மோகினிப்பெண் அந்நாட்டியத்தில் பூப்பிரஸ்தார சாரிகை யுள்ளாளவட்டத் தபிநயமாகத் தனதோர் கையை யுச்சியில்வைக்கக் கண்ட அவ்வசுரனும் அவளிட்டுவைத்த மோகத்தால் தன்னையும் தான் பெற்றவரத்தின் திறத்தையுமறந்து தானுமப் பெண்போல தன் கையைத் தன்முடிமீதில் வைக்க அக்கணத்திற்றனே வெந்து சாம்பராய் மடிந்தனன் அப்போது விஷ்ணுகளித்து பின்மக நகரத்திற்றனே வதிந்திருந்தனர். அதனுலது முகுந்தையெனும் பெயர்பெற்றது பின்னரிச்செய்தி அவன் மகனுனராசதன்கேட்டு மனம்புழுங்கி அவ்விஷ்ணு முதலான தேவர்கள் பகையைக் களையவேண்டுமென் றெண்ணி தன் குலகுருவாகிய சுக்கிரனிடஞ்சென்று முறையிட அவன்

கூறியபடியே நெடுநாள் சிவபெருமானை நோக்கி யரியதவஞ் செய்கையில் சுவாமிகள் பிரத்தியக்ஷமாய் தரிசனை கொடுத் தருளக்கண்டு அவன்வணங்கி ஒருவராலுமிறவா வரமும் மூன்றுலகத்தும் தன்னாணைசெல்லவும் அனுக்கிரகிக்கும்படி பிரார்த்திக்க அவ்வாறேகொடுத் தெழுந்தருளினர் பின் அசுரப்படைகளைக் கூட்டிக்கொண்டு சென்ற திசையெல் லாம் வெற்றிகொண்டு மூவுலகத்தினும் தன்கொடுங்கோலா ணைசெலுத்தி வருகையில் ஓர்நாள் தன்னமைச்சரோடு தன்னாணைக்குளடங்காத வுலகமில்லையே யென அதுகேட்ட மந்திரிகள் ஐயா பிரமன் விஷ்ணு இந்திரன்முதலான சமஸ் ததேவ கணங்களு முனிவர்களும்புடைசூழ சிவபெருமான் காசிப்பதியி லிறைகொண்டெழுந் தருளியிருக்கின்றனர் அஃதொன்றும் தமதாணைக்குள்டங்க வில்லையே யெனக் கேட்ட துராசதன் மானமீதூர்ந்து படையெடுத்துக் காசிப்பதியைநோக்கிச்செல்ல அதனை சிவபெருமா னுணர்ந் து காலத்தைநோக்கி தேவர்களோடு காசிநகர்விட்டுக் கேதா ரஞ் சென்றனராக துராசனப்பதியில் தன்னரசாக்ஷியை நிலைநாட்டினன் அங்ஙனமாக பின்னெடுங்காலபெரியந்தம் அவனதுகொடுங்கோலால் வருந்திய தேவர்முதலியோர் பிரமன்கூறினவிதமே உலகமாதாவாகிய மஹாதேவியார் சன்னிதியடைந்து துராசதனால் தாங்கள் வருந்தாநிற்குங் குறைகளைச் சொல்லக்கேட்டு அவ்வசுரன்மேற் பிராட்டி

யார் மனங்கொதித்து விழிகள் சிவப்பவெழுந்த வக்கோப சத்தியே அவர் திருமுகத்தினின்றும் ஐந்து திருமுகமும் பத்துதிருக்கரங்களோடும் வக்கிரதுண்டரெனத் திருவவ தாரம் செய்து அம்மை திருவுள்ளக்குறிப்பின்படி பூதக ணங்களுடன் காசிப்பதியடைந்து அத்துராசதனோடு இரண் டுநாள்வரையில் பெரும்போராற்றி அவன் சேனைக ளியா வையும் ஐம்பத்தைந்து திருமூர்த்தமாய்க் கோலங்கொண் டழித்தபின் அவன்மறைந்தோட வெண்ணுவதைக்கண்டு விஸ்வரூபங்கொண்டு அவன்முடியிலொருபாதமு மக்கா சிப்பட்டணத்திலொருபாதமுமாக வைத்து அவனைத்திரு வடிக்கீழடக்கி ஓ துராசதனே! நீ நமதுபிதாவாகிய சிவபெரு மானிடத்தில் என்று மிறவாவரமும் மாறுப்பத்தியும் பெற் றுள்ளாயாதலால் நமதுதிருவடிக்கீழ் அப்படியே என்று மிருந்து இங்கு வருகின்றவர்களுடைய எல்லாப் பழிபாத கங்களையும் போக்கிக்கொண்டிருக்கக் கடவையென்றனுக் கிரகித் தருளினர் அப்போது உலகமெல்லாம் அவ்வக்கிர துண்டரை உடுண்டியெனும் திருநாமத்தினைச்சாற்றிப் புகழ்ந்து துதித்துய்ந்தனர் பின் சிவ பெருமான் சமஸ்த தேவகணங்களுட னக்காசிப்பதிக் கெழுந்தருளினர்.

துண்டிராஜர்.

இந்த கற்பத்திற்குமுன் பதும மென்னு மோர்கற்ப முண்டு அதில் சுவாயம்பு மனுவானவர் பிறந்து நெடுங்கால மரசாட்சி செய்திறந்தபின்பு அறுபதாயிரவருட பரியந்தம் தக்கவரசும் மழையு மில்லாமல் உலகமெங்குங் காடாகக் கண்டபிரமன் இரங்கி இவ்வுலகத்தைக்காக்க வோரரசனை நியமிக்க வேண்டுமென் றெண்ணி தக்கவர்களைத் தேடுகை யில் காசியில் அரசவமிசத்திற் பிறந்த இரிபுஞ்சயன் தபஞ் செய்திருக்கக்கண்டு இதற்கிவன்றக்கவனென் றெண்ணி யவனிடஞ்சென்று தமது கருத்தை வெளியிட்டு உலகர சாட்சியையும் பலவளப்பங்களையும் திவோதாச னென்னும் பெயரையுங் கொடுத்து மகுடாபிஷேகஞ் செய்ய அத்தி வோதாசன் தேவர்கள் காசிப்பதியை விட்டாலொழிய தானரசாட்சிக் குடன்படேனென்றுகூற கேட்டபிரமனும் அவ்வாறே செய்யுதுமென்று ஒப்புக்கொண்டு சிவபெருமா னிடஞ்சென்ற சமயத்தில் அக்கடவுள் உமாதேவிசமேத ராக இடப்பவாகனத்தின்மீதெழுந்தருளி சமஸ்த தேவர்க ளோடும் தம்மைத் தாங்கவேண்டுமென்று நெடுங்காலம் தவஞ்செய்திருந்த மந்தரபர்வதத்திற் கெழுந்தருளலும் அதுபோதம்மந்தரகிரி எதிர்கொண்டு பணிந்துமிகவும் துதி செய்து தன்னிடத்திலும் காசித்தலத்தையொப்ப வெழுந்த ருளி சகலருக்கும் வேண்டிய வரங்களை யனுக்கிரகஞ்

செய்துகொண்டு தனக்குப் பெருமையையும் மகிமையையும் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்த தருணத்தில் பிரமனும் தான் திவோதாசனுக்குக் கொடுத்த வரத்தை விண்ணப்பித்து குறையிரக்க பெருமானும் திருவுளமிரங்கி அம்மந்தர பர்வதத்திற்றானே வசித்திருந்தாராக அதுகாலையில் சிவபிரான் அக்கிரியருகிற்றவஞ் செய்துகொண்டிருந்த மரீசி முனிவர்க்கு தரிசனந் தந்துனக்கு வேண்டிய வரத்தினைக் கேளென்று திருவாய்மலர்ந்தனர். அதற் கம்முனிவர் சுவாமி தேவரீருடைய திருவடிகளில் இடைவிடாத பத்தியும் சிவலோகவாசமுந் தரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். உடனே பரம சிவகடாக்ஷத்தால் அவரெண்ணத்தின்படி ஓர் விமானம்வர, அதில் அம்முனிவர் ஆரோகணித்துச் சிவலோகம் போய்ச்சேர்ந்து வாழ்ந்திருந்தனர். அதன்பின்பு திவோதாசன் ஆதிசேடன் மகளாகிய அனங்கமோகினியை மணந்து தேவர்கள் கற்பகமுதலியன பலவளப்பங்களைக் கொடுத்து குறைவறுக்க எவ்வகைப்பட்ட வுயிர்களும் நரைதிரை பிணிமூப்பு சாக்கடின்றி அறம் பொருள் இன்பம் வீடென்னு நால்வகைப் பொருளையு மொருங்குபெற்று நிச்சிந்தையராய் வாழும்படி காசிப்பதியில் செங்கோல் செலுத்திவருநாளில் தேவர்கள் எண்பதாயிர வருடவரையி லக்காசி நகரைப் பிரிந்ததினால் மனவருத்தமுற்று திவோதாசனை யழிக்க அவனிடத்துயாதொரு கொடுங்கோலும் குற்றமுமில்லா திருப்பதாலு மனநொந்து அவனைச் செங்கோ லொழுக்கத்தினின்றுந் தவறுவிக்கும்படி மழை காற்று தீ முதலியவற்றை

அவனரசிலுபயோகிக்க வொட்டாமற் றடுக்க கண்ட வவ்வ ரசன் தானதுவதுவாயிருந் துபகரித்து எவ்வுயிர்களையும் பாதுகாத்து வருகையில் யோகினி சூரியன் பிரமன் முதலா னவர்கள் சென்று வஞ்சகபோதனை செய்தும் அவன் தன் னொழுக்கத்தில் சற்றுந் தவறுமைகண்டு அஞ்சிய தேவர்கள் சிவபெருமானிடத்தில் விண்ணப்பிக்க அவர் துண்டிராஜ ரை யனுப்பியருளி அங்குற்றியோர் பாலசோதிடராய்ச் சென்று அந்நகரவாசிகளஞ்சி புறம்போடும்படி சிலவுற்பாத அற்புதங்களைக்காட்டி சோதிடஞ்சொல்லித்திரிய அரசன் கேள்விப்பட்டு வரவழைக்க சுவாமிகளுஞ் சென்று கண்ட வுடன் மனங்குழையும் விதமாகத் தரிசனந் தந்தசமயத்தில் அவன் உபசரித்து பற்றற்ற சிந்தையனாய் அரசாட்சியில் தனக்குண்டா யிருக்கும் வெறுப்பைத் தெரிவித்து இவ்வர சாட்சி தன்னைவிட்டு நீங்குங் காலம் யாதென்று வினவ கேட்டபெருமானும் பதினேழாநா ளிவிடத்தோர் வேதியர் வருவா ரவரை வினவி யவர் மொழிப்படி நடந்து கொள்ளக் கடவையென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமான பின் விண்டு வானவர் லக்ஷ்மிசமேதராய் பௌத்தாசிரியக் கோலமாகச்சென்று அந்நகர வாசிகளாகிய ஆடவர்களுக் கும் மாதர்களுக்கும் அறவொழுக்கங்களும் கற்பொழுக் கங்களு மொருங்குகெட துற்போதனைகள் செய்து பிரஷ் டராக்கிப் பின் பரசனிடத்திற்குச் செல்ல அரசன் வந்தவர்

விஷ்ணுவென்றும் அவர் வருகையின் காரணமும் தெரிந்து கொண்டவனு யவ்விண்டுவை யுபசரித்து விஸ்வரூப தரிசனமும்பெற்று அவர் கற்பித்தபடியே தன்னரசை குமாரனிடத்தொப்புவித்து பொக்கிசதிரவியத்தை சிவபணிவிடைகளுக் குபயோகித்து சிவாலயப் பிரதிஷ்டைசெய்து தியானபரனுய் பூஜித்திருந்து அச்சிவலிங்கத்தி லயிக்கியமாயினன் சிவபெருமானு மந்தர கிரியைவிட்டு மஹாதேவியாரோடும் சமஸ்த தேவர்கள்புடைசூழக் காசிக்ஷேத்திரத்திற் கெழுந்தருளி சர்வான்மாக்களு முய்யும்படி தாரகமந்திரானுக்கிரகஞ் செய்து வீற்றிருந்தருளினர்.

மகோற்கடர்

ம. கோர்க டர்.

ஓகைபெறுகாசிபர்திருப்பன்னியதிதி
செய்யுயர்தவத்தொருமைந்தனு
யுற்றுமுலையுண்டுவளர்நாளொன்ன
லாரிகளொருங்கறுத்துபநயத்தில்
வாகைபெறுசுரர்முனிவர்கையடைத்
திருநாமமகிழ்புசீரருள்வழங்கி
வண்காசிவேந்திடஞ்சென்றெதிர்
நராந்தகன்மார்பிடந்தாவிகொண்டாங்
கீகையிலவன்முனோன்றேவாந்தகன்
போருடன்றுவரவிரதமேறி
யிபமுகங்கொண்டொடிமருப்பி
னவனையுமழித்தினிதுதவுதருமதத்தன்
றோகையர்கடமைமணந்தரச
னமுதோரோர்விருந்துண்டகிருபர்ச்சுதன்
சுபமன்றனிறைவேற்றியருண்மகோற்
கடரெனச்சொற்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

அங்க தேசத்தைச் சார்ந்த காத்திர புரியில் ரௌத்திர கேதுவென்னு மோர் வேதியன் சாரதை என்பவளை மணந்து இல்லறம் வழுவற வாழுநாளில் இரட்டைப் பேருக வுதித்த தேவாந்தகன் நராந்தக னென்னும் பெயரை யுடைய பிள்ளைக ளிருவர்க்கும் உபநயனதி சடங்கு

முடித்து வேதாப்பியாசம் செய்வித்து வருநாளில் நாரத முனிவ ரங்குவர அவரை ரௌத்திரகேது பூஜித்து உப சரித்து தன் பிள்ளைக ளிருவரையும் பணிவிக்க அவர் அம் மக்களிருவரும் பெரும்பே றெய்தும்படி பஞ்சாக்கர முப தேசித்துப் போக அத்தேவாந்தகன் நராந்தக னென்னு மிருவரும் தாய் தந்தை யரிசைவா லோர்வனஞ் சென்று அங்கு சிவபெருமானை நோக்கி பதினாயிர வருடம் அரிய தவம் செய்கையில் உமாபதியும் அருள் சுரந்து பிரத்தி யக்ஷமாக கண்ட வவ்விருவரும் பணிந்தெழுந்து துதித்து மூவுலகாளும் வாழ்வும் மாளாவரமும் வேண்டப் பெருமா னும் அவ்வாறே வரங்களையும் தெய்வப்படைகளையு மருளி கணேசர் தவிர உங்களை வெல்லுநரில்லையெனச் சொல்லிப் போக பின்பு தேவாந்தகன் சுவர்க்க லோகஞ் சென்று இந் திரனை வென்று அவ்வுல காட்சி பெற்று பிரம லோகம் வைகுந்த முதலிய பதங்களினும் தன்னாணை செல்லவும் தேவர்க ளெல்லாம் தன்னை வணங்கவும் சகல சம்பத்தோடு மரசுபுரிந் திருந்தான், நராந்தகன் அசுரர்களைப் படைத் துணைகொண்டு பூமிமுழுதும் வென்று பாதலத்தை சுவா தீனஞ்செய்து ஆதிசேடனைச் சிறைப்படுத்தி முனிவர்கள் முதலாயினோரையும் தேவர்கட்கு அவிப்பாகம் தரவொட் டாமல் வேள்விமுதலிய வற்றைத்தடுத்து காவற்குட்படுத்தி அரசுசெய்து வருகையில் அவ்விருவர்களும் மாதாபிதாக்க ளால் குலக் கன்னியரிருவரை மணம்செய்வித்த பின்னாளில் பலகொடுமையரான பிள்ளைகளைப் பெற்று களித்திருக்கு நாளில் அசுரர்கள் நாளுக்கு நாளோங்க தேவர்கள் மிகவும்

ஒடுங்கி வருகின்றதையும் கண்டு அவர்கள் மாதர்வான அதிதியென்பவள் மிகவுமனவருத்தமுற்று அவ்வவுணரை யழித்து தன்மக்களாகியதேவர்கள் துயர்தீர்க்கும்படியான வோர் புத்திரனை வேண்டி தன் கணவராகிய காசிப முனி வரைப் பிரார்த்திக்க அவரிரங்கி அவுணர்கள் பெற்றிருக் கும் சிவானுக்கிரகத்தையும் தமக்கு கணேசர் முன்தந்தி ருக்கும் வரத்தையும் யோசித்து அவ்வதிதிக்கு. கணேசப் பிரான் பெருமையைக்கூறி அக்கடவுளே உனக்குப்புத்திர ராவராதலால் இதையனுட்டிப் பாயாக வென்று பிரணவ பல்லவமும் நமோந்தமுங் கூடிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யனுக்கிரகிக்க அவளும் அதைப்பெற்றுக்கொண்டு வேறோர் தனியிடம் சென்று தியானபூர்வமாய் நூறுண்டுவரையிற் றவஞ்செய்ய விநாயகரு மவள்தவத்தினுக் கிரங்கி ஜோதி, ம்யமாகத் தரிசனைகொடுத்தருளக் கண்ட அதிதி அத்திரு மேனி யொளி பார்க்கவாற்றாது முறையிட அவள் , காணு மாறினிய கோலத்தொடு தோன்றி வேண்டும் வரமளித் தெழுந்தருளினர் பின்னர் துஷ்டர் பாரத்தா னொந்த நில மகட்கும் கணேசரைத் துதிசெய்த பிரமன் முதலிய தேவர் கட்கும் அசரீரி அபயம் கூறித் தேற்றினளாக ஓர்நாள் அதிதி தன்னியமப்படி விநாயக ரர்ச்சனையை முடித்து அதிக ஆராமை யோடு துதிக்க பெருமான், அனந்த முடிகளும் கைகளும் திருவடிகளு முடைய விசுவ மூர்த்தியா யெழுந்தருளி முன்னிற்க அஃதெடுக்க வளர்க்க விசைவா யிராமைகண்டு அவள் குழந்தை வடிவோடு வரும்படி பிரார்த்திக்க, அவ்வாறே பெருமா னெழுந்

தருள்லும் அங்ஙனே யவளெடுத்து தனது தனத்திழி பாலைப் புகட்டி மகவாகக் கொள்ள அவ்வற்புதத்தைத் கண்ட காசிபர் மனக்களிப்புற்று சாதகன் மாதிசெய்து மகோற்கடரென நாம கரணம் சாற்றி வளர்த்துவருநாளில் வசிட்ட வாம்தேவராதி பலமுனிவரும் வந்து பிள்ளைப் பெருமானைப் பணிந்து புகழ்ந்து போக அவர்கட்கருள் வழங்கி ஓர்வருட வுகவை யுடையராகலும் இரத்தமழை முதலிய வுற்பாதங்களைக் கண்ட நராந்தகனஞ்சி சோதிடரா லுண்மை யுணர்ந்து விநாயகப் பெருமானை வதை செய்யும்படி விரசையெனும் அசுர ஸ்ரீயை ஏவ அவளும் சென்று கணேசப்பிரானை யற்றமறிந்து எடுத்துண்டனளாக அங்ஙனே நம்பெருமான் திருவடி விரல்நகத்தால் அவளுடைய வயிற்றைப் பிளந்தருளினர் இரண்டா மாண்டில் உதத்தன் துந்துபி யென்பவர்களை ஏவ அவர்கள் கிளிப்பிள்ளை வடிவோடுவர பெருமான் பருந்து வடிவங்கொண்டு கொன்றருளினர் மூன்றுமாண்டில் பிதாவால் சௌள கர்ம நிறைவேற்றப் பெற்று தாயாகிய அதிதி வியதிபாத ஸ்நானத்தின் பொருட்டு அடுத்த சோமாவதி யெனும் தடாகத்திற்குப் பிள்ளைப் பெருமானை எடுத்துக்கொண்டு போய்க் கரையிலிருத்தி நீராடுகையில் அத்தடாகத்தினுள் பிருகு சாபத்தினால் முதலையாய் வசிக்கும் சித்திரனென்னும் காந்தருவராஜன் அதனுளிறங்கின மகோற்கடப்பிரானைப் பற்றினதன்மேல் அவன்முதுகி ஞரோகணித்து கரைமீதேற்றி அவனுக்கச்சாபநீக்கி யருளினர், நான்காமாண்டில் காசிபராச்சிர மத்திற்கு விருந்தாகவந்த ஆகா, ஊகூ.,

தும்புரு வென்னும் யாழ்வல்லவராகிய காந்தருவர் மூவரும் நீராடி நியமமுடித்தபின் விநாயகர் மகேஸ்வரர் உமை விஷ்ணு சூரியன் என்னு மூர்த்தங்களையோராதனத்திட்டு பூஜித்து தியானஞ்செய்கையி லவற்றை மறைத்து பிதாவேண்ட, அவர்க்கு சமஸ்த உலகங்களும் தேவர்களும் தமது திருவயிற்றி லடங்கியிருக்குமற்புதத்தை திருவாய்திறந்து காட்டி தெரிசிப்பித்து, அவ்வாத்மார்த்தத்தை மீட்டுங்கொடுத்து அவர்களாற் பூஜைகொண்டருளினர் ஐந்தாமாண்டில் உபநயனசடங்கு கொண்டருளுங் காலத்தில் நராந்தகனுலேவப் பட்டு முனிவர்கள், போல்வந்த பிங்களன், விகிர்தன், சபலன் விசாலன், பிங்காக்ஷன் என்னு மிவ் வசுரர்களைவரும் அக்ஷதைகளில் அஸ்திரங்களை ஆவாகனஞ் செய்து தூவலும் அஃதுணர்ந்த பெருமானும் வேறே ஐந்தரிசிகளை எடுத்துத் தூவியவர்களை சங்கரித்தருளினர், பின்பு பிள்ளையாரை யர்ச்சிக்கதேவர்கள் வேண்டிக்கொண்டபடி சிவபெருமான் பிநாகம், திரிசூலம், உடுக்கை, மழு, கங்கை, பிறை, சடைமுடி இவைகளைச் சூட்டி விருபாக்ஷன், பரசுபாணி, பாலசந்திரனென்னும் திருநாமங்களைச் சாற்ற, உமையம்மை சிங்கவாகனம் கொடுத்து சிங்கவாகனனென வழைத்து வாட்படை கொடுக்க, பிரமன், கமண்டலமும் தாமரைப் பூவும், சாத்தி பிரமபதியென் றழைத்துத் துதிக்க, விஷ்ணுபீதாம்பரமும், சக்கரமுமணிந்து விஷ்ணுபதி யென்று துதிக்க, பிரகற்பதி இரத்தின மாலிகையை வைத்து வரத்ரென்று வாழ்த்த, வருணன் பாசம் சாத்தி சர்வப் பிரியதேவ ரென்று புகழ இம்முறையே சமுத்திர ராஜன் ஆதிசேடன் யமன்

அக்கினி வாயு முதலியவர்கள் முத்துமாலை சயனம் தண்டம் அழற்சத்தி வேகசத்தி இவைகளைத் திருவடியில் வைத்து மாலாதரன் முதலிய பலநாமங்கள் கூறி வணங்கினார்கள், அக்காலத்தில் பிள்ளையாரைக் குழந்தை யென்று மதித்து வணங்காதிருந்த இந்திரனுக்கு விஸ்வரூபம் காட்டியடிமை கொண்டருளியும் இவ்விதமாகப் பெருமான் லீலைகள் செய்தெழுந்தருளி ஆறுமாண்டான காலத்தில் காசிபர் மாணாக்கனான காசிராஜன் தன் குமாரனுக்கு விவாகம் செய்விக்க வேண்டி தன்னாசிரியரை யழைக்க அவர் தமது மகனாராகிய மகோற்கடரை யனுப்ப அவரு மவ்வரசனோடு தேரேறி கண்டக பருவத சமீபமாய் வருகையில் அவிடத்தில் ஓர்தெய்வப்படை வர அதைப் பிள்ளையார் கைப்பற்றி அதைவேண்டித் தவஞ் செய்திருந்த தூமாக்ஷன் மீதேவி யவனைக்கொல்ல கண்ட காசிராஜ னஞ்சி நிற்கையில் எதிர்த்த அத்தூமன் மக்களான செகனன் மனுவென்பவர்களை தமது சுவாசத்தால் நராந்தகன் சபையிற் புகவீழ்த்திக் கொன்றருளினர், அவர்களோடுவந்த சேனைகளிலிறந்தார் போகமற்றைய ரோடினர் நராந்தகனறிந்து ஐஞ்ஞூற்று வரை ஏவ அவர்களைப் பெருமான் பேரிடி முழக்கங்காட்டி மாய்த்தருளினர், அதை சிலவொற்றர்கள் நராந்தகனுக்குத் தெரிவித்து புத்திகூற அவர்களைச் சீறிக்கொன்று விட்டு வேறு சிலரை ஏவ அச்சமயத்தில் அரசனும் பிள்ளையாரும் காசி நகரத்தை யடைய அவ்விடத்தில் யாவருங் களிப்போடு தரிசிக்கப் பவனிவருகையில் அங்ஙனம் ஏவப்பட்டவர்களில் தந்துரன் விகண்டனென்னு மிருவரும் அக்

காசி நகரத்துப் புரோகிதனுடைய மக்களைப்போ லெதிர் வந்து தழுவ அவர்களைத் தழுவிக் கொன்றும் காற்று வடிவமாக வந்த பதங்கன் விதுல னென்பவர்களை அணியாகிய சேடனால் வலிகுறைவித்துப் பின்னரவர்களைக் கொன்றும், அவர்களால் அழிந்த பட்டணத்தை பெருமான் பார்வையாற் புதுக்க கண்கண்ட அரசன் அன்பும் அச்சமும் களிப்பும் கொண்டு வணங்கி தனதரண்மனைக் கழைத்துச் செல்கையில் அங்கடைகல்லாகக் கிடந்த கூடனெனும் அசுரனைத் தேங்காய்களைக் கொண்டுடைத்து வலிகுறைத்துப் பரசாயுதத்தாற் கொன்றவ னுடலைப் பாதலத்தில் வீழ்த்தித் தேரைவிட்டிறங்கி யரசன் கைலாகு கொடுக்க அரண்மனைக்குட் பிரவேசித்து சபாமண்டபத்தில் வீற்றிருந்து அரசன் செய்த பூசையைக் கைக்கொண்ட விடத் திருந்தருளினர், அன்றுபோக மறுநாள் வீதியிலாடுஞ் சிறுவர்களோடு தாமும் விளையாடு கையில் பூர்வம் பிரம்மாவான அவ்விராஜனது புரோகிதனெனும் தருமதத்தன் அரச னிசைவு கொண்டு தமது புத்திரிகளைத் திருமணஞ் செய்விக்கும்படி மகோற் கடமூர்த்தியாரைத் தமதாச்சிரமத்திற் கழைத்துக் கொண்டுபோக அவ்விடத்தில் கழுதை வடிவாகவந்த காமன் குரோதன் முதலிய வனேக வசுரர்களை மாய்த்தும், யானைவடிவமாக வந்த குண்ட னென்பவனை மல்லயுத்தத்தாற் கொன்று தருமதத்தனுடைய திருமனையி லெழுந்தருளி யிருக்கையில், முன்னிறந்த தூமன் மனைவி சிரம்பை கொண்டுவந்த விஷதயிலத்தை அவளாற்றானே பூசும்படி செய்தவளைக் கொன்ற பின்பு தாம்கலியாணக் கோலராய்

தருமதத்தர் வேண்டுகோளின்படி யவர்பெண்களாகிய சித்தி புத்திகளைத் திருக் கலியாண முடித்துக் கொண்டு அங்கு சிலநாளிருந்த பின்பு தேவிமார்களோடு சிங்கவாகனத்தின் மேல் அரச னரண்மனைக் கெழுந்தருளி யிருந்தனர் அப்போ தரசன் தன்மந்திரிகளுக்கு சுவாமிகளது பெருமையைத் தெரிவித்து இவரது சன்னிதியிற்றானே தன் குமாரனுக்கு விவாகஞ் செய்விக்கவேண்டு மென்று குறிப்பிக்க அவர்களிலொருவன் தேவாந்தக னராந்தக சம்மாரத்தின் பின்விவாகம் செய்வது யுக்தமென்று சொல்ல அரசனதற்கிசைந்து நிற்க கேட்ட பெருமானும் அவ்விரண்டசுரேந்திரர்களும் தமது கையினுல் விரைவில்வந்து மடிவர்களென்னத் திருவாய்மலர்ந்தனர் உடனே யஸ்தமயமாக சந்தியாவந்தன கருமங்களை நிறைவேற்றி போஜனமுடித்து திருப்பள்ளிக்குச் சென்றபின் அவ்விரவில் விதாரணன் சுவாலாமுகன் வியாக்கிரமுகனென்னு மிம்மூவரும் வந்து பட்டணத்தைச் சுட்டழித்து தப்பின ஜனங்களை விழுங்கி யாவர்க்கும் துன்பஞ்செய்ய அரசன்கண்டு பயந்து சுவாமிகளுக்கு விண்ணப்பிக்க பெருமானும் கமண்டல நீரை புரோட்சித்து பற்றி எரியும் தீயை யவித்து விதாரணன் சுவாலாமுகனைக்கொன்று வியாக்கிரமுகனை வாயைப்பிளந்தழித்து. அவர்களாலழிந்த பட்டணத்தையு முயிர்களையு மீட்டெழுப்பி யருளக்கண்ட அரசன் தன்மனைவிக்குப் பெருமானருள் விளையாடல்களைத் தெரிவிக்க மறுநாளவ்விராஜபத்தினிகையா லரசன் விருந்தமைத்து பெருமானோடமுது செய்கையில் பெருமான் திருப்பரிகலத்தில் தன்

பத்தினியாற் படைத்த தன்றியும் வேறு சிலபதார்த் தங்க ளும் திருமேனியில் தான் சூட்டின தல்லாமல்வேறு சிலபூஷ ணங்களு மிருக்கக்கண் டையங் கொண்டு வினவிய வரச னுக்கு அவற்றை யர்ப்பித்த் புரு சுண்டியின் அன்பின் பெருமையைக்கூற கேட்ட வரசனே அவரைத்தன் னகரிற் றருவித்துப் பூஜிக்க வபேக்ஷித்தவனைப் பெருமான் சுட்ட ளைப்படி தண்டக வனமடைந் தம்முனிவரை வணங்கி யக்கடவுட் டிருவவதார லீலைக ளனைத்தையுங் கூறிய ழைக்க அவர் வருதற்கு மறுக்க மீண்டு மகோற்கடர் கற் பித்தவகையே கஜானன ரெனத் திரு நாமத்தைக் கூறி யழைத்து வந்து சோட்சோபசாரமுடன் பூசித்து மகிழ்ந்து மூவரு மொருங்கு விருந்துண்டபின் புருசுண்டி முனிவர் தம தாச்சிரமத்திற்குச் சென்றனராக மறுநாள் மேக னென்னு மோரசுரன் ஜோதிடனாக வடிவங்கொண்டு அரச னிடஞ்சென்று துற்போதனை செய்திருக்கும்போது பெரு மானவண் சென்று தாமே ஜோதிடம் கேட்டு மகிழ்ந்து பரிசளிப்பவர்போல் முத்தாரத்தை யணிவித்தழித்தும், பழங்கிணறும் தவளையுமாகத் தோன்றி நின்ற கூபன்கந்த னெனு மசுரர்களைச் சங்கரித்தும், இவையனைத்தையுங் கேள்வியுற்ற நராந்தகன் தனதுசிற்றப்பனென பதங்கனு டைய புத்திராளெனும் அம்பன், அந்தகன், துங்கன் இவர் களைச் சேனைகளோடேவ அவர்கள் வந்து மாயப் போர் செய்ய மகோற்கட மூர்த்திகள்வந் தம்மூவரையும் சேனை களையு மொருங் கழித்தனர், அப்பாதகர் மூவரும் இறந்த செய்தியை யவர்கள் தாயாகிய பிரமரைகேட்டு வருந்தி

மகோற்கடப் பிள்ளையாரை வஞ்சித்துக் கொல்ல அதிதி வடிவங் கொண்டுவந்து விஷங் கலந்த தின்பண்டங்களைக் கொடுக்க வதை யக்கடவுள் புசிக்கு மளவிலவ்விஷம் அப் பிரமரையின் தலைக்கேறி மாய்ந்தனள், இவ்வாறக்கடவுண் மகத்வங்களைக் கண்ட அந்நகர வாசிகள் பெருமா னுக்கு விருந் தமைக்கும்படி அரசன் முன்னிலையில் விண்ணப் பித்தவாறே மறுநாள் நடத்த பிள்ளையாரு மாங்காங்க வர்கள் பூசையைக் கொண்டருளியதுபோல அதுதினத்தில் சுக்கிலன் வித்துருமை யெனுந் தம்பதிகள் ஏழைப் பத்தி செய்த புல்லரிசி யமுதுண்டு பெருஞ் செல்வமளித்து திரு விளையாடல் செய் திருக்கையில் நாரதராலறிந்து வந்த ஜனகாதியர்க்கும் கிருபை வழங்கி யவர்களோடும் அரச ளுேடு மரண்மனையி லத்தினமே திருவமுது செய்தருளினர் அது நிற்க தன்னு லேவப்பட்ட அவுணவீரரெல்லா மடிந்த வர்களன்றி மீண்டுவராமை யாகக்கண்ட நராந்தகன் கவலை கொண்டு சூலன் சகலனென் பவர்களைத் தூதாக ஏவ அவ் விருவரு மாணிடவடிவோடும் சென்று மகோற்கடப்பிள்ளை யாரைக்கண்டு வஞ்சகத்தாற் கொல்லநினைத்து தங்கள் சுயரூபத்தோடெழுந்து அவர் திருக்கரங்களைப் பற்ற லும் அக்கைகளை யுதறி பெருமானவர்களைப் பற்றி நிலத்தி லறையப்போகையில் அவர்கள் பிரார்த்திக்க விரங்கி அவர் களை நராந்தகனுக் கறிவிக்கும்படி சில முக்கிய வார்த்தை களைச் சொல்லிவிடுக்க அவர்களும் சென்று நடந்தசெய்தி களை சாங்கமாகச் சொல்லக்கேட்ட நராந்தகன் மானமும் கோபமுமேற்கொண்டு தானே சதுரங்க சேனைகளோடும்

யுத்தசன்னத னாய்ச்சென்று காசிநகரத்தை யடைந்து முற்றுகைசெய்ய தூதராலறிந்த அரசன் நால்வகைச் சேனையோடுஞ் சென்று அசுரப்படையோடு போரேற்று அப்படைகளை முறித்து நிற்கையில் நராந்தகன் சீறி அரசன் தானைகளை யதப்படுத்தி யவ்வரசனையு மவன் மக்களமைச்சர் முதலியோரையுஞ் சிறைப்படுத்தி ஜெயலாபனாய் காசிப்பட்டணத்துட் பிரவேசித்தனன் இச்செய்தி தூதராற் கேள்வியுற்ற அவ்வரசன் மனைவியாகிய அம்பை யென்பவள் மனம்வருந்தி மகோற்கடப் பெருமான் சன்னிதியடைந்து விண்ணப்பிக்க பிள்ளையாரும் அபயந்தந்தருளி யுத்தத்திற்கெழுந்தருளத் திருவுளங்கொண்ட மாத்திரத்தில் அவர் திருமுகத்தினின்று மனந்த சேனைகளோடும் குறாரனென்பவன் தோன்றி ஆகாரம் வேண்டி நிற்க அவனை நராந்தகனுடைய சேனைகளையுண்டு அவன்சிறையி லகப்பட்ட காசிராஜன் முதலியோர்களை மீட்டு வரக்கடவை யென்றேவ அவனவ் வண்ணமே சென்று அசுர சேனைகளை யெல்லாமழித்து நராந்தகனையும் தேரோடெடுத்து வானிற் கடாவி மூர்ச்சிக்கப் பண்ணி காசிராஜன் முதலியோரை யழைத்துக் கொண்டு சன்னிதானத்தை யடைந்தான் நராந்தகன் மூர்ச்சை தெளிந்து மாயப் போர்செய்துவர பெருமான் அவனைச் சங்கரிக்கும்படி தாமே யெழுந்தருளி அவன் மாயைகளெல்லா வற்றையும் நாசஞ்செய்து கடைமுறையில் சிர கர சரணங்களை யறுத்தெறியுந்தோறு முளைத்து வரக்கண்டு அவன் பெற்றிருக்கும் வரத்தை திருவுளஞ் செய்தோர் விஸ்வரூபங் கொண்

டருள நராந்தகன் தானு மவ்வாறுருக்கொண் டெதிர்நிற்க பெருமான்கண்டு அவனைக் கீழேதள்ளி மார்பை திருவடி நகத்தாற்பிளந்து அவனுடலைத் தேய்த்தருளி யப்போரை முடித்து அரசன் முதலிய வர்களோடு காசிப் பட்டணத் திற்கெழுந்தருளினர் இச்செய்தி யறிந்த தேவாந்தகன் அதிகதுக்கத்தை யடைந்து ஒருவாறு தேறி மறுநாளுதய காலத்தில் யுத்தசன்னத்தனாய் சகலசேனைகளோடும் புறப் பட்டு காசிப்பட்டணத்தை யடைய அரசனதை யுணர்ந்து அஞ்சி பெருமானுக்கு விண்ணப்பிக்க அவரவனைத் தேற்றி உபய நாச்சிமாரொடும் சிங்கா ரூடராய் பூதப் படைக ளுடன் யுத்தகளமடைந்து பகைவர் சேனைப் பெருக்கைப் பார்த்து அவற்றை யழிக்கும்படி சித்தி தேவியாருக்குக் கட்டளை யிட்டருள அவரும் அணிமாவாதி எண்வகை சித்தி சத்திகளை ஏவ அச்சத்திகள் வந்து தேவாந்தகன் படைகளையும் படைவீரர்களையு மழிக்க அவன்கண்டு கோ பித்து அச்சத்திகளோடு போர்செய்து முறியடிக்க அது போ தீசத்வ சத்திப்புருவ நெரிப்பி லுண்டான வோர் சத் தியாங்கத் தேவாந்தகனுக் குபேக்ஷை செய்திருந்த சுக்கி ரனை விழுங்கி வயிற்றில் வைத்திருந்தனளாக அக்கொடும் போர்க்கவ் வெண்மர்க ளாற்றாது தம்மை ஏவிய சித்தி தேவியாரிடம் சென்று முறையிடக்கண்டு அருகிருந்த புத் தி தேவியார் பவுத்தேவி யெனுஞ் சத்தியை ஏவ அவள் சென்று சேனைகளைச் சிலநேரம் போராடிக் கொன்று பின்பு சேனைகளோடு அத் தேவாந்தகனையு மெடுத்து விழுங்கி தன்னை ஏவிய தேவியாரிடஞ் செல்லும் போது

அழியாவரம் பெற்ற தேவாந்தகன் சூக்கும வடிவத்தால் வெளிப்பட்டு தன் தந்தையிடஞ் சென்று முறையிட அது போதவன் கூறின மந்திரத்தை யுச்சரித்து அன்றிரவி லோர்வேள்வியை முடித்து அதனாலுண்டான படைகளை யும் குதிரையையுங் கொண்டு மறுநாட்காலை போர்க்களத் தடுக்க சத்திகணங்களும் பூதகணங்களும் இராக்ஷத கணங் களுட னெதிர்த்து போர் செய்கையில் தெய்வப் படைகள் இளைக்க கண்ட குறாரன் தேவாந்தகன் சேனைகளிற் றலைப் பட்டு நாசம்செய்து அவனோடு தெய்வப்படைகளாற் போர் புரிகையில் அவனஞ்சி விண்ணில் மறைந்தேவின காந்தர்வ மோகனாஸ்திரத்தால் குறாரன் மயங்கிநிற்க தேவாந்தகன் மறுபடியும் பூமிக்குவந்து வேறோர் வேள்விமுடித்து பெரு மான் படைகளை எல்லாம் அதப்படுத்தும் படியோர் பெண் பூதத்தை ஏவ அப்பூதம் வருங்கால் பிள்ளையார் அம்மோ கப் படையை ஞானப்படையா லழித்தவுடன் குறாரனும் சமர்க்கெழ அது போதவனைத் தடுத்து பவுத்தேவி சென் றப்பெண் பூதத்தைப் பொருதழிக்க அதுகண்ட தேவாந்த கன் போர்க்குவர அவனைக்குறார னெதிர்த்து போர் செய் திளைக்க அதுகண்டு தேவர்கள் முறையிட பெருமான் திரு வுளங்கூர்ந்து சாரதியாகிய வாயுவை எச்சரித்து இரதத் தை நடத்திக் கொண்டுபோய் தேவாந்தகனை வளைத்து யுத் தஞ் செய்கையில் மகோற்கடர் அவனுடைய கிரீடம், தூணி, வில், தேர், சேமத்தேர், இவற்றை நுறுக்கியும், ஓமகுண்டத் துதித்த குதிரைமீ தவனூர்ந்து வாட்போரிட தமது மழு வாயுதத்தா லவ்வாளையும் தூணியையும் பொடித்துக் குதி

ரையையும் நிலத்தில் வீழ்த்தின பின் தெய்வப் படைகளா லு மவனுடன் பெரும்போராற்றி மறுநாள் போர்க் களத் தில் அத் தேவாந்தகன் பெற்றிருக்கும் சிவானுக் கிரகத் தைத் திருவுளத்தடைத்து உடனே யானைமுகந் கொண்டு தமது தந்தங்களி லொன்றை யொடித்து திருக்கரத்திற் கொண்டருளலும் அது கண்ட தேவாந்தகன் பறிக்க வோடித் தேர்மேற்பாய அங்ஙனே பெருமான் கோடா யுதத்தால் அவன் தலை பொடிபடத் தாக்கி மாய்த் தருளி னர். அதுகண்ட தேவர்களு முனிவர்களு மலர்மாரிசொரிந் து வேதவாக்கியங்களாற் புகழ்ந்து களித்துக் கூத்தாடினர் பின்பு மகோற் கடரும் அத் திருவுருவினை மாற்றி முன் போல பிள்ளைப் பெருமானாராய் உபய நாச்சிமார்களோடு வீரசிங்க மூர்ந்து போரிலிறந்தோ ரனைவரையு முய்வித்து தமதோர் வீரசத்தி வயிற்றுளிருந்த சுக்கிரனை வெளிப் படுத்தி யவனிடஞ் செல்ல தேவி அரசன் முதலியோர் புடைசூழ்ந்துவர நகரப்பிரவேசமாகி அங்கரசன் மகனுக்கு சமஸ்த சம்பிரமத்தோடு மணவினை முடிப்பித்து யாவர்க் கும் பேரருள்வழங்கி அக்காசிப் பதியைவிட்டு கசிய பாச் சிரமஞ் சென்று அங்கு சிலநாளிருந்து தமது ஆனந்த பவனமெனுந் திருப்புவனத்திற் கெழுந் தருளினர் அது முதல் காசிபர் ஓராலயஞ் சமைத்து மகோற்கடப் பெரு மானை விக்கிரக வடிவங்கண்டு ஸ்தாபனஞ்செய்து வழிபட் டிருந்தனர். அவ்வாறே காசிராஜனு முற்கல முனிவர் அனுக்கிரகப்படி மகோற்கடப் பெருமானை திருவுருக்கண்டு வழிபட்டுய்ந்தனன்.

உல்லாபகணேசர்.

வல்லபைகணேசர்.

ஒளவியமிலர்நெஞ்சகத்தமரு
    மும்மையம்மையாழ்திரைக்கா ளிந்தியி
லலர்கமலமேற்சங்கமாயுறமரீசி
    கண்டாங்கெடுக்கக்குழவியாய்ச்
செவ்விதின்வளர்ந்துவல்லபை
    நாமமேவித்திருந்திறைம்ணப்பவேண்டிச்
செப்பரியவாந்தவமியற்றவாளுடையான்
    சிறந்ததோர்சைவமறையோ
னெவ்வமிலுருக்கொண்டுவரவ
    மலையச்சனேர்ந்தெந்தைமகிழ்வுறவிபவமா
யெழிற்குமாரியைமணம்புரிவிக்க
    வதுபோதிலினிநீன்றமக்களெனமா
லொவ்விதயமுடனல்கிராறணங்கையும்
    வரைந்துண்மைஞானத்தையோணற்
குதவித்தனைக்காட்டிவல்லபை
    கணேசராயொளிர்பிரணவச்சோதியே.

இதன் சரித்திர சங்கிரகம்.

பிரம புத்திரரான மரீசிமுனிவர் பிதாவால் கணேச மான்மியத்தை யுபதேசிக்கப்பெற்று அரியதவஞ் செய்து கணேசரிடத்தில் மூவுலகத்திலுந்தன் றனைச்செல்லவும்

வற்றாத செல்வமும் மாளாத ஆயுளும் புத்திரப்பேறும் உமாதேவியார் புத்திரியாய் வரவும் அவரை சிவபெருமான் மணம்புரியவுமாக வரம் பெற்று தேவர் முனிவர் அசுரர் முதலிய கணங்கள்வாழ்த்த தேவவல்லி யெனுங் கன்னிகையைமணந்து பிரமநகரத்தில் வாழுநாளில் கைலையில் சிவபெருமானோடு வீற்றிருந்த உமாதேவியார் தலைதனைவணங்கி உலக நிலைமையைவினவ அகிலகாரணரும் உலக முற்றும் தமது சத்திவியாபகத் துள்ளதென்று திருவாய் மலர்ந்தருள கேட்ட அம்மையும் ஆயின் சத்தியாமன்றோ வெனத் தருக்கிக்கூற அங்ஙனே பெருமான் புன்னகைசெய்து சர்வசத்திகளையும் நடத்தும் தமதுபிரேரக மாத்திரையை யோர்கணம் சுருக்கியருளலும் அதனால் உலகெலாம் சடமாக அனேக கற்பகாலங் கிடக்க கண்ட உலக மாதாவும் அஞ்சி தமதபராதத்தை க்ஷமித்து உலகுய்ய வருளும்படி பிரார்த்திக்க பெருமான் கருணைபூத்தளவில் உய்ந்தெழுந்த அரிபிரமேந்திராதிசமஸ்த ஆன்மாக்களும் தாங்கள் பெருந்தகைப்பிரானைமறந்து சடத்து வத்திருந்த குற்றம் தீர்வாக வருளும்படி சன்னிதியடைந்து பிரார்த்திக்க உடையநாயகன் அக்குற்றம் நுமதன்று உமையவளதெனத் திருவுளம் பற்ற அவர்களனைவரும் வணங்கிதத்த மிருக்கைசென்றபின் பெருமாட்டியாரும் உலகநாதனைவணங்கி அப்பிழையொழி வருளும்படி விண்ணப்பிக்க பெருமான் திருவருள்கூர்ந்து

பிராட்டி முகநோக்கி மரீசிபாலவதரிக்கக் கட்டளையிட்ட ருள தலைவி யவ்வாறே யமுனையாற்றிற் பூத்ததோர்தாமரை மலரின்மீது வலம்புரிவடிவமாய் சிவனுமந்தியானித்து தவஞ் செய்திருக்கையில் அங்குநீராடவந்த மரீசிகண்டடுக்கலு மோர் பெண்குழவிவடிவாக அம்மையாமென் றெடுத்துப் பெருங்களிகூர்ந்தவனுய் தன்தேவி கரத்தளிக்க அவள் வாங் கிய வளவில் கொங்கையில் சுரந்தபாலைப் புகட்டி மகண்மை கொண்டு வல்லபை யெனத் திருநாமஞ்சாற்றி வளர்த்து வருங்கால் அம்மைக் கையாண்டுசெல்ல பரமனைத் திரும ணஞ் செய்யவேண்டி தவஞ்செய்யத் தந்தைதாய ரிசைவு கொண்டு அவர்கற்பித்த வேறேரிடத்து சேடியரோடுஞ் சென்றிருந்து பன்னிரண்டாண் டளவாய்த் தவஞ்செய்ய அமலனும் இரங்கி ஓரந்தணவடிவத்தோடு தவச்சாலை சென்று அபிராமி தவத்தை சல்லாபவார்த்தையாற் சோ தித்துப்பின் திவ்வியமங்கள கோலத்தோடு கணேசமூர்த்தி வடி வங்கொண்டு மயூராரூடராய் காக்ஷி கொடுத்தருள எமதன்னையும் மும்முறை வணங்கி இனிப்பிரியாவரம் வேண்டிநிற்கையில்அருகிருந்த சேடியரோடித் தந்தையாரா கிய மரீசிமுனிவர்க்கு நிகழ்ந்தன கூறக்கேட்டகங்களித்து அவர் அத்தவச்சாலையடைந்து மகளாரையும் பெருமானை யும் தம திருக்கைசேரச் சேர்த்து விதிப்படி சுபமுகூர்த்தத் தில் சர்வாலங்காரமண்டபத்தில் அங்கித்திய கூபியாணிரு

வருக்கும் உலகுய்யும்படி திருக்கலியாண மகோற்சவநடத்துகையில் விஷ்ணுவும் ஆளுநடையார் சன்னிதியடைந்து தம்முடைய பெண்மக்கள் பன்னிருவரையும் திருமணம் புரிந்தருள விண்ணப்பிக்க திருவுளமிசைந்து அவர்களையு மவ்வாறே வரித்தருளியபோது மீட்டுமக்கேசவன் பணிந்து முப்பொருட்டிறமும் அவற்றை யுணருமார்க்கமும் உபதேசிக்கும்படி விண்ணப்பஞ்செய்ய பரமாசிரியராகிய மகேசரும் திருவுளமிரங்கி யனுக்கிரகித்தருளி விஸ்வரூபதரிசனையோடுபல வரங்களையுங் கடாக்ஷித்து மரீசிமுனிமுதலிய அடியவர்களுக்கும் நந்தாவரம் பலவுமனுக்கிரகித்து வல்லபைப்பிரான் நாச்சிமார்களோடு மணித் தீபமென்னும் சிவபுரத்திற் கெழுந்தருளி சர்வான்மாக்களும் உய்யும்படி இனிதுவீற்றிருந்தனர்.

இலீலாகாண்டம் முற்றிற்று

வாழி.

சிங்கமஞ்ஞைமூடிகமாமூர்த்தி வாழி
திகழ்பாசாம்புயம்பாசாங்குசமும் வாழி
தங்குகஜானனமேகதந்தம் வாழி
சதுர்ப்புஜம்லம்போதரம்வக்ரதுண்டம் வாழி
பொங்குமெழிற்சித்திபுத்திவல்லபை வாழி
பொருணன்குமுதவுபொற்றுண்மலர்கள் வாழி
துங்கவிநாயகர்தம்நூற்பெருக வாழி
துதிசெய்தொண்டர்பல்லாண்டிலங்கிடு வாழி.